T.D.R.C. No 55.78
R.No 36271

ஜீவ நாடகம்

O-892 MSM7;2
M71
118205

உ

ஸ்ரீராமஜயம்.

# இரணிய நாடகம்.

புதுவையைச்சார்ந்த

சாரத்திலிருக்கும்

சோமசுந்தரமுதலியாரியற்றி

இஃது

புதுவையில்வசிக்கும்

சின்னசாமிமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

நண்டலம்

தமிழ் உபாத்தியாயர்

தியாகராயமுதலியார்குமாரர்

உபாத்தியாயர்

சுப்பராயமுதலியாரால்

பிழையறப்பரிசோதித்துப்

பரமசிவமங்கலம்

அண்ணுசாமிமுதலியார் குமாரர்

முநிசாமிமுதலியாரால்

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார் குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரஜோற்பத்தி [illegible]

[illegible]

REGISTERED COPY RIGHT.

ஸ்ரீராமஜெயம்.

# விளம்பரம்.

இதனடியிற்குறித்த புஸ்தகங்கள் யாதெனில் சென்னைப்பட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை முல்லாசாகிபு தெருவிலுள்ள நடேசர் அதின் அண்டைவாசல் முதலாவது நெம்பர் வீட்டில் ம-ள-ள-ஸ்ரீ. குவிமாதுகரம் ஸ்ரீநிவாசமுதலியாரவர்களால் பிரசுரிக்கப்பட்டபலவிதமான புஸ்தகங்களும் இராகமாலை அட்டவணை அடிவரவு, ஆழ்வாராதிகள் திருநட்சத்திரம் இராமானுஜநூற்றந்தாதி, ஆழ்வாராதிகள், உடையவர், திவ்வியமங்களவிக்கிரகரூபமான படங்களுடமைந்தநாலாயிரப்பிரபந்தமும் நூதனமாக விஸ்திரிய இரணியநாடகமும் அச்சிட்டிருப்பதால் அவற்றில் இரணியநாடகத்தையாராவதொருவர் அச்சியந்திரசாலையில் அச்சிட்டாலும் (வசனம்) ஆக்டின் (வசனம்) பிரிவின் (வசனம்) விதிப்படி காப்பிரைட் பெற்றிருக்கிறபடியால் இந்த புஸ்தகக்கட்டிடத்திலுள்ளவர்களும் மற்றவர்களும் அடியில் கண்ட குறிப்பின்றி அச்சிடப்படாதே மொழிபெயர்த்தும் அச்சிட்டாலும் அப்படிச்செய்வாராயின் கோர்ட்டின் மூலமாய் தண்டனைக்குள்ளாவார்கள்.

இப்புஸ்தகங்கள் வேண்டியவர்கள் ம-ள-ள-ஸ்ரீ. பாமனிவம்மகவர் முனிசாமிமுதலியாரவர்களிடத்தில் விலைசகாயமாய் வாங்கிக்கொள்ளலாம்.




ஸ்ரீராமஜெயம்.

# இரணிய நாடகம்.

## விநாயகர் துதி.

வெண்பா-இ-ம்-சங்கராபரணம்.

உலகுதனையுண்டுமிழ்ந்து வொன்னலருக்காய் தூணில்......*
இலகுநரசிம்மத் திருபதத்தின்-சலிகையுள......... ......*
மைந்தன்பிரகலாதன் மாக்கதைக்கன்பான துணை........*
தந்திமுகத் தைந்துகரத் தாள்...... ................... *

விருத்தம்-இராகம்-கலியாணி.

திருவளர்மணிசேர்மார்பன் திருவடிதலைமேற்கும்பிட் ... ...*
பிரகலாதனல்நற்காதைப் பெருமையையடியேன்பாட ...*
வரிமுலைக்குமுதச்செவ்வாய் மலைமகளின்றமுக்கன் ... ...*
ளிருப்பதத்தொருகொம்பானை இணையடிக்காப்பதாமே... ...*

விருத்தம்-இராகம்-தோடி.

அருமறைமுடிவுகண்ட அருள்பிரகலாதனென்றும் ... ...*
பெரியவன்கதையைப்பாட பெருங்கடலசைந்திருடும் ... ...*
வருணைமாபுரியில்வாழ் மதகரிமுகத்தோன்பெம்மான் ... ... *
ஒருமகன்வெள்ளைப்பிள்ளை யுபயதாள்பணிகுவோமே ... ...*

### விருத்தம்-இராகம்-மோகனம்.

சீர்வளர் துளபமாயன் செழும்பதத்தினைப் போற்றும் ... ...*
பேர்வளர்பிரகலாதன் பெருமைநாடகத்தைப்பாட ... ...*
தாரணிபுகழ்ந்துபோற்றுந் தருமறல்லூரில்வாழும் ... ...*
வாரணமுகஞ்சேர்நாக மணித்தவன்மலர்த்தாள்காப்பே ...*

### விருத்தம்-இராகம் காம்போதி.

திருவருள்தழைத்துநன்றாய் திங்கள்மும்மாரிபெய்து ... ...*
அருமறைவோமவேள்வி யனுதினமோங்கிச்செல்வம் ... ...*
பெருகிடுஞ்சாரத்தன்னிற் பிறிவுமாயமர்ந்தமூர்த்திக் ... ...*
கரிமுகமுடையசெல்வக் கணபதிபாதம்போற்றி ... ... ...*

### சிவன்துதி-விருத்தம்-இராகம்-ஆனந்தபயிரவி.

ஆதிநூல்முறைமையெல்லா மறிவுநாற்முனேயோதும் ... ...*
நீதிசேர்பிரகலாத னெடும்புகழ்கதையைப்பாடத்... ... ...*
காதவிழ்கொன்றைவேணி தற்பராதிமூலர்... ... ... ...*
பாதமும்அமுர்தவல்லி பங்கயம்பணிகுவோமே ... ... ...*

### திருமால்துதி.

### போற்றிப்பத்து-விருத்தம்.

நாரணாபோற்றிபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி ... *
காரணக்குருவாய்வந்தென் கவலையைத்தீர்ப்பாய்போற்றி ... *
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி ... ... *
சீரணித்திறங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ... ... *

வாமனரூபாபோற்றி பணிமச்சகூர்மாபோற்றி ... ... *
ராமனேராமாபோற்றி நற்பதந்தருவாய்போற்றி... ... ...*
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி ... ... *
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ... ...*

செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி ... *
சங்கணிகரத்தாய்போற்றி தாணியையளந்தாய்போற்றி··· ...*



இங்கெனக்கருள்வாய்போற்றி யெந்தையேபோற்றிபோற்றி ...*
திங்கள்சேர்வதனாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ... *

அகலிகைக்கருள்வாய்போற்றி யரக்கரைவதைத்தாய்போற்றி . *
முகினிறத்தோனேபோற்றி மூர்த்தியேபோற்றிராஜ... ... *
மகனெனவந்தாய்போற்றி மாயசெவ்வாயாபோற்றி ... ... *
ஜெகமுண்டதாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி... ... ...*

பஞ்சவர்தூதாபோற்றி பாருலகளந்தாய்போற்றி ... ... *
வஞ்சனைதீர்ப்பாய்போற்றி வாலியைவதைத்தாய்போற்றி ... *
தஞ்சமென்றோரைக்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி ... ... *
செஞ்சிலைக்கரத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ...*

அரிகுமாராபோற்றி அடியவர்க்கெளியாய்போற்றி ... ...*
கரிதனைக்காத்தாய்போற்றி கஞ்சனைவதைத்தாய்போற்றி ...*
விரிகடற்றுயின்றாய்போற்றி விளங்கனியெறிந்தாய்போற்றி ...*
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ...*

மாயனேபோற்றிபோற்றி வரமதுதருவாய்போற்றி ... ...*
ஆயனேபோற்றிபோற்றி அடியனுக்கருள்மிக்கொண்டு ... ...*
தாயனேவருவாய்போற்றி தசரதராஜனீன்ற ... ... ... ...*
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ... ...*

எந்தையேபோற்றிபோற்றி யிமையவர்க்கரசேபோற்றி .. ...*
சிந்தையிற்குடியாய்கொண்ட தெய்வமேபோற்றிபோற்றி ...*
பந்தம்வேரறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி ...*
செந்திருமார்பாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ... ...*

முத்தணிமார்பாபோற்றி மூவுலகளந்தாய்போற்றி ... ...*
இத்தலம்வென்றாய்போற்றி யேழையங்காளாபோற்றி ... ...*
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசம்வேரறுப்பாய்போற்றி .. ...*
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி ... ...*

இருவினைத்துலைப்பாய்போற்றி யேகமானவனேபோற்றி ...*
திருவொடுகருடனேறுந் தேவனேபோற்றிபுஷ்பா ... ... ...*

அருமியானுறைத்ததோத்ர முலகளந்தவனே போற்றி ... ... *
திருவடியெனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதா போற்றி ... ... ... *

தாயார்துதி-கலித்துறை.

தாயேபுனையன்றி யெந்தனுக்கோர் துணை சுற்றுமில்லை ... *
நீயே மனுவொன்று தந்தருள்வாயஷ்ட லட்சுமியே ... *
சேயேனை யாளவும் வேங்கடமாலுடன் சேதிசொல்லி ... *
மாயாமற் காத்தருள்வா யலர்மேன்மங்கை மாமகளே ... *

கலைமகள்துதி-விருத்தம்-இராகம்-தோடி.

அண்டர்நாயகனைத்தூணி லாயுருவாயமைத்த ... ... ... *
தொண்டனும்பிரகலாதன் தொகுத்திடுங்கதையைப்பாட ... *
வண்டலர்புனையுஞ்செல்வி மனத்திருப்வாக்கில்நின்று ... ... *
கண்டருள்மொழியும்வேதக் கலைமகள்காப்பதாமே ... ... *

ஆழ்வார்கள்வணக்கம்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

இருநிலமன்னர்போற்று மிரணியனின்றசெல்வன் ... ... ... *
பெருமைசேர்பிரகலாதன் பெரும்புகழ்க்கதையைப்பாடத் ... *
திருமறைநான்குஞான செந்தமிழ்புனைந்துப்பாடி ... ... *
அருள்தரும்பதிரண்டாழ்வா ரடியிணைக்காப்பதாமே ... ... *

விநாயகர்வருகிற

தருவு-இ-ம்-நாதநாமக்கிரியை-தாளம்ஆதி.

பல்லவி.

கணபதிராயர்நீரே-கருணைமிகும்-கணபதிராயர்நீரே

சரணங்கள்.

கணபதிராயர்நீரேகடவுள்குமாரர்நீரே
குணமுடன்அன்பர்பங்கில்கூத்தாடும்பிள்ளையாரே (கண)
வேழமுகத்தானீரே-வேதப்பொருளும்நீரே
ஏழைக்கிரங்குவீரேயெங்கும்நிறைந்தவனீரே (கணபதி)
அஞ்சுகரத்தோனீரே-அல்லல்வினைதீர்ப்பீரே
தஞ்சமென்றடைந்தோரைத்தற்காத்தருள்செய்வீரே (கண)
வெற்றிப்பெற்றவர்நீரே-வெங்கட்டிதங்குவீரே
ஒற்றைக்கொம்பானவரேயோதவருவீர்நீரே (கணபதி)



தோடையம்-இ-ம்-நாட்டைஜம்பை-தாளம்.

சீதரகோவிந்ததேவதேவகிநந்தா ... ... ... ... *
மாதவானவருந்தவாசனேமுகுந்தா-ஜெயஜெய ... *
மச்சகூர்மவதாரவருமவராகவதார ... ... ... *
வற்சலசிங்கவதாரவாமனவதார-ஜெயஜெய ... ... *
பரசுராமராமபலபத்திரஜெயராமா ... ... *
வருகிஷ்ணபரந்தாமவாசுதேவபூமா-ஜெயஜெய ... ... *
பத்தஜனபரிபாலபரமஞானவிசாலா ... ... ... *
சித்திரமணிகோபாலதிருமாதுலோலா-ஜெயஜெய *
அருணமீதாய்பரதுகளங்கமணிதாரா ... ... ... *
வருணகோதண்டகாவசுதேவகுமாரா-ஜெயஜெய ... *

மங்கம்-இராகம்-பந்துவராளி-ஆதிதாளம்.

மங்களமேஜெயமங்களம்
மங்களம்நரசிங்கமூர்த்தவேயனுக்கும்
மங்களம்கோவிந்தமாயனுக்கும் (மங்களம்)

பங்கயக்கண்ணனுக்கும் பணிமுகில்வண்ணனுக்கும்
அங்கஜன்றனைப்பெற்ற ஐயனுக்கும் (மங்களம்)

சச்சிதானந்தனுக்கும் சர்வலோகேசனுக்கும்
அச்சுதானந்தனுக்கும் அமலனுக்கும் (மங்களம்)

ஸ்ரீதேவிமார்பனுக்கும் தேவாதிதேவனுக்கும்
பூதேவிமோகவிற் புருஷனுக்கும் (மங்களம்)

காசியர்ரிஷிவருகிற

பொது-விருத்தம்-இராகம்-மத்தியமாவதி.

பரிசிவமகாரிஷிக்கு பண்புடனுதித்தபாலன் ... ... ... *
திருமேதவறைக்கொப்பான தவத்திநிலமிருந்தோன்மிக்க *
குருமூர்த்தமதாயிந்தக் குவலயத்தனில்நிறைந்த ... *
அருமறைக்காசிபர்க்கு அமர்ந்திடுஞ்ரிஷிவந்தார் ... ... *

தரு-இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

காசிபர்ரிஷிரும்-தாங்களே-அரஅரசிவசிவவென நிதந்த ;...※
தஞ்செய்யுங்-காசிபர்ரிஷிரும்-தாங்களே ... ... ...※

சரணங்கள்.

கடுமிட்ரானிசிவபதமதைத்துதிசெய்யுங் ... ...(காசிபர்)
சரமதில்மழுவணி-பாமனடி துதிசெய் ... ... (காசிபர்)
பவமகலவேசிவன்னடியிணைத்தனைத்தொழும் ... (காசிபர்)
தவமதுசெயஜெபமணியுடன்-காவியணி ... (காசிபர்)
களித்திடவுலகிணையளித்திடதவஞ்செய்யும்... ... (காசிபர்)

ரிஷிசொல்-வசனம்.

அடாதம்பி தவசிரோன்மணி யேன் அண்ணே தாசமாமணி நமது ஐயர் தவஞ் செய்யப் போகிறாராம் அதற்கு நாம் நல்ல இடமாய்ப் பார்க்க வந்தோமே இவ்விடத்தில் யிவர்களெல்லாம் நம்மைக்கண்டமாத்திரத்திலே வேடனைக்கண்ட மானதுபோலும் மௌனவுருவப்பார்த்து பசபசென்று முழிக்குரார்கள்-பாருதம்பி ஆம் ஆம் ஆமடா அண்ணே தாசமாமணி அப்படியேதானிருக்குரார்கள் இவர்களையெல்லாஞ் சளசளவென்று பேசாமலிருக்கச்சொல்லண்ணே.

பொது-விருத்தம்-இ-ம்-பயிரவி.

மூலமெய்ப்பொருளதாகி முளைத்தெழும்பெரியமாயன் ※
சாலவேவிளங்கும்நாபித் தாமறைமலரோனீன்றச் ... ...※
சீலனும்மரிசிபெற்றச் சேயவனுகிமேலாங்......... ... ...※
காலமூன்றுணர்ந்தோனந்தக் காசிபனென்பர்மாதோ ...※

வசனம்.

ஸ்ரீமன்னாராயணர் தன்னுடைய நாபிக்கமலத்திலே பிர்ம்மதேவனைப்பெற்ருர் அந்தப்பிர்ம்மதேவன் மரிசிமகாரிஷியைப் பெற்ருர் அந்தப் மரிசிமகாரிஷியானவர் காசிபமகாரிஷியைப் பெற்ருர்.



பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

சிறுவிதியமைத்தமாதர் திதிதனும்அதிதிசாமை.......... ...※
நறுநுதல்விளையிறட்டைநாதோம்பிரையேகாட்டை.......※
மறுவிறிசுரபிக்குரோத வசநுனிசுரசைமாதைத்... ... ...※
குறுவெழில்திமியென்பாரைக் காசிபர்மணஞ்செய்தாரே ※

வசனம்.

சிறுவிதியென்னுந் தக்ஷப் பிர்ம்மாவின்னுடையபெண்கள் திதியுந்தனுவும்அதிதியும் சாமையும் விளையும் யிறட்டையும் தாம்பிரையுங்காட்டையும் சுரபியும் குரோதவசையும் முனியும் சுரசையும் திமியும் யென்னும் பெயருடைய பெண்கள் ஆக பதின்மூன்றுபேரையும் காசிப மகாரிஷியானவர் விவாகஞ் செய்துகொண்டார்.

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

பதிமூன்றுமடவாரோடும் பண்புடனிருக்கும்நாளில்.....※
பதிபெருமுலகந்தன்னைப் படைத்திடமனதிலெண்ணி ...※
அதிவிதந்தனையரித்து ஐம்புலப்பகையைமாற்றிக்...... ...※
கதிபெறுந்தவமேசெய்யக் காசிபர்நினைந்தார்கேளீர்......※

வசனம்.

இந்த பதின்மூன்றுபெண்களையும் விவாகஞ் செய்துக்கொண்டபின்பு ஒருநாள் யிந்தவுலகத்தில் சராசரங்களைப்படைக்கவேணுமென்றுகருதி அநித்தமென்னும் மூவகையையரித்து ஐந்துபுலன்களையும் மாற்றி தவஞ்செய்யவேணுமென்று தன்மனதில்யெண்ணிநாற் காசிபமகாரிஷியானவர்.

காசிபமகாரிஷியானவர் வனத்துக்கு

தவஞ்செய்யவருகிறவிருத்தம்-இ-ம்-மோகனம்.

மதிநுதல்மடவார்தம்மை மனமகிழ்ந்தாசிரமத்தில்... ...※
சதிருடன்விட்டுநீங்கித் தவஞ்செய்யமனதிலெண்ணி ...※
துதிசெய்துவதேதமென்னுந் துரியாதீதத்திலன்பாய்... ...※
கதிபெறவனத்தைநோக்கி காசிபர்வருகின்றரே ... ... ...※

தரு-இ-ம்-ஆநந்தக்களிப்பு.

காசிபமாமுநிவந்தார்-வருங் - காலத்தைத்
தெரிந்தாதிமூலத்தைப்போற்றி (காசிபமாமுநிவந்தார)
ஹரஹரஹரநீலகண்ட-ஜெய ... ... ... ...*
அங்கஜதகனப்ரசண்டப்ரசண்ட... ... ... ...*
கரதலமேருகோதண்ட-வென்று ... ... ... ...*
காரணதத்துவபூரணமுகண்ட ... (காசிபமாமுநி)
செங்கனகம்போலுஞ்செஞ்சடையும்-மார்பிற் ...*
செழிக்கும்பூணநூலுந்தழைக்கும்வெண்குடையும் *
லங்கோடியுந்தோலுடையும்-பூமிந ... ... ...*
லக்காமல்மெதுவாகவருங்காதநடையும் (காசிபமா)
காதிநிற்கவசகுண்டலமும்-நீண்டக் ... ... ...*
கைகொண்டசெண்டெரிப்பொற்கமண்டலமும் ...*
மேதினிபுகழ்மென்றலமும்-பெற்ற ... ... ...*
விமலன்போலருள்பொழிமெலகுண்டலமும் (காசிப)

காசிபமகாமுநி சிஷ்யரையழைத்தல்-வசனம்.

அப்பாசிஷியா தாசமாமணி ஐயா அடா தவசிரோன்மணி சுவாமிஇதுவரையிலுமெங்கேபோயிருந்தீர்கள் இங்கேவாருங்கள் பரசனா வந்தோம் வந்தோம் சுவாமி.

காசிபர்சிஷ்யருக்குச்சொல்விருத்தம்-இ-ம்-தோடி.

தாசமாமணியேநல்ல தவசிரோன்மணியேகேளாய்... ...*
ஈசனைத்தியானஞ்செய்ய வெழில்வனந்தன்னில்வந்தோம் *
பூசனைசெய்யதிவ்யபுட்பங்கள்கொணர்ந்துவைத்து........*
ஆசனம்போடுவீர்நாம் அருந்தவஞ்செய்யத்தானே......*

வசனம்.

அப்பா தாசமாமணி ஐயா அடா தவசிரோன்மணி சுவாமி நான் ஆதியாமானந்தக் கடவுளாகிய சிவத்தைநோக்கிப் பூசனைப் புரியவேண்டியதாய் யிந்தவனத்துக்குவந்தேன் இப்போது அர்ச்சனைசெய்வதற்கு திவ்வியமானபுட்பங்கள் கொண்டுவந்து வைத்ததாயிருக்க ஆசனம்போட்டுவையுங்கள் சிஷ்யர்களே.



தாசமாமணிசொல்விருத்தம்-இ-ம்-தோடி.

அழிவிலாச்சிவனைநோக்கி ஐம்புலன்றன்னைமாற்றி.............*
வழுவிலாதவமேசெய்யும் மாமுநிநாதாபோற்றி... ... ... ...*
உழுவையாசனத்தைப்போட்டே னுகந்துநீரிருப்பீர்நான்போய்
எழில்மிகுபுட்பங்கொண்டு யோடியேவாரேனையா......... ...*

வசனம்.

சரணம் சரணமையா சுவாமி யெமது அண்ணலாகியபரமசிவத்தைநோக்கித் தவஞ்செய்யவந்தகர்த்தனே தேவரீருக்கு யிதோ ஆசனம்போட்டுவைத்தேன் யிதில் தேவரீரெழுந்தருளியிருந்தால் நான்போய் நல்லவாசனையிருந்த புட்பங்களை யெடுத்துக்கொண்டு வருகிறேனையா சுவாமி.

சிரோன்மணிக்கு-தாசமாமணி சொல்விருத்தம்-இ-ம்-பயிரவி.

தவசிரோன்மணியேகேளாய் தவஞ்செய்யவேண்டிஐயர் *
நவமதாய்புட்பங்கொணர நமக்குரைசெய்தவண்ணம் ...*
அவமிலாப்படியேநீபோ யரைநொடியதனிற்சென்று ...*
குவலயமதிப்பதாகக் கொண்டுநீவோடிவாராய்... ... ...*

வசனம்.

அப்பா தம்பி தவசிரோன்மணி நமது ஐயர் சிவபூசைசெய்யவேண்டுமாம் நீ சீக்கிரத்தில்போய் நல்ல புட்பங்களை பரித்து யெடுத்துக்கொண்டு வோடிவாருமப்பா தவசிரோன்மணி.

தாசமாமணிக்குதவசிரோன்மணிசொல்விருத்தம்-இ-ம்-கல்யாணி

மவுனமேமிகுந்ததாச மாமணிஅண்ணாநீரும்...... ... ...*
அவனிதழ்வாய்திறந்து சொல்லியவண்ணஞ்சென்று... ...*
தவமுநிகாசிபற்கு தகமையாய்புட்பங்கொண்டு...... ...*
அவமிலாப்படியிப்போதே அரைநொடிதன்னில்வாறேன் *

வசனம்.

கேளும் அண்ணா தாசமாமணியே நீ சொல்லியப்படியே போய் நமது ஐயர் சிவபூசைசெய்ய நல்ல புட்பங்களை யெடுத்

துக் கொண்டு வொரு நொடியில் வருகிறேன் அன்று தாசமா மணியே.

தவசிரோன்மணி-தாசமாமணிக்கு சொல்-பாணி.

மாசிலாமுநிக்குத்-தாசிலாமணியே
வாசமாமலரை-ஆசையாய்கொணர்ந்தேன்

தாசமாமணி-காசிபருக்குபோற்றி-விருத்தம்-இ-ம்-மோகனம்

கறையிலாமனத்தையொற்ற கண்ணுதல்போற்றிபோற்றி *
மறையெலாமுணர்ந்தவுத்தன் மலரடிப்போற்றிபோற்றி *
இறைவனேதேவர்தாமு மெமக்குரைசெய்தவண்ணம் ...*
குறைவிலாபுட்பமெல்லாங் கொணர்ந்திதோவந்தேனையா *

வசனம்.

மறையாகம சாஸ்திரபுராணங்களையும் குறைவறத்தேர்ந்து வேதாந்தமுடிவிலே மனதைச்செலுத்தி ஞானவயிர்த்தையுண்டு யெங்களைரட்சிக்கவந்தகர்த்தனே தேவரீர் கட்டளையிட்டபடிக் கி நல்வாசமிருந்த புட்பங்களை யெடுத்துக் கொண்டுவந்து வை த்தேனையா சுவாமி.

காசிபர்சிஷர்களுக்குச்சொல்விருத்தம்-ஆனந்தபயிரவி.

மதியிநிதுயர்ந்தசிஷ மார்களேசெவிகொத்தன் ......... ...*
பதின்மர்களிடத்திற்சென்றுபணிவிடைச்செய்துக்கொண்டு
கதிதரும்அத்திசந்தி கவனமாய்க்கார்த்துநீங்கள் ...........*
நதியிலாசிரமத்துக்குள் தான்மகிழ்ந்திருந்திடீரோ.........*

வசனம்.

வாருமப்பா சிஷர்களே நீங்கள் ஆசிரமத்திற்குப்போய் தம துமனைவியர்களுக்கு பணிவிடைமுதலானது செய்துக்கொண் டுநீங்களும் சிவபூசைநெறிமாறாமல் முடித்துக்கொண்டு சுயேட் சமாயிருக்கக்கடவீர்கள் போய்வாருங்கள் சிஷர்களே.

சிஷர்கள்சொல்பாணி.

இருந்திடுமென்றுசொன்ன யிறைவனேமலர்த்தாள்போற்றி-
பொருந்துமாசிரமத்துக்குப் போய்வாரோம்சரணமையா



காசிபர்சொல்-கொச்சகம்.

கொன்றுபுன்னைமந்தாரை கொன்றையறுகுதும்பை *
திங்களவிமதியும் நீர்சடையிலேதரித்து ... ...*
பாங்காய்மழுவணிந்தோர் பாகம்வுமைக்களித்தாய்-*
நிங்கத்திமோட்சதி சிவனேநீதருவாயே ... ...*

கொச்சகம்.

அத்தியுரித்து அதுபோற்றரவணிந்து... ......... ...*
வெத்திமழுமான்றரித்து விண்ணோர்க்கமுதளித்தாய்*
பத்தியுடன்கங்கைதனைப் பண்பாய்ச்சடைக்கணிந்து*
சித்திபெறமோட்சகதி சிவனேநீதருவாயே...... ...*

காசியர்சொல்தரு-இ-ம்-பந்துவராளிதாளம்-யேகம்.

பல்லவி.

அரனேகங்காதரனேகிருபைபுரிவாய்-சிவசம்போசங்கரா
அரனேகங்காதரனேகிருபைபுரிவாய்

அநுபல்லவி.

இருநிலந்தனில்தருமங்கதிக்க
யெனதுதவத்தையிமையோர்துதிக்க (அரனே)

சரணங்கள்.

பூசையணிந்திடும்வேதவேதாந்தமுடிவே - திருக்கழுத்திநில்
பொங்கரவப்பணிபூண்டபுராதனவடிவே
மாதுடன்வெள்விடைமீதிலுகந்துநீர்
வந்தெனையாதரியுந்தனைநம்பினேன் (அரனே)

அறிவிதப்பொருளாய்நிறைந்திடும்ஆதி- அன்பர்கள்துதித்தி
அருமறைப்பொருளிலெழுந்திடுஞ்சோதி [டும்
நதியும்மதியுஞ்சடையிற்றரித்து
நஞ்சணிகண்டனேஅஞ்சலென்றெனையாள் (அரனே)

அத்திமுகன்றனைசித்தமகிழ்ந்தருள்நாதா-பஞ்சபாணனென்
அணங்கனைக்கண்ணாலினங்கொண்டெரித்தநீதா [னும்
சித்தனையெந்தன்மேல்சித்தமகிழ்ந்துநீர்
கடைக்கண்ணால்பாரும்அடைக்கலங்காரும் (அரனே)

பொது விருத்தம்-இ-ம்-நாட்டை.

காசிபமுநிவன்றானுங் கற்பகவருளங்கொங்கு......... ...※
ஆசினிதேவதாரம் அணிகுராகமலம்புன்னை...............※
ஆசைகடோரும்வாசமுயர்ந்திடும்பூங்காவன்னணி ... ...※
நேசமாய்த்தவமேற்கொண்டு நினைந்தவிருந்திட்டாரே...※

வசனம்.

காசிபமாமுநியானவர் நிறைந்தத் தடாகமும் நெருங்கிய சோலைகளும் குளிர்ந்ததென்றலும் மலர்ந்தபுட்பங்களும் வாசமிகுந்த பூங்காவிற்சென்று சிவபூசைமுடித்துக்கொண்டு தபோதியானியாய் தவத்திலிருக்கிறாரையா சுவாமி.

திதி வருகிற விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

வந்தகாசிபனாரந்த மரத்தின்கீழ்தவஞ்செய்போதுச்......※
சிந்தையும்மெலிந்துவாடித் திதியெனுமனையாள்வெம்பி ※
சந்திரன்றழற்குத்தென்றல் தாவியபுலிக்குமஞ்சி...... ...※
அந்தியப்பொழுதில்தேடி யவ்வனம்வருகின்றாளே... ...※

தரு-இ-ம்-முகாரி-தாளம்ஆதி.

பல்லவி. [யாள்

வந்தாளேதிதிமங்கையாள்-வொய்யாரமாது-வந்தாளேதிதிமங்கை

அநுபல்லவி.

வந்தாளே துரைமன்மதகாமி வனிதையர்தமக்கேழுலகதிலகாமி
சிந்தாமணிநிகராமபிராமி-தேவகாசிபரைத்தேடியேபூமி (வந்தா)

சரணங்கள்.

கொங்கைமலைபோல்விம்மியே-மார்துளிர்க்கோறும்......※
கோகிலக்குறல்கம்மியே ... ... ... ... ... ...※



அங்கஜன்கணைகள்சாடி-யதனால்மேனிகள்வாடி......... ...※
திங்களனலால்வீடித்தேடியிவ்வனம்நாடி... ...(வந்தாளே)

சரிகைப்பொன்சல்லாச்சேலையாள்-ரத்னமணிகள்...... ...※
தயங்கும்வெண்முத்துமாலையாள் ... ... ... ... ※
பரவுநல்லபிமானிபால்மொழிகற்கண்டுசேதி............ ...※
திருவுக்கமைந்தமேனி-திகழும்நல்லவதானி ... (வந்தாளே)

தேவர்கடைக்கண்துள்ளவே-ராட்சதாளெங்கும் ... ... ...※
செழித்துவஞ்சங்கள்கொள்ளவே........... ...... ... ...※
பாவமெல்லாம்நடிக்கபதைத்துதர்மம்நதடிக்கக்.........※
காவிக்கண்வேல்பிடிக்க-காசிபர்நெஞ்சொடிக்க (வந்தாளே)

கொச்சகம்.

மஞ்சுவண்ணன்றானளித்த மன்மதனாலெந்தேகம்... ...※
நெஞ்சந்தளர்ந்து நெறிதவறிமையல்கொண்டேன் ... ...※
பஞ்சமுகனைக்குறித்து பரிந்துதவம்புரிந்தயெந்தன்......※
செஞ்சொல்முநிதன்னையங்கே தேடுவேனோ சிவனே ※

தரு-இ-ம்-கண்டா தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிந்தைநொந்துருகிமையலாகுதே-யெந்தன்... ... ※
தேகமும்வெந்துதணல்போல்வேகுதே............※
எந்தன்பிராணேசனையெங்கேதேடுவேன்-தேடி ... ※
எவடமென்றலைந்துசிந்தைவாடுவேன்............ ...※
பந்துமுலைரெண்டும்விம்மிநெருக்குதே-மதப்... ...※
பாவிவிடுங்கணைநெஞ்சையுருக்குதே............ ... ※
தென்றல்புலிப்போல்பாய்ந்துவீசுதே-அவரைத் ...※
தேடிநடந்தயென்பாதங்கூசுதே......... ... ... ...※
அன்றில்போலவேயென்பிராணநாதனை-தேடி... ...※
ஆவிவிடப்பேனிதென்னவேதனை........... ... ...※
பாவிக்குயில்குறல்கம்மகூவுதே-அணங்க...... ... ...※
பையல்விடுங்கணையென்மேல்தாவுதே..............※

ஆவிதளர்ந்தேயென் னுடல்தேயுதே-மீல ... ... ...*
அருமையை நினைக்கக்கண்கள்தோயுதே...... ... ...*
தேவியென்றனைப்புரிந்தக்கோலமோ-யென்னைத் ...*
நிலைக்கச்செய்தாரிதென்னக்காலமோ...... ... ...*

திதிசொல்விருத்தம்-இ-ம்-தோடி.

மெய்யனே தவத்தின்மிக்க விளங்கியநாதாபோற்றி... ...*
ஐய்யனே முநியேபோற்றி ஆருயிர்த்துணையேபோற்றி .*
வையமீரேழுந்தேடி வருந்தியேவந்தேவிப்போ... ...*
மையலால்மெலிந்தேனென்னை மருகவேமனங்கொள்வீரோ

வசனம்.

சுவாமி சர்வமென்பிராணநாயகா யிதுவரைக்குந் தேவரீ ரைக்காணுமல் யீரேழுலோகமுந்தேடியிந்தவனத்தில்காணப்பெ ற்றேன் நான்வெகுமையலாய் தேகம் மிகவுமெலிந்துவந்தேன் யிப்போது வென்னைமருவி யென்னுமையலைத்தீர்த்து அடியாளை ஆட்கொள்ளுமென்பிராணநாதா.

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்-ஆனந்தபயிரவி.

ஆளுவாயெல் றனாத்த அனேகநாள்தவங்கள்செய்யும் *
வேளையிலுன்னைச்சேர வேண்டுமோசித்தந்தானே ... ...*
வாளனுப்விழியிநானே யிவ்வார்த்தைவிட்டுநீங்கி ... ...*
நாளினிலாசிர்மத்தில் நங்கையேநடந்திடாயே ..... ...*

வசனம்.

கேளும்பெண்ணே யென்னருமையாகிய பிராணநாயகி நான் தவஞ்செய்யு மிடத்தில்வந்து யென்னைச் சேருமென்றுசொல் லவுனக்குத்தகாது ஆகையால் நீயிவிடம்விட்டுநீங்கி நமது ஆசிர மம்போய்ச்சேரும்பெண்ணே.

திதி-தரு-இ-ம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்

இந்தமோடிசெய்குராயிரிஷியேமுநியே ... ... ... ...*
எந்தநால்சகிக்கலாமோயிந்தவேளையிநியே... ... ...(இந்த)



கொங்கைரெண்டும்விம்முதே அங்கஜன்கணைகள்ஜாட... ...*
திங்களாலுந்தென்றலாலும்யென்னங்கம்நொந்துவாட (இ)

அந்தியென்றும்சந்தியென்றுஞ்சிந்தைசெய்வதேதே ...*
வந்துமணஞ்செய்தணைந்தசொந்தமாதர்மீதே... ...(இந்த)

கட்டில்மெத்தைமீதில்நீரிஷ்டமுடன்வாரும்... ... ...*
பட்டுடைநெகிழ்த்தியெந்தன்வட்டமுலைசேரும் ... (இந்த)

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்-நாட்டை.

திதியெனுமனைவியேநான் செப்பிடக்கேளுமுந்தன்.....*
மதியதுகலங்கிடாமல் மங்கையேஅந்திவேளை......... ...*
சதியதுவரும்நான்சொல்னேன் தர்மத்தின்வழியிதல்ல *
கொதிகொளுமனதையாற்றி கோதையேயிருந்திடாயே *

வசனம்.

வாரும்பெண்ணே யெனது பிராணநாயகி யிப்போதுஎன் னைசேர்த்தால் சதிமோசம்வரும் யிது தர்மத்துக்குயோக்கியும ல்ல யின்னஞ் சற்றுநேரம் பொருத்திருந்தால் இராத்திரிகாலம்வ ரும் அப்போது தடையில்லாமல் கூடிமருவி சுகித்திருப்போம டிபெண்ணே.

திதிக்கும்-காசியற்கும்-தர்க்கம்

தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்ஆதி.

திதிசொல்.

காமன்கணையாலுட்மைக்கருதியணையவந்தேனே-யென்னை ...*
கலகஞ்செய்துதள்ளக்கருதாதேமனதுநொந்தேனே... ... ...*

காசிபர்சொல்.

சோமன்றனைதரித்தசுத்தநாதர்வரும்வேளை-இப்போ .. ... ...*
தோகையணையணைந்தால்நிலையாம்பாவஞ்சேரும்நாளை... ...*

திதிசொல்.

மாதரின்பத்தன்னைமறந்துவிட்டாலதுபாபம்-தீரம்... ... ...*
மாராத்தவஞ்செய்தாலும்வருவதுமக்கென்னலாபம்... ... ...*

காசிபர்சொல்.

பாதகமல்லால்பழிவந்துநேருமுன்னாலே-அந்த......... ... ...*
பாமனெழுந்துபகலில்வருவானென்மேலே... ... ... ...*

திதிசொல்.

அந்தியின்தென்றலனலாகவீசுதென்மீதே-யெந்த...... ... ...*
ஆசைதீரும்படியணையவருவிரிப்போதே........ ....... ...*

காசிபர்சொல்.

கந்தமலர்க்குழல்காதலிநீகொண்டவாசை-உன்னை............ ...*
கலந்தணைவோமென்றால்கலங்குமேயென்றவப்பூசை...... ...*

திதிசொல்.

உலகமாய்கைவெறுக்கவொருவரால்முடியுமோசாமி-தீ... ...*
ஒட்டாரப்பேசியுதறிவிடாதேநுன்காமி.................. ... ...*

காசிபர்சொல்.

நல்மாய்த்தவங்கள்செய்யநான்வந்ததறியாயோபெண்ணே-அந்த
நாதன்பணைவந்தால்நம்மைவிட்டுப்போமோயின்னே ... ...*

திதிசொல்-கலிப்பா.

வந்துமதன்விடுத்த வாளியினுலெந்தேகம்... ...*
நைந்துருகிமையலினால் நான்மெலிந்துவாடுகிறேன்*
தந்தனமதாகவென்னைத் தள்ளுவதுநாயமல்ல....*
சிந்தனையில்லாமலிப்போ நீயணைவாயென்கோவே *



வசனம்.

வாருமென்பிராணவல்லவரே வுமதுஅடியாளாகிய நான்ம ன்மதபாணத்தினால்மிகவுமெலிந்துமெய்தளர்ந்துவாடுகிறேனெ ன்றும் நீர்யென்னைச்சேர்ந்து யென்விரகவேதனையைத் தீர்த்து ரட்சிப்பீரென்றும் வும்மையழைத்தால் அதற்குநீரிப்படிப்பட் டவார்த்தைகள்சொல்லியென்னைபோவென்றுசொல்லுவதுவுமக் குத்தகாது யெப்படியாவது மனமுகந்து யிந்தவேளையிலென் னுடன்கூடி அணையவாருஞ்சுவாமி.

திதிசொல்தர்க்கம்-தரு இ-ம்- புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு.

என்னசெய்வேன்மையல்சகியாது- மன்மதகாமம்... ...*
இன்னமும்பொருக்கமுடியாது ... ... ...*

காசிபர்சொல்.

முடியாதென்றுரைத்தாயென்மானே-யென்றவசதான் ...*
முடியவேணுமடியென்தேனே ... ... ...*

திதிசொல்.

என்னைமணஞ்செய்ததும்வீணதானே-யிப்போதணைய .*
உன்னிடமாகப்போனால்விடுவேனே ... ... *

காசிபர்சொல்.

விடுவேனென்றுரைத்தயேயானால்- வுன்கொங்கைரெண்டும்
தொடவேணத்திப்பொழுதுபோனால் ... ... *

திதிசொல்.

அந்தமட்டுந்தானுமோதாளாதே-மாருதப்புலி ... ...*
வந்துபாயுதேகாமதம்பயேதே ... ... ... *

காசிபர்சொல்.

காமதந்தானிந்தவேளையாகும்-கூடிநால்பாவம் ... *
ஆமடிசொன்னேனேவிடேயோகும் ... ...*

திதிசொல்.

வருத்திரானழைப்பதோவும்மை-மாமுநியோர்க்குப் ... ※
பொருந்தாதோகாமக்கனல்வெப்மை ... ... ※

காசிபர்சொல்.

காமக்கனல்பொருக்காதோமின்னே - மாலைப்பொழுது ※
போமட்டும்பொறுக்கவேணுமின்னே ... ... ※

திதிசொல்.

அந்தியிளப்பிறைதனலாச்சே-யென்னமோயெனமே... ※
அந்தன்மனங்கருங்கல்லாய்ப்போச்சே ... ... ※

காசிபர்சொல்.

எந்தன்மனங்கருங்கல்லோமாதே-பேயும்பிசாசும் ... ※
வந்துலாவுகின்றவேளையிதே ... ... ※

திதிசொல்.

கூடியென்னையணைந்திடவாரும்-வாராமற்போனால் ... ...※
போடுவேன்றன்மீதிற்பழியாரும் ... ... ※

காசிபர்சொல்.

பழியும்பாவமும்வேரேயுண்டோ-என்றன்தவசை ... ※
அழிவுசெய்குராயென்னகல்லோ ... ... ※

திதிசொல்.

என்னளவுமனமிதங்காதோ-பின்னமுமென்ன ... ※
கள்ளமோதெரியெனிதுவாதோ ... ... ※

காசிபர்சொல்.

வாதுயில்லைவழக்கதுயில்லை-யிதனால்வெரு ... ※
பாதகம்வந்திடுஞ்சொன்னேன்றொல்லை ... ... ※

திதிசொல்.

இத்தனைசரசமதுபோதும்-வுமக்குமெந்த ... ※
பத்தினியாள்மீதிலாசையோதும் ... ... ※



காசிபர்சொல்.

ஆசபாசமெத்தவிருந்தாலும்-வுன்றனெனக்கு ... ※
தோஷம்வந்துநேரிடுமென்மேலும் ... ... ※

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

சந்திரன்மௌலியன்னல் தக்கபேய்பூதத்தோடும் ... ...※
வந்திடுங்காலமீதே மருவுதல்பிழையேயாகும்... ... ※
அந்தியப்பொழுதுபோனபின்பேர்ருமணைவோங்கண்டாய்
சிந்தைகொண்டலையவேண்டாத் திதியேநீயேகுவாயே ...※

வசனம்.

வாருமென்பிராணப்பதமானப் பெண்ணேதிதியேயிந்தஅந்திப்பொழுதில் சந்திரனைத்தரித்தஅன்னலாகியபரமசிவம் ரிஷபவாகனருடராய் பூதகணங்கள்சூழசஞ்சரிக்கின்றநேரமானபடியால் யிப்போது வுன்னைச்சேர்ந்தால் மிகுந்தபாவம்வந்து நேரிடும் பெண்ணே.

திதிசொல்-கலிப்பா.

நேராதொபாவமென்று நீருரைத்திரொன்றுடனே ※
போராடும்மதனாலென்புத்தி மயங்குதையோ... ...※
தாராளமாயென்னை நீ தழுவியணைந்தாலுமக்கு......※
சேர்தவம்பலிக்குஞ் செகம்புகழுமாதவனே... ...※

வசனம்.

கேளும்பிராணநாயகா பகற்காலத்திலணைந்தால் பாவமாகவிருந்தாலும் மன்மதன்பாணத்தினால் மார்பைத்துளைக்குதுயென்புத்தியைமிகவும்மயக்குது யிந்தவேளையில் யென்னைத்தழுவியணைந்து மன்மதவிகாரத்தைதீர்த்தால் பகற்பொழுதென்கிறதில்பாவமில்லை வுமக்குசோகத்தவம்நிறைவேருமென்பிராணநாதா.

காசிபர்கந்தார்த்தம்.

செந்திருமால்மகனெங்கண்டபட்டுருகுதுசேரொணவே※
வந்தெதிர்நின்றுவழங்கியபெண்மயிலேமனமகிழ்வாய்

சுந்தரபாததவந்தனையேபுரிகுழலி துணைமருக ... ... *
மந்த்ரமாமலையொத்ததனத்தினளேயுனக்கு... ...... *

வராமோமோடி-யுன்மேனின்பந் ... *
தருமோதீயோடி ... ... ... *
வருமோயின்பசுத்தருமோநந்தியின்மீதிற் .. *
பரமசிவனெழுந்து திரியும்போதிலனைய (வா)

திதிசொல்-தந்தார்த்தம்.

வேதம்நிறைந்துமெதனித்திமாதவனேபுகல்மேல்விரகம் ........ *
கோதையர்நெஞ்சில்வுறைந்துமகிழ்ந்தெனைகூடியேநீரணைய ... *
பாதகமேதுமதன்விடுமைக்கணைபட்டுருகும்பொழுதில் ... ... *
எதிருவுந்தன்மனத்தினில்வஞ்சமிலாமலேவந் ................ *

தெனைச்சேரும்சாமி-அதிவிரக ... ... *
மனத்தாள்நான்சாமி ... ... ... *
என்னைச்சேரொன்றுயாருமினிதாய்வந்தபோது ... *
பன்னகசாலையைவிட்டுப்பதித்துதன்னிவிடாமல் (எனை)

காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

மாதேசாறுந்தனுடனெதுசொன்னது ... *
மதுத்தெனைநீயணைந்திட வாவென்றுரைத்தாய் ...*
தோதகமாம்பகற்பொழுதென்றுரைத்திட்டாலுந் ..*
தொடுவேழக்குப்பேசியென்னைத் தொடவேவந்தாய்
பாதகமும்பிறிவேண்டேன் பழியும்வேண்டேன் ... *
பரமசிவன்சற்பனையுமிப்படியுமாச்சே ...... ... *
வாதைகொண்டுவருமுந்தன் மையல்திர...... ...... *
மனங்கொண்டேன்கனங்குழலேமருகவாராய் ... *

வசனம்.

கேளுமென்னுடையபிராணநாயகி நான்யெதைச்சொன் னபோதிலுந்தன்னி தன்னைமாத்துப்பேசுகின்றாய் யினிபாவமும் பழியும் யாதொன்றும் யெனக்குஅக்கறையில்லை பரமசிவன்கற்



னைப்படிக்கிநடக்குமல்லாமல்வேறொன்றும் நடவாதுஆகையால் உன்மனதின்படி சம்மதித்தேன் மருகவாரும்பெண்ணேபிராண நாயகி.

திதிசொல்தந்தார்த்தம். [வாநீ

மாரன்கணையால்மையல் கொண்டுனைசேரும்படியாய்வருமென்றன் *
தேரும்படியாகியிப்வேளையிதில்வாரும் மிகதாமிருவோருமாய் *
மருகுவோம்சுவாமி-வசந்திலின்பம் ... ... ... *
புரிகுவோம் சுவாமி ... ... ... ... *
வாருமிந்தவேளைசேரும்நண்பகலில் ... ... *
மாரன்றன்னைவெல்லசீர்மிகுந்தன்பாக ... (மருகு)

காசிபர்சொல்தந்தார்த்தம்.

அன்பாகவெதிமெனையாளைவலிபாருருபகலினிமருவுதல் *
இன்பாகவெதாமிருவோருமாய்தென்பாகவனத்திலுகந்துநாம் *

சேருவோம்பெண்ணே-சேர்ந்தநந்தம் ... ...... *
கூருவங்கண்ணே ... ... ... ... ... *
சேரும்போதுவனத்தாரும்வந்திடாமல் ... ... *
மாரன்தன்னைவெல்லவாருமின்பதாகா ...(சேருவோ)

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

காசிபர்மகிழும்வண்ணங்கருதினையேவல்செய்து ... *
பூசலங்குடிமிவைவேர் புணாவிழிகைடயிற்பார்த்து *
தேசனின்னிலகால நின்றனநகைத்துமந்த...... ... *
மாசிலாதவனையன்னாள் தன்வசமாக்கினாளே ... ... *

வசனம்.

இவ்விதமாக திதியானவள் அநேகமான தந்திரவுபாயங்களு ம்முப்சாரமுஞ்சொல்லி கடைக்கணால்மிரட்டி யிடைக்கண் வே லைப்புவிட்டுபுன்னகைநகைத்து நயமானவார்த்தையைப்பாடித் அந்தகாசிபரை மயக்கிதன்மாயவலையிற்சிக்கும்படியாகச்செய்து மருவியணைகின்ற விதங்காண்க.

திதிசொல் தரு-இ-ம்-தோடி-ஏகதாளம்.

பல்லவி.

காயக்கண்மிகுந்தவுபாயத்தில்முனிவனைக்கைக் ......*
கொண்டாளே திதிமைக்கண்ணுள் ... ... ... *

அநுபல்லவி.

மாயக்கண்மிரட்டியும்-பிரட்டியும்-அரட்டியும் *
வஞ்சமோயிதநஞ்சமோமையல்கொஞ்சமோ ...*
கல்லுநெஞ்சமோவென்று... ... ... (காயக்கண்)

சரணங்கள்.

வாசக்களபமள்ளிப்பூசிநாள்-சித ... ... ...*
மருவும்பன்னீர்கொண்டுவீசிநாள்-நீ ... ...*
ஆசையந்தவனென்றுயேசிநாள்-பின்னும் ... ...*
அநுராகவிநயம்பேசி-நாள்-மெத்த ... ... ...*
அலுக்கிநாள்-வளைகிலிக்கிநாள்முலைக்குலுக்கிநாள்...*
கண்மெலிக்கிநாளந்தக் ... (காயக்கண்)

மதனகேளிவிலாசம்பூட்டிநாள்-கட்டி ... ...*
மார்போடணைத்தழுத்தமீட்டிநாள்-மெத்த ... ...*
அதிவிநயத்தைப்பாராட்டிநாள்-சேலை ... ...*
அவிழ்த்துவுபரிவீலைமாட்டிநாள்-கட்டி ... ...*
யணைத்திட்டாள்காலிணைத்திட்டாள்-ரெண்டும் ...*
யிணைத்திட்டாளுடலணைத்திட்டாளந்தக் (காயக்கண்)

தலமுதிமனத்தையுங்கெடுத்திட்டாள்-கையால் ...*
தழுவிமார்பின்மீதபடுத்திட்டாள்-அங்கு ... ...*
அவருமிணங்கவிலைதொடுத்திட்டாள்-போகம் ...*
அமளிபிரளயின்பங்கொடுத்திட்டாள்-பின்னும் ...*
அஞ்சிநாள்மிகக்கெஞ்சிநாள்மனங்கொஞ்சிநாள் ...*
கெட்டிநெஞ்சிநாளந்தக்... ... ... (காயக்கண்)



திதிசொல்விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

கன்னல்வில்மதனனல்மெத்த கருத்தழிந்துருகிவாடி...*
இன்னகரெங்குந்தேடி யிருள்வனத்தும்மைக்கண்டு *
மன்னியவிரகந்தீர்த்தேன்மனதுசந்தோஷமாச்சு...*
என்னிடப்ராணநாதா வுன்னடிக்கமலம்போற்றி ...*

வசனம்.

வாருமென்பிராணநாதா அடியாள் மன்மத விகாரத்தினால் மெலிந்து கருத்தழிந்து மனம்வாடி யிந்ததேசமெங்குந் தேடிக் காணாமல் யிந்தவனத்தில் உம்மைக் கண்டு யென் விரகத்தைத் தீர்த்துக்கொண்டேன் யிப்பவும் யென்மனமிகுந்த சந்தோஷ மாச்சுதையா சுவாமி.

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

தபத்தினையழிக்கவந்ததையலேசொல்லக்கேளாய்.......*
பவமதுவிளையுமிந்தப்பகற்பொழுதாகாதென்றேன்.....*
செபந்தனைதுரோகஞ்செய்துசேர்ந்துனையணைந்ததாலே
அபத்திலுன்கெற்பத்துக் குண்டாச்சுதுதோஷந்தானே...*

வசனம்.

வாரும்பெண்ணே பிராணநாயகி நான்செய்ததவத்தையுமழித்தாய் பகலிற்சேர்வது பாவமென்றுசொன்னேன் அதையுந்தடுத்தாய் பரமசிவத்துக்கு துரோகஞ்செய்தபடியினாலும் அன்வயத்திலுண்டான கெற்பத்துக்கு தோஷம் வந்ததடி பெண்ணே

காசிபர்புலம்பல்-தரு-இ-ம்-ஆஹிரி-தாள-ஆதி.

கண்ணிகள்.

வந்ததேதோஷம்-கெற்பத்துக்கு ... ...*
வந்ததேதோஷம்... ... ... ...*

வந்ததேதோஷம்-அந்திவேளையென்ற ... ...*
சிந்தைசொற்கேளாதவுந்தனாலேயின்று...(வந்ததே)

சிந்தைநொந்தகச்சந்த்ரசடாதரர் ... ...*
வந்தகாலந்தன்னி லுந்தனைச்சேர்ந்ததால்.. (வந்ததே)
தவத்தைவிட்டியா ருமவத்தி லுன்னைச்சேர ... ...*
செபத்தைத்தோகஞ்செய்தபவத்துக்காளாகவே (வ)
புவனந்தன்னி லுள்ளமவுன முநிவரெல்லாம் ... ...*
அவத்தில்பெண்ணையணைந்தசிவத்ரோகியென்பாரோ)
இஷ்டங்கொண்டுநீயெனை யிட்டவந்ததிறாலென் ...*
கெட்டமதியாலின்றுதுஷ்டவேலையைச்செய்ய (வந்)
மட்டில்லாமையல்கொண்டுகிட்டியெனைமயக்கி ...*
பட்டம்பகல்தனிலேகட்டியணைந்ததால... (வந்து)
தரணிதனில்காமத்தைத்திருணமாய் நினையாமல் ...*
திருணந்தனில்பிள்ளைகள்மறணமாகுமேஐயோ (வந்)
நாரணிதனையானந்திரமானமைந்தர்கள் ... ... ...*
பூரணவாயிசைசிரணஞ்செய்யவே... ... (வந்ததே)

திதிசொல் விருத்தம்-இ-ம்-முகாரி.

உண்டாக்கதோஷமென்றிருலகினில்மங்கைமார்கள் ... ...*
கொண்டிடுமோகத்தாலேகொடுமைகள்வந்ததுண்டோ ...*
இன்டருங்கெற்பத்துக்குயென்னதோஷங்களத்தை ... ...*
மண்டலர்மாலைமார்பாமங்கைநானறியச்சொல்வீர் ... ...*

வசனம்.

பெருமென்பிராணநாயகா வுலகத்திலுள்ளமங்கைமார்கொண்டபுருஷிராசையினாலே கொடுமையான தீங்குகள் வந்ததுண்டோ இன்றுயெனுடையகெர்பத்துக்குயென்னதோஷம்நேர்ந்ததுஅதனையெனக்கு நன்றாய் தெரியசொல்லுமென்சுவாமி.

காபிபர்விருத்தம்-இ-ம்-கண்டா.

மங்கையேஅந்திவேளைமருவிநாமணைந்ததாலே ...*
அங்கமாமுன்வயத்திலுதிக்கும்பியபாலர்தானும் ......*
சங்குசக்கரத்தான்மீது சதிசெய்யும்பகைவராகி ...*
அங்கவர்மடிவார்நீயும்அடவுடனறிந்திடாயே... ...*



வசனம்.

வாரும்பெண்ணேதிதியே இந்த அந்திவேளைப் பொழுதில் சேரலாகாதென்றசொல்லைமறித்து நீசேர்ந்து மருவினதால் வுன் வயத்திலுதித்தபிள்ளைகளானவர் சங்குசக்கரங்கட்கோதண்டமணிந்த ஸ்ரீமன்நாராயணர்மீதில் பகைவருகிமடிவார்களடி பெண்ணே.

திதிசொல்கட்டளைக்கலிப்பா.

ஆகுமோயிதிந்த்ரேஷமென்றுரைநீயோ ... *
அணையவேயென்குணங்கள்மயங்கியே ... *
சோகவாரியில்மூழ்கிவந்தேன்கண்ட ... *
சொற்பனம்போல்வுற்பவமாச்சுதே ... *
தோகைமார்க்குள்விவேகமில்லாமல் ... *
நான்சுத்தநாயகன்புத்திமயக்கினேன் ... *
யேகரூபயோகாகெங்காதரா ... ... *
இறைவனேயிதற்கென்செய்வேன்சனே. *

திதிபுலம்பல்-சுரு-இ-ட-கண்டாதாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேன் ... *
அவதியிலென்னமென்றுய்வேன் ... *
மையல்கொண்டுமனம்வாடி ... *
மாமுநிவர்தன்னைத்தேடி ... ... *
செய்யவனந்தனிற்கண்டு ... *
சேரவேநீவாருமென்று ... ... *
பொய்யில்லாமுநிவர்சொல்ல ... ...*
பொழுதிலகாதென்றேதல்ல ... *
கதிரவன்மறைந்தானுன்னே ... ... *
கலந்தனைவேனென்றுரீபின்னை ... *
பரியணியுஞ்சிவனார்வந்து ... ...*
மகிழுங்காலமென்றுநொந்து ... *
தோகையேயிதிற்பாவம் ... ...*

தோணுமென்றுநீபோதயோக ... ❊
அணைவமென்றார்வெகுமோகங் ... ❊
கொண்டபிலேநான்புழுகி ... ... ❊
கோபத்தாலவர்தழுவி ... ... ❊
இன்றவரொணமருக ... ... ❊
எங்கியென்மனமுருக ... ❊
வயத்திநிறுதிக்கும்பிள்ளை ... ❊
மாயனுக்கிட்டேவாகொள்ளை ... ... ❊
வெய்யவிலலைத்தபோது ... ... ❊
விளைந்துதைமயாயிந்தநிது ... ... ❊
பெத்தக்குழந்தைமடிய ... ... ❊
பேதையானேனுங்கொடிய ... ❊
இத்தலத்திலேநான்பாவி ... ... ❊
இருந்திடத்தகாதென்றுவி ... ❊
சங்கரநீசெய்தஜாலம் ... ... ❊
நானிதெனக்கேநகூலம் ... ... ❊
பங்கையன்விதித்தவிதி ... ❊
பரமனேயிதுவோகதி ... ... ❊

திதிசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

மறைபலவாமுணர்ந்தஞான மாதவாயெந்தன்கோவே ❊
உரைபுயமைந்தன்தன்னை மாயவன்கொன்றானேல் ..... ❊
இரைவனேகுலம்விளங்கி யிருக்குமோவழிந்துபோமோ ❊
கரையிலாமுநியேநன்றாய் கண்டெனக்குரைசெய்வீரே. ❊

வசனம்.

மறையாகமசாஸ்திரபுராணங்களை யெல்லாங்கற்றுணர்ந்த ஞானமுநிவரே யென்வயத்திலுதிக்கும்பிள்ளைகளை அந்தமாயன் கொன்றானேல் பின்புநமதுகுலம்விளங்கியிருக்குமோ அல்லது அழிந்துப் போகுமோ யெனக்கொன்றுந் தெரியவில்லை அதையெனக்குசொல்லவேணுமென்கிறாள் திதி.



காசிபர்சொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

செய்யுமென்றுரைத்தவெந்தன் றேவியேயிரண்டுபாலர் ❊
வையகமாளும்போது வராகத்தாலொருவன்மாய்வான் ❊
மையமற்றொருவன்றானும் பாலனால்மாயன்கொல்வான் ❊
ஐயமோவிளையவன்மைந்தன் றாணியையாளுவானே ..... ❊

வசனம்.

கேளாய்பெண்ணே பிராணநாயகி இப்போதுவுன்வயத்தில் பிறக்கும் இரண்டுபாலரில் லொருவன்வராகத்தினாலும் மிறந்துப் போவான் அவன்பிள்ளையானவன் இந்தவுலகத்தையெல்லாமரசாட்சிசெய்வான்பெண்ணே.

திதிசொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

தாரணிதனிலே சின்னத் தனையனாயினன்றலல்லோ... ... ❊
நாரணர்கொல்வார்மைந்தர் நானினிப்பெறவேனித்த... ❊
பாரொரும்வின்னுமஞ்சப்பதியுள்ளோர்நடுங்கத்தெய்வ ❊
அரோனும்வருஷிங்கெர்ப்பம் நொய்தாதத்தாங்குவேனே ❊

வசனம்..

கேளுமையாசுவாமி பிராணநாயகா நான்சிறுகுழந்தைகளா கப்பெற்றாலல்லவோ அந்தநாராயணர்கொல்வார் தேவவருஷம் நூறுவரையிலும் யென்வயத்தில்தாங்கிவளர்த்துவருகிறேன் சுவாமி பிராணநாதா.

பொது-அகவல்.

மையலாள்திதியுமாதவனுடனே ... ❊
அப்புரச்சேர்ந்து அணைந்திடக்கெர்ப்பம் ❊
வேதனுரைபடித்திருவயத்தினிலே ... ❊
ஆவலாய்தாங்கி அமர்ந்திடும்நாளில் ... ❊
அண்டமெல்வுலகம் மெண்டிசையெல்லாம்.. ❊
மண்டலம்நடுங்க வானவரஞ்ச ... ❊
ஊறெலாம்பரந்திட அவள்வயத்தினிலே... ❊
இரணியனிரணியாக்கதனும் ... ❊
இருகுமாரயிப்புவிதனிலுதித்த ... ❊

வெருமையாகுபோனைப்பேசவொட்டாமல் *
அடித்தவன்புரவி பதவிலேவடிப்பட ... *
வுலகம்வலமதுவந்து வேனுப்புருயிந்திரன் ... *
வெள்ளானையேறி விளங்கிநின்றனரே ... *

கட்டியகாரன்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மட்டிலாப்பணிகள்பூண்டுவெரிசைசல்லடமுந்தொட்டு ... *
சட்டமாய்தலையிற்பாகை சரிகைபொன்னிடைதரித்து ... *
இட்டமாயுலகம்போற்றும் இரணியமகிபன்வாசல் ... ... *
கட்டியக்காரன்முனங்கனைசபைதனில்வந்தானே ... ... *

கட்டியன்வருகிற-தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆக்கிரமவீரபராக்கிரமயிரணியன் ... ... *
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா *
அண்டர்பணிந்திடுங்கண்டயிரணியன் ... ... *
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா ... *
அரண்டபரவைபுயிரண்டமுழுதுடன் ... *
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா ... *
அதட்டிக்குதட்டிவுருட்டிமிரட்டி ... ... *
அருமைக்கட்டியக்காரன்வந்தானையா ... *

எச்சரிக்கை-கட்டியன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

தானவர்வானவர்கண்டுநடுங்கிட தவமுநிவோர்மிரள ... ... *
சந்திரசூரியர்கண்டெதிர்நின்று சலாமிசெய்துவர *
ஆனைசேனையனைகளைத்தும் நெருங்கியேயஞ்சலிசெய்துவர *
அடையவர்தமையோர்நெடியில்ஜெயங்கொளரக்கர்கள்புடைசூழ
நாநிலமன்னரதிசயமென்றுநடுங்கிமனந்தனர ... [ழ
படயிடைமாயிலெனவருகவிளரிநயப்பொன்னடிப்பரவ ... *
தனவிழ்மாலைநிரைநிருமார்பன்றிகழ்ராசியராசன்செய் ... ... *
னாமிகுயிரணியன்வருகிறாரவரவர்நினைமிகும்பெச்சரிக்கை. *



இரணியன்வருகிற-விருத்தம்-இ-ம்-தோடி.

தங்கமாமகுடஞ்சூட்டி தறப்பணிபணிகள்பூண்டு ... ... *
மங்களமாதார்பாடிவரிசையாலத்தியேந்த ... ... ... *
துங்கமுற்றிரிசர்சூழத் துயனுமறையோர்வாழ்த்த ... *
எங்குமேபுகழ்பெற்றோங்குமிரணியன்கொலுவில்வந்தான்

தரு-இ-ம்-அசாவேரி-ஏகதாளம்.

பல்லவி.

வீரசூரயிரணியன்யிரணியாக்ஷன் விந்தையுடன்தானிதோவந்தார்

அநுபல்லவி.

ஆரபரிமளமார்பில்லுலங்கவே-ஆத்தரவானவர்சிந்தைகலங்கவே(வீ)

சரணங்கள்.

செம்பொனெங்கியமுத்துகொண்டபுயங்காதிதில் ... ... *
செழித்தமணிகுண்டலந்தாலங்கவே-மிக்க ... ... *
தண்டையுஞ்சதங்கையுமசைடியதிர்த்திட ... ... *
தங்கச்சட்டிநெத்தியிற்செங்கிரிலங்கவே ... (வீரசூர)
மந்தரமாலைபோலுந்தந்தரப்புயமீதில் ... ... *
மன்னியவலயங்கள்துன்னியேசெழிக்க ... *
விந்தைசெய்யபாதிகுப்பத்தியத்தியதாம ... *
மிச்சித்திரசிங்கமணிவுச்சிதங்கொழிக்கவே ... (வீரசூர)
மழுவுண்டகுலிசமும்மெழுவுடன்கப்பணம் ... *
வளங்கொண்டவாளந்தைக்கைக்கொண்டபிட்டியும் *
கழுமுள்ளங்குசபாசந்தழுவும்பிண்டிபாலமும் ... *
கட்டாரிகைகளைபட்டாவுங்கூட்டியே ... (வீரசூர)

கட்டியன்சொல்-விருத்தம்.

அம்பரத்துமழ வடக்காவுடயே றத்தாயி அதிர்ந்திடியிடி
யென்னவே,அதிர்பூரகபேரிநாகஸ்மேள வீராணமறைந்ததாய்
தாமென்னவே, இம்பருமாடுகொம்பு தம்பட்ட மிருதாணசங்கமி
னாத்தஓஓ மென்னவே, இணையெர்த தலங்காளம்நாகசுரமந்த
னத்தின் தனத்தன மென்னவே, பம்புமிகுகாளமும்பூரிகைகள
த்தவனம்வரிசைபாம்பாமென்னவே,வகைபம்பையுமிகுநயபத்தா

டம்மாற மெனும் வகைகள்சாம்சாமென்னவே, சம்பரன்முதல
வுணர்கத்திடால்கட்டாரிகைகொண்டசேலாமென்னவே, தரணிபதி
யவுணர்குலயிரணியபதியுனதுதிருவடிகள்மிகசரணமே.

இரணியன்சொல்போற்றி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

சிவகாருண்யாபோற்றிசெய்யமாதவத்தாய்போற்றி ※
தேவர்கள்தேவேபோற்றிசிறத்தசிம்மயத்தில்மிக்க ※
ஆவ்லாய்வாழுகின்றஅய்யனேமனமகிழ்ந்து... ... ※
தாவியேயெமையளித்ததந்தையேபோற்றி போற்றி

காசிபர்சொல்விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

இன்னகர்தனிலுதித்தவெய்னிடமைந்தரோகேள் ... ※
பொன்னின்மாமுடிதரித்தேன்புனைகுழலவுணருக்கு ※
மன்னியவுலகுமேலோர்க்கும்வழுத்திடத்தரணிமீது ...※
தன்னிகரிணையிலாமற்றலைவராய்வாழ்குவீரோ... .. ※

இரணியாக்கன்சொல்போற்றிவிருத்தம் இ-ம் -தோடி.

அன்னையேகற்பின்மிக்கஅரசிபற்காசியர்கி ... ... ※
மன்னியவுலகமெல்லாமகிழுந்நாயகியேபோற்றி...※
தன்னிகரில்லாவேதத்தலைவர்மனைவியாகி .. ... ※
என்னையுமீன்றதாயேவுன்னிணையடிபோற்றிபோற்றி ※

நீதிசொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

திருபுவனத்துக்கெல்லாந்தேவர்களாகவாழி ... ※
குறையிலாதவுணர்தங்கள்குலபதியாகவாழி ... ※
நிறைந்துமிசெங்கோல்செலுத்திநீங்களொன்றாகவாழி
யிரணியன்யிரணியாக்கன் யென்னுமைந்தர்களேவாழி

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்- கல்யாணி.

நேமியுங்கரத்தோன்சதுர்முக னரியாநித்தனேவுத்தமற்கு
தேநீன்மறைமுடிவிற்றிக்கிடாமனத்தோர்நெஞ்சினிற்நடப்புரிந்
தவனே,காமனைக்காய்ந்து வெண்பொடியணிந்து கையில்மான்ம
ழுதரிப்பவனே,கருணையங்கடலேபார்வதாசன்கன்னியபமனைப்பு
ணர்ந்தவனே;பாயினையுகந்துதிங்களுப்புணலும் பன்னகமெ
ன்சடைக்கணிந்து,பன்னருப்பதத்திற்கிலம்பொலியசையபரும்
புலியாயிடைதரித்து,ஒயெனும்பொருளாய்கைலயப்பெருப்பி



ல்வொளிர்பறவுகந்துவாழ்பவனே, வுன்னிருபதமென்சென்னியி
ல்வைத்தேனுகந்தெனக்காரிப்பதுன்கடனே.

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

வுலகெலாம்புரந்துநாளும்வொன்னலர்தம்மைவென்று ..※
பலமிகுமரசனென்னப்பிரமனேமுடெவருமஞ்ச ... ※
தலைமையாய்செங்கோல்தாங்குந்தகைபெறநடத்துமெந்தன்
மலைநிகர்புயவன்றனுகமலர்ப்பதஞ்சரணம்போற்றி ... ※

முதல்மந்திரிதுன்முகன்சொல்விருத்தம்-இ-ம்-கல்யாணி.

அடையலர்தம்மையெல்லாமமர்களந்தன்னில்வென்று ※
நெடியசிங்கத்தைப்போலுயர்ந்திடவாள்கையிற்றாங்கி... ※
கடிமறைதான்குயநன்றாய்சருதியவேந்தர்வேந்தே ... ... ※
வடிவுன்னவுனதுசெய்பொன் மலர்ப்பதந்துதிசெய்வேனே

உ-வது - மந்திரிசகுனிசொல் விருத்தம்-இ-ம்-மோகனம்,

செய்யப்புமாதுவாழுஞ்சீருறுஞ்சமுகந்தன்னில் .. ※
பையரவதுபோல்நீறிபடைமன்னரருகிற்சூழ ...※
வையகத்தவர்கள்வாழ்த்தவந்தடிபணிந்துதிர்க்க... ※
அய்யனேவுந்தன்பாதம் அதுதினம் வணங்குவேனே ※

இரணியன்சொல்-விருத்தம்.

தாளிணையைச்சரணமெனப்பணிந்தவெந்தன் ... ※
தம்பியேநன்மதியமைச்சமாரேயிந்த ... ...※
நீளரியசபையிலுமக்கிருக்கையீய்ந்தோம் ... ※
நீங்கள்மனமகிழ்ந்துநிறைந்திருப்பீர்காமே... ※

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

பொன்னின்மாமுடி புனைந்த விரணியன்றன்புழ குழலா
லெழுவிலாவதியாமங்கை,தன்னைமணஞ்செய்துக்கொண்டானிர
ணியாக்கன்தந்தைமொழிகேட்டினையைத்தழுவிக் கொண்டான், ப
ன்னரியவுலகில்மகிழ்ந்திருக்கும்போதவர்களுவகையாள்வதற்குமு
னதிலெவரினி, நன்னயமாய் தம்பிமுகன்தன்னைநோக்கிதாபந்தவ
னேடொருவர்னைத்தவிலுவானே

இரணியன்சொல் விருத்தம்- ஆனந்தபைரவி.

தன்னிகரில்லகத்தம்பிதயித்திய அவுணர்க்கெல்லாம் *
மன்னவனுகியிந்தமண்டலமாள்வதற்கு... ... *
பன்னும்வேதனும்மால்வும்பர் பாமனேடெவருமஞ்ச
என்னகாரியஞ்செய்வாய்நீயெந்தனுக்குரைசெய்வாயே

வசனம்.

கேளுந்தம்பி - அதிவீரபராக்கிரமசாலியானயிரணியாக்கத னே-நாயிந்தவுலகத்துக்கெல்லாம் அரசனுகவேணுமே - ஆகையா ல்அவுணர்கள்யிந்திராதிதேவர்கள்கருடகாந்தருவர்பிரமன்மால்யி சன்திக்குப்பாலர்களியிவர்கள்யாவரும் அஞ்சும்படியாக நீயென் னகாரியஞ்செய்வாய்சொல்லுந்தம்பி.

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

அன்னவேலசொல்க்கேளாயவனியைத்தாங்கென்றாலும் *
நன்னியகடலின்னீரை நாவினுல்நக்கென்றாலும் ... *
ஒன்னியஊழ்கதீயைவோங்கியூழிக்காற்றை ... *
கன்னவேயிசையென்றாலுங்கணத்திநிற்பிசைவேனண்ணு *

வசனம்.

சரணஞ்சரணமென் அண்ணுவே பஞ்சாட்சரக் கொடிபூம ண்டலத்தையு மெடுக்கச்சொன்னு லெடுப்பேன்சமுத்திரசலத் தையெல்லாம்நாவினாலே நக்கச்சொன்னுலும்நக்கிப்போடுவேன் ஊழிகாலத்துநெருப்பையும் சண்டமாருதக்காற்றையும்பிடித்துபி சையென்றாலும்பிசைவேனண்ணு

இரணியன்சொல்விருத்தம் இ-ம்-மத்தியமாவதி,

பூமியையெடுப்பாயோநீபெருங்கடல்குடிப்பாயோநீ ...*
நேமகவூழித்தீயைநீரொழப்பிழிவாயோநீ... ... *
தாமதமிலாமல்காற்றைத்தழலெழப்பிழிவாயோநீ ... *
ஆய்ந்தயணிந்துநீயும்அடவுடனுரைசெய்வாயே ... *



16

வசனம்.

வாருந்தம்பி யிரணியாக்கதனே பூமியையெடுப்பேனென் றுங்கடல்நீரைகுடிப்பேனென்றும் ஊழிக்காலநெருப்பையுங்காற் றையும்பிடித்து பிசைவேனென்றும்வெகுசாமர்த்தியஞ்சொன்னுயே யுனக்குஅவ்வளவு வல்லமையுண்டோ சொல்லுந்தம்பி.

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவாளி.

ஏதெனக்கீடோவையா ஏழேழுபுவனமூற்றும் ... *
ஓதனீரேழுமேழும் ஊழியாந்தழல்களூன்றும் ... *
மோதியவாய்வுபத்தும் மூதண்டகோளமெல்லாம் *
பாதியாயுள்ளங்கையில் பகுத்தெடுத்தாட்டுவேனே. *

வசனம்.

கேளுமென் அண்ணுவேயிந்தவொருபூமியோயெடுப்பே ன் அண்டாண்டபகிரண்டங்களையுமெடுப்பேன்யிந்தவொருகடல் நீரையோநக்குவேன் யேழுகடல்களையும் நாவினால்நக்கிப்போடு வேன் ஊழிகாலத்துநெருப்பையோ பிசைவேன் தெட்சநாகமெ ன்னும் மகாரப்பத்திரியமென்னும்ஆகுன்னியமென்னும்யிந்தமூ ன்றுநெருப்பையும்பிசைவேன் யிந்தவொருவாய்வையோ பிடிப் பேன் ஊழிகாலத்து பத்துவாய்வையும்பிடிப்பேன் யிதுகளையெ ல்லாம் மொன்றாகச்சேர்த்து பாதிவுள்ளங்கையிலெடுத்துசுழட்டி யாட்டுவேனண்ணுவே.

தர்க்கம்-தரு இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

இரணியன்சொல்.

பூமியெடுப்பேனென்று நேமகஞ்சொன்னுயே *
பூமியெடுக்கப்பலம்பொருந்துமோதம்பி ... *

இரணியாக்கதன்சொல்.

பூமியெடுப்பதுந்தாமதமோயிரேழு ... *
பூமியெடுத்துநான்பிரட்டுவேனண்ணு ... *

இரணியன்சொல்.

கடலின்னீரையெல்லாம் நொடியில்குடிப்பேனென்றாய்
கடலைக்குடிக்கவுயர்யிட மூண்டோதம்பி ... ※

இரணியாக்கதன்சொல்.

இடமுண்டோவென்றாயே கடலென்றாகமேழு ※
கடலையுங்குடிப்பேநான்கணத்திநிலன்று ... ※

இரணியன்சொல்.

அழியும்மூழிநெருப்பைப்பிழிவேனென்றுரைத்தாயே
அழியுமூழிநெருப்பைப்பிழிவாயோதம்பி ... ※

இரணியாக்கதன்சொல்.

பிழிவேனென்றுரைத்தசொல்பழுதுண்டோவொருக்காலும்
மொழிமூன்றுநெருப்பையும்மொடுக்குவேனன்று ※

இரணியன்சொல்.

கற்பககாலவாய்வைகைப்பிடிப்பேனென்றாயே ...※
எப்படிபிடிப்பாயேசொப்புடன்றம்பி ... ※

இரணியாக்கதன்சொல்.

ஒப்புடன்பிடிப்பதுதப்பல்லவொருக்காலும்.....※
இப்பொழுதேபிடிப்பேன்யிநியாருமன்று.........※

இரணியன்சொல்- விருத்தம்-இ-ம்-தோடி.

இவ்வண்ணஞ்செய்வாயாறு லெனக்கெதிரினிவேறுண்டோ ...※
செய்வண்ணமொன்றுகேளாய் திசைகமுகன்படைப்புமாற ...※
பொய்வண்ணமிலாமலித்தப் புவியையோர்புரம்பிடித்து ... ※
கைவண்ணஞ்செருக்கால்பாய்போல் கடுகவேசுருட்டிவாராய்...※

வசனம்.

வாருந்தம்பியிரணியாக்கதா இப்படிக்கொத்த சாமார்த்திய வானேயானல் யினியெனக்குபிரையாசமொன்றுமில்லை ஆகையால்யிந்தபூமியைப்பாயாகச்சுருட்டிசோதனைக்காண்பியுந்தம்பி இரணியாக்கதா.



இரணியாக்கதன்-விருத்தம்-இ-ம்-பைரவி.

நல்லதுஅண்ணாவுந்தன் றுவிநால்சொன்னவண்ணம் ※
அல்லல்செய்யாயுதங்கள் அங்கயிலெடுத்துக்கொண்டு※
வல்லமையாகவிந்த வையகந்தனைச்சுருட்ட... ...※
செல்லுவேனுனதுசெம்பொற் சேவடிசரணமையா※

வசனம்.

கேளும்பெண்அண்ணாவேதேவரீருரைத்தசொல்படியேவேலாயுதம்சூலாயுதம்வாளாயுதம்இவைகளையெடுத்துக்கொண்டுபோய் யிந்தபூமியை யாவருந்தெரிகுதும்படியாய்பாயாகச்சுருட்டிக்கொண்டு வருகுமேன்அண்ணாவே.

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி.

அண்ணனுக்குயிவ்வகையேசொல்லிப்போட்டு ※
அவநிதனைச்சுருட்டுதற்காயேகுஞ்சேதி... ... ※
வண்ணமுலைசில்லிகையாமனையாள்கேட்டு ... ... ※
மனமுருகிவுடல்பதறி வருந்திக்கொண்டு ... ※
கன்னுடனேபசுந்தோளும்வலமேதுள்ள ... ※
காரணமீதென்னவகை தெரிவோமென்று ... ※
யெண்ணியந்தயிரணியாக் கதனிருக்கும் ... ... ※
இடந்தேடியேந்திழையாள் வருகின்றாளே ... ※

சில்லிகைவருகிற-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி. [அமொழி

பங்கேருகரென்ன - ஸ்ரீங்காரவபிநயபவிதலலிதபரிமளமிளமிரு பாவைமெல்லிகைவந்தாள்வொய்யாரச்சேர்வைசில்லிகைதந்தாள்

அநுபல்லவி.

திந்தோந்தைதாதிமிதொந்தொந்திதொந்திமி-தகிடதிகுடதிமி தரிகிடதிமிதிமிதத்தளங்குதிமிதரிகிட திமிதகதளாங்குதகதிமிதகத்தி [மிதகத்திங்கணதோம்
பாவைமெல்லிவந்தாள்.

சரணங்கள்.

பாயிலும்வொயிலும்வனமயிலினியயிலகு ... ... ... ❊
பஞ்சரக்கிளிகள்கொஞ்சிமுத்தமிடும் ... (பாவை)
தகதிரிகிடதிமிதிமிதசெகுகணகதிந்திமிதிமிதக ... ❊
டிங்குடிக்குடிகுதத்தளங்குதிமிதகதரிகிடதிம ... ... ❊
தளாங்குதகதிமிதகத்திங்கணதோம்... ... (பாவை)
பைம்பொற்குடமெனவிம்பொற்தடமுலை... ❊
பார்த்தளகடிதடமாந்தளிர்வடிவம் ... (பாவைமெல்லி)

திந்தித்திமிதிமிதொந்தத்தருதருதாந்தெய்ய... ❊
தரிகிடதித்திமிதத்திமிதகதளங்குதிமிதகதரிகிடதிமி ❊
தளங்குதகதிகதகததிங்கணதோம் ... (பாவைமெல்லி)

பவளமெவளமுளவவளமிதழ்மதூப்... ... ❊
பாங்கியாகவரிதாங்கிவரவொளிர்... (பாவைமெல்லி)

தகுடதிகுடதகுதகஜெணுஜெணுததாந்தெய்ய .. ❊
தரிகிடதித்திமிதத்திமிதத்தளாங்குதிமிதகதரிகிடதிமி ❊
தளங்குதகதிமிதகத்திங்கணதோம் ...(பாவைமெல்லி)

சில்விகைபோற்றிவிருத்தம்-இ-ம்-கல்யாணி.

காசிபர்மகிழ்ந்தளித்தகனகரத்தினபோற்றி... ... ❊
ஆசையாயெனைமணஞ்செய்தாளும்நாயகனேபோற்றி...❊
மாசிலாவுலகனைத்துமகிழ்ந்திடவந்தகோவே ... ❊
பேசரிதானபெத்தன்பிராணநாயகனேபோற்றி... ❊

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

அந்தரத்தமரர்வாழ்ந்தும்அருவையத்தரசியான... ❊
எந்தனுருயிரேமின்னேயேத்திழைமானேதேனே...❊
ஐந்தருபாரிசாதத்தளிர்மலர்க்கமலபாதம் ... ❊
நைந்திடத்தனியேவந்ததென்னமுன்னவிளுவாயே ❊



வசனம்,

வாரும்பெண்ணே சில்விகையே - சொல்லும்மென்பிராண நாதா-அழகுபொருந்தியபாரிசாதத்தளிரும்மாந்தளிரும் - வெட்கும்படியானவுன துயிருதுவானபாதங்கள்நோகநடக்கதாயிவடத்தி ற்குயேது காரியமாய் வந்தாய் அதையெனக்குநன்றாய்தெரியச் சொல்லும்பெண்ணே,

இரணியாக்கன்சொல்-தரு-இ-ம் கல்யாணி-ஏகதாளம்,

பல்லவி. [யே

என்னத்துக்கோடிவந்தாயே-வந்த -தெனக்குத்தெரியச்சொல்வா

அநுபல்லவி.

பொன்னைப்பொருந்துமெழிற்கன்னத்திருந்துமொழி ...❊
பெண்ணேகண்ணேசெம்பொன்னேயென்முன்னேநீ(என்)

சரணங்கள்.

ரத்னச்சிவிகையுனக்கில்லையா-கோடி -லட்சந்தாதியருமில்லையா
நத்துங்கவரியெங்கேமுத்தின்குடைகளெங்கே ... ... ❊
தனமேயனமேநீநானெபொன்மானே... ... ... (என்னத்து)

[ங்கைபொடிக்கவே

சுந்தரமுகம்வேர்வை பொடிக்கவே-நூபுரம் - துவளுமிடையகொ
கொந்தலருமளகதொந்திசரிந்துவிழக்... ... ...❊
குயிலேமயிலேசற்குணயேபூமணமேநீ... ... ... (என்னத்து)

பஞ்சினமெல்லடிகள்கொப்பளிக்கவே - வந்த-பாதையேல்லாமதி
வஞ்சியெசுயவபரஞ்சியேதூரைசக்கன்... ... [ர்ந்துளிக்கவே
மணியேயணிவருமாதேயிப்போதேநீ ... (என்னத்து)

இரணியாக்கன்சொல்கந்தார்த்தம்

தேனேரினியதெருவையேதிசெழுந்த .. ... ... ❊
ஆனேயுயிரோவுடையகல்யாணியே .. ... ... ❊
மானேயெனதுமதியேநிதியே... ... ... [டிகளிலே
யேகிருதனித்துவந்த-யேதடிப்பெண்ணே-சுந்தரமெல்லகொத
சீதமதிவதன நிலாந்துநலிலகு ... ... ... ❊
மாதேபிராணநுயமிமயிலேவொயிலிலகு ....(ஏதடிப்பெண்ணே)

சில்லிகை சொல்விருத்தம்-இ-ம்-சாவேரி

இவ்விடம்விட்டுநீரும்மெத்தனேஞ்சரைசெய்யாமல் ※
எவ்விடம்போரீரையாவென்னிடபிராணநாதா .. ※
அவ்வியமணவில்லார்மன்னுடனெனக்குநீரும் .. ※
செவ்வையாயுரைசெய்வீருன்றிருவடிசரணம்போற்றி ※

வசனம்

வாரும்மென்பிராணநாயகா-தேவரீர்இப்போது-இவ்விடம் விட்டுயென்னுடனேயுஞ்சொல்லாமல்-மகா வக்கிரத்துடனேவெகுஅவசரமாய்யெந்தயிடத்திற்குப்போறீர் அதையெனக்குத்தெரியச்சொல்லுஞ்சுவாமி

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சுந்தரமயிலேயெந்தன் துணைமலர்க்கண்ணேபெண்ணே ※
நந்தகுமாருமெந்தன்தமையனார்சொற்படிக்கி ... ※
இந்திரனையன்மால்மெச்சயினியகாரியத்தின்மேதே... ※
புத்திவைத்தேகிவாரேன்போயிருமனையிற்றுனே ... ※

வசனம்

கேளும்பெண்ணேசில்லிகையே-யென்தமையனார்சொல்லியதுபடிக்கிபிரமாவிஷ்ணுதேவாதிதேவர்கள்முதலானபேர்களும்அஞ்சும்படியானகாரியமாகப்போய்வருகிறேன் - இப்போது நீஅரமனையில்போயிரும்பெண்ணே

சில்லிகைசொல் விருத்தம்-இ-ம்-முகாரி.

பன்னிபுவிமீதில்வந்துபாய்ந்திடக்கினவுகண்டேன் ... ※
நன்னுமென்கழுத்துத்தாலிதழுவியேகிடக்கக்கண்டேன் ※
ஒன்னுமென்கூந்தல்சிக்காய்வுயர்சடைவிழக்கண்டேன் ※
அன்னமேபோகலாகாததையுமக்குரைசெய்வேனே ... ※

சில்லிகை சொல்-தரு-இ-ம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

சொற்பனங்கண்டேனே-அதில்வெகு ... ※
அற்பனங்கொண்டேனே ... ※



அநுபல்லவி.

சொற்பனமோயென்னவற்பனமாகுமோ ... ※
சொல்லப்படாதஅல்லல்கிடாத... ... (சொற்பனம்)

சரணங்கள்.

கட்டியதாலிநழுவிகிடக்கவும்... ... ... ※
கண்ணுடன்தோளும்வலமேதுடிக்கவும் ... ※
முட்டிவரும்பன்னியுன்னைக்கடிக்கவும் ... ※
முத்தத்திலேநுளிரத்தம்பொடிக்கவும் (சொற்பனம்)

செங்கதிரைப்பரிவேடம்வளைக்கவும்... ... ※
நேற்றிருந்தோடிவடக்கேகுழலைக்கவும்... ...※
திங்களுந்தெற்குத்திசையில்கிளைக்கவும் ... ※
செப்புமிப்பூமிதயங்கிக்கிடக்கவும் ... (சொற்பனம்)

இந்தக்குறிகளெனக்குணக்காகாது .... ... ※
இத்தையொருவருடன்சொல்லப்போகாது... ※
அந்தவவுடையாவென்சொல்லைத்தாகாதே... ※
உள்ளதைநான்சொன்னேனேவள்ளலேபோகாதே (சொ)

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-ஆகிரி.

இக்கொடியசொற்பனத்தைநிலைமையாக ... ※
யிதையம்வைத்துப்பெருவாய்நீயேயானால் ... ※
அக்கொடியக்காரியத்தால்பயனுமுண்டோ ... ※
அடியவள்நான்சொல்லுவதுஞ்செவிக்கேற்காதோ
துக்கமொடுபழிபகைகளெல்லாம்வந்து ... ※
தோன்றுவதுயிதுமெய்யேமெய்யேயென்று ※
இக்கணமேயென்சொல்லைத்தள்ளிநீரு ... ※
மேருவதனாயமல்லவேந்தர்கோவே ... ※

சில்லிகைசொல்-தரு-இ-ம்-ஆகிரி-சாபம்-அடசாப்பு.

பல்லவி.

என்னகாரியம்யெண்ணிநீர்-வுமக்கிது... ... ...※
எற்குமெய்யோதண்ணிநீர் ... ... ... ※

அநுபல்லவி.

மன்னவர்களுலகுக்கன்னையெய்பதுபொய்யோ ... *
மனநிலைதையென்றுமக்கினத்சதென்னமோஐயோ (என்)

சரணங்கள்.

பழிபுமபாவமுங்பொல்லாயிழிவும்வேறோயில்லைப் .. *
பாரையிடர்ந்தாந்நேவர்ஆணைச்சொல்வார்க்கல்லை .. *
அழிவும்வந்திடுங்கீர்த்திக்சழிவுவந்திடுந்தொல்லை...... *
யாருமென்றுரைநீரோகேளுமடியாள்சொல்லை...... (என்)

மகமேருவைகுண்டம்புகழ்சேருங்கைலாசம் ... ... *
மலியுமுனிவர்தேவர்தலமும்போகாதோதோஷம் *
பகைசெய்தேவர்களுன்மேவிகரச்செய்யார்களோமோசம்
பலருர்களோமனதிலெண்ணூர்களோவாயாசம் ... (என்)

காசிபர்குலத்துக்குநாசம்வருயிப்போதே ... ... *
கண்டதிதாவும்வேணதுண்டுசொன்னேன்நீதே ... *
யோசனையெண்ணிப்பாரும்பேசுமென்சொல்தப்பாதே
வுள்ளம்பறைதக்குமெதந்தன்ள்ளவேநீர்போகாதே ... (என்)

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி.

கொண்டமனையாளிந்தக் குறியேசொல்லக் ... ... *
குறியெழுங்கண்கள்ரெண்டித் புகையேமண்ட ... *
அண்டமும்வானத்திசையும் நடுங்கியஞ்ச ... ... *
ஆர்ப்பரித்துக்கைகொட்டிநகைத்துகேளென ... *
ஒண்டொடியாளையிற்பொருந்தேன்கினவிற்கண்ட *
தொருபொருள்தான்கிலவுதனக்குதவியுண்டோ *
மண்டலமெல்லாஞ்சுருட்டி ஒருடிமுன்னுக *
வருகுவேனுனதுமன மகிழத்தானே ... *

வசனம்.

வாரும்பெண்ணே சில்லிகையே நான்கொண்டபெண்சாதி. யானதினுலே நீசொன்னதெல்லாம் பொறுத்துக்கொண்டேன்



கினவிற்கண்டபணம் சிலவுக்குதவுமோஆகையால்யிப்போதேநாஸ்போய் யிந்தபூமியைச்சுருட்டிக்கொண்டு வொருநொடியில் வருகிறேன்பாரடிப்பெண்ணே.

சில்லிகைசொல்கந்தார்த்தம்

ஐயோநானென்னசெய்வேன்அவனியையிடர்ந்தால்தோஷம் *
வையகமுழுதும்போற்றும்வானவர்நலைத்திடாரோ ... *
கையினிலேத்தும்போதுகைகலையுமதிர்ந்திடாதோ... ... *
மெய்யனேபிராணநாதாவிதியோநானென்னசெய்குவேன் *

ஐயையோபாவம்-விதியோநானென்னசெய்குவேன்... *
விதியோநானென்னசெய்வேன்-மதியால்வருவதுய்வேன் *
சதியோவுன்பிராணனேசம்-அதுவேகாரணமோசம் ... *
விதியோநானென்னசெய்குவேன்... ... ... *

இரணியாக்கன்சொல்கந்தார்த்தம்.

வானோர்பணியும்வலுமைசேர்பிரமன்றனே ... ... *
சிஷ்டிக்குந்தரணிதனிலே ... ... *
நானேகாசிபர்தருநல்சுதனே ... ... *
யாருஃபாரடிமானே ... ... *
யிந்தபூமிபோனுல்விடுவேனேநானே ... *
நானிலமுழுதிலும்நலமுடன்பாராய் .. *
மானேசந்திரவதனியே ... *
கேளாய்ஆனுல்பாரடி ... ... *

இரணியாக்கன்சொல்-கந்தார்த்தம்.

நரிக்கிப்புலிதானஞ்சிடுமோ நரர்குமுதனையஞ்சிடுமோ *
கரிக்கிசிங்கம்அஞ்சிடுமோ கரடிசெல்லுக்கஞ்சிடுமோ .. *
எரிக்குங்கண்பின்மடவார்கள்யெயித்ததனுமஞ்சிடுமோ *
மரிக்குந்தேவர் தனக்கேயான் ... ... ... *

வலுமைதளர்ந்தஞ்சவனோ-ரஞ்சிதமேனன்........ *
வலுமைதளர்ந்தஞ்சவனோ ... ... ... ... *
வலுமைதளர்ந்தஞ்சகெளிமையடிகுஞ்சுக ... *
மயிலேவளரிளமுலைமின்னிடைக் ... ... .. *
குயிலேமதுரிதமொழியன்னநடை(வலுமைதளர்ந்த)

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

வருகுவேன்மண்டலஞ்சுருட்டிக்கொண்டு ... *
வாரமட்டும்அரமனையிற்சென்றிருப்பாய் ... *
பெருகியவென்புயவலியும் பெருமைதானும் *
பிரமன்முதல்யானவற்கும் பெருகக்காட்டி ... *
ஒருநொடியிலவருடனே அவர்கள்வாழும் ... ... *
ஊருநகருமலையும்வேர்க்கச்சேர்த்து ... *
திருகுசினத்துடன்வருவேன் வத்துசேதி ... *
தேன்மொழியேயுத்தனுக்குத் தெரிவிப்பேனே. *

வசனம்.

கேளும்பெண்ணே கில்லிகையேபிரமாவிஷ்ணுதேவாதிதேவர்கள்முதலானபேர்களுக்கும் யென்னுடைய அதிவீரபராக்கிரமத்தைக்காட்டியிந்தப்பூமியைப்பாயாகச்சுருட்டிக்கொண்டு யித்க்ஷணமே யிவ்விடம்வந்துசேருகிறேன் நீஅதுந்தனிலும்நமது அரமனையிர்ப்போய் வீத்திரும்பெண்ணே.

பொது-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

படபடென்றதிரப்பதங்களைக்கடித்தும் ... *
பகைவர்களெவர்களுமஞ்ச ... ... *
விடவிடவென்றதிர்ந்து தேவர்கள்முதலோர் *
விண்ணிலகதனைவிட்டகல ... ... *
வடவனல்சிதறிமருகடல்நுழைய ... ... *
புலிதிசைநடுங்கவேகுதித்து ... ... *



வெடிபடநகைத்துப்புவிதனைச்சுருட்ட ... *
விரவில்தண்டகனும் வந்தனனே ... *

இரணியாக்கன்-வருகிற-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ராசாதிராசராசதயித்தியராசசெம்பீரன் ... *

அநுபல்லவி.

வீசும்வச்சிடலட்சுமிவாசன்தெண்டகாசுர ... *
விஜயனிதோவந்தான் ... ... *

சரணங்கள்.

அண்டரண்டங்களும்மெண்டிசைதேவரும் ... *
மணிமுடிவணங்கிடவே... ... ... *
தண்டகாசுரவுத்தண்டர்ணசூர ... ... *
கெம்பீரனிதோவந்தானே ... ... *
வளமிக்கமந்திரியர்தளகர்த்தர்பெருஞ்சேனை ... *
மருகிநில்சூழ்ந்திடவே .. ... ... *
களமெய்க்கும்அமரர்கள்வளமெய்க்குஞ்செய்தண்டகா *
சூரனிதோவந்தானே... ... ... *
மன்னருஞ்சமலையஞ்சவின்னருஞ்சதிலயஞ்சு ... *
வானவரஞ்சிடவே... ... ... *
கன்னருஞ்சநமனஞ்சயென்னஞ்சவெதண்டகா... *
சூரனிதோவந்தானே... ... ... *
திசைமுட்டகிரிமுட்டவிஜயத்தோளதிர்முட்ட *
தினவுகள்போகாமல் .. ... ... *
தசமுட்டதினமுட்டபசைமுட்டஅதிவீர... *
தண்டகனிதோவந்தானே... ... *
அடியிட்டநலமகள்வெடிபட்டுப்பாதாளம்... *
அழுத்திநெழும்பிடவே... ... *

தடியிட்டமார்நெஞ்சை பொடியிட்டரெனதண்டகா
ரூணிநாவந்தானே... ... ... *

இரணியாக்கன்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்.

பல்லவி. [மர்த்தை

இந்தப்புவிதன்னையென்கையினுலெடுப்பேன்-பாரும்பாருமென்ச
இந்தப்புவிதன்னையென்கையினுலெடுப்பேன் ..... ............ *

அநுபல்லவி. [மைபெத்திட

இந்தப்புவியையோர்புறம்பிடித்திட யெத்தன்சமர்த்தினுல் வலு
அந்தரவானவருஞ்சிட்டத்தஞ்சிட ஆற்பரித்தேவிறவிறென்றனது
[ண்டிட. (இந்த)

சரணங்கள்.

மூச்சாருலத்தைதனையிநிலெடுத்துமுன்னுசபூமியிலோங்கயின்னம்
முதண்டகோளம்வெடித்தண்டாகஞ்சுனிமை மூடியவாமன்தேங்க
அச்சமில்லாமலே சங்கங்கொழித்திட அவுணர்கள்யாவருங்கண்டு
செழித்திட,சிச்சிலிமட்சத்தைப்பாய்ந்ததுபோலவேசீகரமதாயி
[ன்றுஆக்ரமதுகொண்டு (இந்த)

திக்கெல்நெழுந்திடஅஷ்டகஜங்கள்திடுக்கிட்டேநடுநடுங்க-யிந்த
தின்புவிதன்னையெடுத்திடுஞ்சத்தத்தில்சேடன் முடிகளைத்தொடு
ங்க; யித்வசப்பாதாளத்திற் போய்க்களித்திட மேதினிமங்கையக்
கொண்டொளித்திட, இக்கணமேமலையாவுஞ்சுழன்றிட யெழுகட
[லக்குள்ளேபுவியுழன்றிட (இந்த)

தரு-இ-ம்-கல்யாணி ஆதி.

கண்ணிகள்.

எத்தன்சமர்த்தால்புவியெழுத்துக்களித்தேன்-பெருத ... ... *
தேழ்கடலுக்குள்சலத்தில்தாழ்விலாமல்வைத்தொளித்தேன் (எ)



இந்திராதிதேவர்களுங்கண்டேங்கிநடுங்க-கண்டு .. ... *
நேர்ந்தவிருத்துமென்னவத்தனஞ்செய்தேயொடுங்க...(எத்த)

அஷ்டதிக்குப்பாலர்தேவர்மூவரைக்கூட-யென்னை.. ... *
கஷ்டஞ்செய்யயிஷ்டங்கொண்டதுஷ்டத்தனமேமிகுந்த (எத்த)

வாரணங்களெட்டுமகம்மேருவுமசைய-யிந்த... ... *
பாரினைச்சுருட்டிதிருப்பாற்கடற்குள்பாருங்காரூ .. ..(எத்த)

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

வண்ணமாயுலகைபாருமன்னவாயெந்தனன்று ... ...*
மண்ணினைசுருட்டியந்தவாருதிதனிலமுத்தி ... *
திண்ணமாய்வந்தேன்யின்னத்தேவர்களைச்சொன்றுலும்
எண்ணமாய்செய்வேன்புத்தியெந்தனுக்குரைசெய்வீரே *

வசனம்.

சரணஞ்சரணமென் அண்ணனே-தேவரீர்சொன்னபிரகார
மிந்தப்பூமியைச்சுருட்டிசமுத்திரத்தில் வொளித்துவைத்தேன்-
யின்னந்தமதுதிருவாய்மலர்ந்தருளும் காரியங்களையெல்லாமுமு
டிக்கிறேன்சொல்லும்அண்ணே.

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

சுந்தரப்புவியைப்பாய்போல்சுருட்டியேகடலில்வைத்தா *
வந்திடுந்தம்பிகேளாய்வங்கமிருசேனையோடு ... ... *
அந்தமாய்நீயுஞ்சென்றுஅஷ்டதிக்விஜயஞ்செய்து ... *
சிந்தையுமகிழ்ச்சிகூறசீக்ரமாய்வருகுவாயே ... ...*

வசனம்.

வாருந்தம்பி யிரணியாக்கதனே -நீசொன்னவார்த்தையினு
லேமகாசந்தோஷமாச்சுது-யிப்போதுநம்முடையசேனைகளைக்
கூட்டிக்கொண்டுபோய்- யிந்திரன் அக்கினியெமன் நிருதிவருண
ன்வாயுகுபேரன் யீசானியன் அந்தரமத்தியப்பாதாளம் யிதாக

எல்லாம்நிக்குவிஜயஞ்செய்து-வாருமப்பா தம்பியிரணியாக்கதனே.

இரணியன்விருத்தம்-இ-ம்-தோடி.

உம்பர்கள்முநிவர்நாகர்வுலகுளோர்நடுங்கியேங்கச் ... ※
செம்பொன்னின்கொலுவில்நாளுஞ்சிறந்தமந்திரிமார்களே கேளீர்
தம்புராட்சதருந்தண்டத்துரகஜப்படைகளோடும் ... ※
அம்புடன்வருகவென்றுஅவர்களையழைப்பியுமே ... ※

வசனம்.

கேளுங்கள்மந்திரிமார்களே நமது ரதகஜதுரகபதாதிகள் நால்வகைச்சேனையும்படைத் தலைவரும் யிந்தட்சணத்தில்தடையில்லாமல்வரச்செய்யுங்கள்மந்திரிகளே.

மந்திரிகள்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

செம்பொன்னின்வாசல்காக்குஞ்சிறந்தகட்டியனேகேளாய் ※
சம்பரன்முதலாயுள்ளதளகர்த்தர்படைகளோடும் ... ...※
உம்பர்கள்வணங்குமேன்மைவுத்தலன்டவீரர்தம்மை ... ※
இம்பமாயழைத்துக்கொண்டுயிட்சணம்வருகுவாயே ... ※

வசனம்.

ஆரடா ஆசாரவாசல்காக்குங்கட்டியக்காரா-நீயோய்நமதுகண்டவருகிய அரசன்வுத்தாரமென்றதளகர்த்தனை சம்பாசூரன் விகும்பாசூரன்கும்பாண்டசூரன் அக்கினிகண்ணன் முதலான வீராதிவீரரை அதிசீக்கிரமாயழைத்துவாடா கட்டியக்காரா

கட்டியன்சொல்பரணி.

கொடியாராட்சதரே... ... ...※
கடினமன்னவரே ... ...※
இடியெனவழைத்தார் ... ...※
தொடியிதில்வருவீர் ... ...※



சம்பரன்சொல்விருத்தம்-இ-ம்-பைரவி.

அம்பரத்தன்னில்வாழும்அமரர்கள்நடுக்கங்கொள்ள ..... ※
இம்பமுத்திருக்குமன்னவன் இரணியனழைத்தானென்று ※
தெம்புடனவுணர்சேனைத்திரளுடனெழுந்திருந்து .. ※
சம்பரன்முதலலோருஞ்சதிருடன்வருகின்றாரே ... ※

சம்பரசூரன்வருகிறதரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

சம்பரசூரனும்வந்தானே-தளகர்த்தன் ...............※
சம்பரசூரனும்வந்தானே ............................ ...※

அநுபல்லவி.

சம்பரசூரனுடனிகும்பாசூரனும்வெத்திக் ......................※
கும்பாண்டக்கண்ணனுடன்செய்பாண்டகண்ணனுமாய் ......()

சரணங்கள்.

நட்டிவல்லயம்பூட்டியே-கட்டாரிசூரி... ...※
யிடையிலுடைவாள்கட்டியே ... ... ※
தாட்டிகமுடன்வெகுமேட்டிமேட்டிகளாக ... ※
போட்டிகள்பேசிராஜன்பேட்டிகள்காணவென்று (சம்பர)

அண்டாண்டம்நடுங்கவே-தவசுசெய்யும் ... ※
அந்தணர்நெஞ்சொடுங்கவே... ... ※
கொண்டலெனமுழக்கமண்டிதினந்துடனே... ... ※
எண்டிசைக்காநிற்குந்தேவர்கள்நடுநடுக்கங்கொள்ள. (சம்பர)

திக்குகளெட்டும்வெல்லவே-யிரணியன்பேர் ... ※
தேசங்களெங்குஞ்சொல்லவே ... ... ※
வக்கிரதந்தராசட்சதருக்கிரமுடனேகூட்டி ... ※
அக்கிரமஞ்செய்யவென்றுகொக்கரித்தார்ப்பரித்து.(சம்பர)

தளகர்த்தன்சொல்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

இடியிடித்ததுபோற்கூவி யெங்களையழைத்தபோது ...*
படிமிசையரக்கர்வந்தோம் பணித்தவருளெதுவம்மோ *
வடிவுள்ளமன்றுநீயும் வன்மையாயெத்தனுக்குத்.......*
அடிபடவுரைசெய்விருன் றனையடிபோற்றிபோற்றி ...*

ராட்சதர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அண்டமகண்டமும்பிடிக்கவோ ... *
அவனியொன்னலரையொடிக்கவோ ... *
எண்டிசையொன்றாய்ப்பிடிக்கவோ ... *
யேழ்கடல்நீரைகுடிக்கவோ ... ... *
தென்டிசையெமனையடிக்கவோ ... *
தேவரைசமரில்தொடிக்கவோ ... *
திண்டரைமுநிவரைப்பொடிக்கவோ ... *
சொல்லுமெமதுதோள் அடிக்குதே ... *

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

அழைத்தபோதோடிவந்த அமைச்சர்கள்முதலாயுள்ளோர் ... *
தழைத்திடவேண்டியுங்கள் தன்னைநானழைத்தசேதி............*
வழுத்துமென்றம்பியோடு வஞ்சமைசெய்தவருமஞ்ச.........*
செழித்திடஅஷ்டதிக்கை ஜெயம்பண்ணிவருகுவீரே... ... ...*

வசனம்.

வாருங்கள்சேனைத்தலைவரென்னுஞ்சம்பாசுரனே நமதுஅதி வீரபராக்கிரமவீராதிவீரருடனே நீயும்யெனதம்பியாகிய யிரணியாக்கனுடன் சென்றுஅஷ்டதிக்குஅந்தரமத்திய பாதாளமிவைகளிற்சென்றுஜெயம்பெற்றுவாருங்கள் சேனைகளே.

தளகர்த்தன்சொ-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

அறைந்திடுமுரசதிக்கெடென்றாதிர ... ... *
அவனிமன்னவரெலாம்நடுங்க ... ... *
நிறைந்திடு படைகளனைத்தையுந் ... *
கூட்டிநேர் பெற்றதிசைபெலாப்புகுந்து *



மறைந்திடவருணன்வாய்வொடுகுபேரன் ... *
மண்டலத்தோர்களைச்செயித்து ... ... *
குறைந்திடும்படிசெய்தவர்களைக்கொணர்ந்துன் ... *
குறைகழல்வணங்குவோமன்று ... ... *

இரணியாக்கன்சொல்-தரு-இ-ம்-நாட்டைதாளம்-திரிபுடை.

பல்லவி.

திக்குவிஜையஞ்செய்யவுக்ரமாயதிவீர *
தெண்டசூரன்நடந்தான் ... ... *

அநுபல்லவி.

சக்கரைப்பந்தலிலேதேன்மாரிபொழிந்தாற்போல் ... *
இக்கணத்தமையன்சொல்லுக்குவிக்கணம்வாராமல்யேதுந்*
தத்துப்பரிவொத்துநெருக்கிட-வெத்திக்கரிசத்துமருங்கிட (திக்)

சரணங்கள்.

கட்டிவல்லபங்கையிற்கொண்டு-உலகில் ... ... *
எதிர்த்தமன்னவர்களைவென்று ... ... ... ...*
சாட்டியில்லாபம்பாம்போல் ஆட்டியேயெவர்களையும் ... ...*
வாட்டுவோமென்றவர்கையை நீட்டியெதிர்சொக்கரித்து ... ...*
சங்கத்தொனிஅங்குமறைந்திட திக்கள்குடையெங்கும் நிறைந்திட
(திக்குவிஜை)

கடல்போலவேமுரசமாறச்-சேனை ... ... ... *
கவிந்துதிசைதிசையாய்பார்க்க ... ... ... *
அடர்ந்திடும்பேனைக்கண்டு அடர்ந்தமன்னவரொன்று ... *
மடந்தனைவிட்டுவேறேயிடந்தனிற்செல்வோமென்று *
மைத்தப்படையொத்துநெருக்கிடக்கதிக்கொடுவெத்திப்பெரு
[கிட. (த்திக்குவிஜை)

அண்டபகிரண்டமுங்குலுங்க-யிவர்கள் ... ... *
சூரவாரத்திற்தேவர்கலங்க ... ... *

எண்டிசைதனிலுள்ளோர்களெல்லாந் திடுக்கிடுங்கொள்ள ... *
தெண்டலையிலெடுத்துக்கொண்டுவெஞ்சந்தொடுத்து *
கண்டவர்மனநின்றுதயங்கிடசண்டெற்றுமெதிர்க்கொண்டுபயந்தி
[ட. (நிக்குவிளை)

பொதுவிருத்தம் இ-ம்-நாட்டை.

இவ்விதமாகவந்த யிரணியாக்கதனுஞ்சென்று... ...*
செவ்வையிந்திரனைமாட்டித் தீயினைவெருட்டியேமன்
தெவ்வதையடக்கிப்பொல்லா நிருதியின்செழிப்புமாற்றி
கவ்வியரவருணனோடுங் கருதிபோர்புரிந்தான்மாதோ*

வசனம்.

இவ்விதமாகவிரணியாக்கதன்போர் யிந்திரன்-அக்கினி- யெமன்-நிருதி வருணன்-யிவர்கள்பேரில்யுத்தியுஞ்செய்து- அவர்கள்கெருவத்தையடக்கிக்கொண்டு அப்பால்வரும்போதுஇவடத்தில் பிர்மதேவரானவர் பூமியில்சராசரங்களைப்படைக்கமனதில் யெண்ணிவருகிறவிதங்காண்க.

காரணமிகுவேயாகக்கமலனுன் முகனுஞ்சோதித்...*
தாரணிபடைத்தோமிப்பால் சகலசீவனையுண்டாக்கப்
பூரணமாகவேதான் புத்தியிலெண்ணிக்கொண்டு ... *
ஆரணமுநிவர்சூழ அடவுடன்வருகின்றோ. *

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்ஆதி.

பல்லவி.

பிர்மதேவரும்வந்தாரே.

அநுபல்லவி.

செங்கமலமீதனிலமரும்வேதனெனும் .....*
பிர்ம்மதேவரும்வந்தாரே ... *

சரணங்கள்.

பிர்ம்மதேவரும்வந்தார்பெருகுந்தற்பரமான *
தர்மனுண்ணுமித்தடந்தில்வருமெய்ஞ்ஞான. (பிர்ம்ம)



சர்வப்பியர்வேதம்பாடிசதுர்முகனெனக்கொண்டாடி*
தலிமும்மூர்த்திடன்கூடி தரணியைப்படைக்கநாடி(பி)
அய்ப்புஜங்கவெட்டுந் தலங்கும்அச்சயபொருட்டுங்
கைபிடிப்பவுத்திரதொட்டுங்கனகப்பூணுலிட்டும்(பிர்)
அம்புருகாசார்பாடத்தோகையர்நடனமாட *
இம்புருடர்களிக்கின்னரர்மலர்போடப் ()

பிரமன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

பாரினிப்புர்க்கமாயன் படமத்திலன்னையின்றும் *
தாரணிதன்னைபத்த தப்பாநிதியாலளித்தேன் ...*
பேர்புரிந்திரணியாக்கன் பூமியைத்திருடிப்போனான்
சீர்மிகுத்துபமாகத் தேசிகாவென்னசெய்வேன் *

பொது-வசனம்.

பிர்ம்மதேவரானவர் பூமியில் சகலஜீவராசிகளையும் படைக்கவேணுமென்றெண்ணி நின்றுபார்க்கும்போது பூமியையெங்குங் காணாமல்அறிவினால்யெண்ணியிப்போதுயிரணியாக்கதன் பாயாகச்சுருட்டி சமுத்திரத்திலொளித்து வைத்தானென்றுதெரிந்துக்கொண்டுசகலஜீவதயாபரனும்விளங்கி மூவினைதன்னைதாபிக்கமலத்திலேவுப்புவிக்காளின்றஸ்ரீமன்னாராயணனைத்தோத்திரஞ்செய்புகின்றவிதங்காண்க.

பிரமன்புலம்பல்-தரு-இ-ம்-கண்டா-திரிபுடதாளம்.

பல்லவி.

அரிஅரியேஅரிஅரியே-யிந்த ... ... *
அவனியையெங்குங்காணேனே ... *
புரியமுந்தனருளடைந்தவ-அந்தப் ... *
புண்மையதான்பூமேனே ... *
தந்திருநரும்பூமிதேவி-முன்னுள் ... *
வுகந்தவப்புரிந்திலனோ... ...

செந்திருவாழ்மணிமார்பா-வுந்தன் ... ... *
திருவருளைத்தெரிந்திலனே ... ... *
பெத்தப்பிள்ளைவருந்திடவே-பாரில் ... .. *
பெற்றவர்கள்பார்ப்பாரோ ... ... ...*
வுத்தநான்சொன்னேனே-யென்னை ... ... *
புகந்தொருவர்சேர்ப்பாரோ ... ... *
வல்லவுணன்பூமியெல்லாம்-கொண்டு ... ... *
வல்வினையாயாதோ... ... ... *
நல்லதென்றுபார்த்திருந்தால்-வுனக்கு ... ...*
ஞாயமதோவுபாயமதோ... ... ... *
இப்பொழுதேயவனுடலை-பிளந்து... ... *
யெரிந்துயின்பந்தாராயோ... ... ... *
மைப்புயலேகேசவனே-அரி அரி... ... ...*
மாதவனேயருள்பாராயோ... ... ... *

பிரமன்சொல்-தரு-இ-ம்-ஜம்பை. [தாள்

செய்வதென்னயான்படைத்தஜெகத்தையெடுத்தொளித்துவைத்
மையரவமிசைதுயின்றபரனே அரி அரியே ... ... ...*
செய்யநருந்துளபணிந்துசெங்கைதனிலாழிகொண்டு ... *
வையகத்திலெனைக்காக்கவாரும் அரி அரியே .. ... *
பூமியெடுத்தொளித்துவைத்தபுதுமையென்னமுநியேனஷ்ட *
காமியங்களிக்குந்திருக்கடவுளரி அரியே..* ... ... .*
சாமியித்தப்புவிபடைக்கச்சதுர்முகனென்றெனைவகுத்தாய் ...*
ஆமெனுந்தான்மலரயனித்த அய்யா அரி அரியே ... ...*
உந்திமலர்த்தலஞ்சமக்கவுகந்துதவம்புரிந்துநின்ற ... *
அந்தப்புவிமாதுவருந்தாளோ அரி அரியே... ... *
செந்திருவாழ்மணிமார்பவனுக்கையெந்தனையகற்ற ...*
வந்ததுறயோவெனைக்காக்கவாரும் அரி அரியே ... *
வுந்தன்திருவுளமகிழ்ந்துவுகந்துமறையெனக்களித்தாய் ... *
நந்துலவுபுவியயின்றென்குருதா அரி அரியே ... ...*



சுந்தனருந்துளபமணிகமலக்கண்ணனேயெனக்கு ... .. *
வந்தவுயர்நிர்த்தருளவாரும் அரி அரியே... ... *
பெற்றபிள்ளைப்படுந்துயரம்பெற்றவர்களறியாமல்... *
மற்றவர்களறிவாரோவாரும் அரி அரியே ... ... ...*
இத்தலத்தின்சயந்தாமமெடுத்தொளித்தப்பாவிதன்னை .. *
வத்திருக்கநீதியுண்டோவாரும் அரி அரியே... ... *

பிரமன்சொல்விருத்தம்-இ-ம்-முகாரி

அச்சுதானந்தாபோற்றி அருமறைப்பொருளேபோற்றி . *
சச்சிதானந்தாபோற்றிசரார்த்தனுகூருத்தாபோற்றி... ...*
பச்சைமாமுகிலேபோற்றி பதுமைவாழ்மார்பாபோற்றி*
முச்சுடர்பொருளேபோற்றிமூலமேபோற்றிபோற்றி ...*

பிரமன்சொல்விருத்தம்-இ-ம்-ஆகிரி,

என்னையீன்றவனேபோற்றியெழில்மணிவண்ணாபோற்றி *
தன்னையேநிகர்வாய்போற்றிதற்பரானந்தாபோற்றி ... *
அம்மையவடிவேபோற்றிஜெகமெலாமுண்டாய்போற்றி . *
பொன்மணிமார்பாபோற்றிபுராதனாபோற்றிபோற்றி... *

பொது-விருத்தம்-இ-ம்-தோடி-

பதுமணித்தவகை துதிக்கப்பதுமனுபன்... ... *
பரிந்துமனதிதுணர்ந்துபூமியென்னும்... *
புதுமைபெருமனையாளையவுணன்வெழ்விப்... *
பொனதிந்தேயெழுந்துநிறைவண்ணன்கேட்டு .. *
முதிருமனதிவிழிபொழிய அண்டமெங்கும் ... *
முழங்குமொலிபேடியதிரவெளிப்பட்டு .. *
நதிபெருநல்லவதாரமாகிவேதன் ... *
துணைமூர்க்கில்நின்றுவந்துகுதித்திட்டாரே ... *

வசனம்.

பிர்மதேவரானவர் ஸ்ரீமன்னாராயணரை நோக்கித் தோத்திரஞ்செய்கின்றபோது தன்னுடைய மனைவியாகிய பூமிதேவியை ராட்சதன் பிரித்துக்கொண்டானென்றறிந்து மகாகோபத்துடனே மூக்கிறும்பிறைப்போலொத்த தந்தமும் அக்கினிப்பொழியாநின்ற நேத்திரமும் மேகங்களைநிரும்படியான கேசரமுமாகி ஸ்வேதவராக அவதாரமாய் பிர்மதேவன் னுடைய மூக்கிலேநின்று எழுந்தருளினார் ஸ்ரீமன்னாராயணமூர்த்தியானவர்

மாயன்வருகிற-தரு-இ-ம்- பந்துவராளி-ராகம்-அடசாப்பு.

கண்ணிகள்

அண்டகோளம்விண்டதிர ஆம்பரிப்புமேலதிர ... ...*
சண்டமாருதம்அதிரவே-வராகரூபந் ... *
தாங்கிமாயன்தானிதோவந்தார் ... ... *
அவனிமன்னவர்கள்வாழ-அசுரர்குலமெல்லாந்தாழ*
தவமுனிவர்புகழவே-வராகரூபந் ... ... *
தாங்கிமாயன்தானிதோவந்தார் ... ... *
தெண்டிரைக்கடல்பொங்கவேசேர்ந்து புரண்டுதங்கவே
தன்றுளிமயிர்தொங்கவே-வராகரூபந் ... ... *
தாங்கிமாயன்தானிதோவந்தார் ... ... *
வானவர்கள்மலர் தூவமாமுனிவராசிகூற ... ... *
நாவயம்வயமுப்பிரவே-வராகரூபந் ... ... *
தாங்கிமாயன்தானிதோவந்தான் ... ... *

புராணவிருத்தம்—வேறு.

மாக்கனம்வெம்முகில் மலர்மகளமர்ந்துறைமார்பன்......*
போக்கிலப்பொன்னேர்ம்பொறிதடம்பூந்தவிசுகந்தோன்-
மூக்கில்நின்றொரு கேழலாய முனிவரடைய ... .. *
கேர்க்குநெண்டிரைக்குடைகடல்தாழெழக்குளித்தார்......*

வசனம்.

பிர்மதேவருடைய சுவாசத்திலிருந்து வாராநின்றவராகசுவாமியானவர் ஆகாயப்பரியந்தமனாவியிருக்குஞ் சமுத்திரத்திலே விழுந்து பிரண்டெழுந்திருக்கும்போது சத்தசமுத்திரத்தின்சல



மெல்லமயிர்நுனியிலே பனித்துளிபோலத்தொங்கும்படியாக விளங்கினார்வராகசுவாமியானவர்.

விருத்தம்—வேறு.

படம்பதிக்கவத்தரும்பு மோர்பங்கயம்பிடுங்கி... ... ...*
கடந்திகழ்த்திடுங்கருங்கட்டுகளிறெழுந்தென ........*
தடங்கொண்மாமகில் பென்னவதவழ்கடற்கவிழ்த்த ... ...*
நெடுந்திண்பார்க்கொடுவந்தது நீண்மருப்பென்ம ... ...*

பொதுவசனம்.

இப்படியாகவந்தவராகசுவாமியானவர் ஆழம்பொருந்தியபாதாளத்திலேமூளைந்துவிளங்காநின்ற தாமரைக்கிழங்கை மதம்பொருந்தியயானையானது யெப்படிபிடுங்கிக்கொண்டுவருமோ அப்படிப்போலசமுத்திரத்திற் கவிழ்ந்து கிடக்காநின்ற பூமியை அணுப்பிரமாணமாகக் கொம்பின்பேரி லெடுத்துக்கொண்டுவந்து நையாவராகம்.

நாரதர்சொல் விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

பெருத்தவெண்கொம்பினாலிப்பூமியையெடுத்துவந்து ... ...*
தரித்துவராகமத்தசதுர்முகன்மகிழ்வண்ணம் ... ... *
செருக்குடனிவ்விசையந்தெய்யச்சென்றுமன்னவனுக்கிந்தை... *
உரைத்திடவென்றுநெஞ்சமுகந்துநாரதர்வந்தாரே ....... *

நாரதர்வருகிறதரு இ-ம்-சாரங்க-ராகம் திரிபுடை.

பல்லவி.

நாரதமாமுனிவந்தார்-மகா ... ... *
நாரதமாமுனிவந்தார் ... ... *

சரணங்கள்.

காரணங்களறிந்திடுங்கீர்த்தன்மிகு ... ... *
ஞானமாவெண்டிசைபுகழ்ந்திடுமுந்தன் ... *
நாரணனைப்பணிந்திடுந்தீர்த்தன் திவ்ய ... ... *
நாரதமுனிவன்றனிதோவந்தான் ... ... *
கொட்டுமேத்தளவீணையைக்கையில்கொண்டு-கையில் *
குலவும்சிகையின்ராகம்பாடிக்கொண்டு ... *

தொட்டுவெண்ணீறாலுடல் தலக்கிக்கொண்டு-நல்ல *
ஐயநாரதமுநிவன்றானிதோவந்தான் ... *
கைவிதிந்தகமண்டலமெடுத்துக்கொண்டுமெழில் ... *
கனகமணிக்குடையும்பிடித்துக்கொண்டு ... *
ஐயநாராயணன்புகழைப்படித்துக்கொண்டு-நாலு . *
சுருதிநாரதமாமுநியிதோவந்தார் .... ... *

பொழிவிருத்தம்-இ-ம்-கல்யாணி.

மண்ணுலகத்தினை வாருதிவைத்திரு மணிமுடி பெருமாசன் *
பொன்னுலகத்தினர் யவுணர்கள்தம்மை புகழ்ந்து பணிந்திடவே
கன்னிரவெர்புய மன்னவனிரணியகானக்கினாயவருந் ... ... *
தன்னிகரத்தவர்முன்பிதோநாரதர்தான்மகிழ்வோடுவாரார் ... *

நாரதர்சொல்விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்,

மகாராஜராஜனவபோகநாதா ... ... ... *
ஜெகமெலாமதிக்குமுதண்டதீரா ... ... *
இகழ்பொவேதேசமெங்குஞ்செயித்தாய் ... *
அகமகிழ்ந்தேவரும்அன்னைஸ்வாமி ... ... *

இரணியாக்கன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

சுருதிகளனைத்துந்தேர்ந்ததூயநாரதரேயிங்கு ... ... *
வருகுவீர்முநியேயிந்தவையகவானுலகமெங்கும் ... ... *
பெருதிசையனைத்துஞ்சென்றுபெருமையாய்க்கண்ணீரகள்
அருமையாமதிசையந்தனைத்தையுமுரைசெய்வீரே ... *

வசனம்.

நாலுவேதம்- ஆறுசாஸ்திரம்பதினெண்புராணங்கள் இருபத்தெட்டாகமங்கள் - அறுபத்துநாலு கலைக்கியானங்கள்-தொண்ணூற்றாறு தத்துவங்கள்மறவிக்கியான முதலியவைகளுணர்ந்த நாரதமுநிவரேவாரும்-வாரும்- நீர்சகலலோகங்களிலுஞ்சஞ்சரிக்கின்றவரானபடியினாலே-அந்தந்தலோகத்தில் நடக்கும்அதிசயங்களைக்குறைவில்லாமல்தங்களுக்குத்தெரிந்த மாத்திரஞ்சொல்லுமையாநாரதமாமுநியே



நாரதர்சொல்விருத்தம்-இ-ம்-நாட்டை

நாதலமெல்லாம்நீயேஜலத்தினிலொளித்துவைத்தாய் ... *
அராவணைமீதேயன்றுமரிதுயிலமர்ந்தமாயன் ... *
வராகவதாரமாகிவந்தீயேபோகனுற்றான் ... *
பாரவியேயானுங்கண்டப்பதியதிசையமீதாமே ... *

வசனம்.

வாருமையா யிரணியாக்கதனேயிந்தப்பூமியைச் - சுருட்டிசமுத்திரத்திலே யொளித்து வைத்திருந்தீரே அதனை யிப்போது ஸ்ரீமன்நாராயணரானவர்வராகஅவதாரங்கொண்டுதிருடிக்கொண்டுபோகிறார் அதையென்கண்ணினால்கண்டுவந்தேன்யிதுதான்அதிசயமையாஇரணியாக்கதனே.

இரணியாக்கதன்சொல்-விருத்தம்-இ-ம்-பைரவி

சொல்லியமொழிதான்வந்துசுட்டிநாராசம்போல ... *
மெல்லியகாதிலேபாய்ச்சைகள்துடிக்கக்கண்கள் ... ... *
எல்லுமிழ்விழிகள்தீயிரும்புகைப்படலம்விம்ம ... *
பல்லுகள்கடித்துவோடிப்பன்னிமேலெதிர்த்திட்டானே *

தரு-இ-ம்-அடா

பல்லவி.

நில்லடாவராகா நில்லடா நீயெங்கேபோறாய் ... ... *

அநுபல்லவி.

சொல்லடாவுஞ்சேதிநேராய் ... ... ... ... *

சரணங்கள்

வெல்லுவேனுன்னையிப்போதுகொல்லுவேன்சொன் ... *
னேன்சாகாதே-நில்லடா ... ... ... *
பாரடாவராகாபாரடாஅடா ... ... *
பாரடாவராகாபாரடா ... .. ... *
பாரடாபூமியைவைத்துப்போடாவோரடிவைத்து ... *

அ

போராடவேணுமேயானால் ... ...*
நேரடாசேவகனானால் .. (பாரடாவராகாபோ)

மடிக்குறோன்வராகாமடிக்குறோன் அடா ... *
மடிக்குறோஞ்வராகாமடிக்குறோம் ... [மே
மடிக்குறோம்கைதெண்டு நாலேபடிக்குறோன் மண்டையின்மே
இடிக்குறோனுன் பல்லிரண்டாபொடிக்குறோனுன் தூள்டு
ண்டாய் (மடிக்குறோ)
வெத்தியோவராகாவெத்தியோஅடாவுனக்கு ... *
வெத்தியோவராகாவெத்தியோ ... *
வெத்தியோயிதுவும் பின்னேவைத்திருந்தபூமிதன்னை
மெத்தனத்திருடவாமோபத்தியுந்தானெங்கேபோச்சோ(வெ
போடுவேன்வராகாபோடுவேன்-அம்பினையுன்மேல்*
போடுவேன்வராகாபோடுவேன் ... ... *
போடுவேன்கையாணைகுலஞ்சாடுவேனின்பெருந்தூலம் ...*
ஆடுவேனுன்வெத்திமாலைக்குடுவேனென்கையின்வேலை (போடு)
மண்டுவேன்வராகாமண்டுவேன்-யிப்போதுனை ...*
மண்டுவேன்வராகாமண்டுவேன்... ... ...*
மண்டுவேனுன்னுயிர்கொள்ளஅண்டமெங்கும்ஒலிதுன்ன ... *
சண்டமாருதங்கள்போலேயின்டிபாலத்தெண்டெண்ணுலே ()

இரணியாக்கன்சொல்விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

கோபமேமிகுதியாச்சுக்கொல்லுவேன்வராகாநீயும்... ...*
பூவுலகொளித்தேனத்தைபுகழ்பெரவெடுத்துவந்தாய் ... *
நாவிலேவந்ததெல்லாம் நவிலரப்பிதற்றியிக்கு... ...*
சாவதுசெய்வேனிந்தத்தெண்டுநா னின்னைத்தானே... *

தர்க்கம்-தரு-இ-ம்- செவுளியந்து-தாளம்-துரிதம்.

கண்ணிகள்.

அண்டமுமகிலமும்வெண்டிசையுமதிரத் ... ...*
தண்டினால்மண்டையைச்சாடிநேனுன்னை ... *



சாடியேதெடுத்தெண்டையொடித்துப்பிடுங்கிக்கொண்டு *
ஆடல்வல்லாக்கனை அடித்த தலைராகம் ... ... *
அடித்தப்போதிதில்நெஞ்சந்துடித்திடக்குலத்தை... *
வடுத்துதிருத்திமேலேயெரிந்தானோ ராவுனை ... *
எரிந்தச்சூலத்தைத்துளாய்முறித்துப்போகவேபல்லால் *
கடித்தப்பாலெறிந்துதேடியவராகம்... ... *
கடியவராகமும்நெடியவேலவுனனும் ... ... *
கொடுமைக்கொண்டுதோளைக்கட்டிக்கொண்டாரே... *
கொட்டிக்கொண்டுகையால்முட்டிக்கொண்டுகோத்தில்... *
விட்டகாத்தாடிப்போல்விண்ணிலிருந்துண்டாரே ... *
சுழல்துக்கொண்டுவராகம்நயல்நவல்லாக்கனை ... *
அரண்டுமாரிபிதில்குத்தி அமுத்திக்கொண்டதுவே... *
அழுத்திக்கொம்பினாலுட்சுழட்டியேயவுனனை ... *
இழுத்துப்போட்டுயிரண்டுபிளப்பாய்பிளந்ததுவே... *

பொதுவிருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

அவனதுயிப்படியாவெதிர்த்துப்போது .. ...*
ஆதிவராகப்பெருமானவன்மேல்பாய்ந்து ... *
கவனமொடுதண்டெடுங்குலத்தைப்பற்றிடக்... *
கடித்தெறிந்துமணிமார்பைக்கொம்பினாலே... *
புவனமெல்லாம்புகழ்ந்தேற்றவமரர்வாழ்த்தப் ... *
பூமகடன்றுயர்நீங்கத்தருமமோங்கப்... ...*
பவமகலதண்டகாசூரன்றன்னைப் ... *
பகுத்திட்டானிருகூறாய்வகுத்திட்டானே ...*

வசனம்.

வராகஸ்வாமியானவர் யிரணியாக்கனை சம்மாரஞ்செய்து தன்கொம்பினாலேத்திவந்த பூமியை ஆதிசேஷனுடைய சிரசின் பேரிலேயெப்போதும்போலவிரித்து பூமிதேவியினுடைய நாய சந்திரசகலதேவர் முநிவர்களும்மனமகிழும்படியாகக்கிருபைய் ருளிவைகுந்தத்திற்கு யெழுந்தருளினார் ஸ்ரீமந்நாராயணஸ்வாமி யானவர்பின்னடக்குங்கதையைசொல்கின்றோம்.

திதிசொல்விருத்தம்-இ-ம்-கண்டா.

மடித்தநுவாரகமென்றவார்த்தையைக்கேட்டுத்தாயார் .. *
அடித்துநெஞ்சுழன்றுக்கொண்டைச்சோர்ந்துதங்கொங்கையிற்றி
அடித்துமென்மகனேயென்றழுதவன்மார்பில்வீழ்ந்து... [ல்
கொடித்துவளதுபோல்நெஞ்சங்குலைந்தவள்புலம்புவாளே.. *

திதிசொல் புலம்பல்- இ-ம்-ஆஹிரி

தாளம்-அடசாப்பு

பல்லவி.

ஐயையோமகனே-மகனேயடா-ஐயையோமகனே *

அநுபல்லவி.

ஐயையோமகனேயாதும்வகையறியேன் ... *
தெய்வமும்வஞ்சனைச்செய்ததுக்குறியேன்... (ஐ)

சரணங்கள்.

தரணியேரேழையும்மொருநொடியிநில்சுற்றும்... *
சதுர்உவியுடையோனைமறனமும்வுனக்கிப்போ ... *
வருமென்றுதெரியேனேவன்னஞ்சக்கொடியோனே (ஐ)

அண்டமுகடுமுட்டத்திண்டிரல்முடியாலே... ... *
அளர்ந்தாயேவளர்ந்தாயேமண்டலம்பாய்கொண்ட ... *
தெண்டகாசுரனேவநுமையுந்தளர்த்தாயோ ... (ஐ)

எத்தனைத்தவஞ்செய்து பெத்துன்னைவளர்த்தேனே... *
எண்ணமும்நான்கொண்டனெழுங்கினவாச்சே ... *
அத்தனேஅப்பனேஆண்மையும்வீண்போச்சே... (ஐயை)

பையரவஞ்சமக்கும்வையகந்தாணம்போலட்... ... *
பாயாகயிடர்ந்தாயேயிப்போது ... ... ... *
கையிலாகாதவன்செய்கைப்போலவேநீயுங் .. ... *
களைப்பட்டுக்கிடந்தாயே... ... ... (ஐயை)



எட்டுமெலைகளையும்யெட்டுப்பம்பரமாக்கி.. ... *
எட்டுப்பாம்புகள்தாம்பாய்யெட்டுதிக்குதில்நீயும் ... *
விட்டுச்சுழட்டியாட்டியெடுத்தாயெகனவிம்பாய் (ஐயை)

செத்தாயென்றுகேட்டும்வைத்திருந்தேனிந்த ... *
திரேகத்தைமுன்னாலே... ... ... ... *
செத்தாவித்தபழிதித்துவாரென்று... ... *
திகைக்குரேன்பின்னாலே... ... ... (ஐ)

திதிசொல்விருத்தம்-இ-ம்-கண்டா.

அப்பனேமகனேயுன்னை அருமையாய்வருஷம்நாலும் ...*
கெற்பமாய்த்தாங்கிப்பெற்றேன் கீர்த்தியாயுலகையாள ...*
வெப்பமேகொண்டுமாயன் விளங்கியேவுனையிப்போது *
இப்புவிதன்னில்கொன்றுரிதற்குநானென்னசெய்வேன் *

வசனம்.

அப்பாமகனே யென்கண்மணியே வுன்னை யென்கற்பத்தில் நாலுவருஷந் தாங்கிப்பெற்றும் வுன்னைவளர்த்தும் புனைவாயிக்கிக்கினிய யிஷ்டுகொடுத்தாப்போலும் யிப்போதுகொடுத்தேனே நான் யென்னமாய் மனந்துணிந்து யிருப்பேனடா யென் கட்டிமகனே.

பொதுவிருத்தம்-இ-ம்-ஆஹிரி.

முல்லைநகைத்திரியிவ்வாரமுதுவாடி ... *
மூந்தையாய்பூமிதனில்விழுந்தாளிப்பால் ... *
சில்லிகையென்றவன்மனைவித்தானுங்கேட்டுத் ... *
திகைத்தெழுந்து அண்டமெல்லாம் வெடிக்கக்கூவி
வல்லிணைசேர்கொங்கையின்மேல்மோதிக்கொண்டு *
மயிர்விரித்துத்தலையிலடித்துச்சொல்லு ... *
பல்லியரும்புயக்கணவன்வீழ்ந்தாசாய்ந்த ... *
கருங்குருதிப்போர்களத்தேவருகின்றுளே ... *

சில்விகைபுலம்பல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி

தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

முறையேயோமுறையேயோ *
மோகனனேமுறையேயோ ... *
என்கணவாவென்கணவா ... .. *
எப்படிநானிருப்பேனோ ... *
மங்கிலியம்நானிழந்து ... *
மனநொந்தில்லிற்பேனோ ... *
தலையுதிர்ந்தமரமானேன் ... *
நதிக்காட்டின்கலயானேன் ... *
அழலிற்பட்டதக்கொடியானேன் ... *
அன்னையில்லாமகவானேன் ... *
எப்படிநானுயிர்சுமப்பேன் ... *
எவ்விதம்திருவாகிப்பேன் ... *
எப்படிநான்தனியிருந்து ... ... *
என்னமென்றுமனஞ்சகிப்பேன் ... ... *
கண்ணினீரால்கைகழுவி ... ... *
கவலைக்கொள்ளக்கடவேனோ .. ... *
என்றுநம்மென்னிவெண்ணி ... *
இருந்துழலக்கடவேனோ ... *
மங்கையரோதங்கையரோ ... ... *
மனமடியக்கடவேனோ ... ... *
பாக்கியமோதோழிமாரே ... ... ... *
பட்டுவிழக்காரணமோ ... *
முறையேயோமுறையேயோ ... *
மோகனனேமுறையேயோ ... ... *

சில்லிகைசொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

அசைவிலாப்புயம்படைத்த அருமையென்கணவாயிந்த *
திசையெலாம்வெல்வேனென்றத் தீரமாய்சென்றவுன்னை *



வசையுடன்மாயன்கொல்ல மண்ணில்வீழ்ந்திறந்துநீயும் *
தசைவிழுந்துகிருஞ்சித்துத் தரணியில்மாண்டாய்மன்னா ... *

சில்லிகைசொல்-தரு-இ-ம்-பியாகுலதாளம்.

அரசேயென்றனரசேயென் ... ... *
அருயிற்றுணைவோனே ... ... ... *
துரையேயென்றன்துரையே ... ... *
மனத்துணியேன்துணியேனே ... *
தெய்வமேஐயோதெய்வமே ... ... *
யென்னைநிகைக்கவைத்திடலாமோ ... *
ஐயையோஐயோஐயையோஐயோ ... *
அருகிபோல்படலாமோ... ... ... *
கட்டியணைத்தணைத்துமிக... .. ... *
வட்டமுலைதிரடிகநிமுத்தங்கொடுத்தாயே ... *
இட்டத்தனைநினைந்துபொட்டிப் ... ... *
பாம்புபோலென்னையிடியவோவிடுத்தாயோ ... *
அருமைத்துரையேயென்னொருமைத் .. ... *
துரையேவிட்டுஅருயிருழல்வேனோ ... ... *
பெருமைக்கென்மேல்வைத்தபொருமைக்கும்... *
யெங்ஙநான்பித்துக்கொண்டுழல்வேனோ ... ... ... *
ஆழிகள்சூழஅகிலமேழையும்நொடியில் ... *
அடியோடேபெத்தாயே ... *
தாழுவானவர்க்கெல்லாம்யேழ்மையாவென்றுலே .. *
தருபயத்தீர்த்தாயே ... ... *
எனக்கெதிராரொன்றுமனக்குறையில்லாமல் .. *
இருமாப்புக்கொண்டேனே... ... ... *
உனக்குயிர்த்தவயதில்இனக்குமாயனாலே ... *
உருளக்கண்கண்டேனே ... ... *
எட்டுமலைசனையுங்கொட்டைப்பாக்குப்போலே ... *
எடுத்தெடுத்தாட்டுவையே...... ... *
எட்டுப்பாம்பையுமொன்றாய்த் தொட்டுமுடிக்கிநானுறு
யிடையிறிற்பூட்டுவையே... ... ... *

வெள்ளைப்பன்னணிவந் தன்னைத் தள்ளிப்பாய்த் தகினவு
விளைவின் றக்கொண்டாயே ... ... *
உள்ளத்தைச்சொன்னுக்காலபின்னைக்கிக்கோயமென்ற
உறைமெய்ப்பாய்கண்டாயே ... ... *
கண்டறுதிகன்வேனை தன்னெடன் றுசொன்னதுவ் ... *
காதிதில்கேளாயே ... ... ...*
உன்னுடைன் றனதமனதில்கொண்டாவேலுந்தன் ......*
வல்லுயிர்விளைமாளாயே ... *

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-கண்டா.

என்னுயிர்த் துணைவா நீதாஞ்சென்னைவிட்டிரத்தாய்ந்தோ ... *
வுன்னைவிட்டி நிமேலிந் நவுலகத்திலிருக்கலாமா... ... *
மன்னியப்பனையோர்கொண்டமங்கையர்நகத்திடாரோ ... *
வுன்விடவாய்திரத் துவொருமொழிபகர்ந்திடாயோ... ... *

சில்லிகைசொல்-புலம்பல்.

சரு-இ-ம்-புன்னுகவராளி-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்.

கட்டிநல்மெத்தையின்மேல்விளையாடிக் ... *
கலவிக்கொடுத்தாயே ... ... ... யந்த*
இஷ்டமறந் தக்குருக்ஷேத்திரில்,... ... *
இறந் துபடுத்தாயே ... ... ... *
கைகட்டிதேவர்வணங்கயின்னங்கக்... ... *
கதிர்முடிபூண்டாயே .. ... ... யிந்த*
வையகத்தில்பாரும்யிகழ்ந் தநகைக்க... ... *
வனத்திநில்மாண்டாயே... ... ... *
ரத்தின சிங்காதனமீதிலைசாளும்... ... ...*
நலமிதிக்கான்பேனோ ... ... ...யிதி*
செத் தப்பிறந்தாலு முன்னறுபோகே... ... *
செழிப்பிதித்பூண்பேனோ... ... *



சிங்காதனமுமணிபண்டபமும்... ... *
சிறப்புகள்வாங்காதோ ... ... யிப்போ*
தங்குந்தவத்தாம்பிரந்தவுன்மக்கள் ... ... *
தநித்தநியேங்காதோ ... ... *
இந்திரவானவர்சூழவெவன்வாசலில்... ... *
இஷ்றைக்குவாராயோ ... ... வந்து*
எத்தனைக்கிட்டவழைத்தொருவாய்முத்தம் ... *
இப்போதிதாராயோ... ... ... *
எந்தவுலகத்திலெங்கேபிரந்தாலும்... ... *
அங்கேநான்வாரேனே ... னுனும்...*
அந்தவுலகத்தில்வந் துமணந் துன்னை... ... *
அன்புடன்சேரேனே .. ... ... *
எத்தனைக்கோடிதவங்கள் புரிந்தாலும் ... *
என்போதிகிடைக்காயே ... மைத்த*
ரதிப்பெண்வதுமையிலும் வந்தாலும் ... *
வைத் துப்படைக்காயே ... ... *
பத்தமாமாத் துப்பாய் பொங்கத்திநிற் *
பாலமுதூட்டுவையே ... அப்போ*
மெத்தச்செருக்கிரானுன்றுமற்போநால் *
விளையாட்டுங்காட்டுவையே ... ......*

இரணியன்சொல் விருத்தம்-இ-ம்-காம்போதி.

திதிமகன்மனையாளானச் சில்லிகையழுதாளிப்பால் *
சதிரிரணியனுங்கேட்டு தனல்மெழுகதுபோலாகி *
விதிவசமிதுவோதம்பி வெஃதிதிவாழேதென்று ... *
கொதிகொளுமனத்தனுகிக்குலைந்தவன்புலம்புவானே.

புலம்பல்-சரு-இ-ம்-பைரவி-ஏகதாளம்.

தம்பியேயடாதம்பியேநீ ... ... *
தநியேபிறந்தாயே ... ... *

நம்பினேனுன்னைநம்பினேனென்னை ... ❋
நடுவில்மறந்தாயே ... ... ❋
உந்தனால்செல்வம்வந்ததென்றேநான் ... ❋
வுள்ளமகிழ்ந்தேனே ... ... ❋
எந்தன்வாயினாலுந்தனைப்போவென்று ❋
யிருஞ்செல்வமிழந்தேனே ... ... ❋
வனத்துமான்சிங்கந்தனைப்போலே ... ... ❋
மாயவனடித்தானே ... ... ❋
சினத்தமாயவனையினத்துடன்கொல்லாமல் ... ❋
செங்கையில்பிடித்தேனே ... ... ❋
கொள்ளைகொண்டுவந்தனன்னாயிரமனம் ... ❋
குலைசெய்துக்கொண்டானே ... ❋
வுள்ளமேயெமக்கள்ளனுயிரின்னம் ... ❋
வாங்காமல்விட்டேனே ... ... ❋
எனக்கோயிந்தநிந்தைக்கோநீயும் ... ❋
யெழுந்தாய்மலைபோலே-யுந்தன் ... ❋
பாதத்துனுக்கொவ்வாததேவர்க்கும் ... ❋
பயம்போச்சேயினிமேலே ... ❋
பண்ணியாய்வந்துகொண்ணவெம்மாயனைப் ❋
படுக்காமல்விடுவேனோ ... ... ❋
நண்ணியமாண்மையும்பெண்ணமுங்கெடுக்காமல் ❋
நானுயிர்கொப்பேனோ ... ❋
சொன்னசொல்லதுவென்றுவிருக்கவே ❋
சுருட்டினாய்நெடுபூமி-யுன்னு ... ❋
தாண்மையும்ஆண்மையுந்தானெங்கே ❋
யொளித்ததோவென்றன்சாமி ... ❋
மந்திரியேதம்பியென்றனையேயுயிர் ... ❋
வாழேனேவாழேனே ... ... ❋
சந்திரமுகசந்திரனேகூடச் ... ... ❋
சாகாமற்போனேனே ... ... ❋



இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

விரும்பேசியுன்னையிந்த ... ... ❋
வினைக்குள்ளாக்கிவைத்திடவோ ... ... ❋
ஓருஞ்செய்யத்துணிந்தவர்போல் ... ❋
வுன்னைமடித்தேனென்செய்வேனே ... ❋
பாரமறியாததம்பியென்று ... ... ❋
பாராதத்திசைகளைவென்று ... ❋
வாருமெனவேயுனையனுப்பி ... ❋
மாளக்கொடுத்தேனென்னசெய்வேன் ... ❋

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

செடியில்நுழையுமான்கையால் ... ❋
சிங்கம்விழுந்துமாண்டதுபோல் ... ❋
நெடியமாயன்கையாலேநீயோ ... ❋
மடிந்தாயென்னசெய்வேன் ... ... ❋
கொடியமாயன்றனைக்கொல்லக் ... ❋
கோபமில்லாதவன்போல ... ❋
நெடியவில்லைக்கைபிடித்து ... ... ❋
நின்றேன்பாவியென்னசெய்வேன் ... ❋

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி

கொள்ளைகொண்டென்னுயிர்தனையே ... ❋
குலைசெய்திடவேதுணிந்துவந்த ... ❋
கள்ளனவனைக்கொண்டுவந்துக் ... ... ❋
கடிதாயிப்பகையைமுடிப்பேன் ... ❋
வள்ளலெனத்துயிலயிந்த ... ... ❋
வாதைவருமென்றறியாமல் ... ... ❋
துள்ளியேழுமலைபோலே ... ... ❋
துடித்துவிழுந்துமடிந்தனையே ... ❋

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி

மாதுதவிக்கத்தாய்தவிக்க ... ... *
மணந்தளர்ந்தயான்றவிக்க ... *
இதுக்காளாய்நீதவித்து ... ... *
இஜகத்தில்விழுந்தமடிந்தனையே ... *
வேதனஞ்சுழுதிவாஞ்ச ... ... *
விளக்குந்தேவருனக்கஞ்ச ... ... *
வாதனைச்செய்மாதனைப்பிடித்து *
வுயிர்மடித்துபகைமுடிப்பேனே ... *

இரணியன்சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

நாணித்தவகைபுலம்பித்தேரிக்கொல்லு
தாய்பாதத்தொழுதெழுந்தமுகத்தைநோக்கி ... *
தேனுந்துகுழல்மடவாள்தம்பிதேவி *
சில்லிகையாள்முகம்நோக்கித்தெரிந்திலீரோ... *
எனிந்தக்கலையுமக்கெனக்கேயாகும் ... *
யெடுத்தவுடவிருப்பதவேயிருத்தல்பொய்யே *
யானிந்தப்பழிதீர்ப்பேன்துயர்திரொன்று *
நாடுவாஞண்மைசொல்லிக்காட்டுவானே *

இரணியன்சொல்-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனக்குவருந்தபிராயம்மாதி ... ... *
எனக்குவருந்தபிராய் ... ... *

அநுபல்லவி.

எனக்குவருந்தாயிடர்ந்தமாயனுக்கும் ... *
வாதுக்குநானிருக்கமடிந்தசேயனுக்கு ... *
வருமோ-பலன்-தருமோ-அவன் ... *
வல்லாண்மைதீர்க்கேனேவல்லாண்மைமுடிக்கேனே (எ



சரணங்கள்.

எடுத்தப்போதேயுடல்விருப்பதேநாட்டம் *
[illegible]ாத்துக்காலைவினையின்மெய்மலாட்டம் *
அடுத்தசுத்தமும்வாழுந்தொடுத்தசந்தைக்கூட்டம் *
அநித்தியப்பொருளுக்குநினைப்பதேவாட்டம் ... *
ஆமோ-அழப்போமோ-சொன்னம ... ... *
ஆதிமாயனுக்கென்றுல்தாழ்வல்லோயிதிசொன்னால் (எ-ன)

வெறுத்துக்கடைவிற்பொருள் பிரித்துப்போட்டாலும்
விரும்பிவந்தவன்விடுத்திரும்புமெய்மேலும் ... *
தெரித்துக்கண்விழித்துக்கொண்டொருத்துக்காத்தாலும்
நீக்கும்பொருள்மறைந்துநீங்குமெய்வித்தாலும் *
நிசமே-விதிவசமே-யென்று... ... *
நினையாமல்மனம்நொந்துதயாயிருந்துணர்ந்து... (எ-ன)

கன்னனிவிழும்படையோர்யென்னனியோரிரவு... *
கலங்கிழுந்தேவுஞ்புலம்பியதுவுரவு... ... *
நன்னனித்துறையுந்தேட்கொண்டுனைகையரவு ... *
நமக்குந்தப்படிபல்லோவமைக்குமிவ்வுரவு .. *
நலமோ-யென்னபலமோயிப்போ... ... *
நான்சொல்லுவவைவிட்டேயென்னமாவோலயிட்டு (எ-ன)

இதிசொல்விருத்தம்-இ-ம்-முகாரி.

வினையதுவினைக்குத்தப்பாமெய்த்தவம்புரிந்துநின்ற ... *
முநிவருந்தந்தையாரெல்புரந்தனைபெரிதுப்பாரித்து
அனிதமாயுந்தன்பாலன் அரிபிறால்மடிவரென்று ... *
புனிதர்சொன்னதுமெய்யாகிப் போனதையரிந்தேனப்பா

வசனம்.

சேனும்மகனே -யுமதுதந்தையானவர்யெனக்குமுன்னாக கவேதரியினுல்-மகன்பிரந்துபோவானென்றுசொன்னவார்த்தையைநான்மெய்யென்றுநம்பாமல்பொய்யென்றிருந்தேன் - அந்

ரிதையிப்போது திஷ்டாந்திரமாய் கண்டுகொண்டேன் இப்பாதகனென்வயர் அடியடித்து பதப்படுத்துவதற்குயென்ன சம்மேலன்மகனே.

இரணியன்சொல்விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

நேத்திரமிரத்தவகையாதெந்தம்பிக்குள்ள ... ※
செங்கடனைமுடிப்பித்தானப்பாலிவேதம் ... ※
போற்றியேயுலகில் உள்ள அவுணராலும் ... ※
பொருந்தியதேவர்களாலும்பூதத்தாலும் ... ※
சாத்திரவன்படையாலும் பாவையாலும் ... ※
சாகாமல்வரம்பெறுவேனென்றுதேறி ... ※
ஆத்தலருந்தபஞ்செய்யப்போவமென்று ... ※
அமர்ந்திட்டான்சொல்லவதனிலிருந்திட்டானே ※

இரணியன்சொல்விருத்தம்-இ-ம்-தோடி.

அம்புவிதனிலங்கவாழும் அமைச்சரேகேளுமெந்தன் ※
தம்பியைவதைத்தவந்தந்தன்பேராயரியைக்கொல்ல ※
இம்பமாய்தவங்கள்செய்யயேகிடவேணுமிப்போ ※
செம்பவழிதழாளெந்தன்றேவியையழைப்பிப்பீரே ※

வசனம்

கேளுங்கள்மந்திரிமார்களே யெனது தம்பியாகியயிரணியாக்ஷனைக்கொன்ன அந்த அரியைநான்கொன்றுயென்பகையைத் தீர்த்துக்கொள்ளவேண்டியது - அதற்காகயிப்போது தபஞ்செய்யவேண்டியது - ஆகையால்யெனது தேவியாகிய லீலாவதியை அழைப்பியுங்கள்மந்திரிமார்களே

மந்திரிசொல்விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

தாவியபுவிப்போற்றித்திராவவர்திரைத்தென்றாலும் ... ※
மேவியவரன்மனைக்குள்விரைந்துகட்டியனேகேளாய் ... ※
ஆவலாயுலகனைத்தும் ஆண்டிடும்யிரணியன்றன் ... ※
தேவியையழைத்தாரென்று செப்பிநீவரச்செய்வாயே ... ※



வசனம்.

கேளடா கட்டியக்காரா - யிந்தவுலகத்தையெல்லாம்வொரு குடைக்கீழாளப்பட்டயிரணியமகாராஜன் தனது தேவியாகிய லீலாவதியம்மனை தனதுசமுகத்துக்கு அழைத்தாரென்றுசொல்லி துரிதக்கிரமாயழைத்துக்கொண்டுவாடாகட்டியக்காரா.

கட்டியன்சொல்விருத்தம்

இராகம்-கல்யாணி.

அமைச்சரேதேவரிசொன்ன ... ... ※
ஆக்கினைப்படிக்கிச்சென்று ... ... ... ※
இமையவர்போற்றுமாதை ... ... ※
இங்குவந்திடச்செய்வேனே ... ... ※

வசனம்.

அப்படியேவொருநொடியில் அரசன் ஆக்கினைப்படிக்கி யெனது தாயாகிய லீலாவதி அம்மனையிங்குவரும்படியாய்ச்செய்கின்றேனவாயி.

லீலாவதிவருகிற-சிசபத்தியம்

கதிரொளிவட்டிதறையனகமதில்நிகதிசென ... ※
காதிலிலேகம்மலும்பளபளக்க ... ※
மதிமுகந்திலர்தழைக்கத்திபொழில்மாணிக்க ... ※
மாலைமேலேமார்பிதில்மதாணியின்ன ... ※
சதிர்பரவுத்தங்கவினக்கணைமுமாடவே .. ※
தாழ்வர்ணகைமின்தியக்கிவீச ... ... ※
அதிமெலினயிடைதங்கவொட்டியாணமின்னவே ※
அணுபத்திலம்பைசத்தாத்பரிக்க ... ... ※
அதிவிதனசாலி-பாக்கியசாலி ... ... ※
அவனியோர்தினம்பரவிவருப்விலி ... ※
பதியாகுமிரணியமன்னவனுர்தேவி ... ※
பரிவுடையதிகலீலாவதிவந்தாளே ... ※

தரு-இராகம்-தோடி-தாளம்-அடசாப்பு.

பல்லவி

வந்தாளே ஸ்ரீலீலாவதி ... ... *
வதியும்வந்தாளே ... ... ... ... *

அநுபல்லவி.

செந்தாரத்திலர்தநெத்திநிகரிதென்னவே ... ... *

சரணங்கள்.

பூரணச்சந்திரோதயவதனம் பளபளென்னவே-பமர ... *
ஆரம்பரிமளகொங்கைத்தனதனென்னவே ... (வந்தா)
நல்வடைவென்னிடையருகு ஒதுங்கக்கலகலென்னவே-பிரச *
தொண்டைவாய்மிகும தாங்குமுகுமென்னவே ...(வந்தா)
சுந்தக்கஸ்தூரிபுநுகுவாசம்வீசவே ... ... மலர் *
கொந்தளகந்தனில்வண்டுராகம்பேசவே ... ...(வந்தா)
அன்னநடைநடந்து அன்பனைத்தேடி ... ... மிகு *
கன்னல்மொழிவதனக்கனவினநாடி ... ... (வந்தா)

முதல்-மந்திரிசொல்-விருத்தம்-இ-ம்-நாட்டை

அன்னையேபோற்றி போற்றிஅமுர்தமாமொழியேபோற்றி ... *
கன்னியர்மகிழவந்தகற்பி னுக்கரசேபோற்றி ... ... *
மன்னியவுலகையாளும்மன்னவன்றேவியாகி ... ... *
தன்னிகரிணையில்லாதத்தாயேநின்றுவ்கள்போற்றி ... *

லீலாவதிசொல்விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

வணங்கியேமன்னவர்போற்றமாதர்கள்மறையிற்சூடுஞ் ... *
மணங்கமழ்ம லர்பூண்டமதியுள்ளவமைச்சமாரே ... *
இணங்கமழ்வாள்கையேந்தும்நீள்சபைதனிலுள்ளோரும் *
குணம்புகழ்கொளுவிலென்றும் குறைவிலாதழைத்துவாழ்வீர்



உ-வது-மந்திரிசொல்-விருத்தம்-இ-ம்-சாவேரி

உக்ரமித்துடனெதிர்ப்போர்குகந்தவெப்புலிபோர்த்தி *
அக்ரமித்துடல்சிதைக்குமாண்மைமகட்டியனேகேளாய் ... *
எக்குலமதிக்குமன்னிரணியன்றேவியர்ன ... *
மைக்குழல்மாதிருக்கமகிழ்ந்தஆசனம்பளிப்பாய் ... *

வசனம்.

வாரும்ஆசிரவாசல்காக்குங்கட்டியக்காரா-நமதுபிராணநாயகராகியஇரணியமகாராஜன்றேவியாகிய- லீலாவதியம்மன்வீற்றிருக்கத்தக்கதாய் திவ்வியமான ஆசனங் கொண்டுவந்து போடும்பிள்ளாய்கட்டியக்கரா

கட்டியன்சொல்-கவி

நேசமாய்நன்னெறி ... ... *
நிகழ்த்துமந்திரிகளே ... ... *
ஆசனங்கொடுவந் ... ... *
தளித்தனனையா ... ... ... *

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

மன்னவாபோற்றிபோற்றிமகிதலந்தரசேபோற்றி ... *
தன்னிகரிணையில்லாதத்தலைவனேபோற்றிபோற்றி ... *
நன்னயமாகத்தேவர்நயந்தழைப்பித்தசேதி ... *
இன்னதென்றியம்புவீருன்னிணையடிக்கமலம்போற்றி ... *

வசனம்.

வாருமென்னுடைசக்குகந்த பிராணநாதா- தேவரீர்மனதுகந்து-அந்தப்புரத்திலிருந்தவென்னையழைப்பித்தக்காரியஞ் சொல்லும்சுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

இப்புவிமகிழவந்தவென்னிடதேவியேகேள் ... ... *
ஒப்பிலாதெனதுதம்பியுயிர்வதைச்செய்தமாயன் ... ... *

நட்பிலாதவனைக்கொல்லத்தவஞ்செய்துவருகிறேன் ... *
மெய்ப்புடனரமனைக்குள்வந்துநீயிருந்திடாயே ... ... *

வசனம்.

கேளும்பெண்பிராணப் பதமானபெண்ணே லீலாவதியே யென்றம்பியாகியபிரணியாக்கதனைக்கொன்ன - அந்தஅரியையிடித்துநான்கொல்லவேணும்]- ஆசையால்அதற்குத்தவஞ்செய்து வேண்டியவரங்களைப்பெற்றுக்கொண்டுவருகிறேன் அதுபரியந்தம்நீபோய்நமது அரமனையில்வெகுபத்திரமாய்வீற்றிரும் பெண்ணேபிராணநாயகி.

லீலாவதிசொல்-கவி.

இருந்திடவிடைகொடுத்து... ... *
இறைவனேதேவர்சென்று... ...*
இருந்தவேதவங்கள்செய்து... ...*
சீக்ரமாய்வருகுவீரே ... ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி.

சிலையுடன்வாள்கையேந்தித்திகழ்கொலுவதனில்நாளும் ...*
இலகியவமைச்சரேயான்யேகிதற்றவமேசெய்து... ... *
நலமுடன்வாரமட்டும்நம்முடைதேசமெல்லாம் ... *
நலமையாயரசுசெய்துதகமையாயிருந்திடீரே...... *

வசனம்.

கேளும்புதன்மையான அன்முகமந்திரி - நான்போய்தவஞ்செய்துவருகிறவரைக்கும் நம்முடையதேசமும் ஆனைசேனை பரிவாரங்களும்-இவைகளுக்குவொருகுறைவுவாரமல் க்ஷேமமாகவைத்துக்கொண்டுஅரசுபுரிந்துவாரும்மந்திரி.

மந்திரிசொல்விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

தகமையாய்வுணர்வாறேநீர்தானவர்நமிக்கியேகு... ... *
புகிழமையாய்வாழுகின்றமன்னர்மன்னவனேபோற்றி ...*



செகதலத்தவுணரெல்லாஞ்சீருடன்றழைத்துவாழ்க... *
அகல்பதித்தவஞ்செய்திட்போதுன்னைவேவருகுவீரே... *

வசனம்.

வாருமையா சுவாமியிரணிய பூபாலகா- தமதுகுலமானது வோங்கித் தழைத்துவாழ்கவும் தம்முடையபகையாளியாகிய- அந்தமாயனைக்கொல்லவுந்தேவரீர்சென்றுதவஞ்செய்துவரங்களைப்பெற்றுக்கொண்டுவாருமையாசுவாமிராஜபரமேஸ்வரா.

பொரு-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

மன்னவனிரணியன்முன் ... ... *
மனமகிழ்ந்திருந்தானிப்பால்... ... *
தன்னுயிர்துணைவன்மாயத்... ... *
தையல்சில்லிகைமாதென்பாள்... ...*
பொன்னவன்மேவுமாயன்... ... *
புஞ்சரணடைவேனென்று ... ...*
உன்னியத்தவமேசெய்ய... ... *
உள்ளமுமேற்கொண்டாளே... ... *

வசனம்.

அகோதெப்படியென்றால்-யிரணியமகாராஜன் தன்றம்பிக்கு யக்கடமையெல்லாமுடித்துபின்பு யாவருங் கண்டுகளிக்கும்படித் தாய்தவஞ்செய்யப்போகவேணுமென்று அரமனைக்குள்சென்ற இப்பால்யிரணியாக்கன்மனைவியாகிய சில்லிகை யென்பவள்-த கணவனைக்கொன்ன- ஆதிவராகமூர்த்தியினுடைய திவ்விய பாதத்தில்பாதம்போயடைவேனென்றுமன முருகிச்செய்துதவ காலமிருந்துதவஞ்செய்யவருகிறவிதங்காண்க

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-முகாரி

அடியவருக்கெளியவனுயருளேசெய்யும் ... *
ஆதிநாராயணன்பாதம்வணங்கிடாமற்... ... *
கொடியவனூர்யென்மருணனிறந்தானந்தோ ... *
குலமுமென்றுமழிந்தகோலசெவ்வாய்ருபன் *

நெடியவனைப்பணிந்துயிருவாகமீளாமுத்தி ... *
நெறியடைவேனெனுமனத்துணர்வுகூர்ந்து... *
அடியிடைசில்லிகைமொதுவத்தாளாகிச் ... *
சுந்தவேடப்புனைந்துவருகின்றனே ... *

தரு-இ-ம்-புன்னுகவராளி-தாளம்-ஆதி

கண்ணிகள்

புன்குழல்தனைவிரித்து-மேலே... ... *
புனைந்திடுஞ்சடைதரித்து ... ... *
தாங்கியதுயில்விடுத்து-யிடையிறுத் ... *
சிறுந்தமறவுரியுடுத்து... ... ... *
நெத்தியிற்றிலர்தபொட்டும்-இறந்து... *
நிறைந்திருநாமமிட்டும் ... ... *
பத்தியின்மனம்திருத்தி-ஐம்புலப்... ... *
பகைதனைவேரறுத்து... ... ... *
அட்டாக்கமம்பேணியதிவினி... ... *
லதிலேலமனம்துனி... ... ... *
எட்டாவெளியோடி-அங்கே... ... *
இருந்திடும்பொருள்நாடி ... ... *
தன்னைத்தானேமறந்து-சில்லிகை... ... *
தவத்தின்மேலேபுனைந்து... ... *
இன்னமிர்தருலந்-தன்னில் ... ... *
இருந்தாளேநெடுங்காலம் ... ... *

பொது-விருத்தம்-இ-ம்-ஆதி

சங்கையைத்தவிர்த்தேயந்தத்... ... *
தையல்சில்லிகைமாதென்பாள் ... *
அங்கைகளிரண்டேகூப்பி... ... ... *
அவர்சடைமுடிமேற்சேர்த்து... ... *
கங்கைவாழ்பாதந்தன்னைக் ... ... *
கருத்தினில்இருத்திக்கொண்டு... ... *



தங்கியேநெடியகாலத்... ... ... *
தான்மகிழ்ந்தேதந்தவாளே... ... *

சில்லிகைசொல்தேவாரம்

புராதனப்பொருளேபோற்றி... ... *
பூமகள்நாதாமோறந் .. ... ... *
தராதலமண்டபின்டந்... ... *
தன்னையுண்டுமிழ்ந்தாய்போற்றி ... *
கராவினைவதைத்தன்பாகக்... ... *
கரியைரட்சித்ததாதா... ... *
அராவனைத்துயில்விட்டென்பால் ... *
அரிஅரிவருகுவீரே... ... ... *

சில்லிகைசொல்தரு-இ-ம்

பூரிகல்யாணி-தாளம்-ரூபகம்.

அர்சுதாமறைவுச்சியின்மேவிய... ... *
ஆனந்தனேசரணம்சரணம் ... ... *
பச்சைமாமுகில்வண்ணனேகண்ணனே... *
பைந்துளபாசரணம்சரணம் ... ... *
மச்சைமாக்கறிமெச்சிடவந்தருள்... ... *
காறணனேசரணம்சரணம்... ... *
இச்சையாம்பிரவிக்கடலறுத்தேறி ... *
யின்றெணயாள்சரணம்சரணம்... ... *
இந்தக்காயமெடுத்துச்சுமப்பதில்... ... *
யென்னப்பயன்சரணம்சரணம் ... *
வந்துவந்துபிறந்திராமல் .. ... *
வரந்தருவாய்சரணம்சரணம் .. ... *
வுந்தன்பாதம்வணங்கயிணங்க .. ... *
வுகந்தருள்வாய்சரணம்சரணம்... ... *
சுந்தரானந்தாஆதிவராகா ... ... *
சோதியேசரணம்சரணம்... ...

பொதுவிருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்:

மக்களைமறந்தாள்மக்கள்... ... ... *
வருத்திவீழ்ந்தழுதல்காணாள்... ... *
கைக்கிளிமறந்தாள்கிள்ளைக்... ... *
கனிந்தழுதிறங்கல்காணாள்... ... *
ஒக்கலைமறந்தாள்வொக்க... ... *
உடலம்வற்றழுதல்காணாள்... ... *
முக்கணனையந்நீர்த்த... ... ... *
முதல்வனைமறக்கிலாளே... ... *

வசனம்

தான்பெற்றமக்களை மறந்தவளாய் அத்தமக்கள்வற்று பாதத்திலேவிழுந்து புலம்புறுதலைக்காணாதவளாய்த் தான்வளர்த்தக் கிளியைமறந்தவளாய் அத்தக்கிளியானது அழுதுபுலம்புகிறதையும்பாராதவளாய்-வுயிர்க்குயிராகியசுற்றத்தார்கள் பக்கத்திலிருந்துகொண்டிருப்பதையும் காணாதவளாய் முக்கண்ணனாகியபரமசிவத்துக்குபிட்சையைதவிர்த்தருளிய ஸ்ரீமன்னாராயணருடைய திருவடியை மறவாத சிறந்த வித்தியோகே கூடி தான்சில்லிகை மாது.

பொதுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

உண்பதுமறந்தாள்செம்பொன்... ... *
ஒளிமணிரத்னவூஞ்சல்... ... ... *
எண்பதுலட்சமாதர் ... ... *
யிருந்துதாலாட்டிப்போற்றும்... ... *
நண்பதுமறந்தாள்தன்னை... ... *
நாடுவோர்க்கருளைசெய்யும் ... *
கண்பதுமாயன்திவ்ய ... ... *
கழலிணைமறக்கிலாளே ... ... *

வசனம்.

உண்பதைமறந்தவளாய் ரத்தினஊஞ்சலிலே தாலாட்டப்பட்டபெண்பதுலட்சந்தாதிப்பெண்களையு மறந்தவளாய் தன்னை



நாடிப்பணியப்பட்ட பேர்களுக்குகருணாகடாட்சம்பொருந்திய ஸ்ரீமன்னாராயணனைமறவாதசிந்தையையுடையவளா யிருந்தாள் சில்லிகைமாது.

நாரதர்சொல்-விருத்தம் -இ-ம்-பூரிகல்யாணி.

பூந்தவனித்தவாரோயெழில்பெருந்தவமேசெய்து ... *
பாக்குடனிருந்தாளிப்பால் பலவிதராசத்தோடு ... *
தாங்கிசைவீணைமீட்டிக் கருதிநாரணனைப்பாடி ... *
ஆங்குநாரதனார்தானும் அங்குபடம்வருகின்றாரே. *

தரு-இ-ம்-

அங்கஜனுந்தன்மஸ்ரீங்காரம் ... ... *
நித்தியானந்தமுகதம் ... பஜேபஜே*
பங்கஜநேத்திரம்சங்கபுஜங்கம் ... ... *
பரமகல்யாணம் ... பஜேபஜே*
மாதவகேசவஸ்ரீவைகுந்தம் ... ... *
மாயவனுமம் ... ... பஜேபஜே*
நாதவிந்துகலாதமபாயவி ... ... *
நாசவிலாசம் ... ... பஜேபஜே*
அஷ்டாட்சரவைபோக்கியபாமம்... ... *
ஆதிமத்யாந்தம் ... பஜேபஜே*
சிருஷ்டித்திதிசம்மாரவிநோதம் ... *
சௌனனிவாசம் ... ... பஜேபஜே*
சாந்தாகாரம்புஜகசயனம் ... ... *
சர்வபூதேசம் ... ... பஜேபஜே*
ஆந்திரியமந்திரம்அரிநாராயணம் ... *
அகிலாண்டதாரம் ... ... பஜேபஜே*
வித்தியாதரகின்னரர்சுரகணிதம் ... *
வேணுநாதப்பிரியம் ... ... பஜேபஜே*
சத்தபவுத்திரங்களக்ஷேமாயம் ... *
சோதிரம்யம்அரி ... ... பஜேபஜே*
அங்காபாதம்சாலுவபௌமம் ... ... *

கருடத்துவஜம் ... ... பஜேபஜே*
மங்களகுபகாருஞ்சாரொட்சகம் ... *
வானரசுசேசம் ... ... பஜேபஜே*
பீதாம்பரதாரகவுஸ்துவாபரணம் ... *
மிறந்தாமிதியம் ... ... பஜேபஜே*
ஆதாரம்ஸ்ரீமுஷ்டமவாசம் ... ... *
ஆதிமத்தியர்த்தம் ... ... பஜேபஜே*
சத்துவகருபம்லட்சுமிகாந்தம் ... *
சாமளவர்ணம் ... ... பஜேபஜே*
பத்தசபாபதியணிதம்கவிதம் ... *
பாலம்முகுந்தம் ... ... பஜேபஜே*

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

தேன்றவிழ்குழலாளான சில்லிகையென்னுமாதே... ... ...*
ஊன்றியவுருதிட்பேணி புருதபஞ்செய்கின்றாய்நீ... ... ...*
நான்தனிநினைந்ததேவர் சங்கரனயன்மால்தானே... ... ...*
யனிதையறிபரன்று யகமகிழ்ந்துரைசெய்வாயே ... ... ...*

வசனம்.

கேளும்பெண்கள்சிகாமணியே நீமஹாவிரதத்துடனேதபஞ்செய்யத்துடங்கினையே அத்தவமானது பிரமதேவனைநோக்கிச் செய்கிறதும் பரமசிவனைநோக்கிச்செய்கிறதும் ஸ்ரீமன்நாராயணனைநோக்கித்தபஞ்செய்கின்றதும்யெனக்கு யாதொன்றுந்தெரியாமலிருப்பதால் அதனையெனக்குத்தெரியச்சொல்லுஞ்சில்லிகைமாதே

சில்லிகைசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

பரமனுர்தானுமல்ல பங்கயன்தானுமல்ல *
விரவுமெய்ப்புருஷர்தன்னைவீடுகொண்டெய்க்கவேண்டி



அரவணைதுயிலுமாயன் அவரடிநினைந்தயானுந் ...*
திறமுடன்றவமேற்கொண்ட சேதிமுதறிந்திடீரே...*

வசனம்.

வாருமையாநாரதமுநிவரே யான்பரமேஸ்வரனையும் பிரமதேவனையுந்நினைத்து தவஞ்செய்யவில்லை யென்னுடையபிராணநாயகனை ஸ்ரீமன்நாராயணனானவர்வசாகஅவதாரமாகி சங்காரஞ்செய்தபடியினாலே அவர்நாதத்தாக்குமேதுவாகினுர் ஆகையால் அவர்முத்திமோட்சம் அடையும்படியாகஅந்தஸ்ரீமன்நாராயணனை நோக்கித்தவஞ்செய்கிறேனையாசுவாமிநாரதமஹாமுநியே,

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

சில்லிகையுன்சொல்லாலே சிந்தையுமகிழ்ந்தேனிப்போ *
நல்லதேயுனக்குமந்த நாரணனருளைசெய்வார் ... *
சொல்லுவன்கேள்நீயிந்த சுருதியின்முடிமேல்நின்ற... *
வல்லமந்திரத்தைநெஞ்சில் மறந்திடாதிருத்திடாயே... ... *

வசனம்.

வாருமம்மாசில்லிகையேயுனக்கு அந்தஸ்ரீமன்நாராயணர் அநுக்கிரகஞ்செய்வார் ஆகையாலுனக்குநானுபதேசித்தஅஷ்டாட்சரமந்திரத்தை நீயெந்நேரமுமறவாமல் தியானஞ்செய்துகொண்டிருமம்மாசில்லிகையே.

சில்லிகைசொல்-தரு-இ-ம்-கேதாரகௌளம்.

தாளம்-அடதாளம்.

பல்லவி.

நாராயணஹரியே-ஸ்ரீமன் ... *
நாராயணஹரியே ... ... *

அநுபல்லவி.

நாராயணஹரியென்மனமுருகியே... ... *
பாராயணஞ்செய்யப்பரிவுடனெதிர்வாரும்(நாராய)

மிக

சரணங்கள்.

தாமோதரப்பொருளே-திரௌபதைத் ... *
தானுகந்தெழுந்தருளே ... ... *
சாமளவர்ணனேசர்வதயாநிதி... ... *
பூமனையுதவியவோர்பெரும்பொருளே ... (நாராய)

திருவளர்மணிமார்பா துதிசெய்புத் ... ... *
தேவருக்கொருநிபா... ... ... *
மருவுபிரத்தாவனவாசியேநிதி... ... *
கருமெந்தாயிந்திரசுவேயிதநிதி... (நாராயண)

அஷ்டாட்சரமுடிவே-துதித்தவர்க் ... *
கமர்த்திடும்பழவடிவே ... ... ... *
அஷ்டசம்பாரனேசுந்தபவித்திர ... ... *
இஷ்டருக்கிரங்கியிபொருதவிய (நாராயண)

கிள்ளைசொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

நாரதர்தவிலக்கேட்டு நாலிரண்டாமெழுத்தைத் ... *
தாரணைச்செய்துக்கொண்டு சாத்தியமொழிதப்பாமல்
காரணியுருவேபென்று கருத்தொருவழியாற்சென்று
ஆரணமுடிமேல்நின்ற அமலனைப்பணிந்திட்டாளே

வசனம்.

நாரதமுநிவர்சொன்னவாக்கியந்தப்பாமல் அஷ்டாட்சரத்தை யொருமைப்பாடுக்கொண்டவளாய் வேதமுடிவிலேவிளங்காநின் றதைதன்னியமான ஸ்ரீமன்னாராயணமந்திரத்தைசெபித்துக்கொ ண்டிருந்தாள்.

பொது-விருத்தம்-இ-ம்-நாட்டை.

கனியொருமாதத்தில் கருத்திருநாளையின்றுள் *
தனிகருவொருமாதத்தால் நால்குநாள்வளர்ந்துகின்றுள்



பனிசெய்திரொருமாதத்தால் பரித்தெட்டுநாளேநின்றுள் *
அன்னவளேயோர்மாதத்தால் ஆறுநாள்பரிதிநாளே *

வசனம்.

ஒருமாதம்பிரண்டுநாள் பன்டுபலாதிகளைத்தின்றுள் ஒரு மாதம்நாலுநாள் எதிர்த்தசாருகளைத்தின்றுள் ஒருமாதம்பதி னெட்டுநாள் பனிநீரைக்குடித்தாள் ஒருமாதம் பனிரெண்டுநாள்வா யுவைபட்சணஞ்செய்துகாலத்தைக்கழித்தாள் கிள்ளைமாது.

பொது-விருத்தம் இ-ம்-கல்யாணி.

இப்படிநாலுமாதம் பெருந்தவமேசெய்து *
ஒப்படைத்தமாதம் வாயுவேபுசித்து *
சொற்பெறுமூலாதாரத்தாடார்த்தவிட்டாடே *
சுற்பினைத்தெரிசித்தப்பால் சுதிர்மதிமேற்கொண்டாளே.

வசனம்.

இவ்விதமாய்நாலுமாதத்தவஞ்செய்துஐந்தாமாதம்பிராணை வாயுவைவொடுக்கிமூலாதாரங்களாதிஷ்டானமணிபூரகம் அநா கதம்விசுத்தி ஆக்ஞையென்னும் ஆறாதாரங்களைக்கடந்து அக்கினிமண் டலத்தை அப்பால்சந்திரமண்டலம் சூரியமண்டலம் அக்கினிமண் டலமுங்கடந்து துரியம் துரியாதீதமென்னும் அதைப்போயிரண்டை யும்பாரப்பிரமஸ்வரூபமானசோதிரம்மியமாய் விளங்காநின்ற ஸ்ரீமன்னாராயணருடைய ஆனந்தநிர்த்தங்களைத்தெரிசித்து ஒரு மைப்பாடுகொண்டவளானாள் கிள்ளைமாது.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

கொண்டவனிருக்குமந்தக்கொழுந்தப்பத்தலைநாகத்தி
தண்டுமணிந்தநாளும் சக்கரப்படையுங்கையில் *
குண்டலமணிந்தகாதல் குளிர்மதிமுகமும்தோன்ற *
அண்டர்தாய்மகுர்ந்தி கமாய்வருகின்றோர் ... *

மாயவலிவருகிற-தரு

இ-ம்-பைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

திருவளர்மணிமார்பனும்-அங்கங்கள் *
செழித்தப்பங்கயனும் ... ... *
அருமறையிலேமுடிதானும்-சங்குசக்ர *
மன்னையணிமகுடனும் ... ... *
கரியமுகில்வடிவானனும்-மிக்கமுகக் ... *
கமலநுதிவாசனும் ... ... *
கருடவாகனமேறியே-கிள்ளிகைமுன் ... *
கருணைதாயதுமேவினார் ... ... *

போனா-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

கண்டபோதெழுந்தானந்தக் ... ... *
கருணவாருதியின்முழுகி ... ... *
அண்டர்நாயகன்பாலுந்து ... ... *
அன்பினேயிழுக்குவான்போல் ... ... *
தெண்டனிட்டிடமைந்துசாரதி ... ... *
செங்கைகளிறுமேற்கொட்டி ... *
எண்டிசையெங்குமோடி ... ... *
மிசையங்கூத்தாடினாளே ... ... *

வசனம்.

இவ்விதமாகவந்தஆதிவராகஸ்வாமியைவெளியிலிருந்துகண்டெ( ந்தவளாய் கருணாசமுத்திரத்தில் மூழ்கினவளாய் தெண்டனி( யிருந்தாதவளாய் சிரசின்மேலிரண்டுகைகளையுங்கொட்டிக்( ட்டிக்கொண்டவளாய் எட்டுதிக்கும்வோடினவளாய் ஆனந்த( நனுக்குரியத்ஆடலிநாள்கிள்ளிகையானவள்.

கிள்ளிகைதரு-இ-ம்-கல்யாணிதாளம்ஆதி.

பல்லவி.

ஆடிநானேகிள்ளிகை-யானந்தக்கூத்தில் ... ... *
நாடிநானேகிள்ளிகை ... ... ... *



அநுபல்லவி.

ஆடிநானின்னிசையுடன்பாடிஞன்பரமபதந் ... *
தேடிநான்வராகஞ்சரணங்கூடிநான்பரவசமாய் (ஆடி)

சரணங்கள்.

அங்கம்நெக்குருகியுருகி-கருணைதரு ... ... *
மானந்தக்கனைபெருகி .. ... ... *
சங்குசக்ரங்களணியுங்கமலச்செங்கையுடன் ... *
அங்கனேமூர்த்தருளிவருஞ்செங்கண்மணிவண்ணனெழுந்தருள (ஆ

வெம்பப்பிரவிமைக்கடந்தேவுகளைந்த .. *
மேவுமலர்ப்பதம்படிந்தே ... ... *
ஐயனேகரியமுகில்மெய்யனேயடியார்க்கருள் .. *
செய்யனேநிர்மலமானஐயனேயென்றேபாரிந்து (ஆடி)

ஆதிமூலத்தரும்பொருளே-மெய்ப்பொருளாய் ... *
ஆனவரும்பொருளே ... ... ... *
மாதவமுகுந்தபாரிசாதப்பூவல்லி ... ... *
நாதனேகருடனேறும்ஆதிவராகனேயென்றும் ... (ஆடி)

கிள்ளிகைசொல்தோத்ரம்

கருமுகில்வண்ணனேபோற்றிக் கருடவாகனனேபோற்றி ... *
அருமறைப்பொருளேபோற்றி அச்சுதானந்தாபோற்றி *
திருவளர்மார்பாபோற்றி திருமுடியுடையாய்போற்றி ... *
அரிஅரிபோற்றிபோற்றி ஆதிவராகாபோற்றி ... *

கிள்ளிகைசொல்தோத்ரம்

நாரணாபோற்றிபோற்றிநான்மறைப்பொருளேபோற்றி *
காரணாபோற்றிபோற்றிகருணையாகுதியேபோற்றி ... *
பாரெலாமுண்டுமிழ்ந்தபரம்பிரமவடிவேபோற்றி ... *
ஆரணாபோற்றிபோற்றி ஆதிவராகாபோற்றி ... *

சில்லிகைசொல்தேவாரம்.

தற்பரவடிவாய்நின்றதாணுவானவனேபோற்றி ... *
சிற்பரானந்தமாகிச்செகமெலாய்நிறைந்தாய்போற்றி *
சொற்பொருள்முடிமேலானசோதியானவனேபோற்றி *
அற்புதாதிருமுந்திடம்வாழ்ஆதிவராகாபோற்றி ... *

சில்லிகைசொல்தேவாரம்.

என்னையேபொருளாய்கொண்டு... ... *
யெழுந்தருளிறைவாய்போற்றி... ... *
தன்னிகரிலாமல்நின்ற.... ... ... *
தற்பரம்வடிவேபோற்றி... ... *
என்னியந்தனைபஞ்சும்... ... *
காரணக்கன்றுபோற்றி ... ... *
அன்னையேதிருமுந்திடம்வாழ்... ... *
ஆதிவராகாபோற்றி... ... ... *

சில்லிகைசொல்விருத்தம்.

இராகம்-தோடி.

பொய்யுடலெடுத்துமாயப் ... ... *
புணரியில்முழ்த்தவோர்க்கு... ... ... *
மெய்யிதிசங்குசக்கரம்... ... ... *
கதைகட்கவில்லுமேந்தி ... ... *
தையலம்புயமாதோடுத் .. ... ... *
தழைமிகைகருடனேறி... ... ... *
அய்யனேயிங்கெழுந்து ... ... *
அருள்தரவந்தாய்போற்றி .. ... *

வசனம்.

அகிலாண்டகோடிபிரமாண்டநாயகா ஸ்ரீமன்நாராயணா நீரமேலுகுமழிப்போலப் புன்மையாகிய வுடலெடுத்துமாயக்கட்டிலேயகப்பட்டுசாகரத்திலேவிழுந்துதத்தளிக்கின்ற அடியாளேயொ



ருபொருளாயெண்ணிசங்குசக்கரம்கதைகட்கம்கோதண்டம்பஞ்சாயுதங்களுடன் அம்புஜவல்லிச்சமேதராய் கருடவாகனத்திலெழுந்தருளியிங்கேவந்ததினோதம்யென்னசொல்வென்றாரிஹரி.

சில்லிகைசொல்தரு

இ-ம்-பந்துவராளி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

அரிஅரிஅரிஅரிஅரிஅரிசரணம்... ... *
அச்சுதானந்தாமிருவச்சிதாசரணம்... *

அநுபல்லவி.

சரசிஜதளநயனஅரிதனேசரணம் ... *
தருணம்வடிவான்முகக்கருணையாசரணம்... *

சரணங்கள்.

மாதவாகேசவாஆதவாசரணம்... ... *
மாதவளாமணிமார்பாநிதனேசரணம்.. *
சேதமுருந்தவைகுந்தனேசரணம்... ... *
தேவியம்புயவல்லிமோகனேசரணம்... *
கங்கைஜனித்தியபாதாசெங்கணசரணம்... *
கருடவாகனருடபுருடனேசரணம் ... *
சங்குசக்ரகமலசெங்கையாசரணம்... ... *
சதுர்முகனையீன்றருள்சதுரனேசரணம்... *
கொண்டல்மணிவண்ணனேகண்ணனேசரணம்
கோவிந்தாகோவிந்தாகோவிந்தாசரணம் ... *
அண்டரண்டங்களையுண்டவாசரணம்... *
அருள்செய்யாதிவராகாஅன்னலேசரணம் ...*

சில்லிகைசொல்-சிங்காரபத்தியம்.

அச்சுதானந்தனே அரியமாமறைமுடிவில் ...*
அமலனே நிமலனேகருணைமேவும் ... *
பச்சைமாமுகில்மேனி பரமனேவுலகுண்ட...*
பவழவாய்மார்பனேபதுமமாத ... *

செச்சைசூர்மார்பனே தெண்டகாசமமுனீர ※
நீரவுந்தண்டனே கருடனேறும் ... ※
சச்சுதானந்தனே சாலோகசாமீப ※
சாருபசாயுச்சிய பதவியான ... ※
இச்சைகூர்வேத வேதாந்தரூபா ... ※
எழில்மேவுந்திருமுட்ட நகரிவாசா ※
மச்சாவதாரகூர் மாவதாரா ... ※
வராகரூபகமூர்த்திசரணம்சரணம் ※

சுவாமிசொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

ஆதிவராகசுவாமியவர்முக ... ... ※
மகிழ்ந்தபார்த்துச் ... ... ※
சீதளமுகவிலாசச் ... ... ...※
சில்லிகைமாதேயனாய் ... ... ※
நீதயவுடனேசெய்த ... ... ※
நெடுந்தவமகிழ்ந்தோமிப்பால் ... ※
ஆதலாலுனக்குவேண்டும் ... ... ※
வரமெலாமருளுவோமே ... ... ※

வசனம்.

வாருங்பெண்ணேசில்லிகையேநீசெய்யாநின்ற அரிதானதவ
த்தினாலுமெனக்கு அகநிசந்தோஷமாச்சு ஆகையாலுனக்குவெ
ண்வரங்வேண்டியபதை அதனையிப்போது கேழ்ப்பாயின் தருவேன்
சொம்பெண்ணுசில்லிகையே,

சில்லிகைசொல்-விருத்தம்,

இ-ம்-தோடி,

உன்னடித்தொழமல்வாழ்ந்தா குலகத்திலொருவருண்டோ ... ※
என்னிடக்கணவன்மாய்ந்தா னினியவருளைதப்பாசுந் ........ ※
தன்னையேயடையவேண்டித் தரணியுள்ளளவும்நாயேன் ........ ※
மன்னியப்பெயருமோங்க வரந்தரவேண்டிவேனே ... ...... ※



வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமிசர்வலோகதயாபரா சகலபுவ
னேஸ்வராவேதவேதாந்தரூபா ஸ்ரீமன்னாராயணதேவரீருடைய
பாதபத்மங்களைப்பணியாமல்யென்னுடைய புருஷன்மடிந்தது
ரகத்துக்குயேதுவாகினர் ஆகையால் யெனதுபுருஷன்தமதுதிரு
வடியைப்பெரவும்என்னுடையதிருநாமமும் அழியாமலிருக்கும்
படியாகவரந்தரவேணுமையாசுவாமி,

சுவாமிசொல்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

நற்புகழ்மானேகேளாய் நமதுஊர்திருமுட்டந்தான் ※
செப்புமுந்தனக்குன்பேரால்சில்லிகாவனமென்றேத
தப்புமுன்கணவன்பேரால்தண்டகாவனமென்றேத ※
ஒப்பிலாவரங்கள்தந்தேன் ஊழியுள்ளளவுந்தானே ...※

வசனம்.

கேளும்பெண்ணே சில்லிகாநம்முடைய ஊர்திருமுட்டமெ
ன்னும்நகரம் அதற்குமுன்னுடையபெயராலே சில்லிகாவனமெ
ன்றும் பெயர்பொருந்தியிருக்கவும் உன்னுடையபுருஷன்தெண்
டகாசூரனுடையபெயராலே தண்டகாவனமென்றும்பெயர்பொரு
ந்தியிருக்கவும் யிப்படிஊழியுள்ளகாலம்வரைக்குமிந்தவரங்கொ
டுத்தேன்பெண்ணேசில்லிகா,

சுவாமிசொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்,

பின்னையுங்கேளாய்மானே பிரகுதம்பதமேதந்தோம்... ... ※
உன்னிடக்கணவனுக்கு உகந்தபதமேதந்தோம்... ... ...※
இன்னமுஞ்சிலதுகால மிருந்துயிவ்வுலகில்வாழ்ந்து...... ...※
என்னிடப்பதத்தில்வந்து யிருந்துநீமகிழ்ந்திடாயே...... ...※

வசனம்

அப்படியேயுனக்குநம்முடையப்பதத்தைதந்தோம் உன்
னுடையபுருஷனுக்குந்நம்முடையபதத்தைக்கொடுத்தோமயிப்

படும்நீயின்னஞ்சிலகாலமிருந்து யிவ்வுலகத்தில் பூசைபுரிந்து யின்புறம்முடையபதவிக்குவந்து சேருக்கென்னே சில்லிகா

பொதுவிருத்தம்

இ-ம்-கல்யாணி

சுரர்கள்பூமழைகள்பெய்யத்துத்துயிராதமோங்க ※
அரிஅரியென்றேயாரும்அன்புடன்வணங்கிவாழ்த்த ※
மருமலர்துளபமாலைவராகருபகுரப்பால்... ※
விரவுடன்சில்லிகைக்குவிளம்பிவைகுந்தஞ்சென்றார் ※

வசனம்

தேவர்களெல்லாரும்புஷ்பமாரிபொழியவும் - அந்தரமான வர்துத்துதியறைபவும்- அரிஅரியென்றயாவரும்வணங்கிப்போற் றவும்வராகசுவாமியானவர்வைகுந்தத்துக்கு யெழுந்தருளினார்

பொதுவிருத்தம்-இ-ம்-நாட்டை

மாதுசில்லிகையாள்மாயன்... ... ... ※
மகிழ்ந்தருள்வரங்கள்பெற்று... ... ※
போதயவ்விடம்விட்டேத்தப்... ... ※
புரமதுவந்துசேர்ந்தாள்... ... ... ※
சீதரந்தன்னைக்கொல்ல ... ... ... ※
சினங்கொண்டயிரணியனென்னும் ... ※
நாதனுந்தவங்கள்செய்ய... ... ... ※
நடத்திடும்வகைச்சொல்வேனே... ... ※

வசனம்.

இவ்விதமாகசில்லிகையானவள்வரங்களைப் பெற்றுக்கொண் டுதன்னுடையவீடுபோய்ச்சேர்ந்தாள் பிறகுயிரணியன் ஸ்ரீமன்னு ராயணரைகொல்லவேண்டியதாய்தபங்கள்செய்யும்படியான சரி த்திரத்தைச்சொல்லுகின்றேன்.

இரணியன்சொல்

விருத்தம்-இ-ம்-பைரவி

மாத்திரைக்கோலுங்கொண்டு... ...
வளர்புலித்தோலும்பூண்டு... ...



வெத்திரத்தன்மேற்கொண்டு... ... ... ※
மெய்யெலாம்நீறுபூசி... ... ... ※
தோத்திரம்பலவுங்கூறி... ... ... ※
தொடக்கருத்தவர்கள்போல... ... ... ※
சுத்திநிந்தபமியாகி... ... ... ... ※
யிரணியன்வருகின்றனே... ... ... ※

தரு-இ-ம்-கேதாரகௌளம்-தாளம் ஆதி

கண்ணிகள்

பொன்முடிதன்னைநீக்கி-பவழம்போலும் ... ※
புரிமயிர்சடைவிக்கி... ... ... ※
மின்மணிப்பூணைபோக்கி-வுடலெங்கும் ... ※
வெண்ணீறுவடிவாக்கி ... ... ... ※
மின்னவாள்பிடித்து-கரந்தனில் ... ※
செபமாலையதுதொடுத்து... ... ※
இலங்குச்சேலைதவித்து யிடையிதில்... ※
எழில்மரவுரிவிரித்து... ... ... ※
தங்கத்தண்டைகள்விட்டு-பாதத்திதில் ... ※
தங்கும்பாதுகைமாட்டி ... ... ※
துங்கப்பொருள்கள்கூட்டி-கைதனில் ※
துலங்குந்தண்டதுநீட்டி ... ... ※
அருந்தவத்தோர்களெல்லாம்-அன்பாகவே... ※
ஆசீர்வாதஞ்சொல்லவே ... ... ※
பெருந்தக்குதிசெல்லயிரணியன் ... ※
பிறப்பட்டானேமென்ன ... ... ※

பொது-விருத்தம்-இ-ம்-வருட்டி.

மலைகளுங்காடுந்தவனங்களும் பலவுந்தாண்டி... ※
அலைகடல்வுப்புநீருமமைத்திடுகருப்பஞ்சாரும்

நிலைபெருதயினமெய்யும் நீர்த்திரைக்கடலனைத்தும் *
மிலமுடன்காலாலதானடி பெரியமந்திரஞ்சேர்ந்தானே

இரணியன்சொல்-ருரு-இ-ம்.

கேதாரகௌளம்-தாளம்-ஆதி

கண்ணிகள்

மந்தரகிரியனுதி-சாரலில் ... ... *
மாதவஞ்செய்தனுதி ... ... *
கொந்தளிர்மலர்சோலை-நீழலில் ... *
குலவித்திரியுங்காலை ... ... ... *
குயில்களுங்கிள்ளைகளும்-அன்னக் ... *
குயில்மடப்பிள்ளைகளும் ... ... *
மயில்களுமான்களும்-அங்கங்கே ... *
மருவியக்கூளிகளும் ... ... ... *
கண்டுகண்களிகூர்ந்து-தவஞ்செய ... *
கருதினவுநேர்ந்து ... ... ... *
தண்டினைக்கையாடி-மனமது ... *
சந்தவக்குணம்நாடி ... ... *
பஞ்சாக்கினிமூட்டி-நடுவினில் ... *
பதுமாசனங்கூட்டி ... ... ... *
தெஞ்சாப்பொருளெண்ணி-வடக்கே *
நேர்முகமாய்நண்ணி ... ... *
ஐந்தெழும்புலன்குறிக்கி-மனத்தை *
அறிவிநிலையிருக்கி ... ... *
சுந்தரயிடக்காலை-அண்டத்தில் ... *
தொடுத்துவலதுகாலை ... ... *
நடைமேலேயின்றி-மூலத்துள் ... *
அலங்குஞ்சுழிமுனையுன்னி ... *
அடவுடனேவாசி-யெழுப்பி ... *
மதிமேலமைய்விசி ... ... *
மூக்கினைநடந்தோடி-யெங்கு ... *



முழுமதிதனைநாடி ... ... *
போக்கநிலையுழலும்-வாசியும் ... *
பூரணமாயெழினும் ... ... *
கும்பகரேசகத்தால்-பூரணம் ... *
கொண்டுதவாசகத்தால் ... ... *
தம்பனமதுவாக-வுச்சித்த ... *
தாமரைதனிற்போக ... ... *
முச்சுடரதுவாகிப்-பிரணவ ... *
மூலமுமதுவாகிச் ... ... ... *
சந்திரநிலையாகி மேலும் ... ... *
சற்குணமதுவாகி ... ... ... *
நினைப்புமறப்புமற்று-பரமப்பொருள் *
நிலையதுவேசிறந்து ... ... *

இரணியன்சொல்-பரணி.

இறவாப்பகலாய் நிழ்மேலாய் ... ... *
எங்குந்தானாய் நிறைந்தருளும் ... ... *
பரமேவுந்தன்பதம்போற்றி ... ... *
பணிந்தேனென்முன் வருகுவையே ... *
பிறவாயனுவாயுயிர்க்குயிராய் ... ... *
பேதாவேதுதமென்னும் ... ... *
மறவாநல்லோருளத்தில்நிதம் ... *
வாழ்வேயென்முன்வருகுவையே ... ... *
வேதமுடிவேநடுவொளியே ... ... *
விண்ணோர்க்கினியகண்மணியே ... ... *
போதம்நிறைந்தசின்மயத்தின் ... ... *
பொருளேயென்முன்வருகுவையே ... *
ஆதாரமுமாயதிவுருவாய்ச்சத்து ... ... *
மசைபாப்பழம்பொருளே ... ... *
நாதாவரிதாய்த்தவம்புரிந்தேன் ... ... *
தயைசெய்தென்முன்வருகுவையே ... *
பூவாமணமாய்க்கனிக்கினிதாய் ... ... *

பொருளே பொருளின் கலையான ... ❊
தேவாவுன்னைக் குறித்தருளவே ... ... ❊
செய்வேனென் முன்வருகுருவையே ... ❊
காவாயென்னை யுகந்தெனவே ... ... ❊
கடிதாய்க்கொடியதவம்புரிந்தேன் ... ❊
நாவார்ந்திடுந்தேனமிர்தமென்னும் ... ... ❊
நாதாயென்முன்வருகுருவையே ... ... ❊

பிரமன் சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி.

பலக்கொடுவினையே செய்யப்பரிந்திடுமிரணியன் செய் ... ❊
தலக்கண இலகமெல்லாந்தழிக்கவேயிமையோர்க்குகந் ... ❊
துலக்கொடுபொராமலாடித்துரிதமாய்ப்பிரமற்கோர ❊
தவட்புதுமலர்மேல்மேவும்நான்முகன்வருகின்றாரே ... ❊

தரு-இ-ம்-சௌராஷ்டகம்-தாளம் அடசாப்பு

கண்ணிகள்.

பிரமதேவரும்வந்தாரே-செங்கமலமீதனில் ... ... ❊
பிரமதேவரும்வந்தாரே ... ... ... ... ... ❊
பிரமதேவரும்வந்தார்பெருகுந்தற்பரமான ... ... ❊
தர்மநாரணனுமித்தடத்தில்வருமெய்ஞ்ஞான ... ... (பிரம)
சனகாதியர்வேதம்பாடிச்சதுர்முகனெனக்கொண்டாடி ... ... ❊
தனிமுகம்நாலுடன்கூடித்தரணியைப்படைக்கநாடி ..... (பிரம)
அய்யநுஜங்களெட்டுடனலக்கும்ஜயம்பாட்டும் ... ... ❊
கையிர்பவத்திரந்தொட்டுங்கனகப்பூணணிவிட்டும் ... ...(பிரம)
அம்புருநாரதர்பாடத்தோகையர்நடனமாட ... ... ❊
இப்புருடர்கதிகூடக்கிளரும்வாணோர்மலர்போட ... ...(பிரம)

இரணியன் சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

அண்டங்களெல்லாந்தானே ... ... ❊
யமைத்திடும்பொருளேபோற்றி ... ... ❊



புண்டரீகத்துள்வாழும் ... ... ... ❊
புராதனவடிவேபோற்றி ... ... ❊
குண்டிகைத்தரித்தாய்போற்றி ... ... ❊
குணக்கடலானேபோற்றி ... ... ... ❊
பண்டைநான்முகனேபோற்றிப் ... ❊
பராபராபோற்றிபோற்றி ... ... ❊

இரணியன் சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி.

அய்யனேபோற்றிபோற்றி ... ... ❊
அயனனேபோற்றிபோற்றி ... ... ❊
செய்யனேபோற்றிபோற்றி .. ... ❊
தேவர்கள்தேவேபோற்றி ... ... ... ❊
கையிற்குண்டிகையாய்போற்றிச் ... ... ❊
கனகமேனியனேபோற்றி ... ... ❊
தையலாள்பனுவலாட்டித் ... ... ... ❊
தனிமணம்புரிந்தாய்போற்றி ... ... ❊

பிரமன் சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

திண்டிறலிரணியவுனைன் ... ... ❊
செழுந்தபம்போனுமெத்த ... ... ❊
மண்டலத்திந்நு மெத்தன் ... ... ❊
வயத்திலுங்கண்டதில்லை ... ... ❊
கொண்டோருனக்குவேண்டும் ... ... ❊
குறைகளையின்னதென்று ... ... ❊
கண்டிடவுரைத்தாயானால் ... ... ❊
கனவரந்தருகுவேனே ... ... ❊

வசனம்.

வாருமப்பா யிரணியாவுன்னைப்போல் தவஞ்செய்கின்றதரிகளோராய் யெந்தவுலகத்திலுங் கண்டதில்லையிப்போது வுனக்குயென்னவரம்வேண்டும் - அதையெனக்குத்தெரியச்சொல்லுமப்பகுதிறேனப்பாயிரணியா :

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-பந்தவராளி.

மழுவையில்முதலாயுள்ள... ... *
மைந்தனைப்படையினாலும் .. ... *
அழிவுசெய்புலிகளாலும் ... ... *
யாளிபூதத்தினாலும்... ... ... *
இழிவுசெய்யரவத்தாலும் ... ... *
யெனக்கொருநாளும்நீயே ... ... *
வழுவலிமரணமில்லா... ... ... *
வரமெனக்கருளுவீரே... ... ... *

வசனம்.

வாருமையா சுவாமி பிரமதேவரே மழு அயில் குலிசம்முதலான ஆயுதங்களினாலும் ஆளிப்பூதப்பசாசுசர்ப்பமுதலியவைகளினாலும்மரணமில்லாம லிருக்க யெனக்குவரந்தரவேணுமையா சுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

தேவர்களெவர்களாலும்... ... *
இருடிமிம்பகைவராலும்... ... *
பாவைமாரெவர்களாலும்... ... *
பலபலவித்தினாலும்... ... *
ஓவிலாமண்ணில்விண்ணில் ... ... *
வுள்ளிலும்புறம்பின்மேலும்... ... *
சாவிலாதெனக்குநல்ல... ... ... *
சரீரவரந்தருவீரே ... ... *

வசனம்.

வாருமையா சுவாமி பிரமதேவரேயிராத்திரியிலும்பகலிலும்விட்டிலும்கல்லிலும்மலையிலும் அக்கினியிலும் சலத்திலும்வாயுவிலும்பஞ்சபூதங்களாலும்மைத்தவெளிகளிலும்சாவில்லாமல்யெனக்குவரந்தரவேணுமையாசுவாமி.



இரணியன்சொல்-விருத்தம்-

இ-ம்-மத்தியமாவதி.

அல்லிலின்பகலின்மேலும் ... ... *
ஆனதோர்விடத்தினாலும் ... ... *
கல்லிலுமலையின்மேலும் ... ... *
கடுங்கனல்நீரின்மேலும் ... ... *
புல்லியவாயுவாலும் ... ... *
பூதங்களைவயினாலும் ... ... *
சொல்லுதலில்லாமல்தான் ... ... *
கொடுத்தருள்செய்குவீரோ ... *

வசனம்.

வாருமையாசுவாமி பிரமதேவரேதேவர்களாலும்பகைவராலும் ஸ்ரீஜனங்களாலும்மண்ணிலும்விண்ணிலும்வுள்ளிலும்புறம்பிலும்யாவத்திலும்நான்யிரந்துப்போகாமலிருக்க யெனக்குவரந்தரவேணுமையாசுவாமி.

பிரம்மாசொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

தந்தனம்யிரணியாகேள் சதிருடனினைத்துக்கேட்ட *
மந்திரவரங்களெல்லா மனமகிழ்ந்தளித்தோமிப்பால்
சிந்தனையன்றிமூன்றுஜெகமொருக்குடையிலாள்வாய்
உந்தன்மெய்தசரம்தன்னி லுகந்துவாழ்ந்திருந்திடாயே.

வசனம்.

வாருமப்பாயிரணியா நீகேட்டப்பிரகாரம் வரமெல்லாந்தந்தோம் யினிமேலுன்னுடையப்பட்டணம்போய்சேர்ந்து சுகமாகவாழ்ந்திருக்கக்கடவாயிரணியமகாராஜனே.

பொருந்-விருத்தம்-இ ம்-சங்கராபரணம்.

பிரமனிவ்வகையதாகப்பெரியதோர்வரங்களீந்து...*
உரியதன்னுலகம்போனான்வும்பர்களெவருமஞ்ச...*
இரணியனெழுந்துமெங்கேமேவிருமாப்புமிகவுண்டாகி
வருகுமுன்னமார்சேரிவனையுடன்வுரைசெய்வேனே.

கட்டியன்சொல்-விருத்தம்

எச்சரிக்கை.

அரணிரணமணிமுடியசையவிருபுசமும் ...*
அமரர்ஜெயஜெயவென்னவே ... ... *
அருகிலடமொழுமுநிவரினிதுபெறவரிசையுடன் *
அரசேஅரசேயென்னவே ... ... *
சரணமதிலடையர்கள்முடியிடறிவருமவீரர் *
தம்தெதிர்சலாமென்னவே ... ... *
தணதணனமணிமுரசமதிரொளிகள்இடிஇடென *
தருபதிகளெதிர்செல்லவே ... ... *
தொரணமெனகனகமருள்புரிதருவிதிழவில்வரு *
தூயனெனசிலர்சொல்லவே ... ... *
தூடிபமாதகஜத்துரகதளமிகுதியடர ... *
துவள்கொடிகள்தளதளெனவே ... ... *
மரணமிடவலியவர்கள்சிறயிடரவரைபொடிசெய ...*
வச்ரவாள்பளபளெனவே ... ... *
மதிபரவிதுதிபுரியனிதியருள்செய்யமார்பதி ...*
வருகிறார்யெச்சரிக்கை ... ... ... *

இந்திரன்-வருகிற-விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

முத்துமாலிகையணிந்து வொளிர்பெறவச்ரமேத்தி*
மத்தளவீணைவாத்திய மங்களசங்கீதம்பாட ...*



உத்தமர்வணங்கிப்போற்ற வொருமிரத்தேவர்வாழ்த்த
சித்திரத்தருவிதிழல் தேவேந்திரன்வருகின்றானே ...*

தரு-இ-ம்-கல்யாணி-தாளம்திரிபுடை.

பல்லவி.

ராஜராஜன்தேவேந்திர ... ... *
ராஜன்வந்தானே ... ... ... *

சரணங்கள்.

ஆசையாகவேயமரர்போற்றிட ... ... *
அருளைநடமிடமுனிவர்வாழ்த்திட ... ... *
நேசமானயிந்திராணியருகில் ... ... *
நின்றுபணிந்திடக்கண்டோர்வணங்கிட (ராஜராஜ)

முப்பத்துமுக்கோடிதேவர்கள் ... ... *
முன்னும்பின்னுமெச்சரிக்கைப்பேசவே ... *
அற்புதமுடனரம்பைமாதர்கள் ... ... *
அருகில்நின்றுசாமரைகள்வீசவே ... (ராஜராஜ)

நவமணிமகுடமுடிஅலங்கவே ... ... *
நாகரீகமுத்துமாலையிலங்கவே ... ... *
பவழமணிரத்னபணிதுலங்கவே ... ... *
பருத்ததோள்வளைபுயமிலங்கவே ... (ராஜராஜ)
சித்தர்கின்னரர்கீதம்பாடவே ... ... *
சிறந்தகற்பகமலர்கள்போடவே ... ...*
உத்தமமந்திரிமார்கள்கூடவே ... ... ...*
ஒன்னார்களெங்கெயென்றுதேடவே ...(ராஜராஜ)

இந்திரன்சொல்-விருத்தம்.

இ-ம்-தேசிகதோடி.

மகிமைபெருமைமதிருக்கொலுவில்வந்த ... *
மாதவரோமுனிவர்களேவமுத்தக்கேன்மோ *

இலகியசித்தர்வித்தியாதரரேயாரும் ... ※
இன்பமுடனுங்களுக்குயிருக்கையீந்தோம் ... ※
தகமைபெறவனைவர்களும்வந்திட்டாரோ ... ※
சாத்திரியசபைக்கினியார்வருகவேணும் ... ※
உகமையுடனமதலகின்அதிசயத்தை ※
உன்னபடிநாமறியவுரைசெய்வீரே ... ※

வசனம்.

கேளுங்கள் தேவர் முனிவர்களே கருடகாந்தருவர்சித்தர்வித்தியாதரர்களேகின்னரர்கிம்புருடர்களே வுங்களுக்குயிருக்கச்சிலைகொடுத்தோம் நம்முடைய சபைக்கு அனைவர்களும் வந்திட்டார்களாயின்னம்யாரார்வரவேண்டியதாம் நம்முடைய வுலகத்தின்அதிசயத்தையுள்ளபடியாகநாமறியசொல்ல வேண்டும் தேவர்முனிவர்களே.

தேவர்கள்சொல்விருத்தம்

இ-ம்-ஆசாவேரி

செய்யபஞ்சகற்பகத்தினிழலில்வாழுந் ... ※
சிரவேந்தேயுந்தனிமுத்திருத்தாள்போற்றி ... ※
ஐயமில்லாதிவ்வுலகத்துள்ளதேவர் ... ... ※
அருமுனிவர்சகலரும்வந்தனுகிறார்கள் ... ※
வையதனிற்புவியெடுத்துயிரணியாக்கன் ... ※
கடலிலொளித்தெங்களையுங்கலங்கச்செய்தான் ... ※
பையரவின்றுயன்றவனுலரக்கன்பட்டான் ... ※
பாரிலிந்தவதிசையத்தைப்பகர்ந்திட்டோமே ※

வசனம்.

கேளும்பொன்னுலகத்தரசே யெப்போதும் நம்முடைய தெய்வசபைக்குவருகின்றவருள் முப்பத்துமுக்கோடிதேவர்களும்-நாற்பத்தெண்ணாயிரங்கோடி முநிவர்களும் குறை வில்லாமல் வந்திருக்கிறார்கள்-மேலும்யிரணியாக்கனென்பவன்யிந்தபூமியைப்பாயாகச்சுருட்டிகடலில்வொளித்துவைத்திருந் தடியவர்களை



மிகவுமனக்கலங்கச்செய்தான்-பிறகு- ஸ்ரீமன்நாராயணரானவர்வராகவவதாரங்கொண்டு அந்தயிரணியாக்கனைக்கொன்றாரிது அதிசயமையாகுவாமி... இவ்வுலகத்தில்நடந்த அதிசயமையாகுவாமி.

முனிவர்சொல்விருத்தம்

இ-ம்-சௌராஷ்டிகம்.

திட்டமாய்காமதேனுத் ... ... ※
தேவர்களுடனென்றும் ... ... ※
சட்டமாய்வாழுகின்ற ... ... ※
தயாபரசுபோற்றிபோற்றி ... ... ※
கொட்டமேசெய்துவந்த ... ... ※
கொடியவன்மடித்தபின்பு ... ... ... ※
இட்டமாய்தவமேசெய்ய ... ... ※
யிரணியனேகினனே ... ... ※

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராஜனேகொடியதுஷ்டனான அந்தயிரணியாக்கனியிறந்தபிற்பாடு-யிரணியன்றவஞ்செய்யப்போனான்மகாராஜனே,

இந்திரன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி.

நகினுரென்றுரைத்த ... ... ... ※
யிமையவர்முனிவர்கேண்மோ ... ... ※
ஆகியவும்மையெல்லா ... ... ... ※
மகதிகள்செயுமரக்கன் ... ... ... ※
நூகியாத்தேவிதன்னை ... ... ... ... ※
யொருநொடிதனிற்பிடித்து ... ... ※
சகருஞ்சிறையில்வைத்து ... ... ※
யெந்தனுக்குரைசெய்வீரே ... ... ※

வசனம்.

ஆ ஆ ஆ ஆ வாருங்கள் தேவர்களே முனிவர்களே யிங்கள்அவஸ்தைப்படுத்திவைத்தகொடிய துஷ்டனாகிய யிரணியன்தே

தனைக்கிந்திரிடித்து வந்தருந்திறையில்லை வந்து வு
மெனக்குத் தெரியச் சொல்லுங்கள் தேவர் முனிவர்

தேவர்கள்சொல்விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்.

அரசருமெங்களுடனென்ன... ... *
ஆண்டவாமெங்கள்கோவே... ... *
இரவிபகற்றெரிகில்லை... ... ... *
மிட்டகைம்பூசைத்தவந்தாய்... ... *
புரைபரிந்திறையில்லைத்தாய்... ... *
பொட்டதிலருக்காயிதாக்கள்... ... *
வரைபுயமன்னர்மன்று... ... *
வந்தமக்குரைசெய்கோமே... ... *

வசனம்.

கேளும் பொன்னாயகாதி பதியே நாங்கள் சொல்லியப படியேசெய்தவந்துமக்குவுரைக்கின்றோம்மகாராஜனே,

முனிவர்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

பாவியாமிரணியனென்... ... ... *
பாரகுள்ளதேவியேளாய்... ... *
கூவிபெயெங்கள்மன்னன்... ... *
கொடுமையாயுனைப்பிடித்து... ... *
ஆவியோடருக்கவல்லே... ... *
பருந்திறைவைக்கச்சொன்னான்... ... *
நாவிலுநுரைக்குமூங்கா... ... *
நடந்ததீவருளுவாயே... ... ... *

வசனம்.

...ரணியன்தேவியே - மியேயாது பெங்கள் ஆண்ட
...அன்னுன்னைப் பிடித்து அருந்திறை



ளையங்கபெங்களுக்குக்கிலவுமொதித்தா ஆணைகால்நீமருமொழியே
சாழல்பெங்களுடனெடுத்துவாரும்பெண்ணே

லீலாவதிசொல்

தொச்சகம்.

மன்னவரு மெல்லணைவள்... ... ... *
மாதவத்துக்கேகினியள்... ... ... *
ஏக்கச்சிறையில்லைவக்க... ... ... *
யென்னபாவஞ்செய்தேனையோ... ... *
கன்னல்மொழிபுனைமப்பாகா... ... *
கல்லினைக்கோர்பாகமிந்த... ... *
அன்னியாய்வாழ்ந்தேனே... ... *
வன்பாதம்நம்பினேனே... ... *

வசனம்.

அரசாசெல்வியாமென்னுருப்பாவரும் அறியெல்லன்பாதமே கதியென்றுநம்பியிருக்கின்றேன்பாவிச்சமேதாமெல்லையிலே ஊழில்பாதகர்க்கவேணுமென்காலமானவாசா:

லீலாவதிபுலம்பல்-தரு-இ-ம்-

புன்னாகவராளி-தாளம்-அடதாளம்

கண்ணிகள்.

என்னசெய்வேனென்றுசெய்வேனுனே.... பூமனே *
என்றவியிலெழுதிவிட்ட பெழுத்துக்கைமெய்தானோ *
மன்னவனுமொவோப்பிரிந்துபோர்சே ... ... யிந்த *
வையகத்தோர்கூடைசெய்திடவந்ததென்னநீசே *
உலகாலுமிரணியனுக்குத்தேவி ... பென்று *
ஓங்காயிசிறையிருக்கமெய்தந்தேன்பாவி *
வகைமிகுபகண்ணுமெரியேனே ... மன்னன் *
காவல்வைக்கவேயினைத்திரைகருத்தாமியேனே ... *
எனக்காளும்பெருக்குறிதன்னைசெய்யேன்... யிந்த *

கடுஞ்சிறையிலிருந்தயெந்தேகாலமையோவுய்வேன்
மெய்யாகமன்னன்றனக்குச்செப்ப ... அவர் *
மேனியைப்போதெனக்குச்சிறையினிற்றடுத்தென்னைவைவேயா *
பூதலத்திற்கொடுமைகள்செய்தேனோ... ...சொந்த *
புதியவரைப்பிடித்தப்புமயவர்தனைவைதேனோ ... *
வேதன்விதிதன்னையறியேனே ... பிந்த *
வினைவருமெனதெனவறிந்தைந்தனிதுன்றுரியேனே *
மிச்சைக்கிவந்தோரைப்புழித்தேனோ ...என்ன *
பின்முகன்செய்துபெரியவர்தவத்தைப்பழித்தேனோ *
வைத்தவர்கள்வுடைமையெடுத்தேனோ ஓரிக் *
வழக்கோரம்பேசிவெயருருடமைக்கெடுத்தேனோ *
ஒருவர்செய்ந்நன்றிமறந்தேனோ ... கன்றுக் *
கொடாமற்காலினற்றப்புரமைக்கரந்தேனோ .. *
அருமைகுருவைந்திடமெனக்கிப்போதே- ...மன்னர் *
அருஞ்சிறையில்பிடித்துவைப்பவோர்க்குசெய்தேன்வேறை

தேவர்முனிவர்சொல்

விருத்தம்-இ-ம்-ஆனாபோரி

அன்னைவேலெமக்குத்தேவர் ... ... *
அரிவித்தப்படியேநாங்கள் ... ... *
என்னமாய்ச்செல்லுமுந்த .. ... ... *
எந்திரைதனைப்பிடித்து ... ... ... *
குண்ணிடத்தவ்விவந்து ... ... ... *
கொடுஞ்சிறைதனிலடைத்தோம் ... ... *
தன்னையுமாலமார்பா ... ... ... *
நின்றுனிசரணமையா ... ... ... *

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராசனேநாங்கள் சொல்லியப்படிக் இரணியன்றேவியைப்பிடித்து கொடுஞ்சிறையில் அடைத்துவிட் டுத்தோமையாகவாமி.



பொது-விருத்தம்

இ-ம்- பூரிகல்யாணி.

அற்பமுங்குற்றமில்லாதருவையாள்தன்னையிந்திரன் *
ருப்பிலாச்சிறையில்வைத்து வபாதிசெய்திட்டதினைத்தான்
வப்பொழுதறையறிந்த வடிவுள்ளநாரதன்றான்.....*
மெப்புடன்புத்திசொல்ல மேவியேவருகின்றாரே!..*

நாரதர்வருகிற

தரு-இ-ம்புன்னாகவராளி-தான-ஆதி.

நாரதமாமுனிவர்தானிதோவந்தார்- ... ... மஹா *
நாரதமாமுனிவர்தானிதோவந்தார் ... .......... ... *
கொட்டிமத்தளம்வயருதுவிக்கிக்கொண்டு கையில் *
குவளைம்வீணையில்ராகம்பவிக்கிக்கொண்டு.. .. .. *
தொட்டுவெண்ணீறுவுடல்துலக்கிக்கொண்டு- நல்ல *
ஐயநாரதமுனிவன்றானிதோவந்தார் ... ... *
கையினிற்கமண்டலமும்பெடுத்துக்கொண்டு வெழுந் *
கனகமணிக்குடையும்பிடித்துக்கொண்டு ... ...*
ஐயநாரணன்புகழைப்பாடிக்கொண்டு நாலு *
கருதிநாரதமுனிவன்றானிதோவந்தார் ... ... *

நாரதர்சொல்-விருத்தம்

இ-ம்-சக்ராபரணம்.

மன்னவாயிந்திரபூபா ... ... ... *
மங்கையைக்கொண்டுவந்து ... ... *
என்னமாய்ச்சிறையில்வைக்க ... ... *
வெண்ணிநீரவன்வயத்திம் ... ... *
தன்னிகரில்லாப்பாவலன் ... ... *
தயாளாட்சகவிருக்க ... ... *

மிசா

அன்னவள்தன்னையிப்போ ... ... ※
தனுப்புவாய்தரிக்குத்தானே ... ... ※

வசனம்.

கேளும்தேவேந்திரமகாராஜனே அந்தபதிவிரதையானலீலாவதியம்மனைக்கொண்டுவந்து யேன்சிறையில்வைத்தீர் அந்தம்மாளுடைய வயத்தில்நல்லகுமாரன்பிறக்கிறான் அவனாலுங்கள்குலம் அட்சயமாகும் ஆகையால்அந்தம்மாளையனுப்பிவிடும் தேவேந்திர பூபதியே.

இந்திரன்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

நித்தனேபோற்றிமிக்கநிர்மலச்சுரூபாபோற்றி ... ※
முத்தனேபோற்றிதூயமுனிவனேபோற்றிபோற்றி ※
சித்தமேமகிழ்ந்துதேவர்செப்பினப்படியேயுங்கள் ※
உத்தமிதன்னையிப்போதுவுண்மையாயனுப்புவோமே ※

வசனம்.

நித்தியநிரந்தர சுருபமாய் அவகத்தையெல்லாம் வலஞ்செய்து கீர்த்திக்கொண்ட நாரதமுனிவரே சரணம்சரணம்தேவரீர் சித்தங்கொண்டுசொன்னப்படிக்கி அந்தலீலாவதியம்மையையிப்போ தேசிரவிடுத்து அனுப்பிவைக்கிறோமையா சுவாமி.

நாரதர்சொல்விருத்தம்

இ-ம்-பரசு.

சுற்பினுக்கரசியான காவலன்றேவியாளே ... ※
ஒப்பொருவருமில்லாத வுத்தமிபெதிவதாயே ... ※
மைப்பொருவிழியேயுத்தன் மாளிகை தன்னைவிட்டு ※
செப்பமாயிவட்டம்வந்த சேதியையுரைசெய்வாயே ※

வசனம்.

கேளுமம்மா லீலாவதியே யிப்போது நீயுன்னுடைய அரமனையைவிட்டிதித்துயிவட்டம்வந்திருக்குங்காரியமென்ன அதையெனக்குத்தெரியச் சொல்லுமம்மா லீலாவதி.



லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-புன்னாகி.

மிக்கனவம்புலனைமாற்றி விருளாற்றவத்தைச்சார்ந்த ※
தக்கநாரதனேயுந்தவிருனிணை சரணமையா ... ※
திக்கெலாம்வென்றயித்திரன்சித்தமோடென்னைப்பிடித்து
இக்கனன்றுசிறையில்வைத்தானியவுளென்னசெய்வேன்

வசனம்.

பொறிபுலன் பூதமெனும்பகைமாற்றி தவநிலைக்குடாய்விளங்கும்படியான நாரதமுனிவரே கேளும் அரமனையிலிருந்த அடியாளையேகோபத்தினால் தேவேந்திரமகாராஜன் பிடித்துக்கொண்டுவந்து சிறையில்வைத்தானையா சுவாமிநாரதபகவானே.

நாரதர்சொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

ஜெகமேலரம்நிக்கவாழும் ... ... ... ※
தேன்மொழியேகேளிந்திரன் ... ... ※
வகைதெரியாமல்செய்தான் ... ... ※
வரிமமென்றெண்ணவேண்டாள் ... ※
மகிமையாயுத்தனுக்கு ... ... ... ※
மைத்துனமார்களென்று ... ... ※
நகைபுரிந்தவர்கள்செய்தார் ... ... ※
நாயகிபொறுத்திடாயே ... ... ... ※

வசனம்.

உலகத்தில்பதிவிரதைகளுக்குத்தாயாகவிளங்கும் லீலாவதியம்மனே கேளும் தேவேந்திரமகாராஜன் குற்றமாகச்செய்ததல்லமைத்துனனென்று முறைமைக்கொண்டாடினார் அதைவுன்மனதில்கோபங்கொள்ளவேண்டாமம்மா லீலாவதி.

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்,

இருள்மனத்தகத்திருளு மேகமாய்த்தபத்தின்மிக்க... ...*
அருமையாய்வாழுகின்ற அண்ணலேபோற்றிபோற்றி... *
திருபனுர்செய்தகுற்றம் நீக்கிடவந்தகோவே ... ... *
பெருமையாய்கதையொன்றிப் போபிரபலமாயுரைத்திடீரோ

வசனம்.

உலகமாய்கையைநீக்கி மனதைதபோகியானவழியிற் செலுத்தியநாதனே அரசனுடையகுற்றத்துக்குநான் என்ன செய்யப் போகிறேன்யாதொன்றுமில்லை யிப்போதுதேவரீரிங்குயெழுந்தருளியப்படியால் தமதுதிருவாய்மலர்ந்து வொருகதைசொல்லவேணுமையாசுவாமி.

நாரதர்சொல்-கலிவெண்பா.

உரைத்திடுவேன்கேளாயுண்மையுள்ளவோர்கதையை *
விருத்தமொன்றுவுன்மனதில் வையாதே-பெருத்தபுவி
தன்னில்விளங்குஞ்சரித்திரத்திலோர்கதையை... *
என்னமென்றுசொல்வேனிளமயிலே-வுன்னருகில் *

பேசுமொழியால்பேதமைபொய்நற்கதியில் ... *
தேசித்திருக்கநீகந்துவேன்-பாசமிகு ... *
முக்கணமாய்பஞ்சதிவாய்முச்சுடராய்மும்மலமாய் *
எக்குணமுந்தானுயிலகுமந்த-தக்கவர்கள்... *

நெஞ்சகத்திநீங்காதநிஷ்களங்கமாய்சகல ... *
மஞ்சகத்தில்வாழுமறைமுடிவே சஞ்சலங்கள் ... *
திரும்படியாகச்சின்மயத்திலோர்வசனம் ... *
நேரும்படியாகநிகழ்த்துவேன்-பாருமந்த... *

நாராயணுபநமாவென்றுநல்லமுறைத் ... *
தாரானமாகவுஞ்சொர்த்திடுவாய்-போரக... *



ஆக்குவதுமாக்கிஅழிப்பதுவுங்காப்பதுவும் ... *
தாக்கரியவெவ்வுயிர்க்குந்தானுகி-நோக்கரிய... *
அட்டாக்ஷரப்பொருளை அன்பாகவேதுதித்து ... *
இட்டைதரக்காமியங்கள்நினைக்கவரும்-கஷ்டமில்லை *

எமனனுக்காவெவ்வுலகமுப்பணியும் ... *
ஓமெனவேயாமுனிவருள்ளமதில்-நேமமாய் ... *
சிந்தித்திருக்குமந்தத் திருமால்பதத்தையென்றும் ... *
வந்தித்திருப்பாய்மகிழ்ந்து... ... *

லீலாவதிசொல்

1 பரணி.

தத்துவக்கடந்தசதுமறைப்பொருளே... *
வத்தமெஞ்ஞானத்தூயனே போற்றி... *
அத்துவிதத்தையருளியதேவே... ... *
சுத்தனேயுந்தன்கழலிணைப்போற்றி ...

நாரதர்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

தெரிவயற்கரியான... ... ... *
தேன்மொழியேநீவாழி... ... ... *
அரிதிருவடியைப்போற்றும்... ... *
அன்புள்ளப்பாலனுக... ... *
மருமலர்வாசம்போலுவன்... ... *
வயத்திநில்வீற்றிருக்கும்... ... *
இறைவனும்நீயுமாகத்... ... ... *
தினந்தினம்வாழிவாழி... ... ...

இந்திரன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அண்டரேமுனிவரேநீ... ... ... *
ஈனவருமெழுந்திருந்து... ... ... *

வண்டணிக்குழலாளிலா... ... ... *
வதிகிரைநீங்கிச்சென்று... ... *
பண்டுநாரதனார்சொன்னப்... ... *
படியவள்தன்னைவிடுத்து... ... ... *
இந்திரனுப்பிவிட்டு ... ... *
யிட்சணமுரைசெய்வீரே... ... *

வசனம்.

வாருங்கள் தேவர்முனிவர்களே நாம்தெரியாமல்அந்தலீலா வதியைக்கொண்டுவந்துகொடுஞ்சிறையில் வைத்தோமே- அந்தம் மானையிப்போ நாரதர்சொல்லியப்படிக்கு அவளின துஅரமனே க்கிப் போகும்படியாக அனுப்பிவைத்துவிட்டு வந்துசேருங்கள் தேவர்முனிவர்களே.

தேவர்முனிவர்சொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி.

அன்புள்ளத்தாயேபோற்றி.. ... *
அரசியந்தசேமன்னன்... ... *
வம்புகள்செய்ததல்ல... ... ... *
மைத்துனன்முறைமைகொண்டார்... *
செம்பவழிதழிநாளே... ... ... *
சீக்கிரமாய்நீயும்போ... ... *
உம்பர்நம்பதியைவிட்டு.. ... ... *
துன்னகற்கேகுவாயே ... ... *

வசனம்.

வாருமம்மா தாயே - யெங்கள்தேவேந்திரமகாராஜர்க்குற்ற மாகநினைத்துச்செய்ததல்ல- மைத்துனர்முறமைக்கொண்டுவிளை யாடினார் - அதையுன்மனதில்கொஞ்சம்வையாமல்யுன்னரமனைக்கு ப்போய்சேருமம்மாதாயே.

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

அரைகழல்வீரர்போற்ற... ... ... *
அணிதிகழ்கொலுவில்வாழும்... ... *



இரையவனென்னையிப்போ ... ... *
பேகெனவுரைத்தாரென்றீர்... ... *
மரையுவன்விதித்தாலத்தை... ... *
மாற்றிடவொருவருண்டோ... ... *
வரைபுயமன்னனுக்கென்... ... ... *
வந்தனஞ்சொல்லுவீரே... ... ... *

வசனம்.

கேளுங்கள் தேவர் முனிவர்களே யுங்கள் அரசனுனவர்யென் னைப் போகும்படியாய் யுத்தாரஞ்செய்தாரென்றீர் அப்படியே போகின்றேன்விதியைவிலக்கயாராலே முடியும்ஆகையால்யுங்கள் அரசனுக்குயென துவந்தனம்சொல்லுங்கள்தேவர்முனிவரே

தேவர் முனிவர்-சொல்

பரணி.

மன்னவனே தேவர்... ... *
சொன்னசொற்படியே... ... *
நன்னயமாகினைத்... ... *
தன்னகர்க்கனுப்பினோம் ... *

பொது-சொச்சகம்.

அங்கமறைமுடிசிவ ... ... ... *
தூயமுனிசொன்னவயில்... ... *
மங்கைலீலாவதிதன் ... ... ... *
மனையில்வந்துசேர்ந்ததின்பு... ... *
இங்கிதமாய்த்தவம்புரிந்து... ... *
வெழில்வரம்பெற்றிரணியனும்... ... *
மங்களமாகக்கொலுவில்... ... ... *
வரும்வகையான்சொல்லுவனே ... ...*

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி.

கட்டிச்சல்லடமுங்கச்சைசந்... ... *
தானுமேயரையிற்கட்டித் ... ... *
திட்டமாய்ப்பணிதிபூண்டு ... ... *
திகழ்வாங்குகையிற்கொண்டு... ... *
இட்டமாய்ஜகம்போற்று... ... ... *
யிரணியமகிபன்வாசல் ... ... *
கட்டியக்காரன்றானு ... ... ... *
ளரியில்வருகின்றனே... ... ... *

கட்டியன்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

கட்டியக்காரன்வந்தானே-செய ... *
வதிபதியிரணியமகிபதிவாசல் ... *
கட்டியக்காரன்வந்தானே ... *

அநுபல்லவி.

திட்டமாயரையிற்கட்டிகட்டி ஆடை ... *
கட்டிமட்டியிட்டு-செந்தார... ... *
பொட்டுநெத்திக்கிட்டு-வெகு .. ... *
சந்திடாஉடனேவெத்திவேணுமிகு ... *
சுந்தவீரனையுத்தகுரனெனக் (கட்டியக்காரன்)

சரணங்கள்.

அகிலபுவனமீரேழுலகங்களும் ... ... *
அதிரமீளைமுழுக்கி-கன் ... ... *
டமாரோடவுருக்கி-வெகு ... ... *
அண்டமகண்டமும்விண்டலமெண்டிசை ... *
பத்திபெயித்தாகாசத்திலழுட்டிக் ... (கட்டியக்காரன்)



சத்திசைவெத்திமுகத்திலமிகுத்திடும் ... *
ஆரபாரகோரன்-மிகுந்தீரவீரசூரன் ... *
அவுணர்கள்குலபதிஅரசர்கள்அதிசெய ... *
ஆயகவேதபுராணமறைத்திட... ... *
அவனிடநாமமீதெங்கும்வழைத்திடக் (கட்டியக்காரன்)

அந்தணர்சிந்தையபயத்தநனர்த்தெம ... *
தவ *
கண்டஅண்டமிண்டன் ... *
கண்டசண்டமிண்டன் மிண்டன் ... *
தரணியிலுள்ளவர்தமிங்க ... ... *
தவமதுசெய்யவொரிங்க ... *
யிரணியமகிபதிவருகிறவேளையில் ...(கட்டியக்காரன்)

கட்டியன்சொல்-விருத்தம்

எச்சரிகை.

வடவரைக்கிரிகிடேன அவுணர்கள்கொடிமளமென
... ... *
வருபுரவியெதிர்செல்லவே ... *
மணிகள்முடியணியரசர்யணியசையயிருபுரமும் ... *
... ... *
வந்தடிபணிந்துபோற்ற ... *
தடையவர்கள்கொடியசையதெடியவாள்கைகொண்... *
... ... *
மைச்சர்களனேகர்சூழ ... ... *
தளகுதளமொழிமதிசிதரிவானவர்கள் ... *
வர்பதந்தனில்விழவே ... ... *
கடையிடரிவருஞ்சேனைபச்சேடனும் ... ... *
கிகத்தெண்டனிடவே ... ... *
மொழிபவமகலசலமுனிவரபயமென ... ... *
விந்தெதிர்செல்லவே ... ... *
கொடியகடலதிரமுரசரையவியனுலகில் ... ... *
ரியமன்னர்தொழவே ... *
ஹரிநானெனவேயிரணியனித்தாவருகிறார் ... *
வெச்சரிக்கை ... ... ... *

பொது-விருத்தம்-இ-ம்-தேசிகதோடி.

அண்டரண்டங்கள்போற்ற வமரர்கள்வணங்கியேத்த ※
எண்டிசைகளர்க்குந்தேவர் யிறைஞ்சிவாய்புதைத்துநிற்க
மண்டலமெய்ப்படுதேவ மாமுனிவோர்களாசி ... ※
கொண்டிடவிரணியருரன் கொலுவுக்குவருகின்றனே

பொதுசொல்-இரணியன்வருகிறதரு

இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

அடர்மகுடமுடிதுலங்கவே-ஆஆஆஆ ... ※
அணிந்தமணிபுயமிலங்கவே ... ... ※
யிடியனையமுரசதிரவே-ஆஆஆஆ ... ※
யிரணியமன்னவன்கொலுவில்வந்தானே (அடர்மகுட)

அடியவர்கள்திதிடெனவே-ஆஆஆஆ ... ※
அருணருசிமிகுதரிக்கவே ... ... ※
இடர்செய்வடிவேலசையவே-ஆஆஆஆ ※
இரணியமன்னன்கொலுவில்வந்தானே (அடர்மகுட)

மந்திரிதந்திரிகளடரவே-ஆஆஆஆ ... ※
மௌனவர்கள்தாமழியவே ... ... ※
இந்திரசந்திரரொடுங்கவே-ஆஆஆஆ ... ※
இரணியமன்னவன்கொலுவில்வந்தானே (அடர்மகுட)

அண்டரண்டமதருதுருவே-ஆஆஆஆ ... ※
அவதியுள்ளோர்மனங்கலங்கவே ... ※
சண்டிசையும்படபடெனவே-ஆஆஆஆ ※
இரணியமன்னவன்கொலுவில்வந்தானே (அடர்மகுட)

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

பொன்னணிமகுடமின்னப் புவிதனிலருந்தவன்னர்
வுன்னிகரினையில்லாத தயித்தியராகிருழ... ...



மின்னிடைமாதர்வந்து மிக்கபொற்கவரிவீச ... ... ※
இன்னிலமதிக்கப்பெற்ற யிரணியன்கொலுவில்வந்தான்

தரு-இ-ம்-மோகனம்

தாளம்-ஆதி.

பல்லவி.

ராட்சதர்க்கதிபதி-தானயிரணியமகா ... ※
ராஜராஜன்வந்தானே ... ... ※

அநுபல்லவி.

தீட்சண்யமாகவே தேவர்களும்நடுங்க ... ※
திரளுமுனிவர்கள்தபங்களழிந்திட ... ※
திங்கள்கதிரழல்வொளிகளழிந்திட (ராட்சதர்க்கதிபதி)

சரணங்கள்.

சோதிச்சித்திரவட்டக்குடையவுணர்பிடிக்க-நல்ல ※
ஆலக்குயிரணியநம்மாவென்றுத்தனர்மறைபடிக்க ... ※
நாதனென்றுமனப்பயங்கொண்ட ... ※
ரம்பைகள்நடிக்கவின்றும் ... ... ※
நாகலோகத்தோர்கள்ரத்னமாலைவந்து ... ※
நளினபாதம்பிடிக்க... ... ... ... ※
கோதிலாநவமணிமுடிதுலங்கிட... ... ※
குவலயத்திலுள்ளோர்கள்கலங்கிட ... ... ※
வாதைசெய்தலகழிக்கமனதுள்ளமந்திரிமாரிலங்க ※
தம்புருகின்னரிவீணைமுழங்கிட ... ... ※
தவிலொருநாகசுரங்கள்தழங்கிட ... ※
பம்பைகள்கொம்புகள்துந்துமியொலியிட... ※
பலவிதமுரசமுமறைபடமிப்படி (ராட்சதர்க்கதிபதி)

பொதுவிருத்தம்

இ-ம்-தோடி.

கொடியிசைபடபடென்னக் ... ※
குவலயம்நடுங்கியஞ்ச... ... ※

இடியெனஅவுணர்கேளி ... ... ... *
யெதிரிகளெங்கேயென்ன ... ... *
அடிதனைத்தொழுதன்று ... ... ... *
ஈராயிரங்கோடிவளமைச்சர்சூழ ... ... *
கடிதடந்நீள்வாளேந்தி ... ... ... *
கனதனும்வருகின்றானே ... ... ... *

இரணியன்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்ஆதி.

கண்ணிகள்.

அதிவீரபராக்கிரமனைவந்தபலவிக்கிரமன் ... *
ஆதிமன்தேவதுஷ்டநிக்கிரகன்-யிரண்யபூபன் ... *
கொலுவுதனில்மேவினான் ... ... ... *
பொன்மணிமகுடமின்னப்பூத்துகில்பளபளென்ன *
மின்மினிப்பூமொனிதுன்னவே-யிரணியபூபன் ... *
வேடிக்கையாய்வந்துமேவினார் ... ... *
சந்திரச்சூடைமேல்விளங்கத்தாமரையிருபால்துலங்க
வந்திகள்வாழ்த்தொலிபொங்கவேயிரண்யபூபன் ... *
வானவர்வணங்கவந்தானே ... ... ... *
மின்னுமிடைரம்பையர்கள்வேல்போல்விழிகன்னியர்கள்
பொன்னிழைத்ததீபங்களேந்தவே-யிரண்யபூபன் *
புகழுடனேவந்துமேவினான் ... ... ... *
வருணைப்பன்னீர்த்தெளிக்கமந்தவாடைத்தேன்துளிக்க
பெருமதிதென்குடைபிடிக்கவே-யிரண்யபூபன் ... *
பெருமையுடன்வந்துமேவினான் ... ... *
சுபகரமாய்பார்க்குமபோதுசூரர்கைகட்டிநமிக்கி *
விபரிதபொன்பூவும்போடவே-யிரண்யபூபன் ... *
விந்தையுடன்வந்துமேவினான் ... ... *
இருப்புலக்கைப்பிண்டிபாலம்வெங்குமழுவேல்வாள்சூலம்
தரித்தமுராசனைதிரவே-யிரண்யபூபன் ... *
சகலாட்சென்வந்துமேவினான் ... ... *
அந்தரத்துமிழுங்கஅநிலமெங்குந்தால்வணங்க *



சுந்தரசங்கீதமேலோல்துரையிரண்யபூபன் ... *
சுகமுடனேவந்துமேவினான் ... ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

இன்றுமும்மூர்த்திகளைத்துரத்திவிட்டேன் ... *
இகல்செய்துயிந்திரனைச்சிறையில்வைத்தேன் .. *
தென்டிசைவாழ்யெமனைபணிவிடையேகொண்டேன்
தேவர்களைக்குறிசித்தவடித்துமந்த ... *
பண்டுமறைமுனிவரெல்லாம்நடுங்கலோகம் ... *
பதினாலுமெனைத்துதிக்கபண்ணிவைத்தேன் ... *
இன்றுமுதல்இல்தெய்வமில்லையானேதெய்வம் ... *
என்குலமும்யென்னாமம்யென்றுவாழி ... *

முதல்-ஆம்முகமந்திரிசொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி,

இரணியீஸ்பரனேயென்று ... ... *
யெண்டிசையோர்கள்மற்றும் ... ... *
தரணியின்மீதிலுள்ள ... ... ... *
சராசரமெல்லாநின்று ... ... *
சரணெனவந்துவந்தன் ... ... *
றுனின்மேல்விழுந்துபோற்ற ... ... *
கருணையாயவரைக்காக்கும் ... ... *
சர்த்தனேபோற்றிபோற்றி ... ... *

உ-வது-மந்திரிசகுனிசொல்

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

துன்னலேபோற்றிபோற்றி ... ... *
யமசர்தாயகனேபோற்றி ... ... *

வெண்ணிலாவிளையைக்கொண்ட... ... *
விரைவனேபோற்றிபோற்றி... ... *
புண்ணியருலகுகொண்ட... ... *
போர்முகவீரபோற்றி... ... *
திண்மைமெய்யிலையாண்ட... ... ... *
தேவனேயிரணியாபோற்றி... ... *

இரணியன்சொல்விருத்தம்.

இ-ம்-சாவேரி.

எதிர்பொருதியமர்வினைத்துவெற்றிகொண்டு ... *
எழில்மிகுதன்மதியமைச்சமார்களே நீங்கள் ... *
சதிர்மிகுந்தசபையிலுமக்கிருக்கையீய்ந்தோம் ... *
தனைமையுடனிறைந்துபாரத்திருப்பீர்தாமே ... *

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

மன்னர்மன்னவர்கள்வேதவேதியர்... ... *
வணக்கிநின்றுபுடைசூழவே ... *
பன்னுமொழியர்கண்டோர்நின்றருகில்... ... *
பணிந்துமாமலர்கள்தூவவே... ... *
கன்றுதந்திகரியாத்தனமாலைத்... ... *
தாகமன்னரடித்தாழவே ... ... *
நன்னிகந்தரியபிரணியமன்னனிருந்த ... *
சாரிதைக்கிளிதுசனமே ... ... *

கட்டியன்சொல்

கூறல்.

இடமிருந்தகாருக்கொருதனிக்குடைநிழற் ... *
இலங்கவர்தவண்டவீரா... ... ... *



தரிசித்திடியெனப்பொருதசத்துரர்களைச்... *
சுளப்படப்பொருதஞ்சூரா... ... *
தடமுடிச்சாரிகளைத்துகள் படச்செய்திஜெய... *
சங்கிராமயீகும்சோரா... ... ... *
சொடையில்முச்சகமதைப்பெருவனித்திடவரும்... *
சொற்றவாயிரணியப்பா ... ... *

நிதிவிசாரனை

இரணியன்சொல்

பரணி.

தாணிதனிலுண்டாமித்திரனைக்கொடுவந்து ... *
தான்விலங்கிட்டீர்களா... ... ... *

மந்திரிகள்சொல்

பரணி.

தாரணிக்கதிபனேயித்திரனைக்கொடுவந்து ... *
தான்விலங்கிட்டோமையா... ... ... *

இரணியன்சொல்

பரணி.

தலைமைபெருவானவர்கள்தலைதனிற்றளைமகளைத்... *
தான்வைத்திடித்தீர்களா ... ... ... *

மந்திரிகள்சொல்

பரணி.

தக்கோர்ப்பாதேவர்தலைதனிற்றளைமகளைத் ... *
தான்வைத்தடித்தோமையா ... ... *

இரணியன்சொல்

பரணி.

உரமானதம்பிமைக்கொன்னமாயவடுதோடு... *
வொளித்தயிடமறிவீர்களா ... ... *

மந்திரிகள்சொல்

பரணி.

உக்ரமாய்தம்பியைக்கொன்னமாயவனேடி ... ❋
ஒளித்தயிடமேயறிகிலோம்... ... ... ❋

இரணியன்சொல்

பரணி.

உசிதமுடனேபிரமன்றிரிகாலபஞ்சாங்கம் ... ❋
உரைசெய்தானுசொனுவிதில் ... ... ❋

மந்திரிகள்சொல்

பரணி.

உத்தண்டமன்னனேபிரமனும்பஞ்சாங்கம் ... ❋
ஓதியேமிகவருகிறான் ... ... ... ❋

இரணியன்சொல்

பரணி.

வருணனீசானியன்வாய்வொடுகுபேரனும் ... ❋
வந்தடிப்பணிந்தார்களா ... ... ❋

மந்திரிகள்சொல்

பரணி.

வல்லமையுடனனுதினமும்நால்வரும்வந்திதோ... ❋
வணங்கியேநிற்குறார்கள் ... ... ❋

இரணியன்சொல்

பரணி.

வாசமிகுமேகமனபன்னிரண்டுகொண்டு ... ❋
வந்துமேகம்பொழியுதா ... ... ❋

மந்திரிகள்சொல்

பரணி.

மன்னவாவும்முடையசக்கரநெறிப்படி ... ❋
வந்துமேகம்வீசுது... ... ... ❋



இரணியன்சொல்

பரணி.

குடியானகோடானகோடிராட்சதர்களும் ... ❋
கொலுவுக்குவந்தார்களா ... ... ❋

மந்திரிகள்சொல்

பரணி.

கோரயமதூதரைக்கண்டபல்லுயிர்கள்போல்... ❋
குலைநடுங்கியேநிற்குறார் ... ... ❋

இரணியன்சொல்

பரணி.

கூடாமுநீதிரும்பாரடாஆரடா... ... ❋
கோடையிடிபடைவீரரே ... ... ❋

மந்திரிகள்சொல்

பரணி.

குறையன்றிபாவரும்வந்தநின்றாரிதோ ... ❋
கொற்றவாதிய்சமுகமே .. ... ... ❋

நாட்டியப்பெண்கள்வருகிற

விருத்தம்-இ-ம்பந்துவராளி.

அழைத்தனரென்றபோதுஅஞ்சனந்திட்டிடித்தங்கம் ❋
இழைத்தவொட்டியாணந் தானுமிடையிநிற்பனபொன்ன
கழுத்திலாபரணமெல்லாம் கலகலென்றிலங்கமாதர் ❋
செழித்திடுமாசன்மேவுஞ் சிற்சபைதனில்வந்தாரே. ❋

ரு-இ-ம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

நடனஞ்செய்மாதர்கள்வந்தார்-மன்னன்மகிழ... ...... ❋
நடனஞ்செய்மாதர்கள்வந்தார் ... ... ... ❋

மக

அநுபல்லவி.

விடம்போற்கனின்றே-மிகுகம்மதிற்சேர
அடலாய்சகுநிதங்கூறி அரியைநீவணங்கேறி... ...(நடன)

சரணங்கள்.

சத்துருக்கள்படிக்க-மந்திரந்தானம்
ஓந்நமச்சிவாயவென்றபடிக்க... ... ... ...*
சத்தியபரதமாடத்திருப்படிமைத்தவர்பாட ... ... *
மெத்தசபையோர்கொண்டாடமெய்க்கலக்கிரங்கையோட(

சந்திரக்கிளிபோல்பேசி-தேவர்கள்நாவலர்
தெளிந்துஞைகளோவிளி ... ... *
சந்நருவர்கண்டுதேகங்கலங்கிடவிவன்ராகம் ... ... *
அந்தரங்கண்டவர்யோகம் ஐந்தென்பாரேவையோகம் (ந)

அவனியுள்ளோர்கள்களிக்க-சடையிலுன்ன
அரசர்மனத்தநதளிக்க ... ... *
மவுனமுனிவர்கண்டுடைசாமிக்மனக்கொண்டு ... ... *
குவலயத்தனில்நின்றுகொண்டுகங்கிளிமிவனென்று (நடன)

நடனமாதர்சொல்.

கவித்துறை.

விடையாளரைப்பணிந்தேத்தியே
காசிபர்மெய்த்தவத்தால் ... ... *
படையாளராய்வரும்... ... ... *
பார்த்திபனேபதினுலைசம்... ... *
குடையாளராய்வருமாதே... ... ... *
புனலுமொழுமுகத்தில்... ... ... *
நடையாதுமலர்விதசேமைக்கரிக்க... ... *
திருத்தமை செய்வையே... ... *



நடனஞ்செய்மாதர்சொல்

சரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி.

ஜயோகசாவிநீயே-ஜயோகசாலிநீயே ... *

அநுபல்லவி.

இனியொருவருமினைசொல்லரியவிஜய... ... *
இந்திராதிகள்பணியாதாதத்திராயிரணியஞூதா... (ஜய)

சரணங்கள்.

தேவர்கள்நிதமும்பணியாதா-மூன்று... ... *
செகத்தில்வெருபுகழ்பிரக்யாதா... ... *
மெவர்கள்நிதமுந்தாவும்விதாண... ... *
வீராரணமுயகுராசோரயிரணியதீரா... (ஜயோக)

தானவர்குலமெல்லாமீடேர-வந்தவே... ... *
யமரெல்லாந்துதிசூர... ... ... *
கோனெனப்படுநிறைவுலோகமரகொண்ட... *
கோலாகலரணவிராலோலாயிரணியமாரா (ஜயோ)

தாம்தாம்திரிஞதிரிதில்லானா... ... ... *
தந்தரிதாம்தாம்தகதகதக... ... ... *
தந்தகதத்தகத்திரிகிட... ... (ஜயோக)

வித்துவான்கள்சொல்.

விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

தாமரைக்கண்ணனைப்புகைக்கண்ணைப்பெறவைதவிர *
நாமந்தன்னையேபுலகங்கள்யாவையும்நவில ... *
தாமவெங்களத்தணர்முதலினோர்சொலித்த... *
நமேவெள்வியினிமையவர்யேரெலர்முன்னாய் ... *

வசனம்.

வாருமையா யிரணியபூபாலகா வும்முடையகீர்த்திப்பிரதாபங்களைப் படிப்பட்ட தெங்குல் - நாராயணனென்னும்பிலனைக்கும்பெயரைத் தாத்தி வும்முடையபெயரேசரேழுபதினாலுலோகமும் விளங்கும்படியாகச் செய்வித் தம்பிராமணுள்செய்யாநின்ற யாகாதி கிரமங்களினால் அக்கினிமுகத்திலே சொரியாநின்றஅவிர்ப்பாகங்களையெல்லாம் தேவரீருடைய கீர்த்திப்பெற்றமையானுபாவமே.

வித்துவான்கள்சொல்

விருத்தம்-இ-ம்-தோரணவளம்.

மகவின்மாப்பொரும்புறக்கடல்மஞ்சனமாலி ※
பரவுருட்டிடையமணிரோமனமுருத்தி ... ※
பாவிபித்திரன்பதியிடையகத்பொருதாத்த ... ※
இரவிலோகமும்நான்முகனுலகத்திலிருக்கும் ※

வசனம்.

இஃனம் வும்முடையப் பிரதாபங்கெட்டபடியெனுன்-வுப்புக்கடல்தென்கடல் கருப்பஞ்சாத்துக் கடல்சாயிரக்கடல் தெயிக்கடல்நல்லதண்ணீர்க் கடல்பாற்கடல்- யித்தியேழுகடலுக்காலரலேதாண்டிஅப்பாலமானதோத்திரப்பருவதமுங்கடந்து-அப்பால்-அறுபத்து நாலுகோடியோசனையகலமும்ஆழமும்பொருந்தியதிருப்பாற்கடலிலே போய்பிராதக்காலை நானம்பண்ணிநாகலோகத்திலே போய் நாகக்கன்னியருடனேகூடிஅபூர்தப்ரைஞ்செய்து மத்தியானகாலத்திலே தெய்வலோகத்திலேயே யிந்தவசிம்மாசனத்தில் கொலுவிருந்து யிளைப்பாறி அப்பாலஸ்தமனகாலத்தில் பிரமலோகத்திற் போய் கொலுவிருந்துசெங்கோல்செலுத்தாநின்றமையானுபாவமே.

வித்துவான்கள்சொல்

விருத்தம்-இ-ம் பந்துவராளி

பண்டேலானவர்தானவர்யாவருமபத்தி ...
தெண்டிரைக்கடல்கடைதாவலியதாற்தேடி.



கொண்டமத்தினைக்கொத்தவர்க்குவுதோடமைத்தது
தண்டனைக்கொளுத்ததோய்தெய்வக்கரிந்தான் ※

வசனம்.

பின்னையுமும்முடையபிரதாபங்கெட்டபடியென்னவென்றால் சுவர்க்க தேவர்களாலேயும் - அனேகங்கோடாகோடிதர்களாலேயும் புகழ்பெற் முனைபசைக்கப்பட்ட நின்றநூறாயிரம் - யோசனை உயரமும் யிரணூறாயிரம் யோசனை அகலமும் பொருந்தியமந்தரகிரியைவேருக்குயேற்தத் திரண்டாயுதமாக பிடிக்கவேணுமென்றுபிடுங்கிப் பார்க்கின்றபோது அந்தமலை யும்முடைய கையிலிருந்துக்குணம்போராமல்யெறிந்துவிட்டீர் நீரகல்லோரும்முடையப் பெருமையை ஆர்சொல்லுகிறதுசொல்ல முடியுமோமகாராஜயாவரே.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-வராளி.

மந்திரிமாரேயிந்த ... ... ... ※
மாசறுவினைமுன்பாக... ... ※
விந்தையாய்நடனஞ்செய்த... ... ... ※
வெகுகிரிமுமாநருக்கும்... ... ※
அந்தமாய்புலவோருக்கும்... ... ... ※
அகமகிழ்ந்திடவாக... ... ... ※
பந்தமாய்சபைக்கேகைப்... ... ... ※
பணிதிபொன்னளித்திடவே... ... ※

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே நமக்கு யோகத்தப்புகழ்ச்சியாகத் தாகுமென்றுன் பரதசாஸ்திரப்படி நடனஞ்செய்தப் பெண்களுக்கும் கவிதாப்பிரசங்கஞ் செய்த வித்துவான்களுக்கும் வேண்டிய பொன்பூஷணங்களும் அயிரிவிதமாய் குறைவில்லாமல் குடுங்கள் மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல்

கலி.

ஆதவன்றுகிலே... ... ※
ஓதும்வானவற்கும்... ... ※
நீதமங்கையற்றும்... ... ※
போதபொன்னரிப்பாய்... ... ※

கட்டியன்சொல்

கலி.

ஒன்னலர்நடுங்க... ... ※
மன்னியவமைச்சரே... ... ※
சொன்னசொற்படிக்கி... ... ※
தன்னிதியளிப்பேன்... ... ※

வித்துவான்கள்சொல்வாழி

விருத்தம்-இ-ம்-பூரிகல்யாணி.

குடைநிழலிரணியேசன் ... ... ※
கொலுமுகந்திறைந்துவாழி... ... ※
நடமுடிப்புனைந்தமன்னர்... ... ... ※
தழைத்திடுஞ்சமுகம்வாழி... ... ※
படிமிசைச்செல்வமோங்கிப்... ... ※
பதிமிகப்படைத்துவாழி... ... ※
அடர்பொருமவுணரோங்கி... ... ... ※
யனுதினம்வாழிவாழி... ... ... ... ※

நாட்டியப்பெண்கள்சொல்

எச்சரிக்கை.

கிலாதிதிபாலாசுரர்காலாநவலீலா ... ... ... ※
கோலாசுவபிரண்யேஸ்வரகோவேயெச்சரிக்கை... ... ※
கோவேஜெயதேவேந்திரகுழுதேவர்கள்முதலாய் ... ※
மாவேந்தர்கள்பணியும்பதமன்றுயெச்சரிக்கை... ... ※



மன்றுவிற்பன்றுசம்பன்றுபிரசன்று .. ... ... ※
தன்யாயிரணியயேஸ்வரசூராயெச்சரிக்கை... ... ※
சூராமொழிமதூராமிருதஜயபூரணசந்த்ரா... ... ※
எதிர்காகிபரிஷிதந்தருள்யிரைவாயெச்சரிக்கை... ... ※
இரையென்றனதெதிர்வந்தவரினைமென்கழல்பணியும் ... ※
அரையென்றனமுனாதங்கியசூராயெச்சரிக்கை ... ※
சூராஜெயதீராவதிகோராசனவீரா ... ... ※
சிராதிகழ்முழுவச்சிரதேகாயெச்சரிக்கை ... ... ※
தேகாசுபயோகாயேழுலோகாபிரபுமகா ... ... ※
வாகாசனபோகாதிறவாகாயெச்சரிக்கை... ... ... ※
அகிலங்களுமெல்லாமுனதாகச்செயங்கொண்ட... ... ※
இகல்வென்றிமிபிரணி ஸ்பாயிரைவாயெச்சரிக்கை ... ※

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி.

படிமிசைதனைசுருட்டிப்... ... ... ※
பலமிகுத்தம்பிதன்னைக்... ... ... ※
கொடுமைசெய்தபரிவதைத்தக் ... ... ※
கொடியமாயனைக்கொணர்ந்து ... ... ※
அடிபடச்செய்துயெந்தன் ... ... ※
வஞ்சகமுடிக்காவிட்டால் ... ... ※
அடர்படுவலிமென்ன ... ... ※
யார்மதிப்பார்கள்மந்த்ரீ ... ... ※

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே யெனது தம்பியாகிய பிரணி யாக்கதனைக்கொன்ன அந்த அரியைப்பிடித்துவர் அவனைதலைசெய் தலையெல்வந்தாகத்தை முடிக்காமற்போவேனையாகில் மிதியின்லு லகத்திலென்னையாவரும் ஒருவென்றுமதிப்பார்களோ சொல் அங்கள்மந்திரிமார்களே.

தம்பியே வீரபாகுவென்பவனை நினைந்தான் அன்னையாக வினை யன் அயாவருக்குந் தெரியும் படியாக தம்முடைய வீரபாகுவை யழைத்து வருகத்தில் பறையறையச்செய்யும்படிக்கிமாரிகளே.

மந்திரிகள் கொலுவிருத்தம்.

இராகம்-கல்யாணி.

அடர்பரிசேனையுடனும் ... ... *
அரசனுரை கேட்குவினைப்பாய் ... ... *
இடர்கொண்ட திரையன்தானும் ... ... *
யெவக்கெப்பவினைகேளாய் ... ... *
படரவேமன்னன்போல் ... ... *
பறையறைவிக்கவென்று ... ... *
அடிக்கும்படியென்றென்று ... ... *
தொண்டையறைந்துவாராய் ... *

வசனம்.

கோட்டைகட்டியக்காரா நமது அரசனுடைய உத்தரப்படிக்கியிந் நகரமெல்லாமறியும்படியாகச் செய்யவேண்டியபிறைய வைக்கவேணும் ஆனையால் நீபோய் சீக்கிரத்தில் வீரபாகுவை யழைத்துவா கட்டியக்காரா.

கட்டியக்காரன்.

கவி.

பறையறையவே ... *
நிரமிகுமாசன் ... *
வீரனின் அக்கினே ... *
வருவென அழைத்தார் ... ... *

வீரபாகுவின் வருகை விருத்தம்.

இராகம்-பந்துவராளி.

கட்டியகப்புகழ்பெற்றோனு ... ...
மைக்களவனழைத்தானென்று ...



கட்டமாய்சொல்லக்கேட்டு ... ... *
செறிந்திடும்பறையடிப்பித்த ... *
கட்டியோடியும்புரக்கமபணிந்து ... *
தோணிவ்லாவந்து ... ... *
விட்டிடன்னெழுந்தமோட்டி ... ... *
வீரபாகுவன்வந்தானே ... ... *

இராகம்-சங்கராபரணம்.

தாளம்-ஆதி.

பல்லவி.

வீரபாகுதானே-ஓடி ... ... *
வீரபாகுதானே ... ... *

அநுபல்லவி.

சூரனென்னும் ஆயிரமந்திர ஞானதீதபடி ... *
சுந்தரனிங்கவெட்டுவெனமையாலேபரை நாட்டும் (வீ)

சரணங்கள்.

அதியில்பார்த்தடைவில்-தேவர்கள் ... ... *
அருள்தங்கைடந்தார் கூடி ... ...அந்த *
வேதமுயிர்த்துளகொள்ளுகிரிட ... *
வெருண்டுஆமரோடி ... ... *
நாதனைத்துதிசெய்ததிதன்றவறும்ப ... *
வேதியர்மறைப்படிக்கத்திநினைப்பறையடிக்கும்... (வீ)

தென்னவன்மகன்தனையே-யெவன்மகிழ்ந்து ... ... *
திருமணமதுசெய்ய-நிகழ் ... ... *
கன்னிகைமலர்மகளிறுமால் ... *
கல்யாணமிகச்செய்ய ... ... ... *
இன்னாகரிந்தார்கள் வீணைதன்னைருகின்றாகப்போச... *
அன்னவர்வேதந்தொழிக்கமுன்னேநான்பறையடிக்கும் (வீ)

கதிர்விழிதனையுடையோன்கண்டங் ... ... *
கருத்தராயானதிவேன்-மிகுஞ் ... ... *
கதிர்பெருஞ்சீதர்ணர்த்தோகம் ... *
தங்கமாயிருந்ததிவேன் ... ... *
விதியவன்சிரந்தனை மதியணிபவன்கொய்யத் *
ததியினில்திசையெட்டு மகிமையால்பறைதட்டும்(வீ)

## வீரபாகுவன்சொல்-விருத்தம்,

இ-ம்-சங்கராபரணம்.

அன்னையேபோற்றிபோற்றி ... ... *
யசுரர்நாயகனேபோற்றி ... ... *
வெண்ணிலாவிஜையங்கொண்ட.... ... *
விரைவனேபோற்றிபோற்றி .. ... *
புண்ணியகுலங்கொண்ட.... ... ... *
போர்முகவீரபோற்றி... ... ... *
தின்னமாயென்னையாண்ட ... ... *
தேவனேபோற்றிபோற்றி... ... *

## மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-சோடி.

அழைத்தபோதோடிவந்த... ... ... *
நாசடாவீரபாகு ... ... *
தழைத்ததம்மரசன்றெய்வத் ... ... *
தானெனத்தொழாமல்வேரே... ... *
வழுத்துவோர்தம்மையெல்லாம் ... *
வதைப்பதுதின்னமாமென்... ... *
திழைத்ததம்முகைமெங்கு... ... *
மெழில்முரசறைந்துவாராய் ... .. *

## வசனம்.

ஆரடா அடாவீரபாகுவேயிந்தவுலகத்தாருக்குநம்முடைய அரசனே தெய்வமல்லாமல் வேரொரு தெய்வமில்லை - அப்படி



மதியாமல்நினையாமலிருப்பவர்களுக்கு வேண்டிய ஆக்கினைகள்கிடைக்குமென்று யெங்கும் பறைசாற்றி வாரும்பிள்ளாய்வீரபாகுவே.

## வீரபாகுசொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

வியனுலகினில்வாழ்வேதியர்மனிதர்... ... *
மிகுதவமுனிவர்வானவர்கள்... ... *
தியமமாய்தெய்வம்அரசனேயென்று ... *
நித்தமுந்தொழுதிடில்நன்மை... ... *
பயம்பெறத்தெய்வம்வேரெனநினைத்துப் ... *
பகர்ந்தவர்நாக்கையுமறுத்து... ... *
இயலுடன்வதைக்கயிரணியமன்னன் .. ... *
இட்டகட்டளையிதுவாமே... *

## வசனம்

வாருங்கள்வேதியர்கள் தவசிகள் வானவாமானிடர்முதலானவர்களே கேளுங்கள் - யிந்தப்பதினாலு லோகத்திற்கும்நமதரசனே தெய்வமென்றும் யாவருந்தியானிக்க வேண்டியதல்லாமலும் மற்றும் வேரொரு தெய்வத்தை நினைத்தாலும்செபித்தாலும்மதித்தாலும்துதித்தாலும்- அவர்களைப்பிடித்து வதைத்து நாக்கையறுத்துவேண்டியஆக்கினைகள்செய்யும் படியாக அநேககோடிபிர்ம்மாண்ட நாயகராகிய யிரணியேஸ்வரமகாராஜன்யிட்டகட்டளையிதைசகலமானபேர்களும்அறிவீர்களாக திடும் - திடும் திடும்-திடும்-திடும்.

## பொது-வசனம்.

இந்தப்பிரகாரமாக யிரணிய மகாராஜன் கட்டளையின் படி வீரபாகு பறைசாற்றினபின்- அந்தபுரத்திலிருந்த லீலாவதியம்மன் கேட்டவேதனையால் - தோழிகளைப்பார்த்து சொல்லுகிற விருத்தமாவது.

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-முகாரி.

என்னிடதோழிமாரே... ... ... ※
யிருந்திருந்தின்றைக்கேதோ... ... ※
பன்னுமென்வயிறிடிப்பும்... ... ※
பக்கமும்நோகுதிந்த... ... ... ※
நன்னயமாகக்கைகால்... ... ... ※
நடுக்குதுமெய்ந்தனுக்கு... ... ... ※
மன்னியசோபதாப... ... ... ※
மாகுதென்செய்வேனம்மா... ... ... ※

வசனம்.

வாருங்களடித் தோழிப்பெண்களா-யின்றையதினத்தில்யெனக்குகைகா லயர்ந்துப்போகுது - வயரும் யிடிப்பும்பக்கமும் நோகுது-யிருந்திருந் ததிரேகம் நடுக்குது மெத்தவுங்களையாய் வருகுது-யிதற்குநானென்னசெய்வேனடி-அம்மனி.

தோழிப்பெண்சொல்

கொச்சகம்

மந்திரியேநீர்கேளும்... ... ※
மன்னவனுர்தன்றேவி... ... ... ※
வந்துநிறைந்தகெர்ப்ப... ... ... ※
மாதமொருபத்தாகி... ... ... ※
அந்தரமாயக்கோதை... ... ... ※
யலைந்துடிக்கவாடுகிறுள்... ... ... ※
வித்தைமருத்துவச்சி... ... ... ※
வேணும்வரச்செய்வீரே... ... ... ※

வசனம்.

ராஜாதிராஜனுகிய யிரணியேஸ்பர மகாராஜனுக்கு கந்த மந்திரிகளேசரணம் - யெங்கள்அன்னையாகியலீலாவதியம்மானிநி



றைந்த கெர்ப்பவதியாய் பிரசவேதைப் படுகிறுள் அதற்குவொரு மருத்துவச்சியை அழைப்பிக்கவேணுமையாசுவாமி

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

தேவர்கள்முனிவருஞ்சத ... ... ... ※
திகழும்வான்மையிற்கொண்ட... ... ※
காவலன்றேவியான... ... ... ※
கன்னிகைவருத்தந்தன்னைய்... ... ... ※
யாவையுமுரைக்கக்கேட்டோம்... ... ... ※
பரிந்துகட்டியனேநீபோய்... ... ... ※
பேவலாள்மருத்துவச்சி ... ... ... ※
யிட்சணமழைத்துவாராய்... ... ※

வசனம்.

கேளும் ஆசாரவாசல் கட்டியக்காரா நமதுராஜாதிராஜன்மனைவியாகியலீலாவதி அம்மான்நிறைந்தகெர்ப்பமாகி பிரசவேதை, ப்படுகிறதாய்தாதிமார்கள் வந்து சொல்லக் கேழ்விப்பட்டோம் அதற்குதகுந்தமருத்துவச்சியை அதிசீக்கிறத்துக்குள்ளாக அழைத்துவாடாகட்டியக்காரா.

கட்டியன்சொல்

வசனம்.

அப்படியே தங்களுத்தாரப் படிக்கி தடையில்லாமல் ஒரு நொடியில்அழைத்துக்கொண்டுவருகிறேனையாசுவாமி.

மருத்துவகிழவிவருகிற

விருத்தம்-இ-ம்-தருட்டி.

கடிமனதுடனேகாலூந்... ... ... ※
துவளக்கதுங்கேளாமல்... ... ... ※
இடையினிற்கருத்தகந்தை... ... ... ※

புடித்திபிருகண்பஞ்சாகி... ... ... *
வடிவுமெலிந்திடவுமுருட்டனே... ... *
வாயிற்பல்லில்லான்... ... ... *
கொடியநடுக்கிக்கிழவிமருத்துவக்... ... *
கோதையுட்வந்தாளே... ... ... *

தரு-இ-ம்-மோகனம்

தாளம்-ரூபகம்.

பல்லவி.

மருத்துவத்திற்றிறமையெண்ணப்போலிந்த... *
வையகத்திலினியுண்டோ... *

அநுபல்லவி.

பெருத்தவயத்திலேறுப்பிருந்தாலுமவளைப் ... *
பேசாதமடியென்றவாயின்மீதிலடிக்கு... (மருத்துவ)

சரணங்கள்.

பிறட்டவுந்தன்றுபுருட்டவுந்திருட்டுதனமா... *
யழுதாலெனக்கென்னதெரியாதா... ... *
வரட்டுமாடாகிலுங்கால்படிபால்பீச்ச ... *
க்கைஅகையறியஜெகத்திலெவ்வணப்போல் (மருத்து)

இந்திரன்றேவிதனக்கந்தநாளில்கெர்ப்பம் ... *
மிருந்தவன்புலம்புராளென்றென்னையழைத்தார்கள் *
சிந்தைமகிழ்ந்துமவளைப்புருத்துபார்க்கும்போது ... *
செல்வமேவாடியென்றழைத்தேன்... (மருத்து)

சகத்திலில்லாதநேக்கிடாயிருந்தாள்வகை... *
தெரியாமல்வளர்ந்ததுயென்றுமுனிவிக்கூன் ... *
வந்தழைத்தமர்தானேசுகம்பின்னை .. ... *
வகைஅகையறியாமல்வளர்ந்ததுதாறுமாறு (மருத்து)



மருத்துவக்கிழவிசொல்விருத்தம்.

இ-ம்-மத்தியமாவதி

*
ஆரம்மாவருத்தமாகி... ... ... *
யழுகிறாய்வளவில்நின்று... ... *
கூரம்மாவுனக்குண்டான ... ... *
குறிகளைச்சொல்வாயாகில்... ... *
பாரம்மாவெந்தன்றீராணி... ... *
பாரினிலொருவருண்டோ... ... *
தீரம்மாவஞ்சவேண்டாம் .. ... *
நின்றெனக்குரைசெய்வாயே .. ... ... *

வசனம்.

ஆடியம்மா யிவ்வளவிலே - லீலாவதியென்கிறப்பெண்ணே தானோ-யேனழுகிறாய்வுனக்குண்டானக் குறிகளையெல்லாம்சொல்வாயானால்அதற்குத்தகுந்தவுபாயஞ் சொல்லுகிறேன் ஒளியாமல்சொல்லுமம்மாலீலாவதி.

லீலாவதிசொல்

அகவல்.

வஞ்சியேயெந்தன் வயருளப்பெருத்து *
நெஞ்சுதானுலர்ந்து நினைவுமதவருது *
இடுப்பெலாம்நோகுதுயென்றனடயிரண்டும் *
நமக்குதென்னம்மணி நானென்னசெல்வேன் *
பக்கமும்நோகுது படுத்திடப்போனால் *
விக்குதென்குலையை விரியுதென்னடியோ *
கத்திரிக்கோலால் கத்திரிப்பதுபோல் *
உத்தமுட்டெலும்பை வுனைக்குதென்னம்மணி *
பெருமூச்செறிந்து பிறட்டுதென்வயத்தை *
பரவாவதிகநோய் வருகுதென்செய்வேன் *
மெ

கண்ணிருண்டெட்டுதன் காதடைத்திடுது *
நன்னுமென்றோகம் நடுக்குதென் செய்வேன் *
நடந்திடக்கால்கள் நடுக்குதுட்கார்ந்தால் *
இடர்தரப்பெருமூச் செறியுதென்னடியோ *
ஒருகுடந்திரண்டு வோடியெமுட்டி *
வாலவாயினப்பாய் வருதுதென்னம்மணி *
யென்செய்வேன்சகியெயென்செய்வேன்தோழி *
யென்செய்வேனம்மணியெப்படிபொறுப்பேன் *

லீலாவதிசொல் தரு

இ-ட-ஆகிரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வயர்வலிக்குதே-அம்மா-அம்மா-அம்மா-யெந்தன் *
வயர்வலிக்குதே ... ... ... *

அநுபல்லவி.

அயலார்போலவெயென்னை ... *
யம்மணியென்னுதே ... ... *
ஆகம்நடுக்குது ... ... *
தாகமெடுக்குது ... (வயர்வலிக்குதே)

சரணங்கள்.

அங்கம்னொருதே-அம்மா-அம்மா-அம்மா-யெந்தன் *
அங்கம்னொருதே ... ... ... *
அங்கம்னொருது அடித்தடையிருது ... *
பொக்குருகுலயயென்பெண்தோஷம்பொல்லாது *
போகாயோவொத்திப்போகாயோ (வயர்வலிக்குதே)

மங்கைமாரேயெந்தன் வாதுமுத்திப்போ *
வதையுதுநோகம்வதையுது ... ... *
இங்கிர்தமறியாதேயெனையிழுத்தெறியாதே *
அம்மா-அம்மா-அம்மா-வயர்வலிக்குதே-அம்மா... *
ம்அம்மா-அம்மா-யெந்தன் (வயர்வலிக்குதே)



லீலாவதிசொல்

ஒக்காரடத்தியம்.

தையவேயென்றோகந்தனைக்வெறுப்பாளுதே *
தானேனுள்ளிரிந்லவேனையம்மா ... *
மெய்யெல்லாம்வேர்வையாய்வெகுநனைநது *
மெல்லியேநானென்னசெய்வேனம்மா *
கைகால்நடுக்குதுகடுக்குதென்னடியயர் *
கனத்தாயிகநோகுதடிகன்னியரே *
பையவேயென்னிருபக்கமுடலேசாயும்... *
பதருதிக்குது பதருதம்மா ... *
ஐயையோவயர்னுருதம்மம்மாரே *
அன்னமேசொர்னமே.யென்னனும் *
செய்யும்வகையறியாள் நான்றியேனே *
தேன்மொழியேயிதற்கு வகைசெப்புவீரே *

லீலாவதிசொல்-தரு

-இம் புரிகல்யாணி தாளம்-அடசாப்பு

பல்லவி.

என்னமோவென்வயத்தை யென்னமோசெய்யுதே *
யென்னதான்செய்வேனடி-அம்மம்மம்மாரே *
என்னதான்செய்வேனடி ... ... *

அநுபல்லவி.

அன்னமாரேயெந்தன் குடலில்வந்திப்போது *
என்னைப்பிசாசமிருக்கிப்பிடிக்குதடி (என்னமோ)

சரணங்கள்.

இப்படிவலிப்பெடுக்குதே-யெந்தன்வயத்தை
இருந்திருந்தடைக்குதே ... ...

உடுத்ததுயில்கழித்து வுதருமென்கையுங்காலும் *
எடுத்துப்பிடிக்கயிங்கேயென்னைநீசாருங்காணேன் (என்ன)

பக்கம்விழுந்தப்போருதே-அம்மணியெந்தன் *
பழுவெலும்பெல்லாம்நொருங்குதே ... *
முக்குருத்தம்மாளேயெந்தன் முன்னேயழையுங்கடி *
நிக்கின்றுயிர்த்தேனென்றோகத்திற்கொட்டிநாப்போல் (

வயத்தைபிரட்டுதையையோ-யென்னுருவ *
மார்பில்வந்துமுட்டுதையையோ ... *
வயத்தைப்பிடிக்கச்சொன்னால்களோயாய்வருகுதிப்போ
பயத்தியக்காரிகளாபலவிதமாய்ப்பேசுரீர்... (என்ன)

மருத்துவச்சிழவிசொல்-விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்.

திருநிறைந்திலக்கும்பிள்ளை தெய்வீகமானபிள்ளை *
குருவருள்மிகுந்தபிள்ளைக்குவலயமாளும்பிள்ளை ... *
வருவிழியுடையலீலாவதி திருவயற்றினின்றான் ... ... *
அருமையாய்ப்பிறந்தபிள்ளை யாண்பிள்ளையதிந்திமடமே *

பொது விருத்தம்.

இ-ம்-மோகனம்.

இந்தவருத்தத்துடன்மகனை ... ... *
யீன்றுளீன்றபிள்ளைதனைச் ... ... *
சொந்தத்தோழிமாரெடுத்துத் ... ... *
தூயநீராட்டிவெயில்வளர்த்தி ... ... *
வுந்திக்கொள்ளுஞ்செவ்வெண்ணை ... ... *
யூட்டிப்பெற்றஆச்சிமுன்னே ... ... *
வந்துகளித்துக்கொண்டாடி ... ... *
மகனென்றேநிலைகொடுத்தார் ... *



வசனம்

அப்போது அருகில்நின்ற சுற்றத்தார்களும் தாதிமார்களுங் கூடிபிள்ளைக்கி நீராட்டி வைத்துவட்டி வெயில்வளர்த்தியாக்கை ஊர்த்திசெவ்வெண்ணையூட்டிமகிட்டுக்கொண்டாடி அடியம்மணிலீலாவதியேயிந்தாயிதுஆண்பிள்ளையென்றுகையிற்கொடுக்கலீலாவதியம்மன் வாங்கிக்கொண்டாள்.

பொதுவிருத்தம்

இ-ம்-ஆசாவேரி.

கொடுத்தமகனைக்கையிலேந்திக் ... ... *
குமுதங்குமுத்துதிர்வதுபோல் ... ... *
யெடுத்துமுத்தமிட்டணைத்து ... ... *
யிருகொங்கையினூறியபாலை ... ... *
கொடுத்துவிழிமூர்க்குருவியுள்ளம் ... ... *
குளிர்ந்துகுளிர்ந்துகுப்புத்து ... ... *
படுத்தாளின்பக்கட்டல்படிந்தாள் ... ... *
பார்ப்பாள்சுத்திபார்ப்பாளே ... *

வசனம்

தன்கையிற் கொடுத்த மகனை வாங்கிக்கொண்டு யெடுத்துமுத்தமிட்டு யிரண்டுஸ் தன்னியத்திலும் பெருகியபாலைக்கொடுத்து மனங்குளிர்ந்து ஆனந்தம் பெருகி யின்பக்கட்டிலிற்றுயின்றா ளீலாவதி.

மருத்துவச்சிழவிசொல்

விருத்தம்-இ-ம்-பைரவி.

தெருவயந்தரசியான ... ... *
தேன்மொழியேநீவாழி ... *

திருவயத்துதித்தமைந்தன்... ... ... *
சிரஞ்சீவியாகவாழி ... ... ... *
வருவிழியுடையலீலா... ... ... ... *
வதியெனுமயிலேயாளும்... ... ... *
அருமையாய்வாழுகின்ற... ... ... *
அகந்தவிர்த்தேகுவேனே ... ... *

வசனம்

ஸ்ரீ சனங்களுக் கெல்லாம் அரசியாகிய லீலாவதியே நீவாழ்க - வுனது திருவயத்தி லுதித்த பிள்ளையானது சிரஞ்சீவியாகவாழ்க-வுமைப்பொருந் தும்படியானப்பெண்ணேயான் வாழும்படியாக னவிட்டுக்குப்போய்வருகிறேனடியம்மணி.

தோழிசொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

சதுர்விதவுபாயத்தோடுந் ... ... *
தரணியையொருகுடைக்கீழ்... ... *
அதிபதியாகினின்று .. ... ... ... *
ஆளுமன்னவனேபோற்றி .. ... *
மதிநுதல்வதனம்போன்ற... ... ... *
மங்கைலீலாவதிப்பெண் ... ... *
பதிதனையாளநல்லப் ... ... ... *
பாலனைப்பெற்றனளையா... ... *

வசனம்

வாருமையா சுவாமி - ராஜாதிராஜவுத்தண்டராஜகெம்பீரராஜபரமேஸ்வராயின்றையத்தினம்பட்டத் தரசியாகியலீலாவதியம்மன்யிவ்வுலகனைத்தையுஞ் செங்கோல்நடாத்தும்படியானதிவ்விய அதிரூபலாவண்ணிய முடைய ஆண்பிள்ளையைப்பெற்றனளையாசுவாமி.



இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

மந்திரிமாரேகேளீர்... ... ... *
மங்கைமார்வந்தெனக்கு ... *
சந்ததிபிறந்தசேதி... ... ... *
சாற்றவான்முரசமார்ப்ப ... ... ... *
இந்திரவீணைகொஞ்ச... ... ... *
யெழிலினுமாரிபெய்ய ... ... *
பந்தமாயெனைப்போல்கீர்த்தி ... ... *
பாரினிலெவர்பெற்றாரே ... ... ... *

வசனம்

வாருங்கள்மந்திரிமார்களே-நமதுதோழிப்பெண்கள்வந்து யெனக்குபுத்திரன்பிறந்தானென்று சேதிசொல்ல யெனதுகெடியிலேயே அந்தர துந்துமி யரையுது-யிந்திரவீணைகொஞ்சுது தேவபுஷ்பமாரி பெய்யுது யினியிந்த வுலகத்தில் யிவ்விதமானகீர்த்தி யார்பெற்றார்கள்சொல்லுமந்திரிமார்களே.

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

அணிபெறமுடிதரித்த... ... ... *
ஆண்டவாவுமக்குரத்ன... ... ... *
மணியெனவுதித்தபிள்ளை... ... ... *
மகத்தானயோகசாலி ... ... ... *
திணிபெறசெங்கோல்தாங்கி... ... *
ஜெகமொருகுடையிலாள்வான்... ... *
இணையிலாதரசேபிள்ளைக்... ... ... *
கென்னபேரிடநினைத்தீர் ... ... *

வசனம்

நவரத்னகசித முடிபுனைந்த நராதிபனே கேளும்-பிரத்தியின்னே யானனு மகத்தான யோக சாலியாகவும் யிந்த உலகத்தை யெல்லாம்வொருகுடைக் கீழ்நின்று ஆளவல்லவனுகிய யிருப்பால் அந்தக்குழந்தைக்கிப்பே ரென்னசொல்லுவையாகவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ய்-சாவேரி.

பரந்தவந்தரசெல்லாம்... ... ... *
பண்புடன்றிறையளிக்க ... ... ... *
சிறந்தநங்கொலுவில்வாழும்... ... *
சீருள்ளவமைச்சமாரே... ... ... *
நிறைந்தசெங்கோல்செலுத்தி... ... *
நீதிவந்தழைத்துவோங்கப்... ... *
பிறந்திடும்புதல்வனுக்கு... ... ... *
பேர்பிரகலாதனென்னே ... ... *

வசனம்

அரசர்கள் திறைகொணர்ந்து அளக்கும்படி சந்தோஷித்து டன்நமதுகொலுவில்நிறைந்திருக்கும் அமைச்சர்களே நல்லசுபதினத்தில் பிறந்தபிள்ளையாகையால் அவனுக்குப் பிரகலாதனென் றபேர்அளித்தோமந்திரி.

தாலாட்டுகிறதரு

இ-ய்-நீலாம்புரி.

ஆராரோஆரிரோஆராரோஆரிரோ ... *
தாரார்புயம்படைத்தரசருஞ்செய்புண்ணியத்திரு ... *
போலவந்துதித்தபிரகலாதனனே நித்திரைசெய் (ஆராரோ)



பேரணியுமன்னர்பெருமையுடனேருமை ... *
பாரரசிரணியனார்பாக்கியமேகண்வளராய் ... (ஆராரோ)
திங்கொளிவானயெந்தன்தேனமுதேமுக்கனியே ... *
செங்கனியேயறுஞ்சுவையேசெல்வமேகண்வளராய் (ஆரிரோ)
பூதலத்தோர்போற்றும்பொன்னேநவமணியே ... *
நிதொன்றிலாதசெல்வத்திருமகனேநித்திரைசெய்... (ஆராரோ)

இரணியன்சொல்- விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

கொலுவிநிலேவலஞ்செய்யுங் ... ... *
கொடியகஞ்சுகியேகேளாய் ... *
வலியபெறும்நமதுசேனை ... ... *
மன்னவன்சம்பாசுரன் ... ... *
இலகியவிசாலக்கண்ணன்... ... ... *
யெரிகண்ணன்புகைக்குங்கண்ணன் ... *
அள்விராப்பலை . . யைப்போ ... ... *
தழைத்துநீவருவாயே ... ... *

வசனம்

ஆடா அடா அநகஞ்சுகியே நம்முடைய தளகர்த்தரான சம்பாசுரன் திரும்பாசுரன் - விசாலாட்சதன் அக்கினிக்கண்ணன் யிவர்களை யெல்லாம்- இத்தக்ஷணத்தில் அழைத்துவாராய்கட்டியனே.

கட்டியன்சொல்

கவி.

பம்பரமதுபோல்... ... *
அம்பரஞ்சுழலத்... ... *
அம்புராட்சதருடனே... ... *
சம்பான்வருவாய்... ... *

மகு

சம்பாசுரன்வருகிற

விருத்தம் இ-ம்-கல்யாணி.

அம்பரத்தவன்னிலவாறும் ... ... *
அமரர்கள்நடுக்கங்கொள்ள ... ... *
இம்பருந்திருக்குமன்னெ ... ... *
னிரணியனழைத்தாரென்று ... ... *
செம்படனவுணர்சேனைத் ... ... *
திரளுடனெழுந்திருந்து ... ... *
சம்பாசுரன்முதலெல்லோருஞ் ... ... *
சந்நிதிட்கின்வந்தனரே ... ... *

தரு-இ-ம்-சங்கராபரணம்

தாளம்-ஆதி.

பல்லவி.

சம்பாசுரனும்வந்தானே-தளகர்த்தன் ... *
சம்பாசுரனும்வந்தானே ... ... *

அநுபல்லவி.

சம்பாசுரனுடனிரும்பாசுரனும்வெற்றிக் ... *
கும்பாண்டகன்னனுடன்செம்பாண்ட ... *
கன்னனுமாய் ... ... (சம்பா)

சரணங்கள்.

கட்டிவல்லயம்பூட்டியே கட்டாரிசூரி *
இடையிலுடைவாள்கட்டியே ... ... *
நாட்டிகளுடன்வெகுமேட்டிமேட்டிகளாக ... *
போட்டிகள்பேசிராஜன்பேட்டிகன்காணவென்று (௧)

அண்டரண்டம்நடுங்கவே-தவஞ்செய்யும் ... *
அந்தணர்நெஞ்சொடுங்கவே ... ... *
கொண்டலெனமுழக்கமண்டிகினத்துடனே *
எண்டிசைகார்க்குந்தேவர்கண்டுபிதிபிக்கங்கொள்ள (௨)

திக்குகளெட்டும்வெல்லவே-யிரணியன்பேர் *
தேசங்களெங்குஞ்சொல்லவே ... ... *
வக்கிரதந்தராட்சதருக்கிரமுடனேகூடி ... *
அக்கிரமஞ்செய்யவென்றுகொக்கரித்தார்பரிந்து (௩)

தளகர்த்தன்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

இடிபிடித்ததுபோற்கூவி ... ... *
யெங்களையழைத்தபோது ... ... *
படியிசையரக்கர்வந்தோம் ... ... *
பகைத்தவருலகினுண்டோ ... ... *
வடிவுள்ளமன்றுநீயும் ... ... *
வன்மையாயெத்தனுக்கும் ... ... *
அடியடவுநாசெய்வீருன் ... ... *
றுணையடிபோற்றிபோற்றி ... ... *

ராட்சதர்சொல்-விருத்தம்

ஆனந்தபைரவி.

அண்டமகண்டமுமிடிக்கவோ ... *
அவனியொன்னலறவொடிக்கவோ ... *
எண்டிசையொன்றுப்பிடிக்கவோ ... *
எழுகடல்நீரைகுடிக்கவோ ... *
தெண்டிசையெமனையடிக்கவோ ... ... *
தேவனாயமதில்நொடிக்கவோ ... *
ஆண்டவாமுனிவனைப்போடிக்கவோ ... *
சொல்லுமெமதுதோள்துடிக்குதே ... *

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்.

வெம்புராட்சதர்களெல்லாம் ... ... *
விண்ணப்பஞ்செய்துநிற்க ... ... *
சம்பரன்முகத்தைநோக்கித் ... ... *
தாரணியெங்குந்தேடி ... ... *
தம்பிதன்னுயிரைக்கொன்ன ... *
தன்மேழாஅரியைப்பற்றி ... ... *
இப்புறக்கட்டிக்கொண்டு ... ... *
யிட்சணம்வருகுவீரோ ... ... *

வசனம்

வாருங்கள்தளகர்த்தனுன சம்பரனுரா நிகும்பனுரா அக்கினிக்கண்ணு விரோணிதக்கண்ணு நீங்களனைவருஞ் சென்று வென்றம்பியாகியஇரணியாக்கனைக்கொன்ன ஹரியானவன்யெங்கேயிருக்கிறானென்றுதேடிப்பார்த்துப் பிடித்துக்கட்டிக்கொண்டுவாருங்கள்சேனைத்தலைவர்களே.

தளகர்த்தன்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

அப்படித்தானேதேவே ... ... *
சரிவித்தப்படிசென்று ... ... *
ஒப்புடனுலகமெல்லா ... ... *
மோடியேதிரிந்துப்பார்த்து ... *
மைப்புருஹரியைக்கண்டு ... ... *
மடனுறப்பிடித்துக்கட்டி ... ... *
மெப்புடன்வருவோமெங்கள் ... ... *
மேன்மைநிரயத்தானே ... ... *

வசனம்

தேவரீருத்தரப்படிக்கி நாங்கள்போய் யித்தவுலகனைத்தை புந்தேடிப்பார்த்து அந்தஹரியைக்கண்டுப் பிடித்துமடவோமெ



டல்சேர்த்து யிறுக்கிக்கட்டிக்கொண்டு வருகிறோம் யெங்களுடை யதுஜிவிரபராக்கிரமத்தைப்பாருமையாசுவாமி.

ராட்சதர்சொல்-தரு

இ-ம் பைரவி-ஏகதாளம்.

கண்ணிகள்.

வந்தசோராட்சதர்-உலகமெங்கும் ... *
வந்தாரோராட்சதர் ... ... *
இந்திரலோகம்புகுந்துயிந்திரனை ... ... *
இணைத்துப்பிணைத்துமுடிக்கிக்கடிக்கி (வந்தாரே)

பருதிலோகம்புகுந்துசூரியனைப் ... *
பார்த்து-ஆர்த்து-சேர்த்து-சோர்த்து (வந்தாரே)

அரன்ஹரிலோகம் புகுந்துஅவரை ... ... *
அங்குங்காணமலேயெங்குந்திரிந்து (வந்தாரே)

பிரம்மலோகம்புகுந்துபிரமாவை ... ... *
யெருக்கோதுரித்திதுரத்திநெருக்கி (வந்தாரே)

தர்மலோகம்புகுந்துயெமனைத் ... ... *
தண்டைப்பிடுங்கிக்கொண்டடக்குமுடக்கி (வந்தாரே)

முனிவர்மடங்கள்புகுந்துமுனிவர் ... *
முயங்கும்வேள்வியைமயக்கிஇயக்கி (வந்தாரே)

மனிதர்லோகம்புகுந்துமனிதர் ... *
வணங்கியிணங்கிருணங்களைக்கொண்டு (வந்தாரே)

சம்பரன்சொல்-விருத்தம்

இ-ம்-கருட்டி.

வந்தராட்சதர்களெல்லா ... ... *
மன்னனைவணங்கித்தேவர் ... ... *

சிந்தனைப்படியேயிந்த ... ... ... *
தேசமுமுலகமெங்கும் ... ... ... *
முந்தியேநடந்துதிக்குவிஜயமே ... ... *
முயன்றோம்நாங்கள் ... ... *
வித்தைசேரரியைக்காணோ ... ... *
மெல்லடிபோற்றிபோற்றி ... ... *

வசனம்

வேணுமையாயிரணியேஸ்பரா அடியேங்களெதிக்குவிஜயஞ்செய்துவரச்சொன்னீரோ-யிந்திரலோகம் அக்கினிலோகம் பிரமலோகம் கைலாசம்வைகுண்டம் மெங்கும் தாரணைத்தேடிபார்க்கும்போது வும்முடைய நாமதேனமேயல்லாமல் ஹரியென்கிறபேர் யெந்தெந்த உலகத்திலேயுங்காணோமையாசுவாமி:

இரணியன்சொல்

கவி.

அரிதனைப்பிடித்துக்கட்டி *
அனுதினம்வதைசெய்வேனான் *
சொரிதிகழ்மனைக்கிநீங்கள் *
செல்லுவீர்செல்லுவீரே *

வசனம்

நமதுபாலகவனைஅந்தஹரியையெந்தவிதத்திலும்பிடித்து வதைசெய்கிறேன் நீங்கள்யாவரும் தங்கள்தங்கள் அரண்மனைக்குப்போய்சேருங்கள்சேனைகளே.

பொது-சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

விடைகொடுத்தனுப்புஞ்சேதி ... *
விறைவுடன்சங்கலர்தன் ... ... *



அடல்பெருக்கலாதன்பொல்லா ... ... *
வனுகலாதனன்றுங்கேட்டு ... ... *
நடைபெருமீசன்வேதன் ... ... *
ஞகர்கோன்றன்னைநாமே ... ... *
யிடனுறப்பிடித்துக்கட்டி ... ... *
மீள்வமென்றெழுந்திட்டாரே ... ... *

சங்கலர்தன்வருகிறதரு

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மூரன்மிக்கசெய்வுக்கிர யிரணியப்பிரபலமக்கள்
மூவருமேவினரோ ... ... *

அநுபல்லவி.

திமைமுத்துங்கடல்முத்துந்தமைமுத்துஞ்சவைமுத்துஞ்
சேடனு : நடுங்கிடவே ... (மூரன்மிக்க)

சரணங்கள்.

வட்டவைக்கனல்வெருண்டுபிடரிப்புறமிருண்ட *
வாருதியொளித்திடவே ... ... *
கடக்கக்காமவிதற்குள்படையிற்கனல்தெரித்த ... *
கடலிநீசொளித்திடவே ... (மூரன்மிக்க)

திசையெட்டுங்கிரியெட்டும்விசையகிரிவெட்டும்...*
திசைதிசைசுழன்டிடவே ... ... *
விசையுட்கிஅசைவுட்கித்தசைவுட்கிமனமுட்கி *
முனிவர்கள்மெலிந்திடவே (மூரன்மிக்க)

நவரத்னமணிவைத்தசுவர்னப்புரம்வெருட்டி *
நானிலமதிர்ந்திடவே ... ... *
புவனப்பரிநடத்துங்கவலப்பிறமன்மெச்சி *
புவந்தனமியத்திடவே (மூரன்மிக்க)

சங்கலர்தன்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

தரணியீரேழுமாண்டதந்தையேபோற்றிபோற்றி *
விரவுடனெங்கள்திண்டோள் வீங்கியேதினவுதீர *
நிறமுடனுனக்குவேண்டுஞ் செய்கைப்புங்கையிலேமேலா
கறவிலாவூழியத்தைக் கட்டளைவிட்டாள்வீரே *

வசனம்

சரணம் சரணமையா சுவாமி யெங்களைப்பெற்றெடுத்ததந்தையே-யிப்போதுயெங்களுடைய புஜங்களும்வீங்கியதினவுகள் திரும்படி யாவும் உன்னுடையநினைவின்படி சகலகாரியமுங்கை கூடும்படியாகவும் யெங்களுக்கான ஊழியங்கள்செய்யும்படியாய் கட்டளையிடுமையாசுவாமி,

இரணியன்சொல்-தரு

இ-ம்-கல்யாணி ஏகதாளம்.

பல்லவி.

தைத்தரேநீங்களெந்தன்முன்னேயிப்போ *
வந்தகாரியஞ்சொல்லுங்கள் ... *

அநுபல்லவி.

தந்திரமுடன்குழவந்தகாரியஞ்சொன்னால் ... *
இந்தக்ஷணமேவரந்தந்திடுவோமேயென்றும் (தைத்த)

சரணங்கள்.

மண்ணினைபெயர்க்கவோவிண்ணினைப்பெயர்க்கவோ... *
மாரிதனைமறிக்கவோ... ... ... *
ஒன்றுமேழுமிருநூறுப்பதுகண்டு நெருப்பாநீத்து... *
உருக்கவோசுருக்கவோமுறுக்கவோநெருக்கவோ (தைம)



அண்டத்தைவிரட்டியேதண்டித்துநிரட்டியே... *
அடுக்கும்நிலசுருட்டியே ... ... *
எண்டிக்குமலைகளைகண்டித்துப்பொடியாக்கி ... *
எத்தவோமாத்தவோதூத்தவோயாத்தவோ (தைத்த)
சங்கலர்தர்லாதாபொங்குமனுக்லாதா ... *
சிங்கமுகவிலாதா ... ... ... *
யுங்கள்மனதுநிலைசங்கையில்லாமலே... ... *
ஓதுங்கள்போதுங்கள்மோதுங்கள்காதுங்கள் *

சங்கலர்தன்சொல்விருத்தம்

இ-ம்கௌளிபந்து,

இத்துநீர்சொன்னதெல்லாம்பெரியதேயரியதல்ல *
சங்கரன்கையிலையோடுஞ்சதுர்முகனுலகத்தோடும் *
பங்கயச்செல்வர்கோனைப்பிடித்துடன்கட்டிக்கொண்டு *
எங்கட்கருத்தமுந்தியிக்கணம்வருகுவோமே ... *

வசனம்

அகோவாருமையா சுவாமிதந்தையே யிப்போதுதேவரீர் சொன்னகாரியமெல்லாம் அரிதல்ல மெத்தயெளிதானகாரியம் ஆகையால் அந்தப்பரமசிவனைகைலாசத்தோடும் பிரமதேவனை சத்தியலோகத்தோடும்தேவேந்திரனை அமராபதிபட்டணத்தோடுஞ்சேர்த்துக்கட்டிக்கொண்டு வொருநொடியில் வருகிறோம் அந்தவூழியம்யெங்களுக்குகட்டளையிடுமையாசுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அய்விடையுமக்கேதந்தே ... ... *
னவனியைச்சுருட்டியுங்கள் ... ... *
செவ்வியதந்தைதன்னைச் ... ... *
செருத்தமால்தன்னையுங்கூட ... ... *

வல்லியேகட்டிக்கொண்டு ... ... *
வந்திட்டாலருவேவிரம் ... *
ஒவ்விநான்சொன்னவண்ணம் ... ... *
வொப்பிநீர்செய்குவீரே ... ... *

வசனம்

அகோவாருங்கள்மக்களா நீங்களிப்போது கேட்டுக்கொண்ட ஆழியங்களைதடையில்லாமல்செய்யும்படியாய் வுங்களுக்குகட்டளையிட்டேன் ஆனலின்னமொருகாரியஞ்சொல்லுகின்றேன் கேளுங்கள் வுங்களுடையசிறியதொகப்பனுராகிய யிரணியாக்கதனைவாகஅவதாரங்கொண்டு யெதிர்த்துப்பாய்ந்துக்கொன்ன அந்த நாராயணனையும்பிடித்துக்கட்டிக்கொண்டுவாருங்கள்மக்களா.

சங்கலர்தன்சொல்விருத்தம்

இ-ம்-சன்யாசி

அவந்தனைப்பிடித்துக்கட்ட ... ... *
அண்ணனைப்போகச்சொன்னல் ... *
வுவந்தவன்கணத்திற்சென்று ... ... *
உலகமுங்கொள்ளையிட்டு ... ... *
கவந்தயத்தங்களாடக் ... ... ... *
குண்டுபோர்பொருந்தியுந்தன் ... *
அவந்தனைமுடிப்பானுதல் ... ... *
சுருக்குடனனுப்புவீரே ... ... *

வசனம்

கேளுமையாசுவாமி யெங்கள்பிதாவே- நீர்சொல்லியப்படி அந்தநாராயணனைப்பிடித்துக்கட்டிக்கொண்டு வருவதற்குயெங்களுடையதமையன் பிரகலாதனனை அனுப்பினால் அவன்போய்அந்தஹரியுடனே போர்செய்துஜெயங்கொண்டு யிந்தக்ஷணத்திற்தடையில்லாமல் கட்டிக்கொண்டுவருவான் ஆதலால் அவனையனுப்புமையாசுவாமி.



இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

வழுத்தியவண்ணஞ்செய்வேன் ... *
மைந்தரேபோய்வாருங்கள் ... ... *
இழைத்தநங்கொலுவில்நானு ... ... *
யிசைந்திடும்வமைச்சமாரே ... ... *
செழித்தயென்மகன்பாற்சென்று ... *
சீக்கிரமாயுனதந்தை ... ... *
அழைத்தனனென்றுரைத்து ... ... *
அவன்றனைவரச்செய்வீரே ... *

வசனம்

கேளுங்கள்மக்களா நீங்கள் சொல்லியப்பிரகாரஞ்செய்கின்றேன் - யிப்போது போய் வாருங்கள் அகோவாருங்கள் மந்திரிமார்களே யென்னுடையகுமாரனுகிய பிரகலாதனனை நானழைத்தேனென்று சொல்லி அதிசீக்கிரமாயழைத்து வரச்செய்யும்மந்திரிகளே,

மந்திரிசொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

கண்டதுகொலுவிற்சொல்லுங் ... ... *
கஞ்சுகிகேளாயிந்த ... ... *
தெண்டிரைக்கடல்சூழ்வையந் ... ... *
திகழ்நவகண்டம்வானங் ... ... *
கொண்டொருகுடையிலாளுங் ... ... *
கொற்றவன்பாலன்றன்னை ... *
கண்டுநீஅழைத்திப்போது ... ... *
கடுகெனத்தொடியில்வாராய் ... *

வசனம்

அடாவாடா ஆதாகஞ்சுகி, நமது இராஜாதிராஜனுன திரிலோகாதிபதியிரணியமஹாராஜனுடையகுமாரனுகிய பிரகலாதனையிந்த ட்சணத்தில் அழைத்துவாருங்கள்பிள்ளாய்.

கட்டியன்சொல்.

பாணி.

குண்டகும்புயத்தோன் ... *
எண்டிசைக்கரசன் ... *
தண்டமர்பால ... *
இன்றுநீவருவாய் ... *

பிரகலாதன்வருகிற விருத்தம்.

இ-ம்-பைரவி.

விண்ணவரொவரும்வேத ... ... ... *
வேதியரொவரும்வாழும் ... ... ... *
மன்னுனோரொவருஞ்செய்த ... ... *
மாதவம்வெளிவந்தாற்போல் ... ... *
தன்னுமெந்தனையேதாளும்... ... ... *
நாவினில்விடாமலார்த்த... ... ... *
அன்னைக்கேள்பிரகலாதன் .. ... ... *
ஆண்டவன்முன்வந்தானே ... ... ... *

தரு-இ-ம்-பியாகு

அடதாளம்.

பல்லவி.

நாதன்வந்தான்ஜெயப்பிரக... ... *
லாதன்வந்தான்... ... ... *



அநுபல்லவி.

ஆதவன்முதலியபத்தர்தொழுதிட... ... *
அவுணர்கள்கண்டுபயந்தொளித்திட ... (நாதன்)

சரணங்கள்.

சுத்தநவமணிரத்னமுடியின்ன ... *
சோதிப்புயமிலங்கவெழில் ... ... *
அங்கணிமார்பில்தங்கப்பதக்கந்தன்ன .. *
பூந்தாள்வினைகள்குலுங்க ... ... ... *
சொந்தச்சரப்பணிமுத்தமாலைபன்ன ... ... *
குழந்தைக்கு நிகருண்டோகோடிமன்மதனென்ன *
எத்திசையிலுள்ளோர்சந்தோஷமாய்சொன்ன... *
இரணியமன்னவனிடதோன் றுடிக்கவென்ன (நாத)

அன்பத்தோரட்சரம்அடைத்துதாற்கவி ... *
யாதுமெத்தெரிந்தோர்தன்ன... ... ... *
அத்தக்காணங்களைப்பெருபூத... ... *
மனத்தைப்பரிநரைபரித்தர்... ... *
உம்பரியர்மலர்ப்பதங்கண்டவர்... ... *
ஓமென்ற அட்சரத்தானுள்ளக்கொண்டவர் ... *
தம்புமடியவரிகப்புடன்னெழும்... ... *
நாராயணுவென்றபாராயணஞ்செய்து... (நாதன்)

அண்டபிண்டமீரேழண்டிசையிலுமுள்ளோர்... *
அவர்வினைத்தாறுதிய-வெரு... ... *
அந்தணர்சோபனஞ்சொல்லவேபுஷ்பம் ... *
அமரர்கள்தான்பொழிய ... ... *
கண்டபேர்களெல்லாந் தெண்டமிடவேமெத்தக் *
குரும்பில்மாயவன் பாதமனதில்வைத்த .. *
தொண்டனுனபிரகலாதன்தந்தையுந்த *
நாங்கிடமிரணியன்கிட்டஅழைக்கப்பெற்த (நாதன்)

பிரகலாதன்சொல்போற்றிவிருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

மன்னவர்மன்னாபோற்றி ... ... ❊
 மண்டலாதிபனேபோற்றி ... ... ❊
உன்னியேயுலகமெல்லா ... ... ❊
 மொருகுடைநிழலிலாண்டு ... ... ❊
தன்னிகரிணையில்லாத ... ... ❊
 தந்தையேபோற்றிபோற்றி ... ... ❊
என்னைநீரழைத்தசேதி ... ... ❊
 யியம்புவாய்போற்றிபோற்றி ... ... ❊

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

பணித்திடவுவந்துவந்தப் ... ... ❊
 பாலகாபிரகலாதா ... ... ❊
இணைத்தவுன்றம்பிமார்கள் ... ... ❊
 மீசனைவேதனோடு ... ... ❊
தணித்திடும்அமரர்கோனைச் ... ... ❊
 சதிருடன்பிடிக்கச்சென்றார் ... ... ❊
கணங்கொடுநீயுமென்னக் ... ... ❊
 காரியஞ்செய்குவாயே ... ... ❊

வசனம்.

வாருமப்பாகுழந்தாய் பிரகலாதனே யிப்போதுவுன்னுடை ய தம்பிமார்கள் பரசிவனையும் பிரமதேவனையும் தேவேந்திரனை யும்பிடித்துக்கட்டிக்கொண்டு வருகிறதாகச் சொன்னார் ஆகையால் நீயென்னசாமார்த்தியஞ்செய்வாய் சொல் அப்பாபிரகலாதனே



பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

பிச்சைக்குக்கையேந்துண்ட ... ... ❊
 பித்தனார்மேலும்யார்க்கும் ... ... ❊
இச்சகப்பஞ்சாங்கத்துக் ... ... ❊
 கிசைந்திடும்பாப்பான்மேலும் ... ❊
கொச்சவானவர்கோன்மேலுங் ... ... ❊
 குமாரரையேவச்சொன்ன ... ❊
உச்சிதந்தன்னையானு ... ... ... ❊
 மூவர்த்திட்டேன்மகிழ்ந்திட்டேனே ... ❊

வசனம்

வாருமையாயென்னைப்பெத்தபிதாவே பிச்சையெடுத்துவு ண்டபித்தன் பேரிலும் வெளியோர்களுக்குப் பஞ்சாங்கஞ்சொ ல்லிப்பிழைக்கும் பாப்பான்பேரிலும் கொஞ்சமாகியபலத்தை யுடையதேவேந்திரன்பேரிலும்குழந்தைகளையனுப்பினவுசிதம் மெத்தநன்றாச்சுது யெனக்குஞ்சந்தோஷமாச்சுதையாவாமி.

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

பண்ணியாவுருவுகொண்டுப் ... ... ❊
 பார்த்தவுன்சிறுபிதாவைக் ... ... ❊
கொண்ணமால்தன்னையத்தி ... ❊
 கொண்டுநீவிஜயத்தோடே ... ... ❊
விண்ணவரொருவருமெச்ச ... ... ❊
 வஞ்சமாய்வென்றசால ... ... ❊
இன்னையில்வந்துசேர்வா ... ... ❊
 யென்மனங்குளிரத்தானே ... ... ❊

வசனம்

வாருமப்பா பிரகலாதனே வுன்னுடைய சிறுபிதாவாகிய யிரணியாக்ஷனை பண்ணியாயுருவுகொண்டு பாய்ந்துக்கொன்ன அந்தநாராயணன்பேரில் யெதிர்த்துப்போர்ச்செய்துபிடித்துக் கட்டிக்கொண்டு யின்றயதினமேயென்மனதுசந்தோஷிக்கத்தக்கதாகவொருட்சணத்தில்வந்துசேருமப்பாபிரகலாதனே.

பிரகலாதன்சொல்-தரு

இ-ம்-ஆனந்தகளிப்பு தாளம்-ரூபகம்

ஹரியெங்கேயிருக்கிறானையா-அந்த *
ஹரியிருப்பிடமெனக்கறியச்சொல்லையா *

காணுதற்கரிதானவேடன்-குழலிக் ... *
கள்ளன்வடிவெடுக்குங்குள்ளநீமோடன்; *
ஊனுக்குமன்னுண்டபாடன்-முன்னே *
உனக்குப்பயந்தொளிக்குந்தனக்கல்லோகோடன் (ஹரி)

அவனைப்பிடிக்கப்போகச்சொன்னால்-யினி... *
யானைபிள்ளையல்லநான்சாண்பிள்ளையென்னால் *
விவரிக்கவேண்டாம்நீமன்னா-வுனக்கு *
வெண்டும்போதழைப்பிக்ககாண்பிப்பின்ன ... (ஹரி)

வோடுகிறவனைக்கண்டாலே-தூரத்தி ... *
யோடுவர்க்கெளிதென்றுநாட்டோர்சொல்லாலே *
நாடியொளிப்பவன்பின்னாலே-பிடிக்க *
நானேதேடிப்போவேனோவுன்னாலே ... (ஹரி)

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்பந்துவராளி

ஏழிருலோகமாண்டுயிறை ... ... *
முறைசெலுத்திக்கொண்டுங் ... *
கோதையாம்புத்திக்கொண்டாய் .. *
கோலமால்வேணுமானால் ... ... *



தானுமோர்சிட்டிகைக்குள்ளே ... *
சமர்த்துடனழைப்பேன்பின்னால் ... *
வாழுமென்தந்தையேநின் ... ... *
மலர்ப்பதம்போற்றிபோற்றி ... ... *

வசனம்.

வாருமையாவென்னைப்பெத்த பிதாவே - நீ யிந்தயீரேழுலோகமும் செங்கோல்செலுத்திகர்த்தவ்வியமுஞ்செலுத்திக்கொடநீயுனக்குகோதைபுத்தியெங்கேயிருந்தது அப்படிப்பண்ணி வுருவங்கொண்டநாராயணனை வுனக்குவேண்டும்போதுவொருசிட்டிகைக்குள்ளேயழைப்பிக்கிறேன் அப்போதுவுன்னுடையகோபத்தைதீர்த்துக்கொண்டுவாழலாமையாசுவாமி.

பொதுவிருத்தம்.

இ-ம்-மோகனம்.

விடைகொடுத்தனுப்பிப்பின்பு ... ... *
வேதவேதியர்கள்வானோர் ... *
அடவுடன்புகழ்ந்துபோற்ற... ... *
அரியனைப்பொலியமேவி... ... *
நடனசங்கீதலோல... ... ... *
ஞகவேரயக்கும்போது ... ... *
தொடைபல்யாழ்முனிவனான... ... *
சுருதிநாரதர்வந்தாரே... ... ...

நாரதர்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி:

பல்லவி-

நாரதமாமுனிவந்தார்-மஹா... ... *
நாரதமாமுனிவந்தார்... ... *

அநுபல்லவி,

சீருடன்வீணைமீட்டி-சரிகமபதநிவென ... *
நேருடன்நிசைபூட்டி ... ... (நாரதமாமுனி)

சரணங்கள்.

பெய்யுந்தில்லைவெட்போல்மெய்யில்வெண்பொடிபூசி... *
ஐய்யசுருதிமறைசெய்யநாவினிற்பேசி ... ... (நாரதமா)
தன்மேகமண்டலமிரண்டையுங்கைப்பிடித்து ... *
தண்டைசிலம்புகாலில்மண்டிடவேநடித்து... (நாரதமா)
உருண்டருத்ராட்சங்கள்புறண்டமாலிகைசூட்டி .. ...*
முரண்டகலைமெங்கும்திரண்டிடவேநாட்டி... (நாரதமா)

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கேதாரகௌளம்.

நாரதமுனியேவாராய்... ... ... *
நானிலமுதலதாக... ... ... *
ஈரேழுபுவனத்துள்ள... ... ... *
யிகட்சியுப்புகட்சிதானும் ... ... *
நேருடனறிந்தாயென்றே... ... ... *
நீதெரிச்சேதியெல்லாம் .. ... ... *
யேருடனெந்தனுக்கு... ... ... *
யியம்புவாயறியத்தானே ... ... *

வசனம்.

அகோவாருமையாநாரதரே- யிந்தபூலோகமுதலாயுள்ள யீரேழுலோகத்திலுஞ் சஞ்சரிக்கப்பட்டவரும் அங்கங்கேநடக்கும் யிகட்சிகளும் புகட்சிகளும் யிழிவுகளும் பெருமைகளும் நீர்ச்செவ்வையாய்த்தெரிந்துக்கொண்டவரானதால் யெந்தலோகத்தி யெந்தயிகட்சியெந்தலோகத்திலெந்த புகட்சியிருப்பதுங்கண்டதுங்கேட்டதும் மெனக்குவொன்றுங்குறைவில்லாமல் யானறியும்படி சொல்லவேணுமையாநாரதரே,

நாரதர்சொல்-விருத்தம்-இ-ம்-கமாஸ்

மண்டலமெல்லாமுந்தன் ... ... *
மகிமையேமகிமையல்லால் ... ... *



கண்டதுமில்லவேறு ... ... ... *
காதிலுங்கேட்டிலேன்யான் ... ... *
மண்டமாகடந்தவேலாய் ... ... ... *
மைந்தனும்பிரகலாதன் ... ... *
திண்டிரலானசேதி ... ... ... *
செப்புவேனிப்போதானே ... ... *

வசனம்.

கேளுமையாயிரணியபூபாலகா இந்தஅண்டாண்டபுவனங்களெல்லாம்நான்சஞ்சரித்துப்பார்க்கும்போது அங்கங்கேவுள்ளதுகளையும்தேவதைகளும்புகடையமகிமையே ரிஷிஸ்வரர்முதலானவரும்தேவதைகளும்புகழ்ந்துக்கொண்டு யிருக்கக்கண்டதேயல்லாமல் வேறொருசங்கதியுங்காதிலுங்கேட்டதில்லை இதுவல்லாமலுன்னுடையகுலபுத்திரராகியமணியாகிய பிரகலாதனவ் விர்த்தாந்தமெல்லாங் கேட்டபடி சொல்லுகின்றேன் கேளும் மகாராஜனே

தரு-இ-ம்-சங்கராபரணம்-சாபு-தாளம்.

பல்லவி.

மைந்தன்சேதிசொல்லக்கேளையா ... ராஜாதிராஜா ... *
மைந்தன்சேதிசொல்லக்கேளையா ...

அநுபல்லவி.

இந்திராதிஸுரர்வந்திதசரணா ... ... *
விந்தையிரணியசூரந்தரசந்தர ... (மைந்தன்)

சரணங்கள்

எல்லோர்க்குஞ்சற்சனவிலாசன் உன்னிலுமதிக
வல்லோன்விற்பனன்பதிலோலன் சாதுசன்மார்க்க
சல்லாபன்மெய்க்குருக்குலன் குருமார்க்கமான
பொல்லாதவன்றிருசைலன் யோகநூலறிஞன் ... ... *
கல்விகள்நிதிசேஷிமும்தாணுமே
சொல்லும்போதுஅவர்க்கிடங்குங்காமேலுமே (மைம)
சந்தியத்தவருசாதீபவாக்கியம்-அதிபாத ... *
பந்திமுந்திமெய்ஞானவாக்கியம்-வேதபுரா ... *

ணத்திலும்விஸ்தாரமனுசிலாக்கியன்-லோகாதிலோக
மெத்திசையும்புகழும்பாக்கியன்-வுலகேபேரெடுக்கும் ✻
பத்தபாலகவிசுசிலன்அதிதவீ ... ... ✻
சித்தமுத்தனவனேபிரகலாதன் ... (மைத்த)
தென்னுமாமுனிவோர்கள்கூடி-பிரமலோகத்தில் ✻
வள்ளலேயுந்தன்புகழ்பாடி-பூசனைசெய்து ... ✻
பிள்ளைபிரகலாதனைக்கொண்டாடி-மகிழ்ந்தசேதி ✻
உள்ளதுஞ்சொல்லவந்தேனேடி-ஆகையினாலே ... ✻
மெள்ளக்குழந்தைக்கைத்துஅபிராயமாச்சுதே... ✻
பள்ளிக்குகந்துவைக்கத்தருணமும்வாச்சுதே (மைத்)

பொதுவிருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி.

நாரதர்நவிலக்கேட்டு ... ... ... ✻
நயந்துஉடல்புளகம்பூத்து ... ... ... ✻
பாரியபுயங்கள்வீங்கி ... ... ... ✻
பண்ணவர்முனிவர்தம்மேற் ... ... ✻
பிரியகருணையாகி ... ... ... ✻
சிந்தையில்மகிட்சிபொங்கி ... ... ✻
தேருடனிரண்யபூபன் ... ... ... ✻
நினைத்ததுயியம்புவானே ... ... ✻

வசனம்,

இப்படியாகத்தன்னுடையபுத்திரனாகிய பிரகலாதனனுடையவிர்த்தாந்தமெல்லாம்நாரதமகாமுனிச்சொல்லக் கேட்டுமகாசந்தோஷமானது தனக் கேசரீரமெங்கும் புளகாங்கிதங்கொண்டு புஜங்கள்பூரித்துசொல்லுகின்றவிதம்யெப்படியென்றால்

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கும்பகாம்போதி,

சுதற்குமுன்னினைத்தேன்யானும் ..
யிசைக்கும்நாரதரேநீயும் ... ..



மோதியத்தன்மையாலே ... ... ✻
முயர்ந்திடுநிமித்தியம்நன்றே ... ... ✻
ஆதலால்பிரகலாதனை ... ... ✻
வன்றனையமைத்தநாளில் ... ... ✻
வேதனூலோதவைப்பேன் ... ... ✻
விண்ணவர்நடுங்கத்தானே ... ... ✻

வசனம்,

அகோவாருமையா நாரதமுனிவரே-யிதற்குமுன்னமேநானும்அப்படித்தான்செய்யநினைத்துக்கொண்டிருந்தோம்-மனதுக்கு மனதேசாட்சி நீருஞ் சொன்ன படியினாலே மகா திவ்வியமான நிமித்தியமாச்சுதுயிப்போது திதிவாரம் நட்சத்திரம்யோகங்கரணமான பஞ்சாங்கமும் அமைந்த சுபதினத்தில்நமதுகுமாரனைபிரகலாதனை பள்ளிக்குவைக்கிறேன் நீருங்கூடப்பாடயெ ஊஸ்தானத்துக்குப்போய்வாருமையாநாரதமுனிவரே

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி,

என்னருகேவல்செய்யும் ... ... ... ✻
யேந்திழைமாரேகேளீர் ... ... ✻
பொன்னணிமனைக்குச்சென்று ... ... ✻
பூங்குழலாளமாது ... ... ✻
தன்னையேயகம்மகிழ்ந்தன் ... ... ✻
நலவுறவழைத்தாரென்று ... ... ✻
வண்ணமாமொழியாளிலா ... ... ✻
வதிதனையழைத்துவாரீர் ... ... ✻

வசனம்,

அகோவாருங்கள் பெண்களா-அடிவிசாலாட்சி அடிமோகனாங்கி-அடிவாலசௌகிலாம்பா-அடிபரிமளா செந்திஅடிரீங்கள் நமது அரமனைக்குச் சென்று நமதுமனை வியாகியலீலாவதியை யழைத்துவாருங்கள்பெண்களா-அப்படியேயழைத்துவருகிறோமையாசுவாமி,

தோழிகள்சொல் விருத்தம்

இ-ம் - நாட்டை,

அங்கனருங்குழலாளேயெங்கள்தாயே... ... ※
தாய்மார்தேவியருக்கரசியரே... ... ※
திங்களுமமுகத்தாளேஅழகின்றிலகத் ... ※
திப்பகுணவதியேதேன்மொழியினளே ... ※
நங்கையர்களெதிரில்லாப்பதியேலோக ... ※
நாயகியேயிரணியற்குத்தேவியான ... ※
மங்கையரேயுனதுமுகத்திலென்னவாட்டமை ... ※
வரச்சொன்னார்செப்பிவந்தவமுந்திடுமே ... ※

வசனம்,

கேளுமம்மாதாயே லீலாவதியே - யிப்போ நமதுமகாராஜன்சொலுமுகத்திலிருப்பதால்வுன்னை அவசரத்துக்கு அதிகரிக்கிமாயழைத்துவரச்சொன்னார்காருமம்மாதாயே,

லீலாவதிசொல்

சேபத்தியம்,

முத்தாமாமணிகட்டிநெற்றியினிலாடவே ... ※
முகபூர்ணசந்த்ரவொளிமூடிகியாட... ... ※
கொத்தமாலைகளாடகுழையூசலாடவே ... ※
கொங்கைதனில்மாலைய அருளங்கியாட ... ※
சத்தநூபுரத்தண்டைவெண்டையமுமாடவே... ※
தாழ்வானகைவொளிதயங்கியாட ... ... ※
பத்தமாத்துத்தங்கவிளைகையிலாடவே ... ※
பாங்கிமார்கவரியிருபாலுமாட... ... ※
சித்தகாதாளமத்தளமுமோங்க... ... ※
திருநாதவீணையிசைநாதமோங்கச்... ... ※
சித்ரனையிரணியனைமேவும்... ... ※
சுகலீலாவதிதேவிவருகின்றாளே ... ... ※



தரு-இ-ம்-நாட்டை-தாளம்-ஆதி

பல்லவி.

மங்கையர்குலபிமானி ... லீலாவதி ※
வந்தாளேயெசமானி ... ... ※

அநுபல்லவி.

பங்கயநறுமலர்வதனவொய்யாரி ... ... ※
பனிமொழிப்பிரகலாதனைப்பெற்றரசிக்காரி (மங்)

சரணங்கள்.

சர்பிணுக்கருந்துதிசெய்-சொல்லுங்கமல ※
வதிக்கேயிவள்சோடி ... ... ... ※
அற்புதமிகும்பொன்னுபரணவிசாலி ... ※
அஷ்டலட்சுமிவாசப்பிரிதிடபாக்கியசாலி (மங்கை)

நடைகட்குயிலன்னப்பேடு-மணி ... ※
நாகப்படமேமதனவீடு ... ... ※
இடைக்குப்பசுமையின்கதலியுந்தோற்குமே... ...※
அடியிடைக்கிணைமின்னல்கொடிவந்தயாற்குமே (ம)

நங்கையர்களங்கவரிவீச-அழகு ... ※
நளினத்துடனேநயம்பேச ... ... ※
சிங்காரமுடன்கோடிமங்கையர்விளக்கேந்த ※
ஜெயவிரணியனிருநயனமணிபோல்வந்த (மங்)

லீலாவதிசொல்- விருத்தம்

இ-ம்-கல்யாணி.

அன்னையேபோற்றியோற்றி ... ※
அமரர்கள்முதலாயுள்ளோர் ... ※
என்னையேவாழுமிங்ஙு ... ... ... ※
டெல்லிடத்தலைவாபோற்றி ... .. ※

நன்னிபசபையிலென்னை ... ... *
நயமுடனழைத்தசேதி ... ... *
தின்னமாயுரைசெய்வீருன் ... ... *
திருவடிபோற்றிபோற்றி ... ... *

வசனம்.

கேளுமென்பிராணநாயகா அந்தபுரத்திலிருந்த வென்னை பேருகாரியமாய் கொலுமுகத்துக்கு அழைப்பித்தீர் - அதைய டியாளுக்குத்தெரியச்சொல்லும்பிராணநாதா.

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கேதாரம்.

நாயகியேநீகேளாய்நவிலுவேனுந்தனுக்குத் *
தாயகமாகநம்மதனைய னும்வயதைந்தாச்சு *
ஞாயதாய்கலைகள்யாவுந் தலக்கவேபோதிவைக்க ...*
நேயமாயுனையிப்போது நிச்சயித்தழைத்தேனென்பெண்ணே

வசனம்.

அகோவாரும்பெண்ணேலீலாவதி நம்முடையக் குழந்தை யானபிரகலாதனனுக்கு - கல்விக்குப்பருவமான ஐந்துவயதாச்சுது - ஆகையால் அவனுக்குவித்தையாரம்பஞ்செய்விக்கவெனக் குமனதாய்வுன்னை அழைப்பித்தேனேயல்லாமல்வேறொருசேதியுமில் லைபெண்ணே,

லீலாவதிசொல்

கொச்சம்,

நாவலர்கள்போற்றுகின்ற நன்றுடர்வெய்யவுலகும் *
ஆவலுடன்வொருகுடையில் ஆளுகின்றநாயகனே *
காவலனார்சிந்தைதனிற் கருதமதற்கெதிருண்டோ *
எவளால்சொல்வதென்ன வுன்னிஷ்டப்படிசெய்வீரோ. *

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்,

வண்டுமொய்த்தனையக்கூந்தல் ... ... *
மங்கையேதோழிப்பெண்ணே ... ... *



மண்டமர்வேல்கைதாங்கும் ... ... *
மைந்தனையழைத்துவாராய் ... ... *

வசனம்.

அடிதோழிப்பெண்ணே யெனதுதவபுத்திரனாகியபிரகலாத னைநானழைத்தேனென்றுசொல்லி வொருநொடியில் அழைத் துவாரும்பெண்ணே,

தோழிபெண்சொல்- விருத்தம்

இ-ம்-கல்யாணி,

குண்டரும்புயத்தாய்போற்றிக் ... *
கோதிலாஞானதாயார் ... ... *
விண்டுனையழைக்கச்சொன்னார் ... *
வெழுந்திருந்தென்பின்வாராய் ... *

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

சந்திரமுகமுஞ்செய்யத்தாமரைக்கண்ணுமெய்ய ...*
சுந்தரபவழச்செவ்வாய்த்துலக்குபுன்னகையுஞ்சோதி
சிந்தாநுதலுமாயன்திருவடிபுனைந்தநெஞ்சும் ...*
இந்திரன்முதலோர்வாழ்த்த யென்னையானையன்வந்தான்

பிரகலாதன்வருகிற-தரு

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

வந்தான்பிரகலாதன்-தந்தைமுன்னே *
வந்தான்பிரகலாதன் ... ... *

அநுபல்லவி.

வந்தான்பிரகலாதன்யித்திராதிபவேதன் ... *
சிந்தாகுலம்போகவேவித்தையதாகவே (வந்தா)

சரணங்கள்.

காலப்பொழுதிலெழுவாலசூரியன்போல *
கதிர்மணிமுடிதுன்ன ... ...அதின் *

மேவச்சந்திரனைப்போலவிளங்கிய
வெண்குடைநிழல்அன்னைமன்னன்முன்னே (வந்தான்)

வச்சிரமிழைத்தபச்சைமரகதமாலிகை ... ✲
மார்பினிலும்பிலங்கப் ... ... பொ ✲
கச்சடனைமணிநட்சத்திரப்போலமின்னி ✲
கலகலென்றுஅங்கழனைத்அலங்க (வந்தான்)

மகரக்குண்டலங்காதில்தகதகவெனமிக்க ... ✲
மதியதுபோல்கொழிக்க ... ... நல்ல ✲
இகல்பெருத்தோள்களின்திகதிகவெனமிக்க ... ✲
இரண்டுவெல்லயத்துசெழிக்கப்புவிதழைக்க (வந்)

தன்னடைச்சதங்கைகள்மண்டிகலகலென்னத் ✲
தாமரைத்தாள்நவிலொலிக்க-இவ்வ
ருண்டிக்கடகமிரண்டுகைகள்தன்னில் ... ✲
கொழுந்துபோல்சொலிக்கப்புண்யம்பலிக்க (வந்)

தழைத்தஅன்னங்காலில்விழுந்துபெருந்தாட்போல் ✲
சாமரையிருபாலும்போட ... ... மழை ✲
வழங்கிடுமேகம்போல்முழங்கும்புரவியேறி ✲
மங்கையர்நடமாடவிஜயங்கூட ... (வந்தான்)

அண்டரானவருக்கும்பண்டமுதளித்திடும் ... ✲
ஹரிபாதத்தனைக்கூறி ... ... யிந்த ✲
மண்டலத்தவரோடும்விண்டலத்தவராகிச் ... ✲
வாதஞ்சொல்லத்தேரிஅன்புமீறி ... (வந்தான்)

பிரகலாதன்சொல்போற்றி

விருத்தம்-இ-ம்-பைரவி;

கன்னியர்பதியேயென்னைக் ... ... ✲
கண்மணியெனவேயீன்ற ... ... ✲
அன்னையேபோற்றியிந்த ... ... ✲
அப்புவிக்காசனுதேன் ... ... ✲



தன்னிடப்பாதியாகித் ... ... ✲
தயவிதிற்பிறந்ததாயே ... ... ✲
என்னைநிரழைத்தசேதி ... ... ✲
யியம்புவீர்போற்றிபோற்றி ... ... ✲

வசனம்.

ஆகோவாருமம்மாவென்னைப்பெற்றதாயே-வீட்டிலிருந்த வென்னைஅழைப்பித்தகாரியம் யெனக்குச்சொல்லவேண்டு மெய் மாதாவே.

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

தேசமுடன்மகன்தனையேயெடுத்தணைத்து ... ✲
நீநிதியேயென்னிருகண்மணியேமிக்க .. ✲
ஆசையுள்ளசெங்கரும்பேதேனேயிந்த ... ✲
அம்புவியையாளவந்தஅறிவுள்ளானே ... ✲
வாசமுள்ளநீராடிமாலைசூட்டி ... ... ✲
வஸ்திராபரணங்கள்வகையாய்ப்பூட்டி ... ✲
தேசமெல்லாம்புகழ்ந்தேத்தவேதமோதச் ... ✲
செல்லுவாய்நீமகிழ்ந்துசொல்லுவாயே ✲

லீலாவதிசொல்-தரு- இ-ம்-நாட்டை

தாளம்-அடசாப்பு.

பல்லவி-

பள்ளிக்குவைக்கவுந்தனையாஅழைக்குறார் ✲
பாலகாநீவாடா ... ... ... ✲

அநுபல்லவி,

தெள்ளித்தெளித்தயென் ... ... ✲
கண்மணியானவிநோதனே ... ... ✲
செழிக்குமன்புங்குணமும் ... ... ✲
தழைக்கும்பிரகலாதனனே (பள்ளி)

சரணங்கள்.

வாசமலர்வனப்பிலதிகவுபியனும் ... ... ... ✲
வதஷீடனுமகத்தியனுஞ்சநிஷீடனும்புலத்தியனும் ✲

காசிப்னும்பார்த்துவாசமுனியானூர் ... ... *
கத்துக்கொண்டதில்லேமெத்தப்பெரியவரானூர் (பள்ளி)

படிப்பும்வார்த்தைகள்பேசும் அடிப்புமுனக்குமேனும் ... *
பார்க்கும்போதுசேட்டுத்தோற்குமேயானுலும் ... *
தொடுத்தவித்தையும்புத்திக்கெடுத்துச்சொல்லுவதேதோ *
தொட்டுக்காட்டாதவித்தைசெட்டுப்போட்டாலும்வாராதே(ப)

செல்வத்துக்குமதிகல்விசெல்வமேயென்று ... *
செப்பும்பெரியோர்மொழிதப்பல்லவேயென்றும் *
சொல்வித்தையு விஜயவித்தையுநீயிக்க ... *
சொன்னுமொருகுருமுன்னலேயோதிவைக்க (பள்ளி)

பள்ளிக்கூடத்திருந்துபிள்ளைகளுடனின்று ... *
பாடமுஞ்சொல்லிக்கொண்டுவீடதனிற்சென்று ... *
கின்னாக்குதலையின்சொல்வள்ளக்கா அதிரம்ப ... *
கேழ்க்கவேணுமென்றென்னிவேழ்க்கையோகுதுரொம்ப(பள்ளி)

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்.

மன்னவர்மன்னேபோற்றி ... ... ... *
மண்டலாதிபனேபோற்றி ... *
உன்னியவுலகமெல்லா ... ... *
மொருகுடைநிழலிலாண்ட ... ... *
தன்னிகரிணையில்லாத ... ... *
தந்தையேபோற்றிபோற்றி ... ... *
என்னைநீரழைத்ததேது ... ... *
மியம்புவீர்போற்றிபோற்றி ... ... *

இரணியன்சொல்-விருத்தம்.

இ-ம்-கல்யாணி.

வந்தடிப்பணிந்துநின்ற ... ... ... *
மாகதக்குன்றேவாடா ... ... *
எந்தனுருயிரேவடா ... ... ... *
யென்னிருக்கண்ணேவாடா ... ... *



சுந்தரமணியேவாடா ... ... ... *
சூர்குலாதிபனேவாடா ... ... ... *
மைந்தனேவாடாமிக்க... ... ... *
மறைநூல்கவோதவாடா... ... *

இரணியன்சொல்தரு

இ-ம்-பியாகடை -தாளம்-ஜம்பை

பல்லவி.

வாடாபிரகலாதாகண்மணியேநீ... ... *
வாடாபிரகலாதா... ... *

அநுபல்லவி.

வோடாதேயினிவிளையாடாதே ... *
யிந்தாசப்மா... ... ... *

சரணங்கள்

சட்டமணிமார்பிலேயிட்டமுடன்னைத்தூக் ... *
கட்டிக்கொண்டுமுத்தமிட்டுக்கொள்ளகிட்ட (வாடா)

பேசும்பசுங்கிளிகூசும்மழலையின்சொல் ... *
நேசமுடனேகேழ்க்கஆசையாயிருக்குது ...(வாடா)

அந்தைகலகலென்னதொந்திப்பளபளென்ன ... *
எந்தன்மடியிலேனைமந்தாவோடிகிட்ட ... (வாடா)

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

அழிவிலாமகனே... ... ... *
பிழையிலாவேதம் ... ... *
மொழிவதற்குன்னை... ... ... *
எழிலுடனழைத்தேன்... ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கேதாரம்.

பேதனத்தெரிந்த... ... ... *
தாதகஞ்சுகியே ... ... ... *

நாதனுர்சுக்கிரனை... ... ... ※
நீதமாயழைப்பாய்... ... ... ※

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

அக்கினிச்சித்தித் ... ... ... ※
திக்கெனமன்னன்... ... ... ※
இக்கணமழைத்தார்... ... ... ※
சுக்கிரனேவருவாய்... ... ... ※

சுக்கிராச்சாரிவருகிறவிருத்தம்

இ-ம்-தோடி-

காதலனழைத்தாரென்று... ... ... ※
கஞ்சுகிசொல்லக்கேட்டு... ... ※
ஆவலாயெழுந்திருந்து ... ... ... ※
அரைதனிற்சர்விச்சோமன்... ... ... ※
மேவியேவுடுத்திக்கொண்டு... ... ... ※
விரவிபுத்தகங்கையேந்தி... ... ... ※
கூவியேயிரண்யபூபன் ... ... ... ※
கொலுவினில்சுக்ரன்வாரான்... ... ※

தரு-இ-ம்-புன்னுகவராளி.

தாளம்-அடசாப்பு.

பல்லவி.

சுக்கிராச்சாரியும்வந்தானே-அசுரர்குரு ※
சுக்கிராச்சாரியும்வந்தானே... ... ※

அநுபல்லவி.

சுக்குராச்சாரியும்வந்தான்... ... ... ※
தொல்லுலகிலுள்ளோர்க்கு... ... ※
வக்கிரத்திருந்தாலே... ... ... ※
உக்கிரஞ்செய்நவக்கிரக ... ... (சுக்)



சரணங்கள்.

இரணியநமவென்றுழ்வதத்தை-தினம் ... ※
யெண்ணியனவருக்கும்போதித்தேன்... ... ※
வரமதுகொண்டயிரவலறுகிய... ... ※
மன்னன்கனகனும்யென்றுளும்போத்தியே... (சுக்)
காதிர்தக்குண்டலமின்னவே-கருது... ... ※
புஸ்தகங்கைதன்னிர்துன்னவே ... ... ※
சோதிசேர்காவிஅரைதனிலென்னவே ... ※
சுத்தபவுத்திரம்பெத்திடும்வுத்தம... ... (சுக்)
முத்துவர்னக்கொடைதனைக்கொண்டுமுன் ... ※
கைதனிற்கமண்டலத்தெண்டு... ... ※
வைத்துசிறசினில்குல்லாவும்பூண்டு .. ... ※
மன்னவனென்னையேயுன்னினதேதென்று ... (சுக்)

சுக்கிராச்சாரிசொல்

விருத்தம்-இ-ம்-நாட்டை,

வடிவுளகஞ்சுகி... ... ... ※
கடினமன்னவன்பால்... ... ... ※
நொடியில்நான்வந்ததை... ... ※
அடவுடனுரைப்பாய்... ... ... ※

கட்டியன்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்.

ஏர்க்கம்வேயுலகைக் ... ... ... ※
கார்க்குமந்திரிகளே... ... ... ※
நீர்க்கமாங்கொலுவிதில்... ... ... ※
பார்க்கரவ்வத்தார்... ... ... ※

மந்திரிசொல்விருத்தம்,

இ-ம்-சுருட்டி-

அள்ளரியுலகாள... ... ... ... ※
வள்ளலேநமது ... ... ... ※

தெள்ளியகொலுவில்... ... ... ❊
வெள்ளிபும்வந்தார் ... ... ❊

இரணியன்சொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி,

நிரமுள்ளகொலுவில் ... ... ❊
அறிவுள்ளமந்திரி... ... ... ❊
குருவையிக்கொலுவில்... ... ❊
வருகவேசொல்வீர் ... ... ❊

மந்திரிசொல்விருத்தம்,

இ-ம்-தன்னியாசி,

உறமுளக்கொலுவில்... ... ❊
திறமுளக்கஞ்சுகி... ... ... ❊
நளபதிகுருவை... ... ... ❊
வருகவேசொல்வீர்... ... ... ❊

கட்டியன்சொல் விருத்தம்

இ-ம்-கேதாரம்,

துங்கபூசுரரே... ... ... ❊
எங்களாண்டவனுர் ... ... ❊
தங்கியக்கொலுவிதில்... ... ... ❊
பொங்கமாய்வருவீர்... ... ... ❊

சுக்கிராச்சாரிசொல்

விருத்தம்-இ-ம்-தோடி-

நாதனேயுங்கள்... ... ... ❊
நிதிலாக்கொலுவில்... ... ... ❊
ஏதுநீரழைதத... ... ... ... ❊
தோணுவீர்யெனக்கே... ... ... ❊

இரணியன்சொல்,

விருத்தம் - இ-ம்-பரிசு

வந்தசுக்கிரனே... ... ... ❊
அந்தமாயரியைநீ... ... ... ❊



சிந்தித்தசேதி ... ... ... ❊
வந்ததுயெனக்கே... ... ... ❊

சுக்கிராச்சாரிசொல்

விருத்தம்-இ-ம்-பைரவி,

அந்தமாயரியைச் ... ... ... ❊
சிந்தையில்நினைத்தால் ... ... ❊
நிந்தையாய்நரகம் ... ... ... ❊
வந்திடுமையா... ... ... ... ❊

இரணியன் சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி

சுக்குராச்சாரிகேளாய்... ... ... ❊
தொல்லுலகாள்வதற்கு... ... ... ❊
இக்கணம்வுதித்தெழுந்த... ... ... ❊
யென்னிடதனையனுக்கு ... ... ❊
தக்கதோர்வேதத்தியானம்... ... ... ❊
தன்னையேயோதிவைக்க ... ... ❊
அக்கினியைப்போல்சிறி... ... ... ❊
அழைத்தநாமுன்னைத்தானே... ... ❊

வசனம்.

வாருமையாசுக்குராச்சாரியரே - யிப்போது நம்முடைய குமாரனுகிய பிரகலாதனனுக்கு வேதத்தியானஞ் செய்வதற்குவுன்னையழைப்பித்தேனையாசுக்குராச்சாரியரே,

சுக்கிராச்சாரிசொல்

வசனம்.

அப்படியே யாதொரு குறைவில்லாமல் [உ]ம்முடைய பாலகனுக்குவோதிவைக்குறேனையாமகாராஜனே,

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி,

பன்னுகஞ்சுகியேகேளாய்... ... ... ❊
பாலதன்பிறகலாதன் ... ... ❊

தன்னுடதோழனை ... ... ... *
தளகர்த்தமந்திரிகுமாரன்... ... *
அன்னவர்தானுமிப்போ... ... ... *
அவனுடன்பள்ளிக்கூடம் ... ... *
அன்னவேவோதவென்று... ... *
அரிதமாயழைத்துவாராய் ... ... *

வசனம்.

அடாவாடா அதாகஞ்சுகி-நம்முடையப்பிரகலாதனனுக்குத்தோழமாராகியதளகர்த்தன் மந்திரிகுமாரர்களை பள்ளிக்கூடத்தில் பிரகலாதனன்கூட யிருந்து வாசிக்கவேண்டியதாய் அனுப்பவேணும் ஆகையால் யித்தக்ஷணத்தில் அவர்களை அழைத்துக்கொண்டுவாரும்பிள்ளாய்கட்டியக்காரா,

கட்டியன் சொல் விருத்தம்
இ-ம்- கௌளிபந்து;

அந்திரஞ்சச்... ... ... *
சிந்தைசெய்மன்னன்... ... ... *
மந்திரிகுமாரரை... ... ... *
வந்திடச்சொன்னார்... ... ... *

மைந்தர்வருகிறவிருத்தம்
இ-ம்-மோகனம்.

மகிமைசேருலகமாளு ... ... *
மன்னவனிரணியன்முன் ... ... *
அகமகிழ்ந்தழைத்தபோது ... ... *
வமைச்சர்கள்பாலரெல்லாம் ... ... *
வகையுடனெழுந்திருந்து ... ... *
வஸ்திராபரணம்பூண்டு ... ... *
ஜெகதலத்துள்ளோர்போற்றுந் ... *
தினகரனெனவந்தாரே ... ... *



தரு-இ-ம்-புன்னாகவராளி
தாளம்-ஆதி,
பல்லவி-

வந்தார்வந்தனரே-மைந்தர்களும் ... *
வந்தார்வந்தனரே ... ... *

அநுபல்லவி,

சுத்தரமாகவேதுலங்குஞ் ... ... *
சபைதனில் ... ... ... ... *

சரணங்கள்.

முத்துக்குச்சுக்கொண்டைதன்னை ... *
மோகனமாலிகையின்ன ... *
பத்தரைமாத்துப்பசும் ... ... *
பொன்பணியாடவே ... (வந்தார்)
சுத்தியரைமணிகூட்டி ... ... *
சொர்ணத்தண்டைகாலில்பூட்டி ... *
சுத்தவெண்டையந்தொனிக்க ... ... *
சுகுணவிரணியன்முன்னே... (வந்தான்)
விண்டலமும்விண்டலமும் ... ... *
மைத்துமுள்ளப்பேருலகும் .. ... *
உண்டருளும்பெருமானை... ... *
உள்ளந்தனிலேவைத்து... ... (வந்தார்)
தொண்டனானபிரகலாதனை... ... *
தோழமையாகவேகூடி... ... *
தண்டமிழ்நூல்மறையோத .. ... *
தானவர்மைந்தருய்வோடி... ... (வந்தார்)

மைந்தர்சொல் விருத்தம்
இ-ம்-கல்யாணி.

பொன்னகராளும்புரந்தான்முதலாய் ... *
மன்னியவுலகில்மைந்துள்ளபேரும் .. ...*
தன்னயமாகநடுங்கிடவாழும்... ... *
மன்னவாவுந்தன்மலரடிப்போற்றி ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை.

அழிவிலாதுலகையாளும்... ... ... ※
அமைச்சர்மைந்தர்களேவாரீர் ... ... ※
பழுதிலாநீங்களெந்தன்... ... ... ※
பாலகனுடனேசென்று... ... ... ※
விழுவிலாவேதமோத ... ... ※
வண்மையாய்பள்ளிக்கேகி... ... ... ※
எழில்பெறநன்றாய்வாசித் ... ... ※
திருக்கநானழைத்திட்டேனே... ... ... ※

வசனம்.

வாருங்களென்று அருமையான அமைச்சர்கள் குமாரர்களே நீங்கள்யாவரும் யென்னுடைய குமாரனாகிய பிரகலாதனனுடனே போய்வேத பாராயணஞ்செய்ய வேண்டியதால் பள்ளிக்கூடத்திற்குப்போகஅழைப்பித்தேன்மைந்தர்களே.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம் - ஆனந்தபைரவி.

மறையவர்கேளாயெந்தன்... ... ... ※
மகன்தனைக்கூட்டிக்கொண்டு... ... ※
திறமுடன்பள்ளிக்கேகி ... ... ※
சீருள்ளவேதந்தன்னை ... ... ※
அறபடவோதிவைப்பாய ... ... ※
திற்குறைவந்ததானால் ... ... ※
குருவெனவெண்ணமாட்டேன் ... ※
சொல்லுவேனுன்னைத்தானே ... ※

வசனம்.

கேளுமையாசுக்கிராச்சாரியரே நமதுகுமாரனாகியபிரகலாதனனுக்கு சொல்லிவைக்கும்படியானவேதத்தியானத்தில்யாதொரு குறைவுப்படுமாகில் வுடனேயெனதுவாளினால்வுன்னுடையதேகத்தையிருகூறாகச்செய்துப் போடுவேன் போய்வாரும்.



சுக்கிராச்சாரிசொல்

விருத்தம்-இ-ம்சங்கராபரணம்

அப்படிதேவர்........ ......※
செப்பிடுமொழியை.........※
கொப்பெனத்தலையில் ... ...※
வைப்பனுனையா... ........... ※

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி.

தகமைசேர்மைந்தாகேளீர்... ... ... ※
தனையர்களுடனேகூடி... ... ... ※
மகிமைசேர்வெள்ளியின்னே... ... ... ※
வன்மையாய்நீயுஞ்சென்று... ... ※
உகமையில்லாதவேதம்... ... ... ※
வோதியேதெளிந்துபின்பு... ... ※
ஜகமெலாமதிக்கநீயும்... ... ... ※
செல்வனேவருகுவாயே... ... ※

வசனம்.

வாருமப்பா பிரகலாதனா யிப்போது - நீ-யிந்தசுக்கிராச்சாரியார்பின்னே போய்வேதப் பாராயணஞ்செய்துக்கொண்டுவாருமப்பாமகனே,

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-கேதாரம்,

பொருமையுத்தருமமஞ்சப்... ... ※
புலாக்கமழ்வாள்கையேந்தி... ... ※
தரணியீரேழுமாண்டோன்... ... ... ※
தனயனேசொல்லக்கேளாய்... ... ※
இரணியமன்னன்சொன்ன... ... ... ※
தென்குலதெய்வதையோ... ... ※
பெருமையாய்வேதமோத... ... ※
பிரகலாதனுலருளுவாயே ... ... ※

வசனம்,

அப்பாபிரகலாதனே- யிப்போதுவுன்தந்தையாகியயிரணிய மகாராஜன்சொன்னச்சொல்லைக்கேட்டையா- அந்தவார்த்தையை க்கேட்டவுடனே யென்னுடையகுலைகள்நடுங்குகிறது-ஆகையால் வேதப்பாராயணம் வோதிவைக்குரேன் வாருமப்பா பிரகலாதனே,

பிரகலாதன்சொல்

வசனம்.

அப்படியே தடையில்லாமல் வருகிறேன் வேதமோதிவைப்புஞ்சுவாமி:

பொதுசொல்கொச்சகம்

ஆர்க்கமுடனஷ்டதிசை... ... *
யாள்கனகர்தன்மகனை... ... *
பார்க்கான்பின்கூட்டிவிட்டு... ... *
பதியிலிருந்தளவில்... ... ... *
நிர்க்கமுள்ளப்பாலகனுஞ்... ... *
செல்வருடனேகூடி... ... ... *
ஆர்க்கமுடன்பள்ளிகையி... ... *
லோதும்வகைசொல்லுவனே... ... *

சுக்கிராச்சாரிசொல்தரு

இ-ம்-நாட்டை-அடதாளம்,

பல்லவி.

நேமகந்தப்பாதேசிஷனே-நீ... ... *
நேமகந்தப்பாதே... ... *

சரணங்கள்

பிரமமுகூர்த்தத்தில்கிரமந்தப்பாமலே... *
பிரியமாய்சங்கரப்ப்ம்பண்ணிக்கோ... *
பிரபுதத்துவத்தில்விரவுருன்தகப்பனை ... *
பகவானென்றேமனதிலெண்ணிக்கோ சிஷனே (நேமகந்)



செம்புமுத்தரணியும் அம்மையமலரைப்போலே
நினந்தோரும்புளியிட்டுக்கழுவு ... *
அம்புவியனைத்துக்குந்தம்பிரானுந்தந்தை ...*
யடிதொழுதேமுழுகுசிஷனே ... (நேமகந்தப்பா)

திட்டமதாகவேபட்டவர்தனத்தையும்... *
தீர்க்கமாய்பரக்கவேசாத்து. . ... *
பெட்டைமான்றோல்தன்னையிஷ்டஆசனம்போட்டு
புகழாக்ககனதனைப்போற்றுசிஷனே... (நேகமந்தப்பா)

வடக்குமுகமாகத்திடத்தோடிருந்துக்கொண்டு *
மறைகளைத்தப்பாமலோது... ... *
இடக்கைவிட்டுநல்லநடக்கையாயிரணியநமா *
வென்றுசொல்லிப்போதுசிஷனே ... (நேமகந்தப்பா)

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-சஹனு

செய்வண்ணமானதெல்லாமுடிந்தபின்பு ... *
சீராகவுனதுதந்தைதனைநினைந்து ... *
கைவண்ணமொடுகதலிநாரிகேளம்... ... *
கருதுதாம்பூலமொடுதூபதீபம்... ... *
ஐவண்ணமாயவைத்துயெனைவலஞ்செய் ... *
அருமையொடுகீழ்முகமாய்க்குனியுமப்பா ... *
மெய்வண்ணப்பொருளதுவேயிரணியாயநமா... *
வெழுத்திதுமேன்மையாய்விளம்புவாயே ... *

வசனம்:

வாருமப்பா பிரகலாதனே - வுன்னுடைய தந்தையின் திருபாதத்தை வுன்னிருதையாம் பரத்தில்நினைந்துக்கொள்-பழம்தேங்காய்தாம்பூலம்வைத்து தூபதீபங்கொடு - யென்னைப் பிரதட்சணஞ்செய்துக்கொள் - கிழக்குமுகமாகயிருகைகட்டிக் கொள் வாயைமூடிக்கொள்-தலையை குனிந்துக்கொள் - யிரணியாயநமா, யிரணியாயநமா யிரணியாயநமா வென்றுசொல்லுமப்பாபிரகலாதனே.

பிரகலாதனன் சொல்

கொச்சகம்.

திருவைமார்பில்தரித்திடுமையனே... ... *
தேவருக்கிடர்தீர்த்தருள் ஐய்யனே... ... *
பெருமையாகவேதத்தைப்பேர்சொல்லென்றார் *
பிரணதேயெந்தனுவ்வாணதே... ... *
உருவமாகிஅருபமுமாமெங்கு... ... *
மொன்றிரண்டோடைந்தெட்டெழுத்தாய்நின்ற
அருமறைப்பொருளாகியஅண்ணலே... ...*
ஹரிஹரிநமோநாராயணாயவே ... *

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-நாதநாமக்கிரியைதாளம்-ஆதி,

பல்லவி.

நாராயணநமவே-ஹரிஹரி... ... *
நாராயணநமவே... ... ... *

அநுபல்லவி.

நாராயணமந்திரம்பாராயணஞ்செய்தால் ... *
நமனும்வந்தணுகுமோஅமையுமிதுவேநல்ல (நாராய)

சரணங்கள்.

ஜென்மசாபல்லியமாகும்-முன்னேசெய்த ... *
கன்மங்கள்பிறம்போகும்... ... ... ... *
தன்மபரிபாலனஞ்சகலநிட்களமான... ... *
சின்மயநிரஞ்சனதேவதேவரட்சக ... (நாராயண)

வித்தையும்புத்தியுஞ்சேரும்-அஷ்ட ... *
சித்தியும்பத்தியுங்கூடும் ... ... ... *
தத்துவப்பொருட்செல்வாத் தலைமையாய்விளங்கிடும்
நித்தியபரிபூரணநிமலாசச்சிதாநந்த ...(நாராயண)
கருணைபொழிவிலாசம்-ஒதரியாத ... ... *
கசடர்க்குழிவருமோசம்... ... ... *



அருணகிரணசசிகருணைமலர்மீதிற்... ... *
தருணனென்முகனையுந்தந்தயக்தாட்சக ... (நாராயண)

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி,

ஓம்நமோநாராயணாவென்றுரைத்துளமுருகி *
தானமர்ந்திருந்தடக்கையிந்தஸ்ரீகாநிற்றுங்கி ..*
ஆனிறக்கண்கள்புனலுகம்யிருபுரம்பொடிப்ப *
ஞானநாயகனிருந்தனனந்தனர்நடுங்க ... *

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி,

இந்தவிதம்நீசொன்னயாருடிக்கி... ... *
யெரிநெருப்போபெறுங்குலையோயிடநீவந்தாய் *
உந்தனையென்பின்கணகனுப்பும்போது .. *
உரைத்தமொழியால்கைகால்நடுக்குதையோ... *
அந்தமுள்ளமுனிவர்களோவமர்தாமோ.. *
அய்யனேவுந்தனுக்கிதார்சொன்னாரோ ... *
மைந்தனேபிரகலாதனனேயிந்த .. ... *
வார்த்தைதனைமறந்திடாய்மறந்திடாயே... *

தரு-இ-ம்-சங்கராபரணம்,

தாளம்-அடசாப்பு-

பல்லவி.

என்றுசொன்னயடா-பிரகலாதா... ...*
என்றுசொன்னயடா ... ... *

அநுபல்லவி.

என்றுசொன்னபடாபிள்ளாய்... ... *
அன்மதியிநாலேயின்று... ... ... *
உன்னையுங்கெடுத்தல்லா... ... ... *
லென்னையுங்கெடுக்கவென்று... ... (என்று)

சரணங்கள்.

சிவனையன்றி வேறுமுண்டோ-வுன்தந்தையல்லால்... *
தெய்வத்தின் கூறுமுண்டோ... ... ... *
அவனைப்பூசனைச்செய்யாதரிபெயர்நீசொன்னாய் *
ஐயையோமோசம்மோசஞ்செய்வதுண்டோவென்றால் (எ

மூவர்க்குமூவனவன்-பஞ்சகிர்த்திய *
தேவர்க்குத்தேவனவன் ... ... *
காவல்செய்துலகத்தைக் காக்குமவனல்லாமல் *
கர்த்திவ்யம்வேறுமுண்டோபத்தியுடன்சொல்லாமல்( என்)

இரணியமகாராஜன்-வெவ்வுயிருக்குத் ... *
தரணிக்கும்வெகுநேசன் ... ... *
அருமறைமுனிவோருமமர்களுமெப்போதுந் *
திருவடிதொழுவதுந்தெரியாதோபோதும்போதும் (என்)

பிரகலாதனன்சொல்-வெண்பா

இ-ம்-சங்கராபரணம்,

என்னவகைசொன்ன யெழிலார்தவமுனிவன் *
தன்னைமுகம்பார்த்துத் தலைவனுமே-என்னுறுதி
தப்புவதுமுண்டோ சதுமறையேகேளென்று *
ஒப்புடனேசொல்வானுகந்து ... *

தரு-இ-ம்-கல்யாணி

ஏகதாளம்;

பல்லவி,

என்னதப்பிதம்நான்சொன்னேன்சொன்னேனென்று
எடுத்துகேழ்க்குறீரையா ... ... *

அநுபல்லவி,

யென்னையுமுன்னையும்பிரணியமகராஜன்... *
தன்னையும்பிழைப்பிக்க வுன்னிமொழிந்தேனல்லால்()



சரணங்கள்.

அந்தணர்முனிவோருஞ் சிந்தையிலன்வோரும் ... *
அவரவர்நினைந்ததுதவருமல்லைகதந்து ... ... *
வந்துகூடும்பொருளெந்தனறிவாலாய்ந்து... *
வழக்கஞ்சொன்னேனல்லபழிப்பதுண்டோசொல்லாய் (எ)

உடலுக்குளுயிர்போலேமடலுக்குள்மணம்போலே,
காந்தப்பால்சுவைபோலே சிறந்தவெள்ளெண்ணைபோலே
கடலுக்குள்திரைபோலேஅடருத்தவுலகத்தில்... *
கலந்துநிரைந்திருந்தநலந்தனைவிட்டுவேரே ...(என்னதப்)

அஞ்சனமேநியுங்கஞ்சமலர்விழியும் .. ... *
அணிந்தபீதாம்பரந்தணைந்தபோர் வையுங்கொண்டு *
தஞ்சமென்றவர்க்கெல்லா மஞ்சலென்றருள்செய்யும்
சரணைணப்பரமனைத்தருணனைவிட்டுவேரே ... (என்னதப்)

சுக்கிராச்சாரிசொல்

கலித்துறை.

நித்தியமாம்பொருள்யானேஉரைக்கும்நிலைவிடுத்து *
பித்தர்கள்போல்பிதற்றுகிராயிந்தப்பேருலகில் ... *
கர்த்தாயிரணியன்தானன்றிவேறொன்றுகண்டதுண்டோ
சத்தாகிலுமறிவில்லாமல்மால்பெயர்சாற்றினையே *

தரு-இ-ம்-

கல்யாணிகள்.

இந்தவாலப்பிராயத்திலே-பிரகலாதாவுனக்கிந்த *
அறிவெங்கேவந்ததுபிரகலாதா... ... *
நல்லதுசொல்லப்போனாலும்பிரகலாதா-யிப்போ *
பொல்லாங்காய்விளையுமல்லோபிரகலாதா .. *
தப்பிதம்நீசொன்னதல்லபிரகலாதா-யிப்போது ...*
தப்பிதமாகத்தோணுமேபிரகலாதா ... *
அப்பனேயென்கண்மணியேபிரகலாதாவுனக் ... *

கொப்பாவாருமுண்டோபிரகலாதா... ... ※
உந்தன்குலக்குருநானேபிரகலாதா-வுன்... ... ※
தந்தைபெயர்சொல்லிவாழ்வாய்பிரகலாதா ... ※
காலதேசம்பார்த்தல்லவோபிரகலாதா-வொரு ※
சீலமதையெண்ணவேணும்பிரகலாதா ... ※
தந்தைபெயர்சொல்லாமல்பிரகலாதா-நீ ... ※
எந்தடவுவாழ்வுகொள்வாய்பிரகலாதா ... ※
அன்னையும்பிதாவுமல்லோபிரகலாதாவுலகில்... ※
முன்னறிதெய்வமென்பாரேபிரகலாதா ... ※
என்னசொன்னாலுமுனக்குபிரகலாதா-சத்து ... ※
மன்னுமறிவில்லையோதான்பிரகலாதா ... ※

சுக்கிராச்சாரிசொல் விருத்தம்

இ-ம்-பைரவி.

தெரியாதோவுனதுதந்தையல்லால்வேரே ... ※
சிவனரியுந்தானிந்தசெகத்துக்கில்லை... ... ※
வெறிமிகுத்தோன்கைக்கொண்டதிரவியம்போல் .. ※
வேதமென்றுந்தெய்வமென்றும் விரித்துச்சொன்னாய்
அறியாதபருவத்திர்வுணர்வுகூர... ... ※
அன்பாகப்போதித்தாராரோயிந்தக் .. ... ※
குறியாகச்சொன்னவர்கள்முனிவர்தாமோ ※
குவலயத்துமறையதரோகூறுவீரே ... ※

வசனம்.

அகோவாருமப்பாபிரகலாதனே - அறியாதப்பிராயத்திலேயுனக்குயிந்த போதனைபோதித்தவர்கள்முனி யீஸ்பரர்களோபிராமணளோ அதையெனக்குத் தெரியும்படியாய் சொல்லவேண்டுமப்பாபிரகலாதனே.

பிரகலாதன்சொல்விருத்தம்

இ ம்-நாட்டை,

எந்தையாமிரணியனார்தவங்கள்செய்ய ... ※
எகினாச்சமயந்தன்னைப்பார்த்து... ... ※



இந்திரனுமெந்தனிடத்தாயைக்கொண்டு ... ※
அருஞ்சிறையாலடைத்துவைத்தானந்தவேளை ... ※
வந்துமுனிநாரதனென்தாயைத்தேத்தும் ... ※
வகைபோலயெனக்குண்மையருத்துச்சொன்னார் ※
அந்தமுடன்தாய்வயித்திலிருந்துக்கேட்ட ※
தரைகுவேறனுமக்குஅரைகுவேனே ... ※

வசனம்.

கேளுமையாசுக்கிராச்சாரியரே யென்னுடைய தந்தையாகிய யிரணியமகாராஜன் மந்தரகிரிச்சாரலில்தவஞ்செய்யப்போன சமையத்தில் - பொன்னுலகுக்கதிபதியாகிய தேவேந்திரமகாராஜன்யென்னுடையதாயாரி லீலாவதியம்மனைக் கொண்டுபோய் அருஞ்சிறையில்வைத்து வுபத்திரஞ்செய்யும்போது நாரதமுனியானவர் அவடம்வந்து யென்தாயாருடையமனதைத்தேத்திதெளிவுண்டாக்குவர்போல்யெனக்கு வுபதேசம்பண்ணினார் அந்த வுபதேசப்பொருள்யென்தயார்வயத்துக்குள்ளிருந்தேயான்கேட்டுக்கொண்டேனந்தமார்க்கஞ்சொல்லுகிறேன்கேளுமையா சுவாமி,

பிரகலாதன்சொல்தரு

இ-ம்-பைரவி-அடதாளம்.

பல்லவி.

வித்தில்லாதவிளைவுண்டோ-ஐயா ... ※
வெள்ளியேநீர்கண்டதுண்டோ... ... ※

அநுபல்லவி.

தத்துவகுணத்தினில்தன்னறிவதுகொண்டால் ... ※
கைத்தலந்தனிலுள்ளகனிபோலாகுங்கண்டாய் (வித்)

சரணங்கள்.

முப்பொருள்முப்புரமாகுமது .. ... ※
முக்குணமுச்சுடராகும்-அதை ... ... ※
ஒப்புடனெப்படியப்படியென்னுவோர் ... ※
தப்படிக்கப்படியாகவேநன்னுவோர் (வித்தில்லாத)

ஒருவினைபொருப்பபத்தருமோ-அந்த ... ※
ஹரியினையல்லால்வேறெவருமோ... ... ※
சுருதியப்பொருளினைக்காட்டுகின்றதுவல்லால் ... ※
தருமயன்தனக்கிதுசாட்சியுண்டோசொல்லாய் (வித்)

கருமமுங்கருமத்தின்பலனும்-நல்ல... ... ※
தருமமுந்தருமத்தின்பலனும் ... ... ※
திருவளர்மணிமார்பன்பரமென்றுதெருவார்... ※
இருமையென்றெழுத்திங்கடலேயென்றெருவரா (வி)

சொற்பொருளாகியபோதன்-வுண்டோர்க் ... ※
அற்புதமானவதிதன் ... ... ※
தற்பரசிற்பரதத்துவமானது .. ... ※
தற்பரசெப்பரநாரணனனது .. ... (வித்திில்லாத).

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-கேதாரம்.

தன்மையேயுரைத்திரையா ... ... ※
நாதனுஞ்தந்தைகேட்டால்... ... ※
புன்மையாய்விளையுமென்னைப்... ... ※
பொருத்திடாதொருத்தல்செய்வார் ... ※
வன்மையாமவர்பேர்சொல்லி... ... ※
வணங்குதலுண்மையாகும்... ... ※
தன்மைதான்செய்யவேண்டுத்... ... ... ※
தகமைநீருரைத்திடுமே... ... ... ※

வசனம்,

கேளுமப்பா பிரகலாதனே யிப்போது நீர்சொல்லியவார்த்தைகள்வுண்மையானதுதான் ஆனால் வுன்னுடைய தந்தையாரியிவ்வார்த்தையைக் கேட்டால் யென்னைவெகுவாககஷ்டப்படுத்திவிடுவார்-ஆகையால்நீயிப்போதுவுன்தந்தையாருடைய பெயரைச்சொல்லிவணங்குவதேவுத்தமமாயிருக்கின்றது இல்லாவிட்டால்யான்செய்யவேண்டியதையெனக்குச்சொல்லுமப்பா பிரகலாதனே.



பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-தோடி-ஜம்பைதாளம்,

கண்ணிகள்,

இன்னமின்னமென்னசொல்லுவேனென்சாமியேநான்... ※
இன்னமின்னமென்னசொல்லுவேன்... ... ※
பன்னும்வேதமுடிவில்மன்னும்நாரணன்மலர் ... ※
பொன்னின்சரணமல்லாதுமின்னும்பொருளுமுண்டோ (இ)

பண்டைநாரதர்மொழிக்கொண்டேனனதுசிரம் ... ※
கண்டேன்மாயவன்பாதம்யின்டேனுலகவாழ்வு ... (இன்)
ஏதோநான்சொல்வதெல்லாந்தோதோயென்றேமெக்கு... ※
வாதோபெரியோர்கள்மனமீதோதெரியாதோஎம்மா (இன்)

கேளுமடியேனையெந்தனாளுந்தயவாகவே ... ※
ஆளும்நாரணன்மலர்த்தாளும்விடவேறுமுண்டோ ... (இன்)
நாராயணாயவென்றுமாராவமுர்தம்வாயில்... ... ※
நீராவல்விடமுண்ணவாராதெனக்கிப்போது ... (இன்)

வாருமென்றந்தைபெயர்நீருந்துதிசெய்து... ... ※
பாருமபலனுண்டாகில்நேருமநானுரைக்கிறேன் .. (இன்)
நில்லுமிரணியன்முன்சொல்லும்யெந்தனையவன் ... ※
வெல்லும்வகைநினைந்தால்புல்லுமுன்னெருப்பல்லவோ (இ

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-ஆசாரி.

திடுக்கிடவுலகுதன்னில்தெய்வம்வேறிருக்குதென்றாய் ... ※
நடுக்குதலைபுங்காலும்நானிதற்கென்னசெய்வேன் ... ※
நடுக்குள்ளயிரணியற்குசொன்னதுண்டாகில்மெத்த ... ※
கடுத்தென்னகுலசெய்வானேகாரணமறிகிலேனே ... ※

சுக்கிராச்சாரிசொல்விருத்தம்

இ-ம்-பைரவி,

திருவுருபாலனே... ... ... ... ※
உரைசெயுமொழியை... ... .. ※

இரணியற்கோத... ... ... *
திரமுடன்போரேன்... ... ... *

பொதுவிருத்தம்-இ-ம்.

நாட்டை,

சொன்னசொற்படியேசொல்லி... ... *
அரியத்திலிருந்தான்பாலன் ... ... *
இன்னதுசெய்யலாமே... ... .. *
யிரணியற்குரைப்போமென்று... ... *
அன்னவன்வெள்ளிபோன... ... *
வளவினிற்பிரகலாதன்... ... ... *
பன்னுதானவர்மைந்தர்க்குப்... ... *
பகுத்தரியுரைக்கின்றனே... ... ... *

வசனம்.

இந்தப்பிரகாரம்பிரகலாதன் சுவாமியானவர் தத்துவமார்க்கங்களைச்சொல்லி மனமுருகிபுளகாங்கிதனாய்நிற்கயிதுகளையெல்லாங்கேட்ட சுக்கிராச்சாரியானவர்யிரணியமகாராஜனுக்குச்சொல்லவேணுமென்று போனசமையத்தில்பிரகலாதனன்தன்னுடன்கூடிவாசிக்காநின்றபிள்ளைகளுக்குதத்துவமார்க்கஞ்சொல்லுகின்றவிதங்காண்க,

பிரகலாதனன்சொல்

தேவாரம்.

எட்டெழுத்தானமந்த்ரம்... ... ... *
யெமன்றனைவெல்லுமந்த்ரம்... ... *
துட்டரைஜெயிக்குமந்த்ரம்... ... *
தொல்வினையகற்றுமந்த்ரம்... ... *
இட்டமாமறையோர்மந்த்ரம்... ... *
யிகபரங்கொடுக்குமந்த்ரம்... ... ... *
அட்டாங்கமளிக்குமந்த்ரம்... ... *
ஹரிநாமமந்த்ரமாமே... ... ... *
முப்பொருளானமந்த்ரம்... ... *



புச்சடரெழுந்தமந்த்ரம் ... ... *
இப்புவிவிளங்குமந்த்ரம்... ... ... *
யெழில்வகைபடைக்குமந்த்ரம் .. ... *
மெய்ப்பொருளாகுமந்த்ரம்... ... *
மேலவர்துதிக்குமந்த்ரம்... ... ... *
அப்பொழிவாயுநின்ற... ... ... *
அரிநாமமந்த்ரமாமே .. ... *
சொல்லுதற்கரியதாகி ... ... *
சுத்தசுற்படிகமாகி... ... ... *
நல்லவருளத்திற்ஞான ... ... ... *
நற்கொழுந்தானமந்த்ரம் ... ... *
வல்லமாமலர்வாசம்போல் .. ... *
மறையவர்முனிவர்வாேனார்... ... *
அல்லலையகற்றிநின்ற... ... ... *
அரிநாமமந்த்ரமாமே ... ... *
மதிகதிர்வன்னிமூன்று... ... ... *
மன்னியநயனமாகி ... *
கதியிநிலண்டபிண்டத் .. ... ... *
தன்னையுண்டுமிழ்ந்தமந்த்ரம்... ... *
விதியவன்றன்னையின்று.. ... ... *
மெய்ப்பொருள்செவிக்குணர்த்த ... *
ஆதிமறைமுடிவாய்நின்ற... ... *
அரிநாமமந்த்ரமாமே... ... *

பிரகலாதனன்சொல்சரு

இ-ம்-நாதநாமக்கிரியைஅடதாளம்.

கண்ணிகள்-

நாராயணனென்னுங்கள்-மைந்தர்களே... ... *
நாராயணனென்னுங்கள்... ... ... *
நாராயணமந்த்ரம்சேராதசெவித்துளை... ... *
தோரதபெரும்பாம்புநேராயுறங்குந்துளை (நாராய)

கேசவனேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
கேசவனேயென்னுங்கள் ... ... *
கேசவன்மலரடிப்பூசைசெய்யாகைகள் ... *
விசித்தானியங்குத்ததேசித்தவுலக்கைகள் (கேசவ)

ஸ்ரீதரனேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
ஸ்ரீதரனேயென்னுங்கள் ... ... *
ஸ்ரீதரன்திருநாமமோதாதபெருநாக்கு ... *
ஏதமறியாவூமைத்தோதகத்தடிநாக்கு (ஸ்ரீதரனே)

மாதவனேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
மாதவனேயென்னுங்கள் ... ... ...*
மாதவன்கமலபொற்பாதந்தொழாத்தலை ... *
யாதரவாங்கொல்லைக்கேறு மிரளித்தலை (மாதவனே)

அச்சுதனேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
அச்சுதனேயென்னுங்கள் ... ... *
அச்சுதன்கோவிலைநச்சாதப்பெருங்கால்கள் *
குச்சுவிட்டுநடுவில்வச்சிருந்தரிக்கால்கள் .. (அச்சு)

கோவிந்தனேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
கோவிந்தனேயென்னுங்கள் ... ... *
கோவிந்தன்திருவுருமேவாதபெருங்கண்கள் *
தாவுமயல்சிறகில்தாவியகருங்கண்கள் (கோவிந்)

மதுசூதனனென்னுங்கள்-மைந்தர்களே *
மதுசூதனனென்னுங்கள் ... ... *
மதுசூதன்திருப்பணிக்குதவாதபோாக்கை *
முதியவிழலைக்கட்டும்புதியகூரையாக்கை (மதுசூ)

தாமோதரனென்னுங்கள்-மைந்தர்களே ... *
தாமோதரனென்னுங்கள் ... ... *
தாமோதரன்தொண்டர்நேசமில்லாவாசம் *
யமனுலகில்பாசந்தீமைநரகில்நாசம் (தாமோதர)

திருமாலேயென்னுங்கள்-மைந்தர்களே ... *
திருமாலேயென்னுங்கள் ... ... *



திருமாலின்றாளிற்புமருமோராநெடுமூச்சு *
கருமான்றுருத்தியிலேவருதாதபெருமூச்சு (திருமா)

ஹரிஹரியென்னுங்கள்-மைந்தர்களே ... *
ஹரிஹரியென்னுங்கள் .. ... *
ஹரிஹரியென நினைந்துருகாதமனங்கல்லு *
கருமகனுலையிலேமருவிய அடைக்கல்லு (ஹரிஹரி)

பிள்ளைகள்சொல்விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி

தேவரீரசைத்தமாத்ரஞ்செவியெலாங்குளிர்ந்தோயிச்சொல்
நாவிநால்நவிலும்போது நயந்தமூழண்டதானேம் *
பாவமேபோக்குமாயன் பரமதத்துவத்தைப்பின்னும் *
ஆவலாயெங்களுக்குஅருள்செய்விரருள்செய்வீரே *

வசனம்:

வாருமையாபிரகலாதனசுவாமி தேவரீர்சொல்லிய திருவாக்கியப்படியே - பொருளைக்கேட்டுயெங்களுடையசெவிகளொல்லாங் குளிர்ந்து யிருதையகமலங்களி கூர்ந்தோம் அல்லாமலும்நாவிநால்வசனிக்கும்போது தேவாமிர்தம் வுண்டாலெப்படியோ அதுபோல் ஆனந்தக்கடலில் மூழ்கினவரானோம் ஆகையால்மகா பாவங்களை யெல்லாம் போக்கப்படாநின்ற நாராயணனுடைய பரமதத்துவத்தின் போதனையையின்னம் அடியேன்களுக்குத் திருவுளமகிழ்ந்து சொல்லவேணுமையாசுவாமி.

பிரகலாதனன்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

பாலரேநானுஞ்சொன்ன பரம்பொருள்நிலைமையின்னுஞ் *
சாலவேவிளம்புமென்ற தன்மையால்மகிழ்ந்தேயானுஞ் *
சீலமேமிடந்தமாயன் சிறந்தசின்மயத்தின்வன்மை ... ...*
எலவேபுங்களுக்குயியம்புவேனறியத்தானே ... *

வசனம்.

கேளுங்கள்பாலரே யிப்போதுநான் சொன்னமகாமந்திரத்தைக்கேட்டு வுங்களுக்கு அறிவுவிளங்கியின்னமும்அந்தநாராயண

அடைய பரமதத்துவத்தைச் சொல்லவேணுமென்று கேட்டபடியாலெனக்கு மகாசந்தோஷமாச்சுது யின்னம் அந்தபரம்பொருளின்னிலைமையையெனக்குத்தெரிந்தமாத்திரம் சொல்லுகின்றேன் கேளுங்கள்பாலரே,

தரு-இ-ம்-கல்யாணி-ராகம்-ஆதி.

பல்லவி.

திருவளர்மணிமார்பன் பரமகுருவாய்வந்து ※
தெளிவித்ததென்ன சொல்வேன்பாலரே ※

அநுபல்லவி.

கருவில்நான்வளர்போது அருமையெந்தாய்மீது ... ※
கருணைகூர்ந்தருள்பெருகுந்தவமேலே ... ※
உருவொண்ணிலகில்வரும்நாரதர்போலே (திரு)

சரணங்கள்.

சுத்தவிமலமானசுயஞ்சோதிவொளிவாகி ... ※
நித்தியவெளியாகிநிறையுமெய்யெழுத்தாகி ※
மூர்த்திஅகாரமாகிமோனப்பிரணவமாகி ... ... ※
சத்தியப்பிரணவமுதல்தங்குமெட்டெழுத்தாகி ※
கர்த்தராகியயிரணியகெர்ப்பமாகி ... ... ※
ஒத்தயந்திரியாபூமியுருவாகி ... ... ※
வைத்ததால்விராட்டியினுருவாகி ... ... ※
சித்தநாரணனெனுமெய்புருவாகி ... (திரு)

அறிவிந்துநாதமாமதிவாயிலங்குநேரம் ... ※
திருவாமெய்ஞ்ஞம்விளங்குஞ்செயல்சேரும்வியகாரம் ※
புரியுளமூலமோங்காரம்புகல்வேனகாரம் ... ※
சூரியலிங்கமகாரம்சுழித்தவுந்திநகாரம் ... ※
புத்பஞ்சவிரிமாகாரம்விசித்திரமும் ... ... ※
பரிபுகார்க்கும்பதமொருநேத்திரமும் ... ※
முராணகாரமெவசிக்குமத்திபு ... ... ※
சிரசில்மருமெவராகபத்திபும் ... ... (திரு)

அப்பிரமெனமதாகிஅசங்காபூரணமாகி ... ※
வியரிதவுருவாகிவிமலயகணமாகி ... ※



சபஞ்சுபந்தாகிதொகுத்தவுட்பிறம்பாகி ... ※
உபயகாரணமாகிவுணராரியுருவாகி ... ※
சுபடநாடகருஸ்திரவேஷ்தாரியாகி ... ※
நிபுணஅசர சராசரணவிவகாரி ... ※
தபமேபஞ்ஞாநியர்க்குயளிக்குங்கிருபைகாரி ※
அசஞ்செய்வோர்மனதகலுமேயமூராரி (திரு)

பாதம்பாதாளமாகும்பைம்பொன்முடிவேவானம் ※
ஆசயம்மதிவன்னிஅருள்சேர்திருநயனம் ... ※
சீதவாருதியெல்லாஞ்செல்வாபூரவின்பானம் ... ... ※
வாதமெல்லாஞ்சுவாசமாமேரோமந்திரணம் ※
ஓஷதமாவலகாரயெனும்பதாய்மன்னும் ... ※
மீறுலாவியவுபிவெண்பாலுமின்னும் ... ※
மாதிரஞ்செவியாகமறைபண்ணும் ... ... ※
ஆதிநாரணனெகுபனென்னும் ... (திரு)

பிள்ளைகள்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

தெய்வர்களமுனிவர்தேடியுங்காணு ... ※
இனிமையப்பரம்பொருள்நிலைமை ... ... ※
செவ்வயாயுரைத்திரியிருப்புநெஞ்சருகி ... ※
செவிகெயலாங்குளிர்ந்துமுனண்டோம் ... ※
அவ்வியங்கன்டுதேவரீர்பதத்தை ... ... ※
யனவருஞ்சிரசிற்புனைந்து ... ※
ஒவ்வியதங்கள்திருமந்திரத்தால் ... ... ※
ஒப்பிலாப்பதமடைந்தோமே ... ... ※

சுக்கிராச்சாரிசொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்,

உன்னிடப்பாலன்றன்னை ... ... ※
யொப்பித்தீரமிதுந்தாயாலும் ... ※

தன்னமையாகவேதந்
    தாஞேறிலைக்குப்போது ... *
அன்னவனதனைத்தள்ளி ... ... *
    அய்யனேஅகிலம்போற்றும் ... *
மன்னனேபுதுமையொன்று ... ... *
    வழுத்திநான்சேனும்நீரே ... ... *

தரு-இ-ம்-தோடி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

ஐயாயிரணியேசா    வொரு ... *
அதிசயம்நீகேளாய் ... ... *
மெய்யோவதுபொய்யோ-அந்த ... *
வினயங்கண்டதினவோ ... (ஐயா)

அநுபல்லவி,

விண்ணுடருமண்ணுடரும்வேதப்பொருள்பகரும்... *
பண்ணூரிமறைசொன்னெனுந்தன்பாலன்பகர்ந்திலனே (ஐ)

சரணங்கள்:

என்னுடவன்மனத்தா-லொன்று ... *
மிகைத்தானேதுவசைத்தான் ... *
சொன்னுலெந்தனுவும் ... ... *
வெந்துகெடுமேநாகிடுமே ... (ஐயா)

எதென்றிதுசொல்வேன்-மூடி ... *
எனக்கோஅவன்றனக்கோ ... ... *
நிதென்றிதுசொன்னுல ... ... ... *
வல்தோனவதில்கூறான் ... (ஐயா)

அண்டபகிரண்டங்களும்நீ ... *
ஆண்டாய்புகழ்பூண்டாய் ... ... *
கண்டுன்மகன்சொன்ன ... *
எப்போதானும்பொய்மெய்தோனும் (ஐயா)

1182-65

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

உக்கிரமாய்ப்பாலன் ... ... *
சுக்கிரன்றனையே ... ... *
அக்கிரமஞ்சொன்னதை ... ... *
இக்கணமறிவோம் ... ... *

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

அப்படியிடிபோல்சீறி அனல்விழிபெருகநோக்கி... *
ஒப்பிலாமந்திரிமாரே வோடியிக்கணமேசென்று... *
தப்பிலாப்பிரகலாதன்றன்னைநானழைத்தேனென்று *
செப்பியேகூட்டிக்கொண்டு சீக்கிரமாய்வரச்செய்வாயே

வசனம்.

வாருங்கள்மந்திரிமார்களே இந்தட்சணமேபள்ளிகூடத் திற்போய் நமதுகுழந்தைபிரகலாதனனைக்கண்டு நானழைத்ததாகச் சொல்லி அதிசீக்கிரத்தில் கூட்டிக்கொண்டுவரச்சொல்லுங்கள்மந்திரிமார்களே,

மந்திரிசொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

திடுதிடென்றாசரிமணிமுடிசிரசு ... *
    செடிசொளவருமைபெற்றோருக்கும் ... *
படியிசையாளுமன்னவன்கொலுவில் ... *
    பணிந்திடுக்கஞ்சுகியேகேளாய் ... ... *
கடுகடனோடிப்பிரகலாதனனைக்கண் *
    ணுதலுரைத்தனரிவாவென் ... ... *
றடல்படுஞ்சமுசகமூன்னவல்றதனை ... *
    அழைத்துதிவேகமாய்வருவாய் ... *

வசனம்.

ஆரடா ஆசாரவாசல் காக்குங்கட்டியக்காரா நமதுஅரசர்பிரான்வுத்தாரப்படிக்கி பள்ளிக்கூடத்திற்குப்போய்பிரகலாதனை அழைத்துக்கொண்டு வெகுசீக்கிரத்துக்குள்வாடாகட்டியக்காரா.

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி,

வந்தனமையா ... ... *
உந்தன்மெல்லடியை ... *
எந்தவேளைத்து ... *
மைந்தனையழைப்பேன் *

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி.

சந்தசமுலகாள ... *
மைந்தனேவுனது ... *
தந்தையுமழைத்தார் ... *
வந்திடுமையா ... *

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-சுருட்டி.

பன்னுகஞ்சுகியே ... *
மன்னனென்தந்தை ... *
உன்னியேயழைத்த *
தென்னனுன்வாரோன் ... *

பிரகலாதன்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

ஐயனேவேதமோத ... *
அன்புடன்போனயென்னை ... *
செய்யனேயழைத்ததேதுன் *
திருவடிசரணமையா *



இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி;

வந்தடிபணிந்துநின்ற மகன்தனையெடுத்துக்கொண்டு ... *
தந்திருமார்பிற்றுங்கித் தழுவியேமடிமேல்வைத்து ... ... *
அந்தணன்கேழ்க்கநீயும் அவனையுமுனிந்துசொன்ன ... ... *
நிந்தனையின்னதென்று நீயுரைசெய்வாயப்பா ... ... *

வசனம்:

வாருமப்பாபிரகலாதனு யித்தசிம்மாதனத்திலேறியென்ம டியின்பேரினுட்காரமுகத்தில் வேர்வையையுமார்புதிடுக்கிடுவதேது கைகால்நடுக்கமேது இந்தசுக்கிராசாரியார் சொன்னதத்துவத்திற்குநீ யென்னபதில்சொன்னாய் அதையெனக்குசொல்லுமப்பா யென்கண்மணியே.

இரணியன்சொல்தரு.

இ-ம்-கல்யாணி-தாளம்-அடதாளம்.

பல்லவி.

சுக்கிராச்சாரியார்சொன்ன முக்கியமந்திரம்படிக்காமல்நீ
சொன்னதென்னடாமகனே ... ... *

அநுபல்லவி,

அக்கிரமஞ்சொன்னானேயென்றான் *
தக்கவேயுன்னாலேயென்றான் ... ... *
அழிவென்றானேபலத்துக்கு ... *
பழிவென்றானேகுலத்துக்கு ... (சுக்)

சரணங்கள்:

யோசனைவேரில்லையென்றான் ... ... *
பேசவுங்கூடாதென்றான் ... ... ... *
உனக்கோயெனக்கோமகனேதனக்கோ *
முடிதலென்றான் ... ... ... ... *
நீசொல்லியகொடுஞ்சொல்லைப் ... ... *

பேசினாலும்வெகுதொல்லை ... ... ※
நெஞ்சினையுருக்குமென்றான் ... ... ※
வஞ்சனைபெருக்குமென்றான் ... ... (சுக்)

சொல்லுவோமென்றாலும்நாவு ... ... ※
புல்லெனவேவெந்துபோகும் ... ... ※
கூநரகத்தில்வீழ்ந்து ... .. ... ※
தவிப்போம்நெடுநாளென்றான் ... ... ※
வல்லவுணர்குலமெல்லாங்கொல்ல ... ※
நினைத்தவன்சொல்லாம் ... ... ※
வாழ்வெல்லாமுன்மகனாலே ... ... ※
தாழ்வென்றானேயினிமேலே ... ... (சுக்)

புத்தியும்பெருமையாலும் ... ... ※
பத்தியல்பாவனைமேலும் ... ... ... ※
புண்ணியவானிவனென்றே ... ... ※
தண்ணியேமகிழ்வுகொண்டேன் ... ※
குற்றமல்லோகுருவோனாம் ... ... ※
சத்தியந்தப்பினாலேதான் ... ... ... ※
குலட்சயமெனுஞ்சொல்லுக் ... ... ※
கலட்சயமுண்டோதில்லுஞ்... . ... (சுக்)

இரணியன்சொல்-தரு-தொண்டி.

இ-ம்-நாதநாமக்கிரியை.

சுக்கிராசாரியனுபதேசஞ்சொன்னதுக்கு ... ※
நித்தனைகளென்னத்தைச்சொன்னாய் ... ... ※
அக்கிரமஞ்சொன்னாயென்றான்... ... ※
வுன்கீர்த்திக்கழிவமென்றான்... ... ... ※
மெத்தயிழிவமென்றான்... ... ... ※
நீசொன்னபெரும்பிழையால்... ... (எ)



சுக்கிரனும்நெஞ்சினை ... ... ... ※
யுருகுதென்றுபஞ்சரிக்கிறான் ... ... ※
யோசனைவேறில்லையென்றான்-கெடுதலை ... ※
யுனக்கொவுன்மகனுக்குமின்றனக்கோவென்றான் ... ※
வாய்பேசவொண்ணாதென்றான்-நரகமும்... ※
வந்துபோமென்றானுவெந்துபோமென்றான்... ※
மாயவன்சிநேகிதனென்றான்-அவுணர்கள் ... ※
வாழ்வெல்லாமுன்மகனாலேதாழ்வாமென்றான் ... ※
புத்திமானியென்றிருந்தேன்-நல்ல-நல்ல... ※
புண்ணியவானென்றிருந்தேன்பெண்ணியெண்ணியே
பத்தியும்பாவனையும்-கனயோக .. ... ※
பாக்கியவானென்றிருந்தேன்யோக்கியமுடனே... ※
குருமொழியிகழ்ந்தோர்கள்-அவர்கள்தம் ... ※
குலட்சயமென்றிடுஞ்சொல்லலட்சயமோ ... ※
அருமையென்கண்மணியேயாவருக்கு ... ※
மன்புவிதரணமுள்ளயின்பவானேநீ .. ... ※
தப்பிதஞ்சொல்லமாட்டாய்-சுக்கிரன்சொல் ※
சத்தியமல்லவென்றெத்தன்புத்தியிலுண்டு ... ※
அப்படியவன்சொல்வதே-நீசொன்னால் ... ※
அதையறிந்தவனைநானேவதைசெய்கிறேன்... ※
சொல்லடாபிரகலாதா... ... ... ※

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

பெரியவர்வார்த்தைகேளாப்... ... ※
பெரும்பழியுடையோர்தீய ... ... ※
அருநரகத்தில்வீழ்ந்து .. ... ... ※
அலருவதுண்மையன்றே .. ... ※
குருமொழியிகழ்ந்தோர்பாவம்... ... ※
கூறுமெளிதோவையா .. ... ... ※
திருகுநீசொன்னசேதி... ... ... ※
செப்பெனச்செப்புவேனே... ... ※

பிரகலாதன்சொல்தரு

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-அடசாப்பு:

பல்லவி-

என்ன ஜென்மம்ஜென்மம்-நாம் ... ❋
யெடுத்ததேகன்மம்... ... ❋

அநுபல்லவி.

தன்மமென்றும்பாவமென்றும் ... ...❋
வன்மமறியாதே... ... (என்ன)

சரணங்கள்.

ஆறுவத்தின்மலைக்காடு-வழி ... ... ❋
அழலுப்பாம்புனல்மாடு... ... ❋
வேனமட்டுந்துள்ளாடும்... ... ❋
வினையடைக்குங்கூடு ... ... (என்ன)
மூன்றுசைமேலென்னு ... ... ❋
மூர்க்கமானதைநல்லனும்... ... ❋
தான்தானேமனதென்னும்... ... ❋
தாழ்வதேபண்ணும் ... ... (என்ன)
புன்மையெனுவத்தனியாய் ... ... ❋
பெருமையெள்ளளவணியா... ... ❋
நன்மைமிறிதுங்கனியா... ... ❋
நாராயணனைப்பணியா ... ... (என்ன)

இரணியன்சொல்

விருத்தம்-இ-ம்-தோடி.

பருவமதானமைந்தன் ... ❋
பகர்ந்ததத்துவத்தைக்கேட்டு... ... ...❋
யெரியில்நெய்கவிழ்த்தாப்போல... ... ❋
யிருஞ்சினந்தலைக்கொண்டேறி... ... ❋
தரணியிரேழுமெந்தன்... ... ... ❋
முள்தொழுவதுவேயல்லால்... ... ❋
அரியவன்பெயரையாரோ ... ... ❋
அறிவித்தாருரைசெய்வீரே ... ❋



இரணியன்சோல் விருத்தம்.

இ-ம்-கும்பகாம்போதி.

என்னிடயெதிரிபேரை யிவ்வுலகத்திலுள்ள ... ❋
மன்னவர்மூவர்வானோர் மறையவரெவரானாலும்... ❋
சொன்னநாக்கறுத்திரண்டாய்த்துணிப்பாடவுடலைவெட்டி ❋
பன்னுசக்கரமேகொல்லும் பாலனேயறிகுவாயே...❋

தரு-இ-ம்-மோகனம்,

பல்லவி,

இப்படிக்கொத்தப்பொல்லாத... ... ❋
தப்புவார்த்தைகள்சொன்னால்... ... ❋
யெந்தன்கோபம் .. ... ... ❋
பொல்லாதேமைந்தாவே ... ... ...❋

அநுபல்லவி:

யெப்புவியுந்திசையும்... ... ... ❋
வொப்புடனேபொற்றி... ... ... ❋
யேற்றுவதென்னையல்லால் ... ... ❋
வாழ்த்துவதுண்டோகீர்த்தி... ... (இப்படி)

சரணங்கள்.

மெத்தமெத்தவேகல்விகற்றுகத்துப்பேசாதே ... ❋
வீணுனவினுக்குநீவாறுலேமாய்க்காதே ... ❋
பெத்ததகப்பனுடன்கத்தவித்தையோதாதே ... ❋
பேச்சமுன்னடத்தையுஞ்சீச்சிபோடாயிப்போதே (இ)

எனக்குவந்திடும்பழியுனக்குமில்லையோ... ❋
சனபுத்திபுனக்குத்தானுமலையோ... ... ❋
சினக்கும்அரியைக்கொல்லயெனக் கென்னத்தொல்லையோ
செத்தேயுன்பதோசோறுவைத்துவுண்கவில்லையோ (இ)

மண்ணும்விண்ணையும்வாரியுண்ணியவயரொம்பி ❋
வளர்ந்தவயிரமார்பைபிளந்தானேமாயன்,வெம்பி... ❋
என்னுமென்குலத்தோரை கொன்னவன்பேரைநம்பி
யேனோநீயினத்துரூய்மானமில்லையோதம்பி ...(இப்)

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி:

சிறுபிள்ளையென்றுநீதான் ... ... ✻
செப்பிடுங்குற்றமெல்லாம் ... ... ✻
பொருத்தனனினிமேலந்தப் ... ... ✻
பிழைதனைச்செய்வாயாகில் ... ... ✻
மறுத்துன்னைவதைத்துக்கொல்வேன் ... ... ✻
மறையவன்சொன்னதெல்லாம் ... ... ✻
சிரத்துடன்படித்துக்கொண்டு ... ... ✻
சீக்கிரமாய்வருகுவாயே ... ... ✻

வசனம்.

வாருமப்பா பிரகலாதனே - சிறுபிள்ளையானபடியினாலேயிப்போதுநீசெய்தகுற்றத்தைப் பொருத்தேன் - யினிமேல் யிப்படிப்பட்டதப்பிதமானவார்த்தைகள் பேசாமல்சுக்கிராசாரியார்யென்னசொல்லுகின்றாரோ அந்தப்பிரகாரம் புத்தியாய் வாசித்துக் கொண்டுவாருமப்பாமகனே.

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி,

பிறவியாங்கடலில்வீழ்ந்து ... ... ✻
பேதுருமவருக்கெல்லாம் ... ... ✻
திறமுளக்கப்பலாகி ... ... ... ✻
சீர்முத்திக்கரைமேற்சேர்க்கும் ... ... ✻
நாரவுமாதவர்வேதத்தின் ... ... ✻
சொல்லுமெய்ப்பொருளின்வண்மை .. ... ✻
அறிவுடன்கேட்பாயாறு .. ... ... ✻
வரைதுவேனிலமைதானே ... ... ✻

வசனம்.

அகோகேளுமையா யென்னைப்பெத்த பிதாவே பிறவிக்கடலிலேவிழுந்து தத்தளிக்காநின்ற பேருக்கு ஓடம்போலே தாங்கி



அந்தப்பொருளான முத்தியென்னுங்கரைமேலேசேர்க்காநின்ற சைதன்னியமானபதத்தைஇன்னதென்றுசொல்லுகின்றேன்கேளுமையாகவாமி,

தரு-இ-ம்-பைரவி-அடதாளம்

கண்ணிகள்.

காமங்கள்பெருவதும்வருவதுந் ... ... ✻
தருவதுந்தந்தையே ... .. ... அது ✻
கடந்தால்பேரின்பங்க ... ... ✻
ளடந்துவருவதுந்தந்தையே ... ... ✻
ஓமங்களந்தனர் ... ... ... ✻
நேமம்புரிவதுந்தந்தையே ... ... ஹரி ✻
ஓம்நமோநாராயணா ... ... ✻
வென்பதல்லவோதந்தையே ... ... ✻
மண்ணுக்குள்விண்ணுக்கு ... ✻
ளென்னுக்குள்ளுன்னுக்குள்தந்தையே-இன்னம்
மைத்தெங்குஞ்சுத்தெங்கு ... ✻
முத்தப்பாஞ்சுடர்தந்தையே ... ✻
ஒண்ணுக்குமொன்றாகி ... ... ✻
நண்ணியமெய்ப்பொருள்தந்தையே- அது ... ✻
ஓரெழுத்தின்பொருள் ... ... ✻
நாராயணமல்லோதந்தையே ... ✻
மூவர்க்குந்தேவர்க்கு ... ... ✻
மூலப்பொருளாமேதந்தையே ... ன ✻
முத்தியுஞ்சித்தியும் ... ... ... ✻
புத்தியுந்தருவதுந்தந்தையே ... ✻
வேர்வருங்காட்சியுமாட்சியுந் ... ✻
தாட்சியுந்தந்தையே ... ... அது ✻
ஓரெழுத்தின்பொருள் ... ... ✻
நாராயணமல்லோதந்தையே ... ... ✻
நீரும்நிழலும்நெருப்பு ... ... ✻

மாருதமுந்தந்தையே ... ... அது*
நின்றதுசென்றது ... ... *
அன்றதுயின்றதுதந்தையே ... *
ஓரிலெண்ணையைப்போல்நின்றவன் ... *
மாயவன்தந்தையே ... ... அது*
ஓரெழுத்தின்பொருள் ... ... *
நாராயணமல்லோதந்தையே *
வேதப்பொருளாய்விளங்கும் ... ... *
பொருளதுதந்தையே ... சொல்ல*
வேணுமோதோணுமோ ... ... *
காணுமோவென்றுவேதந்தையே ... *
ஓதப்பிரமன்பரமனுலாகு ... ... *
மோதந்தையே ... ... அது*
ஓரெழுத்தின்பொருள் ... ...*
நாராயணமல்லோதந்தையே ... ...*
ஆதியுமாகியநாதியுமானது ... ... *
தந்தையே ... ... பின்னும்*
அடியுமுடியுந்தவெ ... ... *
யிலாததுதந்தையே ... ... *
ஓதும்பொருட்கெல்லாஞ் ... ... *
சாதகமானதுதந்தையே- ... ஹரி*
ஓம்நமோநாராயண ... ... *
வென்பதல்லவோதந்தையே ... *
அணுவமாய்கைக்குழியி ... ... *
லழுந்தியேதந்தையே ... ... இதை*
அறியாமல்நீயறியாமல் ... ... *
வெறியாடுகிறுய்சும்மாதந்தையே ... *
உன்னிலுன்னுக்குள்ளே ... ... *
பார்த்தாலுந்தோணுமேதந்தையே அது*
ஓரெழுத்தின்பொருள் ... ... *
நாராயணமல்லோதந்தையே ... *



நீரிற்குமிழிநிலையில்லாகாயத்தை ... *
தந்தையே... ... ... ...இத்தை*
நிசமென்றுயெண்ணிவசைப்... ... *
பூணலாகுமோதந்தையே ... *
ஒருமனமும்பொருளுங்குணமுங்கேள் ... *
தந்தையே .. ... ... ...அது*
ஓரெழுத்தின்பொருள்... ... *
நாராயணமல்லோதந்தையே... ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்,

மதிமந்திரிமாரேமெத்த வலுமைகொண்டிந்தபையல்... *
யெதிரிபேரென்றுசத்து மென்னுமதுரைத்தான்பாரும் *
முதிபடமோதியண்ட முகட்டிநில்விட்டெறிந்து... *
உதிர்படவாளால்வெட்டி வுயிர்குடித்திடுவேனுனே... ... *

வசனம்.

ஆ ஆ ஆ வாருங்கள்மந்திரிமார்களே இந்தயீரேழு பதினலு லோகமும் நமக்குள்ளடக்க மென்றுதெரிந்திருந்தும்நம்முடைய யெதிரியின் பெயரைச்சொன்னனல்லவா இவனை வாரியறைந்து வாளிநாலேவெட்டி வுதிரத்தைகுடித்துப் போடுவேன் பாருங்கள் மந்திரிமார்களே.

மந்திரிசொல்-விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

படபடென்றிடிபோல்பல்லைப் பதறிடக்கடித்துமீசை
துடித்துடலதிரக்கைகால்தோள்பதறிடவுதட்டைக் *
கடித்துதிரங்குடித்துக்கண்ணனலெங்கும்வீசப் .. *
பிடிபடாக்கோபம்வந்தால்பொருக்குமோகுழந்தைஐயா *

வசனம்:

கேளுமையாசுவாமி இராஜவல்லபா தேவரீர்பல்லிக்கலைத்த போது வுலகமெல்லாந் தத்தளிக்குது - தேவரீருடையவுடல்ந

க்கும்போது அண்டபுவனமெல்லாஞ் சுழல்கின்றது தேவரீர கண்ணுருட்டிப்பார்க்கும்போது யெங்கும் அக்கினிசுவாலைபரம்பிக்கின்றது அதற்குஇப்படிப்பட்டக் கோபம்வந்தால் யார் தப்புவார்கள்இந்தஅரியாதக்குழந்தைபேரில் இப்பேர்ப்பட்டகோபம்வரலாகாது அக்கொடிதான கோபத்தைபொருத்துமன்னித்தருளுமையாசுவாமி.

இரணியனுக்கும்பிரகலாதனுக்கும்

தர்க்கம்-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

கண்ணிகள்.

ஆடாவுனக்கிந்தப்போதனைச்செய்தவர்... *
தேராகவெனக்குநீநிகழ்த்துவாய்மைந்தா... *

பிரகலாதன்சொல்.

நிகழ்த்திநாராயணமெனநீயென்னஅறிவாயோ ... *
அகத்தினிற்குடிகொண்டதருப்பொருளெந்தா ... *

இரணியன்சொல்

அரும்பொருளாவதும்பெரும்பொருளாவதும் ... *
தரும்பொருள்யானன்றிநாரணன்டோமைந்தா... *

பிரகலாதன்சொல்

நாரணன்டோவென்றேசதுமறைப்பாலிய ... *
ஆனந்தநாரணன்அமலன்காணெந்தா... ... *

இரணியன்சொல்

நாரணனதனேயனுக்கால்தம்பியை ... *
கோறமாம்பன்றியாய்க்கொல்வானேமைந்தா... *

பிரகலாதன்சொல்

கொல்வானேபொல்லாதப்பாதகரைக்கண்டால் ... *
வெல்லாமல்விடுவானோவிமலன்காணெந்தா .. *

இரணியன்சொல்

விமலனனவனுக்குமெய்யினிற்பயமுண்டோ *
உமிழ்நிரைக்கடலினிலொளிப்பானேமைந்தா ... *



பிரகலாதன்சொல்

வினுமுள்ளவன்காணிதனிலெல்லாம் ... *
வினுமுன்னவன்வொருவன்காணெந்தா ... *

இரணியன்சொல்

வனென்றுரைத்தாயேவொருவன்மேற்பகையென்ன
வன்மேலுறவென்னவுரைத்துசொல்மைந்தா ... *

பிரகலாதன்சொல்

ந்தென்னசொல்வதுவுண்மையையறியாமல்... *
ந்தனையென்றுவோர்க்கவன்யமனெந்தாய்... *

இரணியன்சொல்

னவனென்றுயேயெமனையுங்கொன்றேன் ... *
மையுஞ்சினமுடிப்பேனறிந்துபார்மைந்தா... *

பிரகலாதனன்சொல்

ந்தென்னபார்ப்பது அவனைநீசொல்வாயோ ... *
ரித்துன்னைக்கொல்வதுந்தெரியாதோவெந்தா... *

இரணியன்சொல்

ரியாதோயானுக்கால்சிறைசெருடனே ... *
யவன்படுவதுதெரியாயோமைந்தா ... *

பிரகலாதன்சொல்

ங்குவதுஞ்சிங்கப்பாச்சனுக்கிடமல்லோ... *
ங்கிப்பிழைப்பதற்குவொன்றுமவெந்தா... *

இரணியன்சொல்

ணுதென்றேன்றுதே விண்ணுமண்ணுமெல்லாம்
மணிபோல்நான்காத்தேனேமைந்தா ... *

பிரகலாதன்சொல்

தமுன்னவன்கருணையினாலல்லோ *
த்தியேநீவாழ்ந்தவின்பங்காணெந்தா... ...*

இரணியன் சொல் விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

மையாயுரைத்தபோது வுள்ளமுஞ்சிந்தம்வெந்து
ரிலங்கிருந்திய யீரேழுலோகமெங்கு... *

அருமையென்றம்பிதன்னை ஆயிருண்டான்பேரை *
வுரைசெய்யவென்றேநானு முன்னையும்பெத்தேனேடா

வசனம்.

அடாவடாபிரலாதனு-நீசொன்ன வார்த்தையினாலே இந்த அண்டரண்டங்களும் மேரேழுபதினாலு லோகங்களும் சத்தசமுத்திரங்களும்அதிர்ந்துப்போகும் படியான கோபம்வருகின்றது இப்போது யென்வைகையறிய அந்த அரியின்பெயரைச்சொல்லதனாலுன்னைபிள்ளையாகப்பெத்தேன்றல்லதாகட்டும்.

இரணியன்சொல்

இ-ம்-தோடி.

யென்றிடித்தன்பாற்சிறி ... ... *
யிருந்தமந்திரிபேகேளாய்... ... *
ஒன்றியவுடலிற்புண்ணை... ... ... *
வுசந்தருத்தெரிவார்போலக்... ... *
கொன்றிடவேணுமித்தக் ... ... *
கொடியனென்குலத்துக்காகான் ... *
இன்றுநீமல்லர்தம்மை... ... ... *
யிக்கணமழைப்பிப்பீரே... ... *

வசனம்.

வாருங்கள் மந்திரிமார்களே யென்னுடைய பகைவன்பெயரைவெகுமுயற்சியாக சொன்னதுஷ்டன்-இனியென்முகத்தில் முன்னே நிற்கலாகாது இவனையிந்தட்சணமே கொல்லவேணும்ஆகையால்அதிகசீக்கிரத்துக்குள் மல்லரை அழைத்துவரசொல்லும்மந்திரிகளே,

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

இன்டெமதருகில்........ ...*
நீண்டகட்டியனே............ *
ஆண்டமல்லர்களைக்...... ... *
கொண்டுநீவருவாய்... ... ...*



கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி.

தெண்டிரைக்கடல்சூழ் ..... *
எண்டிசைக்கரசே.......... .. *
கண்டிதமல்லரைக் ............*
கொண்டிதோவாரேன் ... *

கட்டியன்சொல்-விருத்தம்

இ-ம்-கமாஸ்.

அடிபடவாசன்................*
கடினமாயழைத்தார்..........*
படிமிசைமல்லர்...... ..... *
நொடியினில்வருவீர்.........*

மல்லர்வருகிற விருத்தம்

இ-ம் சுருட்டி.

ஆலமெனக்கொடுமைனதனல்சிந்திட ... *
ஆழ்கடலதுதோய ... ... ... *
ஞாலமுமதிஇனசோலயுதிர்ந்து ... *
நடுங்கிமிகக்காய ... ... ... *
மேலவனத்தெழுமேகமுடன்தரு ... *
வெந்துமிகத்திய ... ... ... *
குலமுடன்மறவாள்கொடுமல்லர் ... *
சுருக்கினில்வந்தாரே ... ... *

பொதுசொல்-தரு-இ-ம்-ஆசாவேரி.

தாளம்-அடசாப்பு.

பல்லவி-

மல்லர்வந்தாரே-வலுமையுள்ள ... *
மல்லர்வந்தாரே .. ... *

அநுபல்லவி.

.தொல்லுலகெங்கினும்வல்லமைகொண்டிடும்... ...*
யெல்லவரும்பணிஇரணியன்முன்னே ......(மல்லர்)

சரணங்கள்.

காலிக்கிருதுவெண்டயமிட்டுக் .. ... ✻
கருப்புக்கச்சையுஞ்சல்லடமுந்தொட்டு ... ✻
வேல்மழுசூலமும்வாள்கரும்பிடித்து ... ✻
விழித்துவுநட்டைக்கடித்துபெருத்த ...(மல்லர்)

தெரித்தசுருஞ்சியுஞ்செம்மட்டமயிரும் ... ✻
தேத்திவிசாலமுந்தத்தியநடையும்... ... ✻
கருத்தமீசையும்முருக்கிவெருட்டிக்... ... ✻
கண்டவர்தங்களை அண்டங்கள்செய்வார்போகி (மல்ல)

இடிந்தபேச்சும்வெடித்தச்சிரிப்பும் ... ... ✻
இருட்டைக்குழைத்துதிருட்டுமேனியும் ... ✻
பிடித்துமேகத்தைப்பிசைந்துஜலத்தை ... ✻
குடித்துசொழித்துகடித்துப்பெருத்த ..... (மல்லர்)

மல்லர்கள்சொல்தரு

இ-ம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மல்லர்நாங்களே-சேவைசெய்யும்... ... ✻
மல்லர்நாங்களே ... ... ✻

அநுபல்லவி,

தொல்லுலகில்கவிஞ்ஞோர்களெல்லென்றுமல் ... ✻
துண்டத்தினமாகமுண்டத்தினஞ்செய்யும் ... ✻
வல்லாண்மைப்பேசியேசத்துமதியாத ... ✻
மட்டியர்தங்களைவெட்டியெரிகின்ற ... (மல்லர்)

சரணங்கள்:

இச்சையாய்ச்சங்கேதவித்துவரைக்கண்ட ... ✻
டிரஞ்சித்தினந்துதிப்போம் ... ... அதி✻
லேசுந்தெரியாதமூடர்கள்பாடினு ... ... ✻
லெங்கள்காலாலுதைப்போம்... ... ✻



அச்சமில்லாமல்சபைதனிலேநின்று... ... ✻
ஆடுமவர்க்கொருபாடகனுமென்று... ... ✻
கொச்சைநாய்போலஅழுதுதிரிவோரைக்... ✻
கொல்லத்துணிந்தவல்லையத்நாற்குத்தும்... (மல்லர்)

கள்ளுஞ்சாராயமுங்கஞ்சாவபினி... ... ✻
கலந்துநன்றாய்க்குடிப்போம் .. ... அரையில்✻
கருப்புகச்சையுஞ்சல்லடமுந்தொட்டு... ... ✻
கையில்கத்திப்பிடிப்போம் .. ... ... ✻
துள்ளித்துள்ளிக்காலில்வெண்டயமாடச்... ... ✻
சூலமழுவேல்கண்டமாறேட... ... ✻
கொள்ளையிடாமலறஞ்செய்யாகிந்தைக் ... ... ✻
கொன்றிடும்பேர்களைத்துண்டு துண்டாய்வெட்டும் )

திக்குகெஜங்களைவிக்கிரமங்கள்கொண்டு ... ✻
திசைக்கும்படியடிப்போம்... ... யெங்கள்✻
நிரேகங்குளிர்ந்திடமேகத்தைப்பிழிந்து ... ✻
நாகத்துக்கேகுடிப்போம் ... ... ✻
அக்கிரமஞ்செய்கிந்தஅகடத்தைநெரிப்போம் ... ✻
அஷ்டகிரிதன்னைகள்ளிப்போல்முறிப்போம் ... ✻
பக்கண்டிடிபோலிரணியனெங்களைப்... .. ✻
பார்த்திருந்தால்வேலைகாத்திருந்தேசெய்யும் (மல்லர்)

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி.

மல்லலம்புயனேபோற்றி ... ... ✻
மன்னவர்மன்னுபோற்றி... ... ... ✻
எல்லொளிமார்பாபோற்றி... ... ... ✻
யிரணியவேந்தேபோற்றி .. ... ... ✻
வல்லமையாலேயெம்மை... ... ... ✻
வரவழைத்திட்டசேதி... ... ... ✻
சொல்லுவீர்தேவர்சொன்ன... ... ✻
தொண்டுவேலைகள்செய்வோமே .. ... ✻

வசனம்,

சரணஞ் சரணமையா சுவாமிஇரணியேஸ்வரா சர்வலோக தயாபராபூமண்டலாதிபா அடியேன்களை அழைப்பித்தகாரியம் யின்னதென்றுதிருவுளம்பத்தியருள்வேண்டுமையாசுவாமி.

இரணியன்சொல் விருத்தம்

இ-ம்-மோகனம்.

மன்னியவமைச்சமாரே... ... ... *
மல்லர்கள்வசத்தில்தானே ... ... *
என்னிடயெதிரிபேரை... ... ... *
யெதிர்த்துநின்றுரைத்தபையல்... ... *
தன்னையேயொப்பிவைத்து... ... ... *
தகைபணிவகையும்வாங்கி... ... *
அன்னவன்றனைபிடித்து... ... ... *
அவர்களைவரச்சொல்வீரே... ... *

வசனம்

அகோவாருங்கள்மந்திரிமார்களே யெனக்குப் பகையாளி யானவன்பேரைச்சொன்ன அஷ்டனை யிந்தட்சணத்தில் மல்லர்க ள்வசத்திலொப்பிவித்து அவன்றரித்துயிராநின்ற ஆடையாபரண மெல்லாம் வாங்கிவைத்து அவனைபின்கட்டுமாருப்பிடித்துக்கட்டி க்கொண்டு யென்று மூன்பாகவரச் சொல்லுங்கள்மந்திரிமார்க ளே.

மந்திரிகள்சொல் விருத்தம்:

இ-ம்-தன்னியாசி.

வாள்கொடுவாள்கையேந்து... ... ... *
மல்லரேசொல்லக்கேளீர்... ... .. *
மாங்குள்ளகுலத்துக்காகப்... ... ... *
பையலைப்பிடித்துநீங்கள் ... ... *
ஒக்கியபணிதியாடை... ... ... *
வுயர்நவமணிகள்வாங்கி... ... ... *
யேங்கிடக்கயத்தால்கட்டி... ... ... *
யவன்றனைக்கொண்டுவாரீர்... ... *



வசனம்,

வாருங்கள்மல்லரேதனதுகுலத்தையழிக்கவந்த கொடியது ஷ்டனைப்பிடித்து ஆடையாபரணம்நவரத்னமாலைமுதலாகிய ஆக ளைவாங்கிவைத்துமனதிடுக்கிட்டுயேங்கி அஞ்சும்படியாக அவ னைபின்கட்டுமாருகக்கொண்டு அரசன்முன்னே கொண்டுவந்துவிடு ங்கள்மல்லர்களே,

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

புரசனுக்கோபுத்தன் ... *
இணையடிதலைமேல்வைத்து *
கூசாமல்மகனைக்கட்டிக் ... *
கொண்டிதோவந்தோமையா ... *

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை,

அடித்திடுமல்லரே ... *
பிடித்திவனுடலைக் ... ... *
கடித்துதிரத்தைக் ... *
குடித்திடுவீரே ... ... *

இரணியன்சொல்-தரு-இ-ம்

புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு.

பல்லவி.

மல்லரேகேளும்-சொல்லுகிறேன் *
மல்லரேகேளும் ... ... *

அநுபல்லவி.

மல்லரேநிகத்தாலேசல்லடைக்கண்போலே... *
சில்லிசில்லியாகக்கொல்லுங்கள்கொல்லுங்கள் (மல்)

சரணங்கள்.

குலங்கெட்டாய்மெத்தகட்டியே-மயிர் ... *
கோடிமனிதயத்திறுக்கட்டியே ... ... *

துண்டுதுண்டாய்வாளால்வெட்டியே-யிவன் ... ❋
சொரியுஞ்சோரியுங்கோளென்ன அட்டியே-நட்டியே (ம)

காத்தாடிப்போலவேசுத்துங்கள்-இவனைக் ... ❋
கால்வாரிநிலத்தோடேயெத்துங்கள் ... ❋
கோத்துகோத்துவேலாற்குத்துங்கள்-குத்தி ... ❋
குடலைப்பிடுங்கிகோபமுறத்துங்கமேலாத்துங்கள் (மல்)

என்மகனாயின்னம்வேணுமோ-யினி ... ❋
யெனக்கிவன்மேலன்புதோணுமே ... ❋
சொன்னதுன்மதியாலென்னகாணுமோ(னையன் ... ❋
தேகமதியெல்லாம்ஆணுமோபூணுமோ (மல்)

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-மோகனம்,

வாருங்கள்மல்லர்களே மன்னன்சொன்ன ❋
வகைப்படியேமணிக்கயத்தால்மைந்தன்றன்னை ❋
சேருங்கள்யிவன்றனையேயிறுகக்கட்டிச் ... ❋
செல்லுவோங்கானகத்திற்செல்லுவோமே ❋

வசனம்.

வாருங்கள்மல்லர்களேநமதுமகாராஜனான யிரணியபூபன் சொன்னவுத்தாரப்படிக்கியிவனைமணிமயத்திநால்யிறுகக்கட்டிகானகத்திற்குகொண்டுபோவோம்மல்லர்களே,

பிரகலாதனன் சொல்

கட்டளைக்கலிப்பா.

ஆழிதன்னைப்பொருப்பைமத்தாக்கியா ❋
டரவுதன்னைக்கயிறெனப்பூட்டியே ... ❋
ஆழியைக்கடைந்தண்டர்க்கமுதம்நீ ... ❋
அன்றளித்திடநின்றருளண்ணலே ... ❋
ஆழிபொங்கியஆழியைப்போல்மல்லர் ... ❋
அருகுகயிர்கொண்டருகில்வந்தாரிதோ ... ❋
ஆழியிற்றுயிலையனேமெய்யனே ... ❋
அரிஅரியென்னைக்காத்தருள்செய்வாயே ❋



பொது-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

இப்படியேசொல்லிமல்லர்கையிலேய்ந்து ... ❋
இவனையிந்தக்ஷணத்திலுயிர்வாங்காவிட்டால் ❋
ஒப்புடனேயுங்களையுங்கொல்வேனென்றான் ❋
உரிக்கியேஅடித்திழுத்துக்கொண்டுபோனார் ❋
அப்பொழுதிலனுபோகியென்னுந்தோழி ... ❋
அதுகண்டுதலைமீதிலடித்துக்கொண்டு ... ❋
மைப்படியுங்குழலீலாவதிமுன்னோடி ... ❋
வாய்குளறியழுதிதனைவழுத்துவாளே ... ❋

வசனம்,

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் இரணியமகாராஜன் தன்குமாரனாகிய பிரகலாதனனை மல்லர்கள் வசத்திலொப்பிவித்து யிவனை இந்தக்ஷணத்திலே கொல்லாவிட்டால் வுங்களைச் சிரசாக்கினைசெய்துப்போடுவேனென்றுசொல்ல அப்போது மல்லர்கள் மிகுந்தகோபத்துடனே பிரகலாதனனை பிடித்து அடித்திழுத்துக்கொண்டு போகுஞ்சமையத்தில் இதுகளையெல்லாங் கண்டிருந்தபோகியென்னும்பெயருடையதோழியானவள் தலைமீதிலடித்துக்கொண்டு மைப்பொருந்துங்கண்ணாளாகியலீலாவதியம்மனுடனேசொல்லுகிறவிதங்காண்க,

தோழிசொல்-தரு-இ-ம்

சுத்தசாவேரி-ஏகதாளம்,

பல்லவி.

என்னசொல்லுவனடியம்மா-யிந்த..... ❋
அதிசயந்தன்னைநான் ... ... ❋
யென்னசொல்லுவனடியம்மா ❋

அநுபல்லவி.

மன்னர்மன்னனிரணியசன்மனங்கொதித்து ❋
மைந்தனைமல்லர்கள்தள்ளிநெஞ்சிலிடித்தாரது (மன்)

சரணங்கள்

பள்ளிக்கூடத்திலேதெள்ளிய நூல்தனை ... ※
படித்துக்கொண்டுவாவென்றனிமித்தேனே னுன்பிள்ளை
வெள்ளியோ அமந்திரந்தன்னிலிட்டானேயுன்னை ※
வெட்டித்துண்டாடுவேனென்றுதிட்டஞ்செய்தாரடி (என்)
அரிதிருவடிதம்பரவியேநாமங்கூறி ... ※
ஆனந்தம்பெருகியேவானந்தப்பரமேறி ... ※
அருள்போலாகுமென்றுரைசெய்மகனைச்சீறி ※
யாக்கிரமங்கொண்டுயிரைப்போக்குமென்றுருள்ளதே (ஏ)
வேங்கைக்குளகப்பட்டசெக்கன்னை அபோலாகி ... ※
வெஞ்சப்பூனைவாய்ப்பட்டபஞ்சக்கிளிபோலாகி ※
எங்கிருச்சமகன்வாங்கமலர்த்திருகி ... ※
இரிக்கிப்பாசத்தால்கட்டிபுரிக்கிப்போனுர்சையோகி (என்)

லீலாவதி சொல்

கட்டளைக்கலிப்பா,

ஐயையோயிதுநான்செய்தபாவமோ ... ※
அண்ணல்நெஞ்சமிரக்கமில்லாமலே ... ※
வையகத்திலுள்ளோர்கள்நகைத்திட ... ※
மல்லர்கள்கையில்மைந்தனைவொப்பித்தார் ※
செய்யும்வாரியிலாதொன்றறிகிலேன் ... ※
தெய்வஞ்செய்ததிருவினைபார்ட்டிடோ ... ※
நையுநெந்தன்வயர்ட்டுக்கிறேருதித ... ... ※
நானிதற்கென்னசெய்குவேனக்கையே ... ※

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-முகாரி.

வதைத்திடக்கொண்டுபோர ... ... ※
மல்லரேநின்றுமப்பா ... ... ... ※
கொடுத்துகொள்வருபத்திக் ... ... ※
கொப்பெனவெரியுதைமோ ... ... ※
பகுத்தமைக்கொயோசென்று ... ... ※
பஞ்சலப்பேயோலேகெஞ்சி ... ... ※



இதத்துடன்வாங்கிவாரேன் ... ... ※
யிவ்விடமிருங்களப்பா ... ... ...※

வசனம்,

வாருங்கள்மல்லர்களேயென்னுடையக்குழந்தையாகியபிரகலாதனைவதைக்கக்கொண்டு போகின்றீர்களே யென்னுடைய வயரானதுபத்திக்குமிலென்று யெரியுது இப்போதுஅரசனிடத்திற்போய் அவரிருதையமிதங்கும்படியானபரிதாபமானவார்த்தைகள்சொல்லிவுத்தரவுவாங்கிக்கொண்டு வருகிறேன்-நீங்கள்சற்றுநேரம்-மனம்பொருத்து நான்வருகிறவரைக்கும் யிவடத்தில் தானேயிருங்கள் மல்லர்களே.

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி,

மன்னவனுத்தாரத்தை ... ... ※
மரித்தொன்றுஞ்செய்யப்போமோ ... ※
அன்னிலைதப்பிநின்று ... ... ※
லாக்கினையிடுவார்கண்டாய் ... ... ※
உன்னிதமாகச்சென்று .. ... ※
வுண்டில்லையென்றறிந்து ... ... ※
அன்னையேநீதானிப்போ ... ... ※
அரைநொடிதன்னில்வாராய் ... ... ※

வசனம்.

அகோவாருமம்மாதாயே யெங்களரசனிட்டகட்டளையைமருத்துயிருப்போமாகில் யெங்களுக்கு ஆக்கினைவந்து நேரிடுமாதுகையாலிப்போதே அரசனிடத்தில் போய்வுண்டில்லை யென்றுதெரிந்துக்கொண்டு சீக்கிரத்தில்வந்துசொல்லுமம்மாதாயே:

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-கண்டா.

பிழையிலாருலம்விளங்கப் ... ... ※
பிரத்திடும்பாலன்மீது ... ... ※
வழுவுதல்சமத்திநீரும் ... ... ... ※
வதைசெய்யவுரைத்தீர்மன்னே ... ※

இழிவென்னசெய்தபோதும் ... ... *
யிரங்கியென்முகத்தைப்பார்த்து ... *
பழிதனைதிருத்துமுந்தன் ... ... *
பதமலர்சரணமையா ... ... *

சரு-இ-ம்-முகாரி-தாளம்

அடசாப்பு.

கண்ணிகள்.

எந்தவுலகத்திலிந்தக்கொடுமைக ... *
ளேற்குமோவென்சாமி-பெத்த ... *
மைந்தன்றனைக்கொன்றுநிந்தனைசெய்வது... *
மாற்கமோவென்சாமி ... ... *
இம்மைப்பழிகளும்அம்மைநரகமும் *
மெய்தாமேயென்சாமி-இந்த ... *
மும்மையுலகத்தில்தம்மைத்திரம்பிய *
முறைகெடுமென்சாமி ... ... *
பெத்தக்குழந்தைமேலித்தனைக்கோபம் *
பெருகுமோவென்சாமி-யென்ன ... *
குத்தங்கள்செய்தாலும்பெத்தார்பொறுத்துள்ளங்
கொள்வார்களென்சாமி ... ... *
பல்லுவிழுந்திண்ணம்தல்லாமுளையாத ... *
பாலகன்மேன்சாமி-இப்போ ... *
கொல்லநினைந்துநீர்மல்லர்கைவிடுவது ... *
கொடுமையோவென்சாமி ... ... *
மண்டலத்தெல்லோருங்கொண்டாடச்செங்கோல்
மருவிநீரென்சாமி-இப்போ ... ... *
கண்டோர்களெல்லோருந்திண்டாட்டஞ்சொல்வது
சருமமோவென்சாமி ... ... *
சொன்னசொல்கேட்கவுமின்னந்தெரியாத *



சிறுபிள்ளையென்சாமி-அது ... ... *
சொன்னத்தைதாய்தந்தைதன்மையென்றோர்வது
சிறுர்தமாமென்சாமி ... ... *
மக்கள்மெய்தீண்டலுடற்கின்பமாகி *
வருவதேயென்சாமி-அந்த ... ... *
சொற்கேட்கவின்பஞ்செவிக்கென்றுவேதமுந்
சொல்லுமோவென்சாமி ... *

இரணியன்சொல்-விருத்தம்

இ-ம்-தோடி.

ஆரடியித்தமொழிசொன்னாய்போடி ... *
அன்பாகநீயுமெனக்காகாய்போடி ... *
பாரடியெவ்வுலகம்பதிநானுந்தான் ... *
பகவானென்றெனைப்பணிதல்பாராயோடி *
பேருளவென்றம்பியுயிர்கொண்டான்பேரை *
பிதற்றினவனுடனேவுனையும்இப்போ ... *
கூறியவாளுக்கிரையாய்குதித்திப்போது *
கோதையரோடிருவரையுங்கொல்லுவேனே *

வசனம்.

அடிவாடியில்லாவதி இத்தப்படிநானு லோகமும் யென்னைத் தெய்வமாக நினைத்து துதிக்கிறதையும் பார்த்திருந்தும்-யென்னுடையதம்பியாகிய யிரணியாக்கதனைக்கொன்னசெரிடியசத்துருவின்பெயரை சற்குருவும் பயமச்சமில்லாமலுந் சொன்னயையனுக்குநீ அன்பானவளானபடியினாலே நீயும்யெனக்காகதுஇப்போதுவன்னையும் அவனையுஞ்சேர்த்து யெனதுவாளினாலே வெட்டிப் போடுவேன்-யித்தட்சணம் யென்முகத்துக்குமுன்னில்லாமல் அப்புறம்போடி.

லீலாவதிசொல்

கொச்சகம்.

நின்னைத்தியபாலகனேநெய்விகாத்தினமே... ※
வன்னக்கிளியேமரகதமேதெள்ளமிர்தே . . ... ※
மன்னனுரைத்தபடி மல்லருனைவதைத்தால்... ※
தன்னந்தனியேதவிப்பேனே யென்மகனே.. ※

தரு-இ-ம்-புன்னாகவராளி

தாளம்-அடசாப்பு.

பல்லவி.

மடியவேபோராயோ-பிரகலாதா ... ※
மணிமுத்தந்தாராயோ ... ... ※

அநுபல்லவி.

மடியவேபோராயோ ... ※
கொடியவெங்கனலாலென் ... ... ※
நமோதரினிற்பிட்டாமல் ... ※
வயத்திலேமூட்டி ... ... (மடி)

சரணங்கள்.

என்னுடையகண்மணியே-சொம்பொற்பாவம் ... ※
பண்ணுமைப்பண்ணினனே ... ... ※
கண்ணேயென்கண்ணின்மணியேயெவ்வுலகமும் ... ※
நண்ணியேபுகழணியே ... ... ※
உண்ணாமலுறங்காமல்துரங்கத்தாராகி .. ※
விண்ணுறும்பெருஞ்செல்வம்வெறுத்தென்னவோராகி

கொங்கைப்பால்பெருகுதடா ஆட்டிவளர்த்த ※
செங்கையுங்கருகுதடா ... ... ... ※
அங்கம்வெந்தழலுதடா-உயிர்போகாமல் ※
இங்கலைந்தழுகுதடா ... ... ...※



யெங்கேபோய்விழுந்தின்னம்யெங்குவன்மனம்விண்டு
மங்களவதனமும்வாயும்நகையுங்கொண்டு (மடி)
முன்னாள்செய்தவினையோ-மன்னவனுக்கு ※
என்னகாரணமறியோ ... ... ※
அன்னியாயஞ்செய்தாயோ-பெரியோர்களை ※
என்னுமல்வைதாயோ ... ... ※
பொன்னின்முடியுமரத்னபூஷணமும்வெறுத்து ※
இன்னதென்றெனக்குண்மையியம்பாமலேவெறுத்து (மடி)

பிரகலாதன்சொல்

விருத்தம்-இ-ம்-பூரிகல்யாணி,

எங்கியேயழுதியென்னை யெடுத்துவாய்முத்தங்கொண்ட ※
மாங்குயிலனையேவந்தென்மலரடிபோற்றிபோற்றி .. ※
ஈங்குநீவருந்தலேன்றுமெனக்குநாரணனேயல்லால் ※
பாங்குள்ளதுணைவேருண்டோ பகருவேன்கேளுமம்மா ※

வசனம்.

கேளுமம்மாயென்னைப்பெத்ததாயே யேதுக்காகயித்தனை வருத்தப்படுகின்றாய் அடியேனுக்கு ஸ்ரீமன்னாராயணருடையதிவ்வியதிருவடித்தாமரைத்துணையேயல்லாமல் வேறொன்றுதுணையுண்டோயென் அம்மணி.

லீலாவதிசொல்-தரு-

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏன்டாகுமாராயென்னுடனுனக்குப் போரா ※

அநுபல்லவி.

வேண்டாமிதல்லாம்விகடஞ்செய்யத்தகாது ※

சரணங்கள்.

ஆண்டவனேனேஅரிவாய்த்தானே ... ※
ஈண்டொருவருமில்லைஇதியறிவாய்சொல்லை (ஏ)
சூதுசெய்தரோகிதுணையுமக்காகி ... ※
வாதுவைத்தாய்நீயே-மனமுறியுத்தாயே (என்)

இந்திரலோகம்இந்திராணிபோகம் ... *
சந்தமுங்கைக்கொண்டேன்-நயித்தியகுலவுதண்டேன் (
திருவுடன்வாசன்திருவேங்கடேசன் ... *
சிரக்கும்வினையெண்ணித்திகைக்கிருப்மனம்நண்ணி (எ)

பிரகலாதன்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்

தாளம்-அடசாப்பு.

கண்ணிகள்.

பேதைக்குநீயிந்தவேதனைப் ... *
படுமெருயன்னையே ... ... உனக்கு *
கென்னகுறையென்று ... ... *
வுன்னிக்கலங்குறுயன்னையே ... *
காதைக்குங்கண்ணுங்காதமோயேதமோ *
அன்னையே ... ... யிதைக் *
காணவுங்கேட்கவும் ... ... *
வேணதுன்டிசயம்அன்னையே ... *
அறியாதமானிடர்பிறவிவந் ... *
தடைவதும்அன்னையே ... ஆறு *
ஆண்டுதிலன்பதுமாண்டு ... *
நித்திரையில்போம்அன்னையே ... *
இருபத்தோரைந்துள்பருவத்தே ... *
வனம்போகும்அன்னையே மைந்த *
இருபத்தோரைந்தினில்வரும்பலன் ... *
மொழியக்கேளன்னையே ... ... *
உரையுமனைவியென்றுந் ... *
திரையும்புதல்வரென்றும்அன்னையே தங்க *
குளம்வைத்துழப்பாலே ... ... *
தளருவார்மனிதர்கள்அன்னையே ... *
மரணிசெய்நரகத்துக்குரவாகி ... ... *
வழிவார்கள்அன்னையே ... ... *
மாயப்பிரவிக்கிநீ ... ... *
தேயுமாகுமோஅன்னையே ... ... *



பாபத்திலுல்வந்தவுபத்தாயிவ்வுடல் ... *
அன்னையே ... மெய்ஞ்ஞானப் *
பாராமல்நானென்று ... ... *
போராலுவக்கொண்டுஅன்னையே ... *
கூடத்திலேவிழுந்தாபத்தர் ... ... *
போலவேஅன்னையே ... கொடுக் *
கூத்துவனரசத்தையேத்திடு ... *
வானையோஅன்னையே ... ... *
பன்னியநூல்களையெண்ணு ... *
மறியார்கள்அன்னையே-அந்த ... ... *
பரம்பொருள்நிலைமையிஃதெனம்பிரித் ... *
தறியார்கள்அன்னையே ... ... ... *
பொன்னிலும்பெண்ணினிலும் ... *
தன்மனம்வையார்களன்னையே ... யவர் *
புத்தியைநானென்னசுத்தாச் ... ... *
சொல்லவேணுமோஅன்னையே ... *
தேவர்களமுனிகள்யாவர்க ... *
ளாயினும்அன்னையே ... சொல்லுந் *
தெரியபராயினும் ... ... ... *
பரவயராயினும்அன்னையே ... *
யாவர்களாயினும்பாவிக ... ... *
ளாயினும்அன்னையே ... மாயனின் *
அடியிணைதுதிக்கவே ... ... *
குடிபோகுவினையெல்லாம்அன்னையே *
யெடுத்தசரீரமெல்லாவதித்து ... *
வேறேவருமோஅன்னையே ... ... *
நம்புமடியவர்க்குச்செய்யத ... *
மலர்தந்தஅன்னையே ... காக்கும் *
நாரணனிருக்கவும்வேறேபிடர் ... *
வருமோஅன்னையே ... ... *
ஒளிநிறைந்ததப்பவும்மோக்ஷி ... *
நிலைப்பதுஅன்னையே ... மாய *

நொந்திதில் நடைப்பதும் ... *
மொந்திய குணமல்ல அன்னையே ... *
அந்த நாரதர் சொன்னதின்று ... ... *
நீமாத்தாயோ அன்னையே ... அந்தை *
அகம்கொண்டு அளவற்ற ... ... *
சுகம்கொண்டு அனுபவிப்போம் அன்னையே *
வருந்தியழைத்தாலும் வாராது ... *
வாராது அன்னையே ... ... கிட்டி *
வந்தனைப் போவென்று தொந்தாலும் .. *
போகாது அன்னையே ... ஜனவை *
திருமாலுக்கடிமை செய் பொருந்திய ... *
வினையென்றே அன்னையே ... *
செப்பிய வாய் விதந்தப்பு ... ... *
மோதப்பாதோ அன்னையே ... ... *
மூலப்பகுதியுங்கோலமா ... ... *
மூலக்கன்னையே ... ... அது *
முத்தொழில் செய்கையை ... ... *
பத்தியதுபவிக்கும் அன்னையே ... *
காலங்கள் மூன்றிலுஞ்சால ... *
மயக்குமே அன்னையே ... அந்த *
காத்தியவ்வியமான நாரணனே ... *
யல்லாலன்னையே ... ... *

பல்வர்கள் சொல் விருத்தம்

இ-ம்-நாட்டை.

சங்கிவன் மனை திருத்த... ... ... *
யெங்களுக்கென்ன வாதை... ... ... *
ஆக்கவல்கனகமன்னன்... ... ... *
ஆக்கினையிடுவார் கண்டாய் .. ... *
தீயங்கிடமணிக்கைத்தா... ... ... *
விறகவே கட்டிக்கொண்டு... ... ... *
மேக்குருவனத்தில் தாமும்... ... ... *
செல்லுவோம் வருகுவீரே... ... ... *



வசனம்.

கேளுங்கள் தம்பிமார்களே - இவனையிவடத்தில் நிருத்திவைத்திருப்பதில் நமக்குயென்னலாப மிருக்கிறது - நமது அரசன் யிந்த சங்கதியை அறிந்தால் நம்மைவெகு மிகுந்தகோபத்துடன் ஆக்கினை செய்வார் நாம் யிந்தவிடத்தில் யிருக்கப்போகாது - யிந்தமணிக்கயத்திருல் யிறுக்கக் கட்டிக்கொண்டு காட்டுக்குப்போவலாம் சீக்கிரம் சீக்கிரம் ட்டுங்கள் தம்பிமாரே.

லீலாவதி சொல் விருத்தம்

இ-ம்-கண்டா.

கரும்புபோல் வளர்த்தப்பாலன்... ... *
கண்மூடியிதுங்கிச்சோர... ... *
நெருக்கவே கையக்கட்டி... ... ... *
நில்லைமன்னிட்டுவே தள்ளி... ... ... *
சுரும்புகள் செய்ய வொண்டாடு... ... ... *
சுகிர்தமுண்டுங்களுக்கு ... ... *
பெரும்புகழ் கிடைக்குமெள்ளாய்... ... *
போகவேமனம் கொள்வீரே... ... ... *

லீலாவதி சொல் தரு

இ-ம்-கண்டா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மல்லர்களாமதுசொல்லி வாரேன் சொல்லி ... *
வாரமட்டுமென்ன போகொண்டுதோ ... *
பிள்ளையோ நானீன்றவுயிர் பிள்ளையோ தானீங்க ... *
விருந்துமென்னாடந்து போகொண்டுதோ... *
தன்மமுண்டோ யிதனுல் கன்மமுண்டோ நீங்கள் ... *
தள்ளிடாமல் நின்று போகொண்டுதோ ... *
வரம்மமுண்டோ யிவன்மேல் மர்மமுண்டோ சத்தே *
மனைவிட்டின்றுமென்ன போகொண்டுதோ... *
எங்குருவேவு விடுங்களுரே யத்த... ... *

இரையவனுக்குமறையோதொன்றுதோ ... ※
கண்மணியேநான்செய்தபுண்ணியமே... அருள் ※
கற்பகமேமகனேஅற்புதனே... ... ※
யென்னியென்னிமனங்குன்றுவேனேகண்டு... ※
யேங்குவேனேவுயிர்தாங்குவேனே... ... ※
வெட்டுவாரோதலைமேல்குட்டுவாரோதள்ளி ... ※
விட்டிடுவாரோதண்டால்மாட்டுவாரோ ... ※
பெட்டிப்பாம்புப்போலவேவொட்டிநொந்துமகனே ※
புழுங்குவாயோபுழுங்கிஅழுங்குவாயோ ... ※
நேத்துவாரெண்ணை ஆத்துவாரார்வேரே... ... ※
திக்குங்கரனேவொருபக்கங்கரனேன்... ... ※
போத்துவாரிட்டுமாத்துவாரெங்கும்... ... ※
போக்குக்காணேனொருநீக்குக்காணேன்... ... ※
சங்கலர்தர்ளாயிக்கேவா...அண்ணன்... ※
தன்னைக்கொல்மன்னனுன்னிநானே ... ※
மங்கிமங்கிமனஞ்சங்குவாயோசங்கி... ... ※
வாடுவாயோவாடிதேடுவாயோ... ... ... ※
ஐயோஅய்யோமகனேஅய்யோஅய்யோவுனக்கு... ※
அருதியானேன்மெத்தசருதியானேன் ... ※
மையழகுமகனேமெய்யழகும்யெப்போ ... ※
காணுவேனேயின்பம்பூணுவேனே... ... ※

தோழிசொல்விருத்தம்

இ-ம் பந்துவராளி.

வருநுயின்மொழியினாளே - மங்கையேயெங்கள்தாயே
மருமலர்க்குழல்விரித்துமதிமுகம்வாடிச்சோர்ந்து ※
தெருவில்வீழ்ந்தழுதால்வாரதிக்குளவிடுமோநம்மை
வருவதுவந்துதீருமவருத்தந்தைப்பதுமம்மா... ※



வசனம்.

கேளுமம்மா தாயேலீலாவதியே! உன்கண்ணீர்அருவியபெருக்கூந்தலை விரித்துக்கொண்டு அழுதத்தினாலேவருவதுவிட்டுப்போகுமோ சுகம்துக்கம் யிரண்டும் நாமே யநுபவிக்கவேண்டுமல்லாமல்நம்மைவிட்டுப்போகுமோ போகாது ஆகையால் வுன்மகன் சேதியெல்லாம்நாங்களறிந்துச் சொல்லுகிறோம் சஞ்சலப்படாமலிதையிரியமனதாயிருமம்மாதாயே.

லீலாவதிசொல்விருத்தம்

இ-ம்-ஆகிரி.

அப்பனேமகனேயென்றன் ... ... ※
ருயிர்மணியேகண்ணே... ... ... ※
எப்படிப்பிரிந்துவாழ்வேன்... ... ※
யினியிந்தவுடலந்தன்னை .. ... ※
வைப்பனேவுந்தனேடு... ... ... ※
வந்துநான்மடியாவிட்டால்... ... ... ※
இப்புவியுள்ளோரெல்லா... ... ... ※
யிரும்பழிசொல்லுவாரே .. ... ... ※

தரு-இ-ம்-ஆகிரி

தாளம்-அடசாப்பு.

பல்லவி.

என்னசெய்வேன்தெய்வமே...நானினி ※
என்னசெய்வேன்தெய்வமே... ※

அநுபல்லவி.

யென்செய்வேன்தெய்வமேயென்மகன்வல்லுயிர் ※
வஞ்சகப்பாதகராதஞ்செனக்கொல்வாரோ ...(என்)

சரணங்கள்.

முழித்தமுழியிதுவ்ச அழுத்திமாரியிலேரி... — ※
இழுத்துயிழுத்துப்போட்டுக்கழுத்திலேமரிப்பாரோ (என்)
கஞ்சமலர்முகமுங்கொஞ்சியகனிவாயும்... ※
நெஞ்சைபுருக்குநடாமஞ்சனேஐயையோ... (என்)
நீக்குவுரவாகிக்ருஅக்குப்பகையாகி ... ※
பாதகியென்வயந்திலேவக்குபிறந்தாயோ ... (என்)

தப்பாதமொழிபேசாஅப்பனேவுன்றுயிர் ... *
மைப்பகட்டெமராஜனைப்படிக்கேோல்வாரோ (என்)

அருந்தபஞ்செய்துன்னை வருந்திநான் பெரும்போது
பெருந்தலையிலெழுத்தாயிருந்ததோகாரணம் . (என்)

பிள்ளையைவதைசெய்தகொள்ளிக்கைப்பதாகி ... *
கள்ளியென்றுலகத்திலுள்ளோர்கள்வைவாரே ... (என்)

அரிஅரியென்றநீபாரமென்றுசொன்னுயே ... *
அரிவந்துவுனையிப்போபாரமென்றுகாப்பாரோ (எ)

தாயினுமன்புள்ளநேயனேவுன்கனி ... ... *
வாயினுழுவெப்பாலுங்காயவுமில்லையே ... (என்)

சத்தியத்தவறுதவுத்தமனேவுன்னைப் ... ... *
பெத்தவபரெனக்குப்பத்தியெரியுதையோ (என்ன)
பெத்தவனைப்பிள்ளைகள்பெத்துவளர்த்தாலும் ... *
புத்திரியவுனைப்போலும்புத்திரன்கிடைக்குமோ ... *

பொது-கொச்சகம்.

இந்தவிதமஞ்சமிசை ... ... ... *
யிருந்துவிலாவதியும் .. ... ... *
அந்தமுடன்புலம்பி ... ... ... *
அழுதுயின்புபாலகனைத் ... ... *
தொந்தமுடனெயத்தால் ... ... ... *
தோளிரைவேபுனைந்த ... ... ... *
வந்தமல்லர்கூறும் ... ... ... *
வகையினிஞன்சொல்வேனே ... ... *

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-தன்னியாசி.

பூதலமாளும் ... ... ... *
நாதனூர்பாலா ... ... ... *
நாலைதேபர்சொல்லி ... ... *
நீதமாய்வாழ்வாய் .. ... *



மல்லர்கள்சொல்-தரு-இ-ம்-மோகனம்:

தானம்-அடசாப்பு.

பல்லவி.

மைந்தனேகேளாய்-பிரகலதா *
மைந்தனேகேளாய் ... ... *

அநுபல்லவி,

இந்திராதிதேவரும்வந்தனைபுரியுமுன் *
தந்தையிரணியனைச்சிந்தைசெய்வாய்நீயும் (மை)

சரணங்கள்,

இப்போதுநீயுன்தந்தை-பெயரைசெப்பி *
வாழ்வாயினிஇந்தை-கொண்டு ... ... *
ஒப்புடன்சொல்லாமல் ... ... ... *
மைப்புயல்பெயர்சொன்னுல் ... ... *
குப்பாத்தன்னிலேதப்பாமல் ... *
கொல்லுவோம் ... ... (மைந்)

பொன்றுனைமேனியுன்மேனி-என்ன ... *
மாமோதெரியாதோபார்-நீயிப்போ *
அந்யாயமாகவேநுன்னுமால்பெயர்சொன்னால்
வுன்னையிந்தவாளாலேசின்னபின்னங்களாய்செய்வோம் ()

அண்டர்நாதனுந்தன்-தந்தைபுகழ் ... ... *
கொண்டயிோதனை-தொந்தேஅவர் ... *
தொண்டனென்றுசொல்லாமல்விண்டு ... *
விண்பெயர்சொன்னுல் ... ... ... *
கண்டங்கண்டமாகவே ... ... ... ... *
துண்டங்கள்செய்வோமோ ... ... (மைந்)

பிரகலாதனன்சொல்-விருத்தம்.

இ-ம்-தோடி.

நீதியில்லாமூடர்களே சொல்லக்கேளீர் ... *
நீழ்நிலமுஞ்சேனிலமும்வயதுன்னைவந்த *

ரூ

ஆதிபரந்தாமனையென்னைத் தான் கொண்டு ❊
ஆனந்தக்கடலமிர்தமிதந்தவென்னை ... ❊
வேதனைகளென்னசெய்யும் வினையென் செய்யும் ❊
வீண்வார்த்தையென்னுடனே விளம்பவேண்டாம்
போதனையாயெனதுதந்தையுமக்குச்சொன்ன ❊
புகழ்செய்வீர் நீர் நினைத்தவகைசெய்வீரே ❊

பிரகலாதனென்சொல்-தரு

இ-ம்-தோடி- தாளம் - ஆதி.

பல்லவி,

என்றுசொன்னீர்-மல்லர்களாயின்னஞ்சொல்லுங்கள் நீங்க,,
ளதுசொன்னாலுந்தானந்தன்காதுகொள்ளுமோ

அநுபல்லவி,

பன்னுமறைமுடிவிதில்மன்னுந்தூயவன்றனை ... ... ❊
பங்கயப்பூமாதுமார்பில்தங்குமாயவன் ... ❊
மலர்ப்பாதன்-கன்னிதன் லோகநாதன்ஞானபோதன்
பேர்சொல்லாமல் ... (என்று)

சரணங்கள்,

செங்கனியுள்ளோன்பங்காயைநினைவலாகுமோ-கங்கை
நீர்த்தமுள்ளோன்சேத்துநீரைத்தன்னலாகுமோ ❊
அங்கவமுதுள்ளதநஞ்சையுண்ணலாகுமோ-மாயன் ❊
தோத்திரமுள்ளோனமாத்திரமேவேறேபன்னலாகுமோ
சொல்லும்சொல்லும்தில்லும்நில்லும்நில்லும்புல்லும்
வீண்பொல்லாமையாகவே ... (என்று)

வெட்டிநா அஞ்சுத்திராலும்விட்டிநாலுமே-பட ...❊
வெவ்வாவஞ்சவநஞ்சைபூட்டிநாலுமே ... ❊
முட்டிமதயானையென்மேல்லாட்டிநாலுமே-அனல் ❊
மூட்டிமூட்டிப்போட்டடைவாட்டிநாலுமே ❊
யேதுமோசம்யேதுநாசம்யேதுமிலேசமாயனேச ❊
மிருக்கவே ... ... ...(என்று)

அடியவந்தெளிமையான ஆதியானவன்-யென்றும் ...❊
அடியுமுடியுமுவிலா அநாதியானவன் ... ❊

120



நெடியவன்பரமானந்தவிநியானவன்-சுத்த ...❊
நிமலன்னமலன்விமலன்பரஞ்சோதியானவன் ❊
நித்தியன்சொல்லுஞ்சத்தியன்றனைநிந்தியஞ்செய்யும்
புத்தியில்லாமலே ... ... (என்று)

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-பைரவி.

கொள்ளிக்கண்ணுடையமல்லர்கொடியசிங்கப்பல்லர்கேள் ❊
அள்ளியேநரைத்தின்னத்தாடர்வேங்கைப்புலியேவாடா ❊
வள்ளலின்பேர்சொல்லாமல் மால்பெயர்சொன்னதாலே
தள்ளியேயிவனைநாமுந்தலைநீத்திடுவோம்வாரீர்

உ-வது-மல்லன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை

அப்படியரசன் ... ... ❊
செப்பிடுமொழியை ... ❊
ஒப்பிடாதிவனைக் ... ... ❊
கொப்பெனவதைப்போம் ... ❊

௩-வது-மல்லன்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி,

கட்டிகுலத்தால் ... ... ❊
தாட்டியாய்குத்தி ... ... ❊
திட்டியகத்திகொண் ... ❊
டேட்டியையறுப்போம் ... ❊

௪-வது-மல்லன்சொல்

விருத்தம்-இ-ம்-மோகனம்,

கண்டகோடாலிவேல் ... ❊
தண்டொடுகுலம்வாள் ... ❊
கொண்டதிருவிவன் ... ❊
மண்டையையுடைப்போம் ... ❊

மல்லர்சொல்-விருத்தம்.

இ-ம்-நாட்டை.

பெரிதடிசவளம்வேல் ... ※
வரைபொடிசெய்யும்வான் ※
ஓரமதில்விடுத்திவனை ... ※
வெகுதிறனையழிப்போம் ... ※

பிரகலாதனன்சொல்

கொச்சகம்,

புரகரியுந்நான்முகனும்புரந்தரனும் ... ※
புகழ்ந்தேத்தும் ... ... ... ※
முரஹரியேமெஞ்ஞான ... ... ...※
மூர்த்திமுழுப்பொருளே ... ...※
கரகரிமுன்வந்தெழுந்த.. ... ... ※
காட்சியைப்போல்வந்தருளும்... ... ※
அரிஹரிநாராயணனே... ... ※
அற்புதனேயெங்கோனே... ... ※

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-நாட்டை-ஏகதாளம்.

கண்ணிகள்:

ஹரிஹரிநாராயணனேயெங்கோனே-யுந்தன்கமலத் ...※
திருவடியிணைநம்பினேனே... ... ※
கருணைசெய்திடவேணும்நீயே-நீயல்லால்வேறே... ※
பாமெனக்கார்சொல்வாயே... ... ※
சமர்த்தகண்மாரிருனே-பொல்லாதமல்லர் ... ※
யெமன்றனைப்போல்வாரார்தானே... ... ※
ஆளுடையநாயகனேஐயா-இப்பொழுதிந்த ... ※
வாளுமெந்தன்மேல்வருமோமெய்யா ... ... ※
வண்மிளபமணிபரந்தாமா-மல்லர்கள்வந்து ... ※
தண்டுகொண்டுமோதவசமாமா... ... ... ※
தந்திமுன்னெழுந்துவந்தசோதி-யுன்னடியேனை... ※
குத்தமுங்கொண்டுவிடுமோமோதி... ... ※
ஆலந்தளிர்மேல்தவழ்ந்தபிள்ளாய்-யுன்னடியேனை ※



குலம்வந்துபாயமனக்கொள்ளாய்... ... ※
மூலநடுமுடிவில்லாவீரா-மல்லர்கள்விடும்... ※
வேலும்வந்துபாயுமோநீயாரா... ... ※
சங்குசக்கிரமணியும்பிரதாபா-பங்கயபீத ... ※
மங்கையாள்வளருமணிமார்பா ... ※
அத்தநாளுருத்தாவாசுதேவா மாதவாஹரி ... ※
பச்சைமுகில்வண்ணாவெனைக்காவா ... ※

பிரகலாதனன்சொல்

தேவாரம்.

செங்கண்மாலரியேபோற்றி... ... ※
திருமகள்கொழுநாபோற்றி... ... ※
சங்கணிகரத்தாய்போற்றி... ... ... ※
தரணியையளந்தாய்போற்றி .. ... ※
இங்கெனக்கருள்வாய்போற்றி .. ... ※
எந்தையேபோற்றிபோற்றி... ... ※
திங்கள்சேர்வந்துபோற்றி... ... ... ※
சிறியேனைக்காப்பாய்போற்றி... ... ※

தேவாரம்,

முத்தணிமார்பாபோற்றி... ... ※
மூவுலகளந்தாய்போற்றி... ... ※
இந்தலமின்றுப்போற்றி... ... ... ※
யேழைபங்காளாபோற்றி... ... ... ※
பத்தர்கட்கரசேபோற்றிப்... ... ※
பாசம்வேரறுப்பாய்போற்றி... ... ※
சித்தம்வைத்தென்னையாளுவ்... ... ※
திருவடிபோற்றிபோற்றி ... ... ※

தேவாரம்,

எந்தையேபோற்றிபோற்றி .. ... ※
இமையவர்க்கரசேபோற்றி... ... ※
சிந்தையிற்குடியாய்கொண்ட... ... ※
தெய்வமேபோற்றிபோற்றி... ... ... ※

பந்தம்வேரறுப்பாய்போற்றி... ... *
பாப்பிரம்மவடிவேபோற்றி... ... *
செந்திருமார்பாவுத்தன்... ... .. *
சேய்னைக்காப்பாய்போற்றி... ... *

பொருவிருத்தம்

இ-ம்-கல்யாணி.

இலங்கியகல்லவெரித்தகமலத்தைப்போலும் ... *
யெழிற்பெரியோர்தமைக்கிழைத்தயிடரைப்போலும்
உலங்கெழில்தோள்மல்லர்விடும்படைகளெல்லாம்...*
ஒன்றுநூறாய்பொடிந்துபெருத்தேயோடி.... *
மலங்குமவர்தலைமீதும்முகத்தின்மீதும் ... *
மார்மீதுந்தோள்மீதும்வந்துமோத ... *
கலங்கியிரணியனூர்க்கோதவேண்டிக் ... *
கடிநெரர்மாருதம்போல்முடிகிறாரே... *

வசனம்.

அகோதெப்படி யென்றால்இந்தப்பிரகாரம்ப்பிரகலாதன ஸ்வாமிதோத்திரஞ் செய்யும்போது யெரியானிற்றஆயுதங்களெல்லாம்பின்னங்களாகமுரிந்து, கல்லவழியிலே யெறிந்தகலம்போலவும்பெரியோர்களுக்குச் செய்தயிடரைப்போலவும் யெதிர்த்து யெதிர்த்துஓடிமல்லர்கள் மீறில்விழப்பயந்து அந்தமல்லர்கள்யிரணியனுக்குச் சொல்ல வேணுமென்று நடந்தார்கள், அந்தசமையத்தில் தோழிமார்கள்போய்லீலாவதியம்மனுக்குச்சொல்லுகின்றவிதங்காண்க,

தோழிகள்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

வெட்டுவதுங்குத்துவதும்பார்த்திருந்தோம்... *
மெல்லியரேநால்வருமாய்விரைந்துவந்தோம்... *
மட்டவிழுங்குழல்சரியயிடைகள்நோக... ... *
வளர்ந்தநகில்சதிர்ந்திடவும்வாடியித்த... ... *
கட்டின்மலர்மெத்தையில்மேற்படுத்திடாமல்... *
காசினியின்மேற்பிரண்டுஅழுதுநின்ற .. *



வட்டமுலையெழிலீலாவதியேபுத்தன்... ... *
மகன்சேதியுள்ளபடிவழுத்துவோமே... *

வசனம்.

வாருமம்மாதாயேலீலாவதியே-நீமெத்தவும்அழுதுவாடிமனதுநொந்துமெலியவேண்டாம்பிப்போது வுன்மகனிடத்தில் நடந்த விருத்தாந்தங்களையெல்லாம்விச்சித்திரமாகச்சொல்லிக் கொண்டுவருகிறோம் நீமனந்தளராமல் சந்தோஷமாகக் கேளும்மாதாயே.

தோழிகள்சொல்-தரு-இ-ம்

பைரவி தாளம்-ஆதி,

பல்லவி

அம்மம்மா அம்மம்மாலீலாவதியாரே-கண்ட *
அதிசயங்கேளும்பாக்கியவதியாரே ... *

அநுபல்லவி,

உன்மகன்சொல்லெல்லாம்நிலவாமாச்சே-யிப்போ *
உகந்துசொல்லுவோமுற்றதுயர்போச்சே (அம்)

சரணங்கள்,

மல்லர்கள்கருவிவாளையடித்தாரே-மடித்த *
வாயிற்படங்களைநறுநறெனக்கடித்தாரே ... *
கொல்லுவேனென்றுவாள்கையில்பிடித்தாரே *
கூர்வாள்தூளாய்போகவொருசந்தடித்தாரே(அம்ம)
சூலத்தைமார்பினில்தைக்கவிட்டாரே-சூலங்கள் .. *
தூளிதூளாகமுறிகெட்டாரே ... ...*
ஆலத்தைப்போலவேல்களைத்தொட்டாரே-வேலும் .. *
அக்கணமுறியவோட்டம்விட்டாரே (அம்ம)

அரிஅரியென்றிதிராமம்மாவானே-அந்த *
அரிஅருளாலேதன்னுகந்துறவானே ... *
பிரகலாதனுருயிரையிறவானே ... *
பிள்ளைக்கென்னதாட்சிமெத்தனாவானே (அம்ம)

லீலாவதிசொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

தோழிமாரிவ்வாசோதத்தைப்ரெலாம்போக்குகின்ற ※
வாழுமாதவனேயெந்தன்மனமதுமெலிந்திடாமல் ※
ஆழியிற்றுயின்றகண்ணா அன்னலேமேகவண்ணா ※
யேழைபங்காளாநீயுமென்மகன்றனைக்காப்பாயே ※

வசனம்.

ஹரிகரிநாராயணாகேசவாமாதவாகோவிந்தாமுகுந்தா வைகுண்டவாசா நீலமேகசுரூபா ஜனார்த்தனா முகுந்தா அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகாநித்தியநிரஞ்சனா முத்திதரும்மொருகுருவாருமல்லயென்மகனைக்காப்பாத்திஇரட்சியுமையாசுவாமி

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி,

யெவ்வுலகாளும்நீதி... ... ... ... ※
யிரணியமன்னகேளாய்... ... ... ※
தெவ்வரைக்கொல்லும்வேலும்... ... ... ※
செஞ்சுடர்சூலம்வாளும் .. ... ... ※
கவ்வவேவிடுத்தோமுந்தன்... ... ※
காதலன்மேல்படாமல்... ... ※
செவ்வியோன்றியானத்தாலுந்... ... ※
சிதைந்தனபடைகளையா... ... ... ※

வசனம்,

சரணஞ்சரணமையாசுவாமிஇராஜபரமேஸ்வராவும்முடையபுத்திரனைக்கொண்டுபோய்நிருத்திசூலாயுதம்பட்டிசக்கரம்வளதடிவேலாயுதம்இவைமுதலான ஆயுதங்களையெல்லாம் அவன்மேலில்விடுத்தோம் அப்போது அவன்செய்கின்றதியானத்தினால்நாங்கள்விட்டபடைகளெல்லாம்வொன்றுமுருகமுறிந்துதப்போச்சுது ஆகையால்தேவரீரினியென்னகட்டளை யிடுகின்றீர்களோ அதைதிருவாய்மலர்ந்தருளினால்அப்படியேசெய்கின்றோம்சுவாமி



இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

இருட்டும்சேர்ந்தடர்வனத்தி... ... ※
லிவன்றனைக்கொல்லசொன்னால்... ... ※
தொறட்டிவாள்வேல்களெல்லாம்... ... ※
தூளாச்சுதென்றுசொன்னீர்... ... ... ※
மருட்டியப்லைபதுகன்னை... ... ... ※
மந்திரிமாரேபொல்லாக்... ... ... ※
கரட்டுயர்மலைமேலேத்தி... ... ... ※
கடகடென்றுருட்டச்சொல்வீர்... ... ※

வசனம்,

ஆ ஆ வாருங்கள்மந்திரிமார்களே இருளடைந்தக்கானகத்தில்கொண்டுபோய் சிறுபயலைக் கொல்லச் சொன்னால்அவன்மேலில்விடுத்த ஆயுதங்களெல்லா முறிந்துதூளாய்போச்சுதென்றும் யித்தமல்லர்கள் சொல்லுறார்களல்லவா இப்போது அந்தபிரகலாதனைக்கொண்டுபோய்கரடுள்ள உயர்ந்தமலையின் பேரிலேயேத்திகடகடென்றுருட்டச்சொல்லுங்கள்மந்திரிமார்களே

மந்திரிகள்சொல்-விருத்தம்.

இ-ம்-சங்கராபரணம்.

சொல்லுசற்கெளியனானக் ... ... ※
குழந்தையைக்கொல்லச்சொன்னால் ... ※
வல்லமையில்லாமுட ... ... ※
மல்லரேசொல்லக்கேளும் ... ※
சொல்லரும்பாசத்தாலே ... ... ※
சுருக்குடன்கட்டிவோங்கும் ... ※
கல்லுள்ளமலைமேலேத்திக் ... ... ※
கடகடென்றுருட்டுவோமே ... ... ※

வசனம்.

சொல்லுதற்குமெத்தயெளிதான சிறுகுழந்தையைக் கொல்

னும்படியாகச்சொன்னால்அதுவுங்கள்கையிலாகாதென்றுவந்த திர்மூடத்தன்மைபோன்றமல்லர்களேகேளுங்கள்-யிப்போது அந்தப்பிரகலாதனைப்பிடித்துமணிக்கயத்தினால்இறுகக்கட்டிக்கொண்டுபோய் வுயர்ந்தமலையின்பேரிலேத்திகடகடவென்றுவுருட்டிவிடுங்கள்மல்லர்களே,

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-தன்னியாசி

அண்ணலேதேவர் ※
எண்ணியப்படியே ※
குன்னின்மேலுருட்டி ※
திண்ணமாய்வருவோம் ※

மல்லர்கள்சொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி,

தந்தைசொற்கேளாத்தாலே ※
தரணியாள்மன்னன்சொல்லால் ※
உந்தனைமலைமேலேத்தி ※
உருடடவேவந்தோமையா ※

வசனம்;

கேளுமையா பிரகலாதனே-யிப்போதுவுன்னுடையதந்தையினுடையவார்த்தையைக்கேளாதபடியினாலே - யிந்தட்சணத்தில் கொடிதாகிய ஆக்கினைகள்செய்து ரிவுயர்ந்தமலையின்பேரில்வுருட்டிவிடமகாராசனவர்கட்டளையிட்டார்வாருமையாபிரகலாதனே.

பொதுசொல் -விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி.

கையொடுகாலுஞ்சேர்த்துக் ※
கயத்தினாலிறுகக்கட்டி ※
வெய்யதோர்மலைமேலேத்தி ※
வீறுடனுருட்டும்போது ※
ஞாலமோரேழுமுண்ட ※
மணிநிறவண்ணனென்று ※



ஐயனேயென்றுஅன்பமாற்றுவான் ※
போற்றுவானே ※

வசனம்.

அந்தசமையத்திலேமல்லரானவர்கள்பிரகலாதனைசுவாமியை கையையுங்காலையுஞ்சேர்த்து மணிக்கயத்தினாலிறுகக்கட்டி ஆயிரம்யோசனையுள்ளமலையின்பேரிலேத்தி வுருட்டுகிறபோது வையகமுண்டருளியவாயனேதூயனே அச்சுதனேகேசவனேமாதவனே முகுந்தனேஹரிநாராயணாவென்றுபிரகலாதனைஸ்வாமியார்தோத்திரஞ்செய்கின்றவிதங்காண்க,

பிரகலாதனன்சொல்

கொச்சகம்.

உரகவணைமேல்கடல்மேலோங்குகருணாகருபோல் ※
வரகருணைவிழிதுயில்றவாருதியேமாதவனே ※
மரகதமேமெஞ்ஞானவாழ்வேமணிவிளக்கே ※
அரிஅரியேகேசவனேஅற்புதனேயெங்கோனே ※

பிரகலாதனன்சொல்

தேவாரம்;

நாயனேபோற்றிபோற்றி ※
வரமதுதருவாய்போற்றி ※
ஆயனேபோற்றிபோற்றி ※
அடியனுக்கருள்மீக்கொண்டு ※
தாயனேவருவாய்போற்றி ※
தசரதராசனீன்ற ※
சேயனேபோற்றிபோற்றி ※
திறியேனைக்காப்பாய்போற்றி ※

தேவாரம்;

அரிரகுராமாபோற்றி ※
அடியவர்க்கெளியாய்போற்றி ※
கரிதனைக்காத்தாய்போற்றி ※
கஞ்சனைவதைத்தாய்போற்றி ※

விரிகடன்றுயின்ருய்போற்றி ... ... *
விளாங்கனியெறிந்தாய்போற்றி ... *
செருவினைவென்ருய்போற்றி ... *
சீர்பதந்தந்தான்போற்றி ... ... *

தேவாரம்,

இருவினைதுலைப்பாய்போற்றி, ... *
யேகமானவனேபோற்றி ... *
திருவொடுகேருடனேருத் ... *
தெவனேபோற்றியுமையா ... *
அருமையாதுறைத்ததோத்ர ... *
முலகளந்தவனேபோற்றி ... *
திருவடியெனக்குதக்குந் ... ... *
தீனரட்சகனேபோற்றி ... ... ... *

பிரகலாதனன்சொல்-ஜம்பை,

அரிஹரிகேசவா அச்சுதானந்தா ... *
பரமஞானவிசாலபக்தபரிபாலா ... ... *
யென்றுனுமூர்த்தனிஅபாதாரவிந்தமலர் ... *
யென்றுமலிருந்தகொடும்பாவியேனுனே ... *
பின்றுமலிடித்தாப்போல்விரமல்லர்கையிற்சிக்கி ... *
இன்றுனிற்பாடடியெழுத்தின்வசந்தானே ... ... *
வேருகியுள்ளாகிமேலாகிகீழாகித் ... *
தொருதபரமானத்துய்யப்பரந்தாமா ... *
குரைமாருதச்சுழலில்சுழனுகின்றசருகனவே *
விரர்கையிலகப்பட்டுமெலியவசந்தானே *
அலைகடலிற்றுயில்கின்ற அச்சுதாநந்தனே *
மலர்மாதுவிற்றிருக்குமணிமார்பினனே *
மலைகளினுஞ்செகவினிறும்வரித்திகட்டியுருட்டிவிட்டு
கொலைசெய்யநிற்பதென்னகுறைகள்செய்தேனே *



பிரகலாதனன்சொல்-விருத்தம்

இ-ம்-நாட்டை.

மன்னவாகேசவாநாராயணசௌரி ... *
வனமாலிவாசுதேவா ... ... ... *
மாநிலமளந்தவாவைகுண்டவாசனே ... *
மாதாவாமணிமாலையா ... ... ... *
யென்றுநின்னுமமேபுன்னிநானுன்னினு ... *
மெள்ளளவிரக்கமிலையே ... ... *
என்னிடவதஷ்டமுனையேகொடியபாவியா ... *
னென்னமுன்னுட்செய்வினையோ ... *
அன்னைதந்தையர்கள்போலாதரிப்பவர்களுனே... *
யல்லாமல்வேறுளரகொலோ... ... *
அபிஷேகமுடிகொண்டவெநமச்சமேதார *
யரசுபுரிவிரசையரசே ... ... ... *
இன்னமில்லாதவட்டாக்கரதெய்வமே ... *
தீவினையகற்றியாள்வாய் .. ... ... *
ஸ்ரீராமனேமாதாபிதாவெனச்... ... *
சிந்தைகுடிகொண்டகுருவே .. ... *

பொதுசொல்-விருத்தம்

இ-ம்-கல்யாணி.

பஞ்சணைமெத்தைமேலும்... ... *
பனிமலர்வமணிமேலும்... ... ... *
செஞ்சவேபிரண்டெழுந்தார்... ... *
செய்கைபோற்பிரகலாதன் ... ... *
அஞ்சலிமேதிவள்ள... ... ... *
லருளினுல்மேதிதன்னில்... ... ... *
வெஞ்சுதலில்லாமல்நா... ... ... *
னிருந்திட்டான்மகிழ்ந்திட்டானே... ... *

வசனம்.

அதோதெப்படியென்றல் பிரகலாதனைவாயியை-யிரணிய
மகாராஜன்வுத்தாரப்படிக்கிமல்லர்கள் காலுங்கையுஞ் சேர்த்துக்

கட்டிவுயர்ந்தமலையின்பேரில்வுருட்டிவிட்டார்கள்பிரகு-அந்தஸ்ரீமன்னாராயணருடையகிருபாகடாட்சத்தினால் - மல்லிகைமுல்லைக்கிருவாட்சிசெண்பகம்மருவுமரிக்கொழுந்துசாந்துசவ்வாதுகளபகஸ்தூரிப்பன்னீரால்தெளித்திருந்ததாகவும் மலர்கள்பரப்பியிருந்தவாசனைப்பொருந்திய-பஞ்சனைமெத்தையின்பேரிலும்படுத்துயிரண்டுமித்திரைசெய்துயெழுந்தபாவனையாக மேனியிலொருவடிவும் நகமில்லாதவராய் மனதில்மகிழ்ந்தானந்தமாயிருந்தார்,

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி,

பிள்ளைதன்மேனிதன்னில் ... ... ... ❋
பேதமையொன்றுமில்லை... ... ❋
கள்ளமோஜாலந்தானோ... ... ... ❋
காரணமறியமாட்டோம்... ... ... ❋
தெள்ளியப்புதல்வன்மாளான்... ... ❋
செய்வதொருருதிதன்னால்... ❋
வள்ளலேநாங்கள்செய்யும்... ... ... ❋
வகைதனையுரைசெய்வீரே... ... ❋

வசனம்,

கேளுமையா சுவாமி ராஜவல்லபரே தாங்கள்சொல்லியவுத்தரப்படிக்கிபிரகலாதனைவுயர்ந்தமலையின்பேரில்வுருட்டிவிட்டும் அந்த பிள்ளைசரீரத்தில் வொருவடிவுமில்லாதிருக்குதுனியினிமேலெங்களாலேஆகுங்காரியங்களைச்சொல்லுமையாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம் தேசிகதோடி,

பெருத்திடும்குழிபிற்கட்டை... ... ... ❋
பெருமலைப்போலேபோட்டு... ... ❋
திருத்தியாயிரங்குடத்து... ... ... ❋
சிறந்தநெய்முழுதும்வார்த்து... ❋
நெருப்பதைமூட்டிவிட்டு... ... ❋
நேருள்ளமைந்தன்றன்னை .. ... ❋



அருப்பமாய்க்கட்டித்தாக்கி... ... ... ❋
அனலிலேபோடச்செய்வீர்... ... ... ❋

வசனம்.

வாருங்கள்மந்திரிமார்களேவொட்டரை யழைப்பித்துபெரிதுழியாகவெட்டி மலைகளைப்போலே கட்டைகளைப் போட்டுநெய்குடம் நெய்வார்த்து அக்கினியை வளர்த்தி அதிலேஅந்தபிரகலாதனைதள்ளிப்போடச்சொல்லுங்கள்மந்திரிமார்களே.

மந்திரிகள்சொல் விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி,

கொலைசெய்மல்லர்களையந்த... ❋
குழந்தையைக்கட்டித்தாக்கி ... ❋
இலகியநெருப்பில்போட்டு ... ❋
இட்சணம்வதைசெய்வீரே ... ❋

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

பொட்டெனவெழுந்தமன்ன ... ❋
வெட்டிகையிற்கொண்ட... ... ❋
பட்டியில்லாமல்... ... ❋
ஒட்டரேவருவீர்... ... ❋

ஒட்டன்சொல்விருத்தம்

இ-ம்-சக்கரவாகம்.

நாவியப்புவிப்போர்த்தி... ... ... ❋
தரணியாளியல்லியமன்னன்... ... ... ❋
கூவியேயழைத்தபோது... ... ... ❋
கொடியமண்வெட்டிக்கொண்டு... ... ❋
ஆவலாய்சத்தியஞ்செய்ய... ... ... ❋
அஞ்சாதட்பாவிக்காக... ... ... ❋
மாவினைக்குழிவெட்டவொட்ட... ... ... ❋
மல்லனொன்பயனுமுண்டோ... ... ❋

ஒட்டன்சொல்விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி.

அள்ளரியுலகாள்மன்ன... ... ... *
னழைத்தபோதெழுந்திருந்து... ... *
கொள்ளிபோல்கண்விழித்துக்... ... *
கூறுள்ளவாங்கெடுத்து... ... ... *
தெள்ளியப்புலவோருக்குத்... ... *
தீங்குசெய்பாவிக்காகப்... ... ... *
பள்ளமேவெட்டும்வொட்ட ... ... *
பரிசனென்பவனுப் னே... ... *

ஒட்டன்வருகிறதரு

இ-ம்-கல்யாணி-தாளம்- அடசாப்பு

பல்லவி

வொட்டன்வந்தானே-மண்வெட்டிகொண் .. *
டொட்டன்வந்தானே... ... ... *

அநுபல்லவி.

பட்டணத்தில்வேலையுண்டோவென்றுதேடி ... *
பாங்காய்பெண்டாட்டியுந்தானுமாகக்கூடி... *
மட்டிகள்கூடிபோழுகமகள்பேசினல் ... *
வாரிவாயில்மண்ணைத்தாராளமாய்ப்போடும் (வொ)

சரணங்கள்:

பாடும்புலவர்பரிசுக்கிடர்செய்யும் ... *
பண்ணிகளைக்கும்பலாகமடக்கி... ... *
கோடாலியால்துஷ்டர்வாயைப்பிளந்துமண் ... *
கொட்டிக்கிட்டித்துள்ளசில்டைசெய்யப்பொல்லா (வொ
பெண்டுகள்மெச்சிடப்பேசுங்கழுதைகள்... *
போக்கிரிநாய்நல்லவாக்கில்லாமூடரை ... *
கண்டுபிடித்துஅடிக்குஞ்செருப்பதைக் ... *
காலில்போட்டுக்கொண்டுவாலாயமாகவே ... (வொ
கொண்டவள்கையிதில்தட்டைக்குடுத்து ... *
கூரல்வாங்கையெடுத்துப்பிடித்து... ... *



கண்டவர்களுடன்முண்டம்போல்பேசிய... *
கள்ளப்பயல்களைத்தள்ளப்பள்ளம்வெட்டும் ... (வொ)

வொட்டன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி.

திட்டமாயுங்கள் .. ... *
கட்டளைப்படியோர்... ... *
மட்டமாய்க்குழியை... ... *
வெட்டினேமையா... ... *

மல்லர்சொல்விருத்தம்

இ-ம்-கௌளிபந்து.

தாட்டியாய்க்குழியில் ... *
மூட்டியநெருப்பில்... ... *
போட்டிவனுடலை ... ... *
வாட்டிடுவோமே... ... *

பிரகலாதனன்சொல் தரு

இ-ம்-பைரவி-தாளம்- அடசாப்பு

கண்ணிகள்:

பூமியைநாலுச்சதிரமாகக்... ... *
குழிவெட்டினர்-வுயிர் ... *
பெருப்பென்னவிறகுகள்... ... *
கட்டையுமுட்டையுங்கொட்டினர் ... *
நேமகமாகவேயுயிரங்குடநெய்யை ... *
வார்த்திட்டார்-அந்த... ... ... *
நெருப்பெங்குமுயர்வான... ... *
பரப்பெங்குமெழும்பவேயேத்திட்டார் ... *
வடவனல்போலவேதுடிகொண்ட ... *
நெருப்பினைநோக்கினர்-அழுது ... *
மாமுநிவோர்களுந்தாமரைக்கண்கள் ... *
தீர்வாக்கினர்... ... ... *

அடிமுதல்முடியளவாகியபூரண... ... ※
அமலனே-நினைந் ... ... ... ※
தன்பிறலானந்தவாரியில்மூழ்கின்ற ... ※
நிமலனே... ... ... ... ※
ஆரும்நாயகனேயந்தப்பாதகர் ... ... ※
நெருப்பிதில்தள்ளினர்-அப்போ... ... ※
அரியென்றவிழுவேதேவர் .. ... ...※
மனம்நடுங்கித்தள்ளினர்... ... ※
வாள்தண்டுசங்கொடுசக்கரமேந்தி... ... ※
யகையனே-யிந்த... ... ... ※
மண்ணிதில்வாழுமுயிர்க்குயிருகிய ... ※
மெய்யனே ... ... ... ※
அன்பர்மனத்தினிலின்... ... ※
பம்பொருந்தியசோதியே-யிந்த ... ※
அனல்வந்துமென்மேலே... ... ※
கனல்கின்றதென்னவுபாதியே... ... ※
துன்பமும்யின்பமும்நின்பரமே ... ※
யல்லால்வேறுண்டோ யிந்த... ... ※
தொல்லைநெருப்பிதில்செல்லுபோலே .. ※
கவும்வாருண்டோ .. ... ... ※
பொல்லாதப்பாதகமல்லர்கள்கையிதில் ... ※
சிக்கினேன் சிக்கி... ... ... ※
புழுங்கவு மழுங்கவும் ... ... ※
நானென்னகுறைகள்செய்தேனோ ... ※
கல்லாதப்பெருள்ளஞ்சொல்லாத... ... ※
கோதண்டபாணியே-ஜக... ... ... ※
காரணனேபரிபூரணனே... ... ... ※
வந்துக்காருமே ... ... ... ※
அண்டமும்வானமுமின்றுமிழ்ந்தருளிய ...※
வாயனே-நின்ற... ... ... ※
அகிலமுப்புவனமுமனுவுமாய்க் .. ...※
காத்தருளமாயனே-யென்று... ... ※



தொண்டன்புகழ்ந்திடமண்டலம் ... ※
நீர்போலக்குளிர்ந்ததே சலந் ... ※
தோய்ந்தமுழுகிக்கனர ... ... ※
பாய்த்தவர்போலின்பம்வளர்ந்ததே... ※

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ ம்-நாட்டை,

கட்செவியின்மீதிலேபள்ளிகொண்டவனுநீ ... ※
கஞ்சனைவதைத்தவனுநீ ... ... ※
கபடநாடகனுநீயாதிநாள்யானையைக்... ... ※
காத்தருள்புரிந்தவனுநீ ... ... ※
பச்சைநிரமாகவேவளர்கின்றமாலுநீ ... ※
பாருலகளந்தவனுநீ... ... ... ※
பதியுநீகதியுநீயடியார்களுள்ளமதில் ... ※
பண்பாயிருப்பவனுநீ .. ... ※
இச்சையாயுந்தனதுபாதமேகதியென்று ... ※
மெண்ணுவோர்தங்களுக்கு ... ... ※
இகபரமிரண்டிலுமின்மேலானவாழ்க்கையுட... ※
னின்பங்கொடுப்பவனுநீ... ... ※
அச்சுதாநந்தனேதேவர்கெர்த்தனுக்... ... ※
கற்பகத்தானமாக ... ... ... ※
அன்பாகவந்தெனக்குபதேசமதுசெய்த... ※
வாதியேகோவிந்தனே .. ... ※

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-சோகவராளி:

அக்கினியாலும்பிள்ளைக் ... ... ※
கவதிகளொன்றுமில்லை... ... .. ※
இக்கணம்வோடிவந்தோம்... ... ※
மென்னதான்செய்வோமின்னம்... ... ※
திக்கெலாம்வென்றதோளாய் .. ... ※
சிறுவனுக்குடலிலொன்றாந்... ... ※

தைக்கவேயில்லையென்று ... ... *
சாத்திரேய்சாத்திரமே... ... *

வசனம்.

வாருமையா சுவாமி இரணியேஸ்வரா தேவரீர்சொன்னபிரகாரம்வுமது பிள்ளையாகிய பிரகலாதனை கொண்டுபோய் அக்கினிக்குழியிலேதள்ளினேம் - அப்போது அவன்பன்னீர்குளத்தில் மூழ்கியெழுந்தவனைப்போல்யெழுந்தானையா சுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ ம்-ஆனந்தபைரவி.

சுட்டதுயில்லையென்றீர் ... ... *
சுடுநெருப்புதனைப்பத்தி... ... *
கட்டியேசிறையிலிட்டு ... ... *
அவனையுங்கடித்தாக்கொல்ல... ... *
அட்டதிக்கனைத்துந்தாங்கும் .. ... *
அனந்தனைமுதலாய்பாம்பை... ... *
பொட்டவரவழைத்துப்... ... ... *
போக்குவாயுயிரைத்தானே ... ... *

வசனம்,

வாருங்கள்மந்திரிமார்களே அந்தஅக்கினிச்சுடாமல்வஞ்சனை செய்தாலல்லவாநல்லதாகட்டும்-ஆனபடியினாலே அந்த அக்கினிதேவனைப்பிடித்து சிறையிலேபோட்டுவையுங்கள் அப்பால் இந்த திக்குகளைசுமக்கானின்றபாம்புகள்-அனந்தன்சங்கன்பாலன் குளிகன்கார்க்கோடகன் வாசுகிபத்மாபன்முதலானயெட்டுநாகங்களையும்விட்டுகடிப்பிக்கச்சொல் அமந்திரிமார்களே

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-செஞ்சுருட்டி,

கோடுமைபோஜனமதாயுட்... ... ... *
கொன்றுமல்லர்களேயந்த... ... *
வடிவுளக்கினியைக்கட்டி... ... ... *



வந்துநீசிறையிலிட்டு... ... ... *
அடிபடநாகமெட்டுங்... ... ... *
சுருக்கினிலழைத்திப்போது... ... *
நெடிபதாய்கடிப்பித்திப்போ ... ... *
நிமிடத்தில்வதைசெய்வீரே... ... *

வசனம்,

வாருங்கள்மல்லர்களே அந்தஅக்கினியைப்பிடித்துசிறையில் வைத்துப்போட்டுபிரகுஅஷ்டநாகங்களையுமழைப்பித்துஇவனைக்கடிக்கவிட்டுஇந்தட்சணத்தில்வதைத்துவிடுங்கள்மல்லர்களே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-சாவேரி,

வடிவுள்ளவமைச்சரே ... *
கொடியபாம்புகளை... ... *
இடியெனச்சீறி... ... *
கடினமாய்விடுவோம் ... *

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-துஜாவந்தி,

அக்கினிசகிதரச்சீறி... ... ... *
ஆண்டவனிரணியன்றான் .. ... *
திக்கெனக்கோபம்கொண்டு... ... *
செல்வனைக்கொல்லச்சொன்னார்... ... *
தக்கவென்முதலாம்பாம்பு... ... *
தன்னையுங்கையில்கொண்டு... ... *
இக்கணம்பிடாரரீயு... ... ... ... *
மெங்கள்பின்றேடிவாராய்... ... ... *

பிடாரன்சொல் விருத்தம்

இ-ம்-கல்யாணி,

ஜெகஜாலமோகனம் ... ... ... *
நீங்காவமாரணம் ... ... ... *

வலையுள்ளமூலிகை... ... ... ※
மைச்சிமிழ்குளிகையும் ... ... ※
அகமுளஅஷ்டநாகமுங் ... ... ※
கொண்டு ... ... ... ※
நகமையாய்பிடாரன்... ... ... ※
மூனும்வந்தனனே.... ... ... ... ※

பிடாரன்வருகிறதரு

இ-ம்-சங்கராபரணம்.

பிடாரன்வந்தானே-பாம்பு ... ... ※
பிடாரன்வந்தானே... ... ... ... ※
அடாதுகனுவிலுமெடாதமதியானமூன் ... ※
விடாதசினமேமிகுபடாவரம்மெகொடு ... ...(பி)

மோகனவுச்சாடனமும்-தம்பன ... ... ※
லோகவைசியமாரணமும்-அஞ்சன ... ... ※
வாகுபெருகுளிகைகள்-நாகசீக்கிறிகைகள் ... ※
சேகரமகிமையொடுபியாகாவசீகர... .. (பிடா)

தன்வடவெண்டையமும்-கலிரென ... ... ※
மண்டியதிரவேதான்... ... ... ... ※
மண்டலமும்விண்டலமும்... ... ... ※
வெண்டிசையகண்டமொடு .. ... ... ※
உண்டருளுமண்டர்பதி... ... ... ※
தொண்டநிலைகண்டிடும் ... ... (பி)

நஞ்சுபொதிசங்குபாலன்-குளிகன்— ... ※
வஞ்சரவின்மந்த்ரசிலன்வாசுகி... ... ... ※
கெஞ்சிடவுமஞ்சிடவுமெஞ்சிவுந்தஞ்சிடவும் ... ※
மிஞ்சசையொடுசஞ்சீவிகள்மிஞ்சுகணாஞ்சிந... (பி)



பிடாரன்சொல்தரு

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்-

கண்ணிகள்.

சேடன்படம்விரித்தாடிக்கொண்டு .. ... ※
ஓடிவருவதும்பாருங்கள்... ... ... ※
நீடியநான்மறைத்தேடியமால்பதம்... ... ※
கூடியதொண்டன்மீதிலே... ... (சே)

தக்கனும்விழுமதுக்கிக்கொண்டு ... ... ※
உத்திரமாய்வருவதுபாருங்கள்... ... ※
தக்கிடதஜுதருக்திக்கிடவென்னட ... ... ※
மூக்கியமால்தொண்டன்மீதிலே ... (சேடன்)

வளைவாயிற்றுளைவாயிதிறந்து... ... ※
குளிகனும்வருவதும்பாருங்கள்... ... ※
களைநான்மறையிற்றளிர்மேல்மருவிய ... ※
மொளிமால்தொண்டன்மீதிலே... ...(சேட)

ஆசைகளெங்கும்வீசியவாள்கொடு ... ... ※
வாசுகிவருவதும்பாருங்கள்... ... .. ※
விசிலமீதும்பாசிலமீதும்... ... ※
வாசங்கொள்மால்தொண்டன்மீதிலே ... (சே)

தங்கியவிழமதுபொங்கியபல்லொடு ... ※
சங்கனும்வருவதைப்பாருங்கள் .. ... ※
செங்கமலரசன்மங்கைமணாளனை... ... ※
யெங்கனும்புகழ்தொண்டன்மீதிலே ... (சே)

நீடியவாலால்சாடியகருங்காற்... ... ※
கோடனும்வருவதும்பாருங்கள்... ... ※
யேடவிழ்தளபச்சூடியமாயனை... ... ※
நாடியதொண்டன்மீதிலே... ... (சே)

பதுமனுவிழமரப்பதுமனுங்கூடியே ... ... ❋
கொதிமிகொண்டுவருவதும்பாருங்கள் ... ❋
சதுமறைபரவிபதிவிதபரம:னை ... ❋
துதிசெய்யுந்தொண்டன்மீதிலே ... (சே)

காந்திகாந்திசீந்திசீந்தி ... ... ❋
பாய்ந்துவருவதைப்பாருங்கள் ... ... ❋
சார்ந்துசார்ந்துதேருங்கள் கனி ... ❋
கூர்ந்துகூர்ந்துகோறிமிப்பாலன்மேல் (சேடன்)

பொதுவிருத்தம்

இம் கல்யாணி,

அட்டதிசைதாங்கிநின்றநாகமெட்டும் ... ❋
அழலுண்டழன்றுகண்களனல்சொரிந்துபாய்ந்து ❋
பட்டவிழும்பசுமலர்த்தார்மைந்தன்காலில்... ❋
மார்மீதில்கைமீதில்தோளின்மீதில் ... ❋
தொட்டகழுத்தடிமீதில்முகத்தின்மீதில் ... ❋
தூயபிறைநெத்தியின்மேல்தலையின்மீதில் ... ❋
வட்டமதாயுள்விழுங்கித்தீண்டும்போது ... ❋
வாழ்த்துவானரிநாமம்யேற்றுவானே .. ❋

பிரகலாதனன்சொல்

கொச்சகம்.

நாகவழிபோகாமல் ... ... ❋
நல்லவடியார்தமக்குப் ... ... ❋
பரகதிதந்தாண்டருளும் ... ... ❋
பங்கயக்கண்ணைப்புயலே ... ... ❋
விரகமொடுபூமாது ... ... ... ❋
மேவுமணிமார்பமர்ந்த ... ... ❋
ஹரிஹரிநாராயணனே... ... ❋
அற்புதனேயெங்கோனே... ❋



பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-புன்னுகவராளி-தாள-ம்அடசாப்பு

கண்ணிகள்.

ஹரிஹரிஸ்ரீநாராயணு-திருவளருமணிமார்பா ... ❋
ஆதியே-பரஞ்சோதியே ... ... ❋
முராஹரிமதுருதனு-சரசிதளனயன ... ... ❋
முத்தமனே-பரிசுத்தனே ... ... ❋
சங்குசக்ரதரபாணிஅங்கசனுரதலோல ... ❋
சற்குணு-நல்லநிற்குணு ... ... ❋
மங்களசுபகரனேயெங்கும்நிறைந்தருள்பர... ❋
மார்த்தனு-சனுர்த்தனு ... ... ❋
தண்டுளபமாலைமார்பாஅண்டர்கள்பணிசரணு .. ❋
சச்சுதா-நந்தஅச்சுதா ... ... ❋
புண்டரீகவதனனேபண்டமறைத்துதிசெய்யும் ❋
போதனே-கனதீதனே ... ... ❋
அரவணையிலேதுயின்றபரமசுந்தரவிலாச ❋
வமலனே-சுத்தநிமலனே ... ... ... ❋
உரகம்வந்துசீறுவதும்சரசமோவுனக்குமிது ... ❋
உண்மையோ-வெற்றிதன்மையோ ... ❋
பார்த்தன்மீதிலேநடித்தசார்ந்தனடியாரொன்றெண்ணிப்
பாராமல்-சிந்தைதேறமல் ... ... ❋
சிந்துலதயோகண்களனல்காந்துதே வுனக்குயெங்கே
சிந்தையோ-நான்செய்நிந்தையோ... ... ❋
பள்ளமானமாய்கைக்குழிக்குள்ளே நான்விழுந்து துன்பம்
படுவதோ-வினைகெடுவதோ ... ❋
வள்ளலேவுன்னருள்செய்யயென்னளவாகிலுமனம் ❋
வல்லையோ-யென்றுதொல்லையோ ... .. ❋
முண்டகத்தவசுகந்தவொண்டொடிமீதிலேவைத்த ❋
மோகனு செருடவாகனு ... ... ❋

கண்டகர்செய்யுங்கொடுமையண்டாமலெத்தனையாளும்
காரணா·பரிபூரணா ... ... ✽
வேதத்தின்மேலேவேதாந்தநாதத்தின்மேலேவிளங்கும்
மெய்யனே·ஆழிகையனே ... ... ✽
பாதத்தின்மிககவருட்பிரசாதத்தையென்சென்னிவைத்தாள்
பூரமனே-திருவிக்கிரமனே ... ... ✽

பிரகலாதனன்சொல்

கலித்துறை.

அன்றிலங்கைப்பதிவாழ்ந்த ... ... ✽
ராட்சதரத்தனையுஞ் ... ... ... ✽
கொன்றுபின்னம்படக்கோதண்ட ... ... ✽
மேந்துஞ்செயவரதா ... ... ✽
பன்றுகமேயினும்பாற்கடன் ... ... ✽
மீதினும்பள்ளிகொண்ட ... ... ✽
மன்றுவடிமையைக்கா ... ... ✽
வாதிமூலமகாதெய்வமே ... ... ✽

பிரகலாதனன்சொல்

கலித்துறை.

அனந்தேனமூதாகருத் ... ... ✽
தெய்வமேயென்னியுனைத் ... ... ✽
திலந்தோத்திரித்துத்திரிகின்ற ... ✽
வேழையின்றீங்ககற்றிக் ... ... ✽
கனந்தேறுன அகழலிணைப் ... ... ✽
போற்றிக்கவலையற ... ... ✽
மனந்தாமெனைக்களித்தா ... ... ✽
ஆதிமூலமகாதெய்வமே ... ... ✽

பிரகலாதனன்சொல்

கலித்துறை,

சொல்லாததோழுன்றி ... ... ✽
நாமநல்லுரைசித்தியினி... ... ✽



தில்லாததேர்வுன்திருவடி... ... ... ✽
நின்னடியார்குறதி... ... ... ✽
சொல்லாதே·ஜகரட்சகரீதி... ... ... ✽
தொடர்ந்திடின்மேல்... ... ... ✽
கல்லாளகண்டநீ... ... ... ✽
யாதிமூலமகாதெய்வமே... ... ✽

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை,

பத்தியுள்ளப்பகவிழ்ந்தாலுலகிலுள்ளோர் ... ✽
பரதவித்துமனமிரங்கிபெருப்பார்துஷ்ட ... ✽
புத்தியில்லாப்புலிதனக்கியாருதவிசெய்வார் ... ✽
பிறவியெனும்பெருமடுவிற்பொய்யன்விழுந்தோன்
வித்தகனேயெனக்கெவரேதின்னையன்றி ... ✽
வெயிலொளிபோலுன்பாதம்விளக்கச்செய்வாய் ✽
நத்தம்வளர்கோசலைநாடாளவந்த ... ... ✽
ராமாவென்றுந்தனைநாமம்பினேனே ... ✽

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-தல்வியாசி,

அல்லல்செய்பாம்புகள்...... ✽
பல்துதிர்ந்தோட... ... ✽
கல்லமன்னர்முன்... ... ✽
சொல்லுவோம்வாரீர் ... ✽

மல்லர்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி,

சேடனேட்டநாகஞ் ... ... ✽
சேர்த்தவன்மேல்விடுத்தோம் ... ... ✽
ஆடிகண்சிவந்துசீறி... ... ... ✽
ஆர்ப்பரித்ததுகடிக்க... ... ... ✽
மூடிவாய்பல்லுதிர்ந்து... ... ... ✽
விஷமெலாமமிர்தமாச்சே ... ... ✽

ஓடியேதேவந்தித்தை... ... ... ※
வுரைசெய்யவந்தோமையா... ... ※

வசனம்.

சரணஞ்சரணமையா இரணியஷீவரா தேவரீர்சொன்னவத்ரப்படிக்கிஅஷ்டநாகங்களேயும்விட்டுகெடிப்பித்தோம்-அந்தபாபுகளெல்லாம்பல்லுகளிலேயிருந்த விஷத்தைக்கக்கும் பொறுமிர்மரகத்தோத்தப்பட்டு-பாம்பில் பற்களெல்லாம் வுதிர்ந்துபோச்சுதையாசுவாமி.

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி,

நாட்டிசைபரவமெல்லாம் ... ... ※
நடுங்கினதறிவோம்நீங்கள் ... ... ※
நீட்டியாயுதமெடுத்து... ... ... ※
தீவிரமாகச்சென்று... ... ... ※
கிட்டிசைத்தன்னைத்தாங்கும்... ... ... ※
கஜேந்திரனைவழைத்திப்போது ... ... ※
கூட்டியேகுமாரன்றன்னை ... ... ※
கொல்லுவீர்கொல்லுவீரே... ... ※

வசனம்,

வாருங்கள்மந்திரிமார்களே - இந்தஅஷ்டநாகங்களும்அந்தறுடையபல்லக்கலக்கண்டுநடுநடுங்கிவோடிப்போய்விட்டதென்றுசொன்னீர்களல்லவா-நல்லதாகட்டும் - இப்பவும்கீழ்த்திசையில்வாழுஞ்செய்யும்படியானகஜேந்திரனென்னும்யானையை-அழைப்பிதுஅதன்கையில்இருப்புலக்கையைகொடுத்தும் அடித்தும்கொபிறும்லேமுட்டியும்காலிராலேமெரித்தும்யிப்படியாகக் கொல்லும்படியாகக்கட்டளேயிடுங்கள்மந்திரிமார்களே,

மந்திரிசொல்விருத்தம்

வந்தமல்லர்களே... ... ...※
இந்திரன்யானையை...... ... ※



வந்திடச்செய்து... ... ...※
மைந்தனைவதைப்பீர் ... ※

மல்லர்கள்சொல்-வசனம்

அப்படியேமகாப்ரசித்தமையாசுவாமி

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-குழ்பகாம்போதி,

கடவிநீர்வத்தித்தியக் ... ... ※
கனமும்புவனம்யாவும் ... ... ※
படியெலவெடிக்கமன்னன்... ... ※
பார்த்தெங்களோடுரைத்தார்... ... ※
வடிவுள்ளப்பாலன்றன்னை... ... ... ※
வதைசெய்யயிந்திராவுந்தன் ... ... ※
நடிபடையானைதன்னைச்...... ... ... ※
சுருக்கிலனுப்புவாயே... ... ... ※

வசனம்,

யெங்களுடையஅரசனுத்தா ரப்படிக்கிலமந்தனை ணட்பிரகலாதனனேக்கொல்லவேண்டியதாய்-வும்முடையயானையைஅநிககருக்காய்குடுமையாமகாராஜனே,

பொருவிருத்தம்

இ-ம்-நாட்டை

நாட்டிநில்பொதிகன்சிந்தி ... ... ※
நடுக்கிடயிரணியந்தான்... ... ... ※
கிட்டிசைத்தன்னைத்தாங்கும் ... ... ... ※
கஜேந்திரனைவழைக்குப்போது... ... ※
கேட்டடப்பயங்கொண்டந்தக் ... ... ※
கெடியினுல்யானைதன்னை... ... ... ※
ஓட்டியேயனுப்பினவந்தா ... ... ※
னுத்தமனென்றிரிந்தானே... ... ...

ஆனைவருகிறதரு

இ-ம்-புன்னாகவராளி-தாளம்-அடசாப்பு

பல்லவி.

மதயானையிதோவந்ததே-சிவங்கொண்டு ... ❋
மதயானையிதோவந்ததே... ... ... ❋

அநுபல்லவி,

மதயானையிதோயெங்கும் ... ... ❋
அதமாகவேவோடி.... ... ❋
வந்துவந்துயிவ்வாங்கி... .. ❋
விந்தைமைந்தன்முகா நாடி... ... (ம)

சரணங்கள்,

வாலைவீசிமுழிக்கி ஊககளிறுமேலே... ... ❋
மலைமரக்கிளைநொறுக்கி .. ... ... ❋
ஆலகாலவனல்போலகொடுமையன்றி பண்ணி ... ❋
ஆக்கிரமச்செறிந்துசீறித்தாசருவே னைவேமண்டி (மத)

சகலதலம்பறித்துமுறம்போலக் ... ❋
காதிரண்டையுந்தெரித்து ... ... ❋
நறுப்பிறைகள்போலநாலுகொம்புகள்மின்ன ... ❋
தக்கவெள்ளிமலைகாலால்மிகவேநடந்ததென்ன ... (ம)

மீரிமீரிச்செருக்கிமதக்கனை ... ... ❋
பாறபோலபெருக்கி .. ... ... ❋
வீருள்ளயிரணியன்சேறவானனைஅஞ்சி ... ❋
மிக்கவுங்கண்கள்செக்கச்சிவந்துமிக்க... ... ❋

பொதுவிருத்தம்

இ-ம்-சங்கராபரணம்,

மூர்க்கமாய்வந்தயானை... ... ... ❋
முண்டகோளமெல்லாம்... ... ❋
போர்க்கவேவயத்துன்வைத்த ... ... ❋
யிரையவன்பாதத்தியானம் .. ... ... ❋



மார்க்கமேயிருந்தசெல்வ... ... ... ❋
மைந்தனைமிகவும்பார்த்து ... ... ❋
ஆக்கிரமித்திடத்துநின்ற... ... ... ❋
வதனைபார்த்துரைசெய்வானே... ... ❋

பிரகலாதனன்சொல் விருத்தம்

இ-ம்-குப்பகாம்போதி,

எந்தாய்பண்டோரிடங்காவிழுங்கா... ... ❋
முந்தாகின்றமுதற்பொருளேயென் ... ❋
றுந்தாகின்றனைத்தவர்க்கு... ... ❋
வந்தானென்றன்மனத்தினிலேஎன்றான் ... ❋

வசனம்.

யென்னுடைய கர்த்தனே அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா சர்வஜீவதயாபரா யெம்பெருமானே யென்னையனே பூர்வ காலத்திலே திரிகூடாசலமென்னும் பர்வதத்திலே யிராநின்ற வொருதடாகத்திலே இருந்து முதலையானது ஒருயானையைப்பிடித்துக்கொள்ள அந்தஆனையானது ஆதிமூலமேயென்று கூப்பிட்டமாத்திரத்திலேதேவரீர் யெழுந்தருளிவந்து முதலையைச்சம்மாரஞ்செய்து யானையையிரட்சித்ததுபோல் யென்னையுமிவ் வேளையில்காத்துரட்சியுமையாசுவாமி.

பிரகலாதனன்சொல்

விருத்தம்-இ-ம்-கல்யாணி

சீலமுளசேஷசயனதிருப்பாற்கடற்... ... ❋
செல்வனேதசரதற்கு ... ... ❋
செல்வமகவாய்வந்துதித்தஸ்ரீராமனே ... ❋
சீதாமனோகரத்தால் .. ... ❋
கோலமுளகல்யாணராமாநெடுந்தனும் ... ❋
கொண்டகோதண்டராமா ... ... ❋
குணமாநவரத்னபரிபாலராமாதனுக் ... ❋
கொடியன்செய்தராமா ... ... ❋

ஆலகாலத்தைநிகராவணுகியர்தமை ... *
யழித்தசெயராமசோமா ... ... *
அரிப்பிரியைஜானகிகனிட்டனுடனமுதன் *
டயோத்திபட்டாபிராமா ... ... *
மாலையணிராமனேயென்னையாள்கருடன்மிசை *
வல்வினையகற்றவருவாய் ... ... *
மாயாவதாரனேசீதாபிராமனே ... *
மாதவாகோவிந்தனே ... ... *

விருத்தம்.

இ-ம்-தோடி.

சந்ததஞ்சந்த்ரனைக்கண்டவிருள்போலவுந் ... *
தழல்கண்டசருகுபோலும் ... *
தபனனைக்கண்டபநிபோலவுஞ்சிங்கத்தை *
தந்திகண்டிடுதல்போலும் ... ... *
வந்தனைசெய்யுந்தாசனைக்கண்டுவோழ்த்தவலை ... *
வாராதமுடப்போலும் ... ... *
வாடினேன்மாபாவிகேடுருவண்ணம் ... *
மனதுவைத்தாளவேணும் ... ... *
சொந்தமுளநின்னடிமையிந்தவினைபூடுபோய் ... *
சோராமலாளாவிடிற் ... ... *
றொலையாதநிந்தனையுனக்குவருநான்சொன்னேன் *
துயரதையகற்றியருள்செய் ... *
செந்திகிரியுஞ்சங்குதங்குபுயகாருண்ய ... *
தேசிகாவென்னையாள்வாய் ... ... *
சீதாபிராமனேமாதாபிதாவெனச் ... *
சிந்தைகுடிகொண்டகுருவே ... ... *

பிரகலாதனன்சொல்

கொச்சகம்.

நாற்கடல்சூழ்மன்னுலகில் ... ... *
நானாவிதங்களெல்லாந் ... ... *



நிற்கமுடனுண்டுமிழ்ந்த ... ... *
செவ்வாயத்திருமாலே ... ... *
மார்கமிகுதொண்டர்நெஞ்சில் ... *
வாழ்வதுபோலென்றாளும் ... ... *
பாற்கடலிலனந்தன்மிசை ... ... *
பள்ளிகொள்ளுமெங்கோனே ... *

பிரகலாதனன்சொல் - தரு.

இ-ம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாற்கடலிலனந்தன்மே... ... *
லேற்கவேறுயின்றருள்செய்... ... *
பங்கயச்செங்கண்மாலே ... *
அரிஅரியே .. ... ... *
மார்கமாந்தொண்டர் ... ... *
மனந்நீங்கமாயுறாகின்ற... ... *
மாதவாகேசவா ... ... ... *
அரிஅரியே ... ... *
முந்தமுந்தனையைக்கொண்ணுவந்தநீ ... *
ரட்சித்தயானே... ... ... *
முனிந்தகளிந்துகொண்டு ... ... *
ஹரிஹரியே... ... ... *
இந்தநாள்வஞ்சகரால்... ... *
யெந்தனைக்கொல்லவெண்ணி... ... *
இதோவந்துநிற்குதையோ... ... *
அரிஅரியே... ... ... *
திருமாலேநீயென்று ... ... *
மொருசிங்கமெனகமல... ... *

சித்ததுள்ளேயிருக்க... ... ... *
அரிஅரியே... ... ... *
வெருவாமல்யானையென்முன்... ... *
வருவதுந்தானென்ன .. ... *
விதியேதோநானறியேன்... ... ... *
அரிஅரியே... ... ... ... *
யெல்லாவுருவங்கொண்ட... ... *
வல்லோனேநீயிந்த... ... ... *
யானையுருவங்கொண்டே... ... *
அரிஅரியே ... ... ... *
பொல்லாதப்பாவியென்றே... ... *
கொல்லவேநீயேவந்தால் .. ... *
புண்ணியம்நான்செய்ததில்லை... ... *
அரிஅரியே ... ... ... *
அடியேன்செய்வினைதானோ... ... *
கொடிதானயானையுரு .. ... ... *
வாகியேவந்ததுவே... ... ... *
அரிஅரியே... ... ... *
படிமீதிலென்னைக்கொல்ல .. ... *
முடிவருவதும்நீ... ... ... *
பார்த்துக்கொண்டிருப்பாயோ ... ... *
அரிஅரியே ... ... ... *
யெவ்வுயிர்க்குயிரான .. ... *
தெய்வமேபரமான .. ... ... *
யேகனையகமூர்த்தி .. ... ... *
அரிஅரியே... ... ... *
அவ்வுயிர்க்குள்நானொருவன் ... ... *
வொவ்வுமோவொவ்வாதோ... ... *
அய்யனேமெய்யனே... ... *
அரிஅரியே ... ... ... *



பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி·

ஆமைகேணியும்வாலணிப்பிள்ளைகொப்பியும் .. *
ஆமென்றபழமொழிகள்போல்... ... *
அந்தநீயுந்தமியனிங்குமாய்கடவிடத் .. ... *
தலையுந்துரும்புபோலும் ... ... *
உளமைகண்மிவகையுஞ்சொற்பனைப்போலுமே ... *
லொன்முறையாமலடியேன் ... ... *
உபயசெங்கமலபதநாடியுற்றதுவுந்நீ ... ... *
யுண்மையுரையாதுரையும் ... ... *
சிலமயிற்சொல்லிலோயாவுருநகைத்திவ .. *
ஸ்ரீராமராமராமா... ... ... *
தேவியென்பார்க்குதவிசெய்யாதபேரில்லை ... *
திருமருவுசார்வபூமா .. ... ... *
விமமதகற்றியெனைரட்சிக்கவேகருடன் ... *
மீதேறியென்முன்வருவாய்... ... *
வேதாலவையின்றருட்சீதாபிராமனே ... ... *
மெய்ஞ்ஞானஜோதிமயமே ... ... *

பிரகலாதன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி·

மண்ணாசைபெண்ணாசைபொன்னாசைமூன்றையும் *
வாக்குமனநோக்கவில்லை... ... *
வைகுண்டவாசனேநின்திருவடிக்கடியர்... *
மைந்தனியான்வாழ்த்துதற்கு... ... *
கன்றாரவேதாரைதாரையாயோடிக் ... *
கைகுவித்தனனிராமன்... ... *
கனவின்மோவாமல்முறையோவெனக்கூவியும் ... *
கருணைபுரியாதிருந்தால்... ... *
என்றனுனக்குநானடிமையாகவே... ... *
இனிபிறவிதீர்வதெங்ஙன்... ... *

இரவுபகலுன்பெருமையுமகிமையுமுன்றும ... *
முன்னுயிருந்தநாண்டோ... ... ... *
விண்ணாடரகமகிழவெங்கருடன்மீதேறி ... *
விழிகளிடத்திடவருகுவாய் ... ... *
வேதாவைமுன்றருட்சீதாபிராமனே... ... *
மெய்ஞ்ஞானஜோதிமயமே.. ... *

பிரகலாதனன்சொல்

விருத்தம்-இ-ம்-தேசிகதோடி,

ஆதியந்தமுமில்லாச்சங்கரனுநான்முகனு ... *
மகிலம்படைத்தழிப்பார்... ... *
அனந்தகல்யாணவரிபரவாசுதேவனே... ... *
அன்னைபோன்மன்னுயிர்க்கும்... ... *
நீதிநெறிதவறுததாசாதிதாசற்கு ... ... *
நியமயசமயமென்ற... ... ... *
நேசத்துடனின்னாட்சிக்கும்ரெட்சகனி... *
நின்னடிமையானுகினேன்... ... *
சோதியேசோதனைசெய்யாமலும்படையுடன் ... *
மளிமணிமார்பிற்றங்க... ... ... *
சந்தரவிலக்குமிசமேதராய்பூமாரி... ... *
துந்துமிமுழக்கத்துடன்... ... *
மேதினியிலெந்தனைரட்சிக்கவேகருடன் ... *
மீதேறியென்முன்வருவாய் ... ... *
வேதாவைமீன்றருட்சீதாபிராமனே ... ... *
மெஞ்ஞானஜோதிமயமே... ... *

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-நாட்டை,

அரசனருள்பெற்றபேர்க்கல்லில்லையொருவர்பகை... *
பாவதில்லைகுறையொன்றில்லை ... ... *
அதிகாரமேன்மையில்லாததில்லைநிதிமல்லையோ... *
டியாவருதம்வணங்காதில்லை... ... *



முரசருடன்வாத்தியமுழங்காதகாலமில்லை ... *
முறைமையறநெறிதவறில்லை ... ... *
மூர்த்தன்யதிசையெனினுமிதிலெனக்கிச்சையில்லை *
மோட்சத்தில்வாஞ்சையாகி... ... *
சரசகுணபிரசரசபாசினையளித்தளிசெய்... *
சலசலோசனமாதவா .. ... .. *
தனியானதிருநாமமினிதாய்நினைக்கவும் ... *
ஜன்மதீவினைதீய்க்கவும்... ... ... *
இரவிமதிதுதிபரவுபெரியகுலதெய்வமே... *
யேழையேற்கருள்செய்தாள்வாய் .. ... *
என்றுனுமடியார்கள்கண்ணுனதேவனே ... *
யென்னையாள்ரகுராமனே .. ... ... *

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி-

விதியினல்வருவதல்லாதுவேறொன்றில்லை ... *
மேன்மையோர்சொல்விதேன்றல் ... *
மேதினியிலுன்றனைப்பூசிப்பதேல்யாக ... *
வேதங்கள்வாசிப்பதேன்... *
மதியினல்விதியதனைவெல்லலாமென்றுமுன்... *
மார்க்கண்டர்சரிதையோகம் .. ... ... *
வான்சித்திமாவிறைமடக்கியாவருமகிழ... *
வயதுபதினுறுபெற்றார். ... ... *
துதியினலும்பதத்தென்மனக்குறையெலாஞ் ... *
சொல்விமுறையிட்டிருக்கினேன்... ... *
தொல்லைவினைவந்தெனைச்சலியுஞ்செய்யாமல்... *
சுகமுடனிருக்கவருள்வாய் .. ... ... *
எதிரிபாவித்தெனைக்கைவிடுதனீதமோ... ... *
ஏழையுன்னடிக்கடிமையான்... ... ... *
யென்றுனுமடியார்கள்கண்ணுனதேவனே ... *
யென்னையாள்ரகுராமனே ... ... *

மல்லர்கள் சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி-

ஆனைதனையவன்மீதில்விட்டபோது... ... *
ஐயன்முகுந்தனைப்பார்த்துவணங்கிபோடி... *
சனமாய்ப்போச்சுதென்றுமுடிகிவிட்டோம் ... *
இருகோடும்வாழத்தண்டைனவேயித்துப் ... *
போனதுகண்டிந்தவதிசையங்கள்நாங்கள் ... *
பூமியிலேகண்டதில்லையெங்கள்கோவே ... *
ஞனமொன்றுமுன்மகனுக்கில்லைஐயர்... ... *
உண்மையிதுநாங்கள்கண்டுவுரைசெய்தோமே... *

வசனம்,

கேளுமையா சுவாமி யிரணியபூபால்காதேவரீர்சொன்னபி பிரகாரம் அயிருபதமென்னும் யானையைக்கொணடுவைத்து விட்டோம்அந்தயானையானதுபிரகலாதனன்முன்னேபோய் தெண்டம்பண்ணிவோடிப்போச்சுதையாஎவாயி,

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

வல்லமந்திரிகளேகேளீர்... ... ... *
மலைபோலும்வட்டப்பாறுங்... ... *
கல்லிலேபிணைத்துக்கட்டி... ... ... *
கடலிலேயமுத்திப்போட்டு... ... *
ஓல்லையிலோடிவந்து... ... ... *
வுத்தருசொல்லாவிட்டால் ... ... *
செல்லுமிவ்வாளாலுங்கள் ... ... *
சிரசினைத்துணிப்பேன்யாராய் .. ... *

வசனம்,

வாருங்கள் மந்திரிமார்களே வோர்மலைக்கிச்சமானக் கல்லை கொண்டுவந்து யிந்ததுஷ்டப்பயலை அதுநடுவில்வைத்து மல்லடாகக்கட்டிக்கொண்டுபோய், சமுத்திரத்தில் அமுத்திவிடும்ப யாய்கட்டளையிடுங்கள்-அப்படிச்செய்யாமல்போய்விடுவாராக ல்லுங்களையென்னுடையவாளினாலேவெட்டிப் போடுவேன்மந் திமார்களே,



மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-பைரவி,

இடிஇடென்றுலகமஞ்சச் ... ... *
நெஞ்சனைகொண்டுபல்லை... ... *
நடநடென்றேகடித்து .. ... ... *
நிருபனுத்தாரஞ்செய்தார்... ... ...*
கொடியனமல்லர்கேளீர்... ... ... *
குழந்தையைக்கல்லிற்கட்டி ... ... *
கடலினிலமுத்திப்போட்டுக்... ... *
கடுகவந்துரைசெய்வீரே... ... ... *

வசனம்,

கேளுங்கள்மல்லர்களே நமது மகாராஜனுத்தரப்படிக்கி பிரகலாதனை-பெருத்தகல்லிற்சேர்த்துயிருக்கிக்கட்டி சமுத்திரத்தில் அமுத்திவிட்டுசீக்கிரத்தில்வந்துசேதிகள் சொல்லாவி டால்உங்களைமெத்தவும்ஆக்கினைசெய்வோம்யிது சங்கதியுங்கள் மனதில்கெட்டியாயிருக்கட்டுமல்லர்களே,

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்,

கடிதுடனுலகாள்... ... ...*
கொடிநிருபன்னன்... ... *
வடிவுளமகனே... ... *
கடலில்தள்ளுவமே... ... *

மல்லர்சொல் விருத்தம்

இ-ம்-பந்துவராளி-

துதிபதிகனகமன்னன் ... ... ... *
அருமையாயீன்றெடுத்த... ... *

எதிரில்லாப்பாலகன்றனை ... ... *
யெழுகடலழுத்தச்சொன்னார் ... *
மதிபெருங்கப்பல்கொண்டு ... ... *
மரைக்காயரனேகப்பேர்கள் ... ... *
சதிருடன்கூடிநீங்கள் ... ... *
சமுதிரியில்வருகுவீரோ ... ... *

வசனம்.

வாருங்கள்மரைக்காயரே - யெங்கள்மகாராஜன் உத்தாரப்படிக்கி பிரகலாதனனை கொண்டுபோய் சமுத்திரத்திலழுத்திப் போடும்படியாய்வேத்திக்கொண்டு போகவேண்டியது ஆதலால் கப்பலேறிக்கிரத்தில்கொண்டுவாருங்கள்மரைக்காயரே

மரைக்காயர்சொல்தரு

இ-ம்-புன்னாகவராளி-

தாளம்-அடசாப்பு-

ஏலேலோயேலேலோ-தத்தெய்யா ... ... *
ஏலேலோயேலேலோ ... ... ... *
அலைகடலிறாயிலெழுந்த-ஆதி ... ... *
அன்னைபதம்மனதிலெண்ணி ... ... *
இலகுசிறுமதலைதனைக்-கொடிய ... ... *
இரணியனார்வலுமையினால்-முடுக்கு ... *
மலையையொருநாலாக-வைத்துப்பிளந்து — *
மைந்தனையும்அதுநடுவினில்வைத்து ... ... *
பலகையால்சேர்த்ததொருகப்பலையிழுத்து ... *
பதறாமல்பாய்மரஞ்சிதறாமல்நிறுத்தி ... *
நலமானசுக்கானை நன்றாயிருக்கி ... ... *
நாட்டுமருசுத்தாணிபோட்டதில்முறுக்கி ... *
நிலையானகயிர்கொண்டுநேராயிருக்கி ... *
நிசமானஅணிமுன்னேவசமாகச்சேர்த்து (ஏலே)
அரிமுகத்தோர்பணிமுகத்தோர்-முன்னே .. *
அணிமுகத்தில்வந்ததிலும் ... ... *



கரிமுகத்தோர்நரிமுகத்தோர்-முன்னே ... *
கம்பமதிலுகந்துசெல்லும் முடுக்கு ... *
மருவானசுக்கானில்யிருவரைநிறுத்தி ... *
மைந்தனைக்கொடுவந்துஅதிநடுவில்வைத்து ... *
விரிகடலில்தள்ளிடவும்அலைவந்துமோத ... *
விருனகப்பல்தடுமாறுமல்பாரும் ... ... *
சரியாகவிதும்போரவேகமதுபாரும் .. *
சமையமிதுசமையமிதாயிதுகொஞ்சதூரம் ... *
கருங்கடலில்கழலாமல்தரும்பெனவேநிறுத்தி ... *
கப்பல்விட்டுப்பாலகனைத்தப்பாமல்தள்ளும் (ஏலே)

... *
அரியமலைநதிசெய்மைந்தன்-அவனை *
அழுத்திவிட்டோங்கருங்கடலில் ... ... *
இரணியனின்கிருதைசெய்து-நீங்கள் ... *
இனிஇருப்பவேனும்ம பா-முடுக்கு ... *
வெறிகொண்டுசெலுத்துக்கடலில்வருதப்பா ... *
விருனகப்பல்தடுமாறுமல்பாரும் ... *
பெரியதிமிதிமிக்கலமும்பிசகாமல்கூடி ... *
பெத்தசுபசெயமந்தவேடிக்கையைநாடி ... *
சரியானசிப்பிகளும்வாய்திறந்துபாடி ... *
சந்தோஷமாய்களித்துநின்றுகொண்டாடி ... *
பெருமையுடன்கலங்களைசேர்ந்துவந்தசேதி
பேர்பெரியமன்னனுக்குவருமுறைசெய்ப (ஏலே)

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-பூரிகல்யாணி.

... ... *
தலைமைசேரண்ணமாரே *
தகமையாய்கடலில்மூழும் ... *
அலைசனிற்பார்க்கும்போது ... ... *
அதிசயமொன்றுகேளீர். ... *

மலைதனிற்பிணைத்துப்போட்ட ... ✽
மைந்தனும்வதுமையாக ... ... ✽
சலத்திநில்மிதந்துவார ... ... ✽
சைகைபோல்தோனுதையா ... ✽

வசனம்:

கேளுங்கள் அண்ணமாரே கடலின்மூலம் அலையிற் ஒருஅதிசயம் சொல்லக்கேளீர் நமது மகாராஜன்வுத்தாரப்படிக்கி குழந்தையாகியப் பிரகலாதனை மலையிஞேடுசேர்த்துக்கட்டிபோட்டு வந்தோமே அவனுடையவலுமையினலே சலத்திநில் மிதந்தவருவதைப்போல்தோணுது அண்ணமார்களே.

மல்லர்கள்சொல்விருத்தம்,

இ-ம்-காபி.

அப்பனேயெமக்குச் ... ✽
செப்புமைந்தனேயே ... ...✽
கப்பலில்கொடுபோய் ... ✽
அப்புவில்கவிழ்த்தோம் ... ✽

பிரகலாதனன்சொல்

கொச்சகம்,

விரியுமைந்துபூதமுமாய் ... ... ✽
மேவுங்கரணமுமாய் ... ... ✽
வுரியகுணமூன்ருகி ... ... ✽
யோங்கிரண்டுமொன்ருகி ... ✽
தெரியுமறைப்பொருளாகிச் ... ✽
சித்தாய்சிற்குணமான ... ... ✽
அரிஅரிநாராயணனே ... ... ✽
அற்புதனேயெங்கோனே ... ... ✽



பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ம்-கேதாரகௌளம்,

நாரணுபோற்றிபோற்றி... ... ... ✽
நான்மறைப்பொருளேபோற்றி... ... ✽,
காரணக்குருவாய்வந்தென்... ... ✽
கவலையைத்தீர்ப்பாய்போற்றி .. ... ✽
வாரணந்தன்னைக்காத்த ... ... ✽
மாதவாபோற்றிபோற்றி... ... ... ✽
சிரணித்திரங்கிவாழும்... ... ... ✽
ஸ்ரீரங்கநாதாபோற்றி ... .... ✽

தேவாரம்.

இருவினைதுலைப்பாய்பொற்றி... ... ✽
யெகமாளவனேபோற்றி... ... ... ✽
திருவொடுகருடனேறும்... ... ... ✽
தேவனேபோற்றியன்பா... ... ✽
துருகியானுரைத்ததோத்ர... ... ✽
மூலகளத்தவனேபோற்றி... ... ✽
திருவடியெனக்குதல்கும்... ... ✽
சிரமுகுந்தாய்போற்றி .. ... ✽

கலித்துறை,

ஈரேழுலகினினிவ்வினை... ... ...✽
யல்லாமவெனக்கினிதாய்... ... ✽
பாரோர்புகழ்தெய்வநான்... ... ...✽
பணியேன்பணியாதனனே... ... ✽
ஒரோர்பொருத்துமடியார்கள்... ... ✽
போற்றத்திருவுடனே.... ... ✽

நேரேகருடன்முதுகேறி .. ... ※
வந்தென்னைரட்சிப்பயே... ... ... ※

கவித்துரை.

இரைந்தேபுனிதுதிருநாமந் ... ... ※
றன்னையிரவுபகல்... ... ... ※
கரைந்தேமனதுகவலையின்றே... ... ※
னென்னைக்காத்தருள்வாய்... ... ※
விரைந்தேவருகவிதுவேளை... ... ... ※
வேலைவெதும்பமணி... ... ... ※
நிரைந்தேகருடன்முதுகேறி .. ... ※
வந்தென்னைரட்சிப்பயே... ... ※

பிரகலாதனன்சொல்விருத்தம்

இ-ய்-நாட்டை,

பாவியான்பொல்லாதகோவியான்பஞ்சமா... ※
பாவியான்பெரியோர்களைப்... ... ※
பணியாதபாவியானேன்பிறந்தேனையோ. ... ※
பார்க்கவேசுவரிலெழுதும் ... ... ※
ஓவியம்போலவேவுருவெடுத்தேனலால் ... ※
ஒருவர்க்குமென்னையிட்டு... ... ※
ஒத்தாசையுதவிதானிதுவரையினுண்டுமோ... ※
உலகளந்தவனேயெனக்... ... ※
கூவியேதமிழிருந்ருத்திரஞ்செய்தனன் ... ※
கோதண்டராமராமா... ... ... ※
கோபாலகிஷ்ணனேயாற்கடலில்வெள்ளி ... ※
கொண்டிடும்கோவிந்தனே ... ... ※
ஆவிதானுடலைவிட்டகலுமுன்பாகநீ ... ※
அந்தரத்தானமாக... ... ... ※
அன்பாகிவந்தெனக்குபதேசந்துசெய்த ... ※
வாதியேவைகுந்தனே ... ... ※



பிரகலாதனன்சொல்தரு

இ-ய்-நீலாம்புரி-கண்ணிகள்

அரியேஅரிநாராயணா ... ... ※
அமலாநித்தியநிமலா... ... ... ※
கருமாமுகில்திருமேனிய... ... ... ※
கண்ணுமணிவண்ணா... ... ... ※
அருமாமறைப்பொருள் .. ... ... ※
மேவியஅறிவேயாகுருவே ... ... ※
திருமாதுமார்பா... ... ... ※
செழுந்திபாபத்பனுயா.. ... ... ※
உத்தன்செயலறியேன்... ... ... ※
பொருள்தறியேன்வெருகிறியேன்... ... ※
எந்தன்யிடர்தீர்ப்பா... ... ※
ரினியாரேவருவாரோ ... ... ※
அந்தந்தருணவம் ... ... ... ※
புனைகருணைநிதிவருணா... ... ... ※
அந்தந்தருகணமேஞ்சிலையாளா... ... ※
இருமையாளா... ... ... ※
கடல்மேலரவணமீதினில்... ... ※
கருணாயதுபோல... ... ... ※
மடல்மேவுகண்டுயில்... ... ※
கூர்த்திடுமாலையருணாலே ... ※
கடல்மேல்பெருந்தடல்மேல்கட்டி... ... ※
கமிழ்ந்தார்மிதந்திடவே ... ... ※
அடியார்க்கருள்... ... ... ※
அமலாவுன்போல்அரிநணுமானேன்றோ ... ※
அலைபொங்கியகடல்மீதினில்... ... ※
அலந்தவிர்மீதே... ... ... ※
சொலங்கொண்டுமலர்கண்... ... ※
டுயில்கூரும்பசுங்கொழுந்தாய் ... ... ※
காலந்தனைபொப்பாத்... ... ... ※

கருங்கடலிற்கவிழ்த்தாலும் ... ... *
மேலேமிதந்திடயாரொரு ... ... *
புதிதனுமானேனே ... ... ... *
அடியாரடியார்தங்களுக்கன்பு ... ... *
பணிவிடையும் ... ... ... *
படிமீதிலெள்ளளவாகிலும் ... ... *
பண்ணுந்திரமறியேன் .. ... ... *
கெடியாயிருக்குறியாய் .. ... *
சொல்லுங்குணமேதுமில்லாதாய் ... *
நெடியாயுந்தனடியேன் ... ... ... *
மனமிரங்கிலதீயறிவாயோ ... ... ... *

பிரகலாதனார்சொல்

தேவாரம்.

பாம்பணைமிசைதுயின்ற ... ... *
பத்தரட்சகனேதேனுன்ன .. ... *
டம்புநன்டிசைகள்யாடும் ... ... *
யெழிலுறுதளபமார்மா ... ... *
வீப்புமெய்தெனக்கல்பூட்டி ... ... *
விரிகடலழுந்திவிட்டார் ... ... *
ஆம்பலர்கண்ணிபங்கா ... ... *
அரிஅரிரட்சிப்பாயே ... ... *

வசனம்.

அரிஅரிபன்னகசயனா - பக்தரட்சகா பரமபுருஷா-பரந்தா மாஜெகதாபிராமா - கொடியமல்லர்களகருங்கல்லிலென்னைசேர்த்துயிறுகக்கட்டியிக்கடலிலழுந்தி விட்டார். இந்தருணத்திலிவ்வேழையின்மீதுகிருபைக்கூர்ந்துரட்சிக்கவேண்டியசுவாமி

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-த்ஜாவந்தி.

ஒன்னலர்வணங்கிபோற்ற ... ... *
வுலகமீரேழுமாண்ட ... ... *



மன்னவாசிறுவன்றன்னை ... ... *
மலைதனிற்பிணைத்தேயந்த ... ... *
பன்னுமாழ்கடலிற்போட்டோம் ... ... *
பாலன்செய்ஹரிநாமத்தால் ... *
தன்னரக்கலமிதந்து .. ... ... *
கரைதனில்வந்ததையா ... ... *

வசனம்

சரணஞ்சரணமையா சுவாமி யிரணியேஸ்வரா தேவரீர்சொன்னவாக்கின்பிரகாரம் பிரகலாதனை கருங்கல்லிற்சேர்த்து யிருகக்கட்டி சமுத்திரத்திற்போட்டோம் அவன் ஹரிஹரியென்னுந் திருநாமத்தின்வலுமையினால் தெப்பலைப்போல்மிதந்து கரையிலேவந்துவிட்டானையா சுவாமி;

இரணியன்சொல்விருத்தம்.

இ-ம்-நாட்டை,

கனமும்புவனமஞ்சக் ... ... *
கண்டகரோகேமந்தன் ... ... *
பகைவனைப்போற்றிசெய்தப் ... ... *
பையலைக்கயத்தால்கட்டி ... ... *
தகைமைசேர்வலிகரணந் ... ... *
தன்னிலேதாக்கிப்போட்டு ... ... *
அகலுருப்யானைபூட்டி ... ... *
அரைத்திடச்சொல்லுவீரே ... ... *

வசனம்

ஆ ஆ ஆ ஆ வாருங்கள்மந்திரிமார்களே இந்தபூமி ஆகாயமும் பதினாலுலோகமும் அஞ்சும்படியாய் வலுமைபெற்றகன்னரே அந்தகொடிய துஷ்டனைபிடித்து கறகரணத்தில் தாக்கிப் பாட்டு மதம்பொருந்திய யானைகளைக்கட்டி அரைத்துப்போடச்சொல்லுங்கள் மந்திரிமார்களே,

மந்திரிமார்கள்சொல்விருத்தம்.

இ-ம்-பைரவி.

உயிர்களைவதைத்துத்திண்ண ... ... *
வொவ்வியகுலஞ்ஞர்கேளீர் ... *
நயவிலாயிரணியமன்னன் — ... *
தன்னிடப்பாலந்தன்னை ... ... *
பயமிகுகலக்கரணத்தில் ... ... *
மதப்பட்டயானைப்பூட்டி ... ... *
அயல்படத்தூக்கிப்போட்டு ... ... *
அரைத்திடவனைத்தானே ... ... *

வசனம்.

கேளுங்கள்மல்லர்களே தயவுதாட்சணியமில்லாத நமதுஇரணியமகாராஜனுத்தாரப்படிக்கி அந்தப்பிரகலாதனை பயமிகுந்த கலக்கரணத்தில் மதப்பட்டயானைகளைப்பூட்டி தூக்கிப்போட்டுவிட்டுவந்து அதிசீக்கிரத்தில் சேதிசொல்லுங்கள்மல்லர்களே

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-நாதநாமக்கிரியை.

சித்தங்கொண்டெழுந்தமன்னன் .... *
செப்பியமொழியைக்கேட்டு ... *
ஆத்தலாயிருந்தோமாகில் ... ... *
ஆக்கினையிடுவார்நம்மை ... ... *
காத்தருமணிக்கயத்தால் ... ... *
கையுடன்காலுமாக ... ... *
சேத்திவன்றன்னைக்கட்டிச் ... ... *
செக்கிநிலிடுவோம்வாரீர் ... ... *



மல்லர்கள் சொல்விருத்தம்,

இ-ம்-செஞ்சுருட்டி.

திக்கெனநாலு ... ... *
பக்கமும்வாரீர் ... ... *
இக்கணத்திவனை ... ... *
செக்கினிலிடுவோம் ... *

பிரகலாதனன்சொல்

கொச்சகம்,

அடருங்கருவிகளாய் ... ... ... *
தோன்றும்பெருவெளியாய் ... *
படவிலரவணமிசையில் ... ... *
கண்டுயிலுமாதவனே ... ... *
இடர்வருத்துங்கலக்கரணத் ... ... *
தெனையலாக்கவெவ்வினையு... ... *
அடராமல்காத்தருள்வாய் ... ... *
அரிஅரிநாராயணனே ... ... *

பிரகலாதனன்சொல்கரு

இ-ம்-பைரவி-ஏகதாளம்

பல்லவி.

அரிஅரிஅரிஓம்நாராயணா ... ... *
தானந்தவேதப்பாராயணா ... ... *

அநுபல்லவி.

பூரணிபவித்திரக்குங்காரணா-புண்ணிய ... *
புருஷோத்தமெஞ்ஞானபூரணா ... ...(அரி)

சரணங்கள்,

ஆக்குமாரயணாகிநின்றாயே ஆக்கி... ... ... *
அழிக்குமாறுநீயாகிச்சென்றாயே ... ... *
கன

போக்குமாரனுகிவென்றுமே-புத்தன் ... ❋
புதுமையாரறிவாரோவென்றுமே ... ... (அரி)
அடிமையடைப்பதுனக்கருமையோ-ஆனா... ❋
தவிதருவதென்னபெருமையோ... ... ❋
கொடியனுஞ்செய்யும்பவத்தொருமையோ-யிந்தக் ❋
கோலஞ்செய்தால்யென்னவருமையோ ... (அரி)

கல்லாதவனென்றுசம்புன்மையோ-யென்ன ... ❋
கலங்கிநான்றவிப்பதும்நன்மையோ... ... ❋
யெல்லாம்பார்த்திருப்பதும்வன்மையோ-இனி ❋
யென்னசெய்வேனுன்னருள்வுண்மையோ ... (அரி)

கோடிகோடிசூரியப்பிரகாசனே-தொண்டர் ... ❋
குடிகொண்டருள்வைகுண்டவாசனே ... ❋
தேடிநான்முகன்காணுநேசனே-புத்தன் ... ❋
சித்தமென்பாக்கியப்ரிஷிகேசனே... ... (அரி)

பொதுவிருத்தம்

இ-ம்-நாட்டை,

ஆடியசெக்கடியும்வேர்பரித்துபாய்ந்து ... ❋
அரக்குமூலக்கையுமுரித்துகொக்கித்தள்ளி ... ❋
ஓடிவலம்பையும்பரித்துபூட்டும்யானை ... ❋
வொன்றைமூத்திநிகத்தடியுமுரித்துனாய் ... ❋
நீடுமெல்லர்மேல்விழுத்துமார்புத்தோளும் ... ❋
நெறிந்தவர்கள்பயந்தொடிங்கிப்பிரகலாதன் ... ❋
பேடவிம்பூர்தாரன்முகத்தைநோக்கி ... ❋
பேத்திறுரிருஜையச்சொல்லிப்போற்றிநாரே ... ❋

மல்லர்கள்சொல் விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்

எதுநீசென்பிரகலாதமனியேவாளா ... ❋
னெரிந்துநெருமலைகட்டிக்கல்மேல்முள்மேல் ❋



பீதுமுருட்டியுமனலில்போட்டப்பாம்பின் ... ❋
விடமீயந்தும்ஆனையின்காலிடவைத்தும் ... ❋
ஓதநெடுங்கடலில்விழச்சாய்த்தும்சிக்கி ... ❋
லுடனுராட்புவேருகவரைத்தும்சேற்றே ... ❋
வேதனையில்லாதிருந்தவிபரமெல்லாம் ... ❋
விளம்புவாயெங்களுக்குவிளம்புவாயே... ❋

வசனம்,

அகோவருண்மையா பிரகலாதன சுவாமியே தேவரீனாவான் முதல்கொண்டுபலவிதமானஆயுதங்களினுலே லவெட்டியும் மலையிலேரிமேலேற்றிகள்ளுகள் கரங்களிலேயும் வுருட்டியும்அக்கினிக்குழியில்தள்ளியும்அந்த நாகங்களைவிட்டு கடிப்பித்தும் திக்குகஜங்களையும் விட்டுமுட்டிவைத்தும்மலைக்கல்லில்கட்டிகடலிலேஅழுத்தியும்கலக்காணத்திலரைத்தும்இன்னம்அனந்தமானவேதனைகளைச் செய்தும்அந்தவேதனைகள்யாவும் எங்களுக்கு வுண்டாக்காதேயல்லாமல்தேவரீருடையசரீரங்களுக்குஒருவடிவுமலபமுமில்லாதிருப்பதுயென்னமகத்துவத்திறமேயோயெங்களுக்குத் தெரிய வராதுஆகையாளதாங்கள்யிவ்வேழைகள்மீதில் கிருபைகூர்ந்துஅந்தவிபரத்தைஅடியேன்களுக்குச்சொல்லவேணுமையாசுவாமி

தரிக்கதரு

இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ரூபகம்-

மல்லர்கள்சொல்

கூட்டும்பாஷையுங்கூறி விட்டெறிந்தவாள்களெல்லாம்
கெட்டுமுறிந்ததைச்சொல்லாயிஷ்டமைந்தனே ... ❋

பிரகலாதனல்சொல்

தொட்டுவிடும்பஞ்சாயுதம்யெட்டெழுத்தின்மந்த்ரவாளாய்
பட்டுமுறிந்ததுவல்லோஇஷ்டமல்லரே ... ❋

மல்லர்கள்சொல்

மூக்கணுருத்திரன்கையிலங்குஞ்சூலம்விட்டால்நீயும் *
நோக்கிடாதவிதஞ்சொல்லாய்புக்கியமைந்தனே *

பிரகலாதனன்சொல்

முக்கண்ணனையிடர்தீர்த்தவிக்கிரமன்சிந்தையிருந்தால்
திக்கம்வந்திடாதல்லோதுக்கமல்லரே... ...*

மல்லர்கள்சொல்

மஞ்சடர்மலைமீதேத்திதஞ்சவேயுருட்டமேனி... *
அஞ்சிடாதவிதஞ்சொல்வாய்கொஞ்சுமைந்தனே...*

பிரகலாதனன்சொல்

நஞ்சணைமேற்பள்ளிகொண்டோன்செஞ்சொல்லு [ளெனக்கு
பஞ்சணையானதல்லோவஞ்சமல்லரே... ...*

மல்லர்கள்சொல்

வடவனல்போலயிருங்கொடியநெருப்பில்தள்ள... *
மடியாதவகைசொல்லாய்வடிவுள்ளமைந்தா ... *

பிரகலாதனன்சொல்

நெடியமாயவனருள்படியும்பரமானந்தக் ... *
கடலில்வாழ்ந்திட்டேனல்லோநொடியில்மல்லரே *

மல்லர்கள்சொல்

முடிக்கும்பாம்புகளேட்டுங்கடிக்கவுந்தன்மேனி ... *
துடிக்காதவகைசொல்வாய்வடிவுள்ளமைந்தா ... *

பிரகலாதன்சொல்

நடிக்கும்பாம்பணையானைப்படிக்கும்புகழமிர்தம்...*
குடிக்குமடிமையல்லோநடிக்கும்மல்லரே ... *



மல்லர்கள்சொல்

அங்கமீதுபாயவிட்டவெங்கனல்மதயானை ... *
மங்கியோடிவிதஞ்சொல்லாயிக்குமைந்தனே ... *

பிரகலாதனன்சொல்;

வெங்கரிவைவதைசெய்தசெங்கண்மாயன்றுரூபச்... *
சிங்கநாதத்தினாலல்லோபங்கமல்லரே ... ... *

மல்லர்கள்சொல்

செப்பியமலையில்கட்டிக்குப்புறக்கவிழ்த்தநீரில் ... *
யெப்படிமிதந்தாய்ச்சொல்லொப்புமைந்தனே ... *

பிரகலாதனன்சொல்

இப்புவியுண்டாலின்மூலன் அப்புவிமிதந்தோன்பாதந் *
தெப்பமானதல்லவோயிப்போமல்லரே ... *

மல்லர்கள்சொல்

தந்திரத்தாலரைத்திடுமந்திரக்கல்காணமதா ... *
னைந்துபோனவழிசொல்வாய்முந்திமைந்தனே ... *

பிரகலாதனன்சொல்

இந்திரஜாலமோமாயன்மந்திரச்சக்கரத்தினால் ... *
சிந்திமுறிந்ததல்லோசுத்தைமல்லரே ... *

மல்லர்கள்சொல்

உத்தமனையிவ்விடர்செய்தசிந்தையழிந்தோமேதாங்கள்
உய்ந்துபோகும்வழிசொல்லாய்வந்தமைந்தனே ... *

பிரகலாதனன்சொல் [கொண்டால்

உய்ந்துபோகும்வழிவேண்டில்மெய்த்தன்மொழிதனைக்
தந்திடும்பமல்லோசொல்லத்தமல்லரே ... ...*
நாட்டுமாயலக்கன்மாரியன் பூட்டுமருள்கொண்டேவினை
யோட்டிநால்வந்ததல்லோவாட்டமல்லரே ... *

பிரகலாதனன்சொல்

வெண்பா.

பேனுக்கள்தட்பிப்பிழைக்கவென்றுவுள்ளன்பு ... ※
புணுங்களென்சொல்புகலுங்கள்-அனுங்கள் ... ※
அஞ்சக்கரதீதானைஐபந்தவிழ்த்தாண்ட ... ... ※
அஞ்சக்கரத்தானடி ... ... ... ※

வசனம்.

வாருங்கள்மல்லர்களே நீங்கள்பிழைக்கும் பொருட்டுயான் சொல்லுகின்ற வார்த்தையை யுறுதியாகப்பிடித்துக்கொண்டு கேளுங்கள் அதென்னவென்றால் பஞ்சாட்சரமுடைய பரமசிவனுக்குபிட்சையைதவிழ்த்தருளிய கர்த்தனாகிய நாராயணனுடையபாதாரவிந்தத்தை வுள்ளன்பினுலே பூசனைசெய்புங்கள்மல்லர்களே,

பிரகலாதனன்சொல்

வெண்பா.

அடியாரடியானேயானென்றற்பாவம் ... ※
பொடியாங்கதிபாய்புகழ்ம்-கொடியாரே ... ※
அல்லிரோநீங்கள்அரிநாமமென்றுசொல்ல ... ... ※
வல்லிரோயான்வணங்குமால் ... ... ※

வசனம்

இன்னஞ்சொல்லுகின்றேன்கேளுங்கள் மல்லர்களேநீச்சராளுஅம் அடியார்களுக்கு அடியேனுவேனென்று வசனிக்கப் பட்டார்களேயானுல் அவர்களுடைய பாவங்களெல்லாம் பொடிப்பொடியாய்போய் சாயுச்சியப்பதவியென்னும் பிறவாதநெறியையடைவார்கள்மல்லர்களே,



மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி,

அடமிகுஅண்ணமாரே ... ... ※
அரிமலர்பதத்தைப்போற்றும் ... ... ※
வடிவுள்ளப்பாலன்றன்னை ... ... ※
வதைசெய்யநினைத்தோமாகில் ... ... ※
மடிவதுசித்தமென்று ... ... ... ※
மனதினில்நினைக்குதப்பா ... ... ※
கடினமன்னவனுக்கித்தை ... ... ... ※
கழறுவோம்வருகுவீரோ ... ... ... ※

வசனம்.

வாருங்களண்ணமார்களே இந்தக் குழந்தையைக் கொல்லவேணுமென்று நினைத்தால் அவன்செய்கின்ற தியானத்தினாலே நாம்விடுகின்ற ஆயுதங்களெல்லாம் நம்மையேயெதிர்த்து பகைத்துக்கொல்லவருகின்றது ஆதலாலிந்த சமாச்சாரத்தை மகாமகாராஜனாகிய இரணியபூபனுக்குச் சொல்லுவோம் போவோம் வாருங்களண்ணமாரே.

மல்லர்கள்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

தரணிபோரெழுங்கார்க்குந் ... ... ※
தானவெண்குடையாய்போற்றி... ... ※
இரணியவேந்தேயிவ்வம்... ... ... ※
மெய்யகவிளவிசித்திராளுல்... ... ... ※
மாணமேகிதியாகும்... ... ... ... ※
வலித்தயர்தப்பிவந்தோம் ... ... ※
கருணைபாலமைந்தன்சேதி .. ... ... ※
காட்டுவேம்காட்டுவேமே... ... ※

வசனம்,

சேளும்மகாராஜனேயினிமேல்யெங்களை - மைந்தனைவதை செய்யும்படியாய் விடுத்தீராளுல்நாங்கள்யுயிர்தப்பிவரமாட்டோம்-அதோகதியடைந்திடுவோம்-யெங்களால்முடியாது- யிப்போதுயுயிர்தப்பிவந்ததேவெகுபிரயாசை அதிவிபரத்தை தெரித்ததுமாத்திரம்சொல்லுகின்றோம்கேளும்பூபதியே,

மல்லர்கள்சொல்தரு

இ-ம்-நாட்டை-தாளம்-அடசாப்பு

பல்லவி.

சொன்னசொன்னப்படிநாங்கள் ... ※
யென்னசெய்துமவனுடல்... ... ※
அலையாமலேயுயிர் ... ... ※
நிலையாச்சே... ... ... ※

அநுபல்லவி.

இன்னமுந்தண்டனை செய்யச்சொன் ※
ன திநாலினிமேலே ... ... ※
யெங்களாலாகுமோ ... (சொ)

சரணங்கள்.

விட்டவிட்டகணையெல்லாம் ... ... ※
கெட்டுமுறித்தேயெதிர்த்து... ... ※
மேலேவிழுந்துதுயிந்திர ... ... ※
ஜாலவித்தையே... ... ... ※
பட்டபாடெல்லாமுனக்குக் ... ... ...※
கட்டுரைக்கமுடியாது .. ... ... ※
பார்த்தபோதல்லவோ... ... ... ※
யெய்யாப்போத்தமெந்தையே... (சொ)



அட்டியில்லாவுடலெழுத்து... ... ※
யெட்டையும்பனிரண்டையும்... ... ※
அய்யிரண்டரையுமாறும் ... ... ※
பையவோத்தே... ... ... ※
ஒட்டியிருக்கியப்பா .. ... ... ※
சிக்கட்டுகளெல்லாமறுத்து... ... ※
ஒன்றுநூறானதுகண்டோம் ... ※
யின்றுபோதவே .. ... ... (சொ)

முன்னமோதுமுயிரெழுத்தும்... ... ※
பன்னிரண்டாமுடலெழுத்தில்... ... ※
முன்னெழுத்தைநாவினாலே ... ... ※
மூணியோதியே... ... ... ※
அன்னவன்பிரகலாதன்... ... ... ※
உன்றும்போதுபடையெல்லாம்... ... ※
அழலின்முன்போட்டுவைத்த... ... ※
விழலின்சோதியே... ... (சொ)

கைமுறித்தோங்கால்முறிந்தோ... ... ※
மறைத்திடும்போதுகலக் ... ※
காண்முறிந்ததுஞ்சொல்லவேணுமோ... ※
பொய்யோஅய்யனே... ... ※
அவனாலேநாங்கள்... ... ... ※
தையும்வாதையினுந்நீரே... ... ※
ஆக்கினைசெய்வதேநல்ல... ... ...※
யோக்கியமெய்யனே... ... (சொ)

அண்டாண்டபுவனமும்... ... ... ※
யெண்டிசையுமகண்டமும் ... ... ※

மாண்டருனிறெயிப்புகழ் ... ... ... *
புண்டரீகனே ... ... ... *
தண்டருன்மணியாபர ... ... ... *
சண்டமுத்தண்டமெ்்மீரா ... ... *
சரணமுத்தன்சரணமெங்க ... ... *
விரணியவேந்தே ... ... ... (சொ)

பொருவிருத்தம்

இ-ம் கேதாரம்.

படித்தவடித்திந்தவனைமல்லர்கூர .. ... *
வாயுநேந்செவியுநீமூக்கினூடும் ... ... *
பொடித்தகனல்வழிநீதொழுதங்கண்ணிரூடு... *
புகைபெருமபியண்டமெல்லாம்பரந்துவிட்டம *
அடித்தகனைடாளெழுப்புகைபோவென்று ... *
சருநிநான்முகனும்மனத்தென்னைக்கொன்ன ... *
இடித்தயிடிப்போல்வாயுறுமனியார்த்து ... *
பெருமபிணுவிரணியனெஞ்சம்புழுக்கினூனே ...*

வசனம்,

இந்தப்பிரகாரமாகமல்லர்கள்வந்துதங்கள் குறையைச்சொல்லிமுறையிட்டமாத்திரத்திலே- வாயிலும்செவியிலும் மூக்கிலுங்கண்ணிலும் புகையானதுபுகுபுவென்று பெருமபி அண்டகடாகத்தில் முட்டிசத்திய லோகத்திலே விளங்காநின்ற பிரமதேவனுமவன்பிதென்னயுகாந்தகாலத்திலேருத்திர மூர்த்தி சகலபிரபஞ்சங்களையுஞ் சங்காரஞ் செய்து வெளிக்கின்றபோதுவெழும்பாநின்றபுகையோ யிதுவென்று ஆச்சரியங்கொள்ளும்படியாய்இடி இடித்தாற்போல்வாய் விட்டுசத்தித்துஇரணியன்புலம்பும்நவிதம்பெட்டயடிபென்றால்



இரணியன்சொல்தரு

கண்டா-தாளம்-ஆதி

கண்ணிகள்-

நற்சனப்பிள்ளையாலே ... ... *
முச்சகமும்பணியும் ... ... ... *
துலங்குமென்கீர்த்திக்கு ... ... *
கேடாச்சேஅய்யோ ... ... ... *
கொச்சையில்லாகுலத்தை ... ... ... *
நிச்சயமாயழிக்கும் .. ... ... *
கோடாலிகாம்புபோல் ... ... ... *
வாச்சுதேஅய்யோ .. ... ... *
நன்டுசெப்பிவேய்கதலி .. ... ... *
கொண்டகருவால்து ... ... ... *
நாசமாகுமேயென்ற ... ... *
வகைபோலேஅய்யோ ... ... ... *
துண்டனிவனாலேநீ ... ... *
மண்டலமும்பாவி ... ... *
சொல்லும்போழித்தானே ... *
யிலிமேலேஅய்யோ ... ... *
அமரர்முதலல்லோர்க்கும் ... ... ... *
விமலனாகியவெனக் ... ... *
கவமானமிவனாலே ... ... *
வாராமோஅய்யோ ... ... *
சமையுமென்றன்மைக்குநி ... *
நியிஷத்திலேயொளிக்குந் — ... *
சதிமூவர்கேட்டால் ... ... *
தாராமோஅய்யோ ... ... *

சொல்லுவேனென்றபோது ... *
பொல்லாதென்றேவிலக்கி ... ... *
கூடம்விலாவதிக்கும் ... ... *
பகையாச்சே அய்யோ ... ... *
நல்லதென்றுங்கேளாமல் ... *
சொல்லுமென்றேகைமை ... ... *
நாரியற்குமெத்த ... ... ... *
நகையாச்சே அய்யோ ... ... *
கடலுமல்லரும்பாம்பு ... ... *
மிருகனிருநெருப்பும் ... ... *
கரியமால்தனக்குற ... ... *
வாய்போச்சே அய்யோ ... ... *
நெடியகல்காணமு ... ... ... *
மடியோடேமுறிந்ததே ... ... *
திணைந்துக்கொண்டாவிது ... ... *
பெருமூச்சே அய்யோ ... ... *

இரணியன்சொல்விருத்தம்

இ-ட்-மத்தியமாவதி,

அன்னூராயிரங்கோடி ... ... ... *
அமைச்சரேகேளுமிந்தச் ... ... *
சின்னதோர்பையனாலே ... ... ... *
சேதமென்றுபிறகாமென்று ... ... *
வென்னிடமனதிற்தோனு ... ... *
திவன்றனைச்சொல்வதற்கு ... ... *
மன்னும்பேசனேயிப்போது ... ... *
வகையுடன்சொல்லுவீரே ... ... *



இரணியன்சொல்தரு

இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி

பல்லவி.

வாருங்கள்மதிமந்திரிமார்களே-இவனை ... *
மடிக்கவேவகைசொல்லுவீர்களே ... ... *

அநுபல்லவி

பாருங்களிவன்மாயன் ... ... *
பேருமூருஞ்சொல்லிப் ... *
பழித்தானேயொழித்தானே ... *
பகைத்தானேமிகத்தானே ... (வாரு)

சரணங்கள்

படையெல்லாமிவன்மார்பில்விட்டிடமறைந்ததே ... ... *
பாணமுமறைக்குங்கல்காணமுமுறிந்ததே ... ... *
விடமெல்லாமமுதாச்சேகடலெல்லாந்திடலாச்சே ... *
வீணாச்சேநாணாச்சேவீறாச்சேஆறாச்சே ... (வாரு)

தேவர்கள்நகைசெய்யலாவதுமாச்சுதே ... ... ... *
திருமாலேயிவனாலேபரமாகிப்போச்சுதே ... ... *
யாவியுயிரைக்கொல்லயாராலுமில்லையே ... ... *
பாடாச்சேகேடாச்சேபழியாச்சேயிழிவாச்சே ... (வா)

அளந்தாலுமொருசாணுவளர்ந்தாலுங்காணுமோ ... ... *
அவன்சொல்லேமெய்யாகத்துவந்தனைத்தோணுமோ ... *
தளங்கொண்டுஜெயித்தியக்களங்கொண்டுஜெயிப்பதோ ... *
ஊக்கியமோமுக்கியமோதருமமோகருமமோ (வாரு)

மந்திரிகள்சொல்விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி,

தயவிதில்மனஞ்செல்லாமல் ... *
தாணியையாண்டமன்னு ... ... *

செயமதுண்டானபோது ... ... ... *
நீங்கொருதானுமில்லை ... ... *
பயமதுண்டானபோது ... ... ... *
பணிந்தவர்பகைவராவர் ... ... ... *
இபதுடன்கண்டுநோக்க ... ... ... *
யெந்தனுலாகாதையா ... ... ... *

வசனம்.

சயவினிலுந்தாட்சணியத்திலு மனதுசெல்லாமலித்தரணி யையாண்ட மகாராஜனேகேளும் யுலகத்தில் ஜெயமுண்டான போது பயமொன்றுமில்லை பயமதுவுண்டாகுங் காலத்தில் நம் மைப்பணிந்தவருக்கு நாம்பணிந்து பயப்படுவதாகும் ஆகலால் இதைகண்டுநோக்க யெந்தனுல்முடியாதையா சுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-தேசிகதோடி.

யெதிரியாரெந்தனுக்கு ... ... *
யிகமத்தியமந்தரத்தில் ... ... *
யெதிரிலாதுலகையாண்டே ... ... *
னென்வயத்தமைத்தபையல் ... ... *
யெதிரிபேருரைக்கவந்தா ... ... *
னிவனையென்செய்வோமென்றால் ... *
யெதிரியாய்ப்பேசவந்த ... ... *
யினியுன்னைவதைசெய்வேனே ... *

வசனம்;

வாருங்கள்மந்திரிமார்களே இந்தயிகமத்திய அந்தரத்திலும் யெட்சகர் கின்னரர்-கிம்புருடர் காந்தருவர் முதலான பதினாலு லோகத்திலும் யெனக்குச்சத்துருதியனில்லை அப்படியிருக்கதப்பி டவயத்தில் பிறந்தபையல் யென்னிடப்பெயர்சொல்லாமல் யெ



ன்யெதிரியின்பெயரை சொல்லுகின்றான் யிப்பேற்கொற்றவனை யென்னசெய்யலாமென்றுகேட்டால் நீங்கள்தானே யெதிரியாய்ப்பேசுகின்றீரல்லவா ஆ ஆ ஆ ஆ நன்றாயிருக்கின்றது துன்முக மந்திரியுன்னை யிந்தவாளினாலே இருதுண்டாகவெட்டிப்போடும் படியான கோபம்வருகின்றது நல்லதாகட்டு மந்திரிகளே

மந்திரிசொல்விருத்தம்

இ-ம்-பந்துவராளி.

மதிகதிர்மண்ணும்விண்ணும் .. ... ... *
மயங்கியேநடுங்கியேங்க... ... ... *
வதைசெய்வேனென்று... ... ... *
நீரும்வாள்கையிலெடுத்திர்மன்னு... ... *
யெதிரிலாக்கோபம்வேண்டாம்... ... ... *
யெமன்கையிலிவனைக்கூட்டி... ... *
கதியிலாநரகிற்றள்ள... ... ... ... *
கட்டளையிடுகுவீரே... ... ... ... *

வசனம்,

இந்தசந்திரசூரியாக்கள்வானம்பூமியாவும்நடுங்கியேங்க யெங்களைவதைசெய்வேனென்றுகையில்வாளைப் பிடித்து யிராணியே ஸ்பரா-நாங்கள்செய்தகுற்றத்தை மன்னித்தாட்சியும் இப்போ துயெதிரியில்லாமல்கோபம்வேண்டாம்-யிந்தபையலை யெமனிடத்தில்வொப்பிவைத்துகதியில்லாதநரகக் குழியில் தள்ளிவரும் படியாய்கட்டளைசெய்வீர்மகாராஜனே,

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-சங்கராபரணம்,

அக்கினிக்கண்ணுமிக்க ... ... ... *
அனல்கண்ணுபுகைக்குங்கண்ணு... ... *
திக்கெலாஞ்செயித்துவந்த... ... ... *
துரோணிதக்கண்ணுசேனாய்... ... ... *

இக்கணஞ்சென்றுஅந்த... ... ... ... *
யெமனைநானழைத்தேனென்று... ... *
தக்கதோர்கொலுக்கிப்போது .. ... ... *
வன்றனையழைத்துவாரீர்.... ... ... *

வசனம்,

ஆரடா அடாகாவலாளிகளே அடா அக்கினிக்கண்ணு அடா அனல்கண்ணு அடா புகைக்குங்கண்ணு அடா திக்குவிஜயம்பெற்றசிரோணிதக்கண்ணு இங்கேவாருங்கள் அடா நீங்கள் இந்தட்சணமே போயியெமன்றனைக்கண்டு நானழைத்ததாகச்சொல்லி அதிசீக்கிரமத்துக்குள் அழைத்துவாருங்கள் காவலாளிகளே

மந்திரிசொல்விருத்தம்

இ-ப்-பைரவி,

கடினமாயேவல்செய்யுங்... ... *
கஞ்சுகிசொல்லக்கேளாய்... ... *
படிமிசைதன்னிலந்தப்... ... ... *
பையலைக்கொல்வோமென்றால்... .... *
கொடியவல்லாயுதத்தால் ... ... *
குறைந்திடாதிவனைக்கொல்ல... ... *
நெடியதோரெமனைத்தானும்... ... *
நிமிஷத்திலழைத்துவாராய் ... ... *

வசனம்,

அடாவாடா கஞ்சுகி - இந்த திரிலோகாதிபதியானயிரணியமகாராஜன் அழைக்கிறானென்று அந்தயெமனை அதிசுறிதத்திலழைத்துவாரும்பிள்ளாய்கஞ்சுகி



கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-கல்யாணி,

கடினமன்னவனார் .. ... *
அடியிணைப்போற்றி... *
அடிபடயெமனை... ... *
தொடியினிலழைப்பேன்... *

கட்டியன்சொல்விருத்தம்

இ-ம்-நாதநாமக்கிரியை

தெண்டிசைக்குரிய.. ... *
சண்டனேவல்னே... ... *
கண்டகரலழைத்தா... ... *
நீண்டுநீவருவாய்... ... *

பொதுவிருத்தம்

இ-ம்-பந்துவராளி.

இண்டிடித்ததுபோல்சீறி... ... *
யிரணியமன்னனுன... ... ... *
கண்டகனழைத்தானென்று ... ... *
காவலனுரைத்தபோது... ... ... *
தெண்டிசைதன்னிற்கேட்டு... ... ... *
தினகரன்குமாரனுன... ... ... *
சண்டனும்நடுக்கமுற்று ... ... *
ஜதுதியாய்வருகின்றானே ... ... *

எமன்வருகிறதரு

இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-அடதாளம்

பல்லவி.

எமதர்மராஜன்வந்தானே-சீக்கிரம் ... *

அநுபல்லவி.

ஜமையுயிரண்டப்புபஞ்சமுகத்தில்தானே ...(எமதர்ம)

ஈசி

சாரணர்கள்.

இளம்பிறைப்போலவேபல்லும் மன்னி ... *
லெவ்வுயிறையும்வாயால்கவ்வியேமெல்லும் ... *
தளங்கொண்டயிடிபோலேசொல்லும் இந்த ... *
தரணியிற்கொடியோரைதர்மத்தால்வெல்லும் (எம)

எருமைக்கிடாவினிலேறி-தம்மை ... *
ஏன்னத்துக்கழைத்தானென்றுவ்வியேகூறி ... *
கருமலைப்போலவேயீறி நின்ற ... *
காலபாசமுந்தெண்டுங்கூலமுந்தேரி ... ..(எம)

அங்குசம்வாளுடனிட்டிவேலு ... *
மணிமழுவளைதடிதுணிவுசெய்தோட்டி ... ... *
இங்கிவையாவரைக்கூட்டி-மயங்கும் ... *
கொடிகொண்டயிரணியன்கொடியைப்பாராட்டி (எ)

எமன்சொல்விருத்தம்

இ-ம்-தோடி

இரணியராஜபூபா ... ... ... *
யிணையடிசரணமையா ... ... *
நிரமுடனுத்தன்பாதந் ... ... *
சென்னிமேற்சூட்டிக்கொண்டு ... *
அருள்பெறும்நாயேன்றன்னை ... *
அன்புடன்பொருளாயெண்ணி ... ... *
வாவழைத்திட்டசேதி ... ... ... *
வாய்மலர்ந்தருள்செய்வீரே ... ... *

வசனம்

சரணஞ் சரணமையா சுவாமி யிரணியேஸ்வரா அடியேனையொருபொருளாயெண்ணி அழைப்பித்தகாரியத்தை இன்னதென்று தமதுதிருவாய்மலர்ந்து சொல்லவேணுமையா சுவாமி



இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-ஆனந்தபைரவி

நல்லதுசொன்னாயேமா ... ... *
நான்சொன்னமொழிகேளாது ... *
புல்லியசிறுவன்றன்னைப் ... ... *
பிடித்துநீகட்டிக்கொண்டு ... ... *
சொல்லியரவுரவாதி ... ... *
தோதகநரகிற்தள்ளி ... ... *
எல்லையில்லாதகாலம் ... ... *
வருந்திநைப்போவாயே ... *

வசனம்

வாரும்பிள்ளாய் யெமதர்மராஜனே இப்போது நமக்கு மகாசந்தோஷமாச்சுது இந்தப்பிரகலாதனைப் பிடித்துப் பாசத்திநாலேகட்டி கொண்டுபோய் ரவுரவாதி நரகத்தில் தள்ளிப்போடும்பிள்ளாய்.

எமன்சொல் விருத்தம்

இ-ம்-நாட்டை

தேவரீர்தவம்போல்முன்னாள் ... ... *
செய்திடுந்தவத்தினாலே ... ... *
பூவலயத்திலுள்ளப் ... ... *
பொருளினிலொன்றுஞ்சாகான் ... *
காவலன்றன்னைநாயேன் ... ... *
கட்டியேபோகலாமோ ... ... *
யேவினதெல்லாஞ்செய்ப்பே ... ... *
னென்செய்வேனெளியேனானே ... *

வசனம்.

கேளுமையா சுவாமி இரணியேன்வரா தேவரீரொன்றிற கஞ்சாமிக்காமல் யெப்படிவரம்பெத்திரோ அதுபோல் முன்று நில்ல வொன்றிலஞ்சாவில்லாமல் வரம்பெற்றவனைப்போல்தோ ணுகின்றது ஆகையால்நானியிந்தப் பிரகலாதனைனை யெத்தவிதத்தி லேகட்டிக்கொண்டுபோவேன் இப்போதுதேவரீர் யெப்படிக்கி ஆக்கியாபிக்கின்றீரோ அப்படியே நடத்துக்கொள்ளுகின்றேனை யாசுவாமி

இரணியன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்

உத்தனுலானமட்டு ... ... *
முபாயங்கள்செய்துப்பார்த்து. ... *
நத்திரமுடனேகட்டி ... ... *
தலைத்துதிபிடித்துக்கொண்டு ... *
அந்தவஞ்சகனைப்பொல்லா ... *
அருநரகத்திற்தள்ளி ... ... *
விந்தையாய்நல்லசேதி ... ... *
வந்தெனக்குறைத்திடாயே ... *

வசனம்

வாரும்பிள்ளாயேமா இந்தபொல்லாதுஷ்டனைவுன்றலே யானசதுர்விதவுபாயத்தினாலேபிடித்துக் கட்டிக்கொண்டுபோய் சவுரவாதிநரகத்திற்தள்ளிபின்பு அந்தசமாச்சாரம்நமக்கு அனுப் பும்பிள்ளாயேமா

எமன்சொல்தரு

இ-ம்-பைரவி-தாளம்ஆதி

இந்தவிதியெனக்கென்று ... ... *
வந்ததென்றுல்நானினி ... ... *
யென்னசெய்குவேன் ... ... *
ஐயையோ ... ... ... *



தந்திரமுடனேபிடித்து... ... *
வுத்தனுரில்போரென்று ... ... *
காட்டியென்னைவோட்டினானே ... *
ஐயையோ ... ... ... *

அந்தமுநிமார்க்கண்டனுல் ... *
சந்திரசேகரனுதைப்புண் ... ... *
ணுரிவமோறவியே ... ... *
ஐயையோ ... ... ... ... *

மித்திபொருதுன்மதனுல் ... ... *
நந்திகேசரன்றன்னுடனே ... *
பெத்தபெருமெத்தவுண்டே ... *
ஐயையோ ... ... ... ... *

சக்கிலிப்பெண்ணைப்புணர்ந்த ... *
முக்கியவாசரிமன்ன ... ... *
தன்னுலேமுன்னுலே ... ... *
ஐயையோ ... ... ... *

உக்கிரசிங்கிரர்பட்டு ... ... *
மிக்குவலியக்களிலே ... ... *
ஓடியிடந்தேடியுங்காணேன் ... ... *
ஐயையோ ... ... ... *

பண்டுமுனிநாருவாசன் ... ... *
தொண்டரம்பரிடனுலே ... ... *
பட்டதுயர்மட்டியிதமோ ... *
ஐயையோ ... ... ... *

அண்டருலகம்விசம்பும்... ... ... *
வெண்டிசையுமோடியிடர்... ... *

ஆனதம்நானதீவேனே... ... *
ஐயையோ... ... ... ... *

முப்புரப்புணர்ந்தபாதந்... ... *
இடரைவுன்றுமுழு... ... — *
மூடனுனவேடனையும்... ... ... *
ஐயையோ... ... ... ... *

தற்பரனுரணிகொண்ட... ... ... *
நற்பனுவக்பாகவதன்... ... ... *
சாத்தங்கதைப்பார்த்தநான்டோ... ... *
ஐயையோ... ... ... ... *

அண்டர்பெருமான் ... ... *
சரணத்தொண்டர்கள்பெருமயிமை ... *
யார்ரதந்தேரவசமோ... ... *
ஐயையோ ... ... ... *

கண்டயிரணியனென்னைக்... ... ... *
கொண்டுபாசச்சொல்லிவிட்ட ... ... *
காரியமும்வீரியமாமோ ... ... *
ஐயையோ... ... ... ... *

ஆண்டவனுமைத்திரம்... ... ... *
பூண்டவர்மனக்கோணினுல்... ... *
அண்டபிண்டமண்டலமெல்லாம்... ... *
ஐயையோ... ... ... ... *

இன்டேங்காக்குமென்றுவென்று ... *
மறைசொல்லுமொழி .. ... ... *
நாரதிவேறுதி... ... ... *
ஐயையோ... ... ... ... *



வெய்யவிரணியநக்குசி... ... ... *
பொய்மனதுகொள்வேனோ ... ... *
வெங்கோபத்தக்காமலே... ... ... *
ஐயையோ... ... ... ... *

பையரவமேற்றுயின்ற... ... ... *
அய்யனேயெனையிப்போது... ... *
பட்சமுடன்ரட்சிக்கவேணும்... ... *
ஐயையோ... ... ... ... *

பொதுவிருத்தம்

இ-ம-கல்யாணி,

மாவியர்தவிதப்புலப்பிப்பினுமர்த ... *
வைமர்சவிருப்பிடங்கண்டானபர்த்துந்த ... *
விரவிடநாரணமத்திரகோட்டைகண்டான் ... *
விளங்கியசக்கரங்கண்டான்கமலமேவும் .. *
இரைவனுருதோத்தமதில்கண்ணிக்கண்டான்... *
இலங்குமதிரையம்வேணதல்வாங்கண்டான்... *
சிரமுள்ளிக்கிரவதனந்தன்னைப்பார்த்து ... *
சிந்தைமகிழ்ந்தேயுகந்துசெப்புவானே ... *

வசனம்,

இந்தப்பிரகாரமாகவெமதர்மராஜனுனவன்புலம்பிக்கொண்டு பிரகலாதனைவாயிருந்துப்பிடத்திலேவந்துபார்க்கும்போது அங்கங்கேஸ்ரீநாராயண மந்திரத்திஞலே கோட்டையும் சக்கரக்காத்திஞலேகாவலும்நாராயணனைப்போல் திவ்வியமங்கிய ரூபமும்இன்னம்அனேகமான அதிசயங்களுக்கண்டு திகைத்துமனதிலே பிரகலாதனை சுவாமியானவர் சொல்லுகின்ற விதங்காண்க,

பிரகலாதனன்சொல்

கொச்சகம்,

காலாகாலங்கடர்ந்தக் ... ... *
காட்சியற்குங்காட்சியதாய் ... ... *
மேலானதத்துவமாய் ... ... *
மேவுகலைக்யானமுமாய் ... ... *
சாலோகசாமீப ... ... ... *
சாரூபசாயுச்சியமென்னும் ... ... *
நாலாம்பதமாகும் ... ... *
நாராயணநமவே ... ... *

பிரகலாதனன்சொல்தரு

இ-ம்-சௌவராளி-ஏகதாளம்

அகிலாண்டகோடிபிரமாண்டநாயகாசரணம் ... *
நித்தியானந்தநிர்மலரூபாதயாநிதிசரணம் ... *
சகலஜனரட்சகதற்பரநாரணசரணம் ... மிக்க *
தத்துவமுடிவினிலற்புதமானவாசரணம் ... *
பக்தபாரதினபாபவிமோசனசரணம் ... ஹரி *
பங்கஜலோசனமங்களசுபகராசரணம் ... *
சுத்தபவித்திர அகளங்காநிர்மலாசரணம் ... ஐய *
ஜோதியானந்தநாராயணஹரிசரணம் ... ... *

எமன்சொல்விருத்தம்

இ-ம்-மோகனம்.

தவுரவாகும்பிப்பா... ... ... *
காரத்தபாணவைதரணி... ... ... *



கவலைசேர்வித்துபாணை... ... ... *
கடியகுசரவுகாந்தா... ... ... *
தவமிகுகிரிமிபோசா.. ... ... *
நவிகவகிதனயிர்த... ... ... *
உவமையிலதிசயத்தை... ... ... *
உத்திநீர்பார்த்திடீரே... ... ... *

வசனம்,

அடாவாரும்பிள்ளாய் ரவுரவா அடாகும்பிபாகா அடாரத்த பாணஅடாவைதரணிஅடாவித்துபாணஅடாகுசரமுகா அடாவு காந்தாஅடாகிருமிபோசனஅடாசுகிவதன இந்தபிரகலாதனை வாபியைச்சூழ்ந்துகொண்டிருக்கின்ற கோட்டையைப்பார்த்தீர் களாசங்குசக்கரங்காவலாகயிருக்கின்றதைப்பார்த்தீர்களா ஸ்ரீமன் நாராயணரைப்போல்திவ்வியரூபமும் இன்னம்அநேக அதிசை யங்களையும்பாருங்கள்பாருங்கள்,

எமன்சொல்தரு

இ-ம்-பியாகு-தாளம்-அடசாப்பு

கண்ணிகள்,

கீட்டிசைவாசலிலேயிரணவம்நாட்டுங் ... *
கொத்தளம்பாராய்... ... *
நாட்டிக்தென்கிழக்கில்நகாரத்திட்டுங் ... *
கொத்தளம்பாராய்... ... ... *
தென்டிசைவாசலிலேமகாரத்தனின்றுங் ... *
கொத்தளம்பாராய்... ... ... *
ஒன்றுநிருதிமூலைநகாரஞ்சென்றுங்... *
கொத்தளம்பாராய்... ... ... *
மேற்றிசைவாசலிலேநகாரந்தோத்தாங் ... *
கொத்தளம்பாராய் ... ... *
காற்றுருபெருமூலையகாரம்போத்தாங் ... *

கொத்தளம்பாராய்... ... ... *
வடதிசைவாசலிலேதகாரம்படியும்... ... *
கொத்தளம்பாராய்... ... ... *
அடவுசெய்வடதிசைக்கில்யகாரந்திருடிசை .. *
கொத்தளம்பாராய்... ... ... *
சங்குசக்கரங்காவல்கீழ்வாசல்பொங்கிய ... *
வெளியும்பாராய்... ... ... *
செங்கண்மாலணிகொண்டன்தெருவாசல்தங்கிய
தொழிலதைப்பாராய்... ... *
காதண்டும்வளர்த்தெய்யமேல்வாசலில் ... *
கோதண்டம்நிலைப்பாராய்... ... ... *
ஓசைஞ்செய்கூரயில்வாள்வடக்குவாசல்... *
நீசஞ்செய்நிலைப்பாராய்... ... ... *
மாதவன்குதிகளெல்லாமருள்பெருக... .. *
மாதனுருவம்பாராய்... ... ... *
வேதப்பொருளானுயிவனின்வாயில் ... *
வேதியப்பொருள்பாராய்... ... *
மாலரிதுயில்போலேயிவன்போக... *
கோலத்தின்பொருள்பாராய்... ... *
இப்படியானதிலேயல்லவே... ... *
செப்படிப்போவோமே... ... — *
நப்பியேபோலவேதமல்லவே... ... *
நற்பதம்பெறலாமே... ... ... *
அங்கவென்றேபோனால்நம்மையெல்லாம்... *
கொல்வதுமெய்யாமே ... ... ... *
நல்லவுக்கெட்டநினைத்தோர்பெருங்காற்று... *
நில்லுமோதீங்கே... ... ... *



மல்லர்கள்சொல்விருத்தம்

இ ம்-ஆசாவேரி-

புவிதனிலுள்ளோர்செய்யும் ... ... *
புண்ணியபாவங்களெல்லாம்... ... *
அவமிலாமலேநடாத்தி.. ... ... *
அன்னலேசொல்லக்கேளீர்... ... *
மவுனமாய்தவஞ்செய்வோரு.. ... *
மைந்தனைப்போலேயித்த... ... ... *
குவலயந்தன்னில்காணேன்... ... ... *
கொத்தவாயெங்கள்கோவே... ... *

வசனம்,

சரணஞ்சரணமையா சுவாமி யெமதர்மராஜனேயிந்தலோ காதிலோகத்திலேயிப்பேர்ப்பட்ட தவங்கள்செய்த பேர்களையுந் தர்மஞ்செய்தப் பேர்களையும் நாங்கள் கண்ணால்கண்டதில்லை அய்யாசுவாமி,

